# கிரஹ தாகம்

## பாகம் II

ஆசிரியர்

சரத் சந்திர சட்டர்ஜி

மொழிபெயர்ப்பாசிரியர்

அ. கி. ஜயராமன்

ஜி. டி. சென்னை.

[விலை ரூ. 1-12-0

ஜுபிடர் பிரஸ்
சென்னை

# I

கடுமையான ஜன்னியிலிருந்து சொஸ்தமடைய அதிக நாள் பிடிக்கும். ஆயினும் மஹிம் ஆரோக்கியமடைந்து கொண்டு வருகிறான், இனிமேல் பயமில்லை என்பதை எல்லோரும் தெளிவாகக் கண்டனர். அவனுடைய பிதற்றல், நினைவு தப்பல் யாவும் சாந்தமும் சுபாவ நிலையும் அடைந்து வந்தன.

பத்துப் பன்னிரண்டு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் பிற்பகலில் மஹிம் சாந்தமாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அந்த வருஷம் எங்கும் பனி கொஞ்சம் அதிகமாகவே யிருந்தது. அத்துடன் மழையும் அப்பொழுதுதான் பெய்திருந்தது. நோயாளியின் கட்டிலுடன் ஒரு பெரிய ஆசனம் தயாரித்து அதன்மேல் அலங்காரமான விரிப்பு விரித்து வைக்கப்பட்டிருந்தது. எல்லோரும் நன்றாக மூடிப் போர்த்திக் கொண்டு அதன்மேல் அமர்ந்திருந்தனர். எல்லோர் கண்களிலும் ஒரே விதமான ஆத்திரமற்ற ஒரு திருப்தி வெளிப்பட்டுக்கொண்டிருந்தது; அத்தை மாத்திரம் இதர வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். கேதார் பாபு அதுவரை தம் வீட்டுக்குப் போகவில்லை.

திடீரென்று மிருணாளினி ஸுரேசன் பக்கம் பார்த்துக் கை குவித்து, 'ஸுரேஷ் பாபு, இனி எனக்கு உத்தரவு கொடுக்கலாம்! நான் ஊருக்குச் செல்லுகிறேன். இந்தக் குளிரில் என் கிழ மாமியார் எங்கும் போக முடியாது!' என்றாள்.

'இன்னமும் கூட அவள் உயிர் வாழவேண்டிய அவசியம் இருக்கிறதா? இல்லை, அவர்களுக்காக நீ போவதென்பது முடியாது!' என்றான் ஸுரேசன்.

மிருணாளினி ஒரு கணப் பொழுது முகத்தைத் திருப்பினாள். தனக்குள் எழுந்த பெருமூச்சை அடக்கிக்கொண்டாளோ என்னவோ! பிறகு ஸுரேசன் பக்கம் பார்த்துச் சிரித்துக்கொண்டே, 'ஸுரேஷ் பாபு, தங்கள் வார்த்தை மாத்திரமல்ல, இந்தக் கேள்வியை நானேகூடப் பல தடவை கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்கள் போய்விடுவதே மேலென்று மனம் சொல்லுகிறது. ஆனால் சாவு-வாழ்வின் அதிபதி யாரோ அவருக்கு இதைப் பற்றிய கவனமே இல்லையே! இருந்திருந்தால் இந்த உலகத்தில் மனிதனுக்குத் துக்கம் கஷ்டங்களிலிருந்து எப்பொழுதோ விடுதலை கிடைத்திருக்குமே!' என்றாள்.

அசலா அதுவரை பேசாமல் இருந்தாள். மிருணாளினியின் வார்த்தைகளினால் அவளுடைய கணவனின் நிலைமை ஞாபகத்திற்கு வந்தது போல, 'இதன் அர்த்தம், மனிதன் தன் பல துக்கங்களுக் கிடையிலும் மரணத்தை விரும்புவதில்லை என்பதை அந்தர்யாமிதான் அறிவார் என்பது தானே!' என்றாள்.

மிருணாளினியின் முகத்தில் மறைந்திருந்த வேதனையின் சின்னங்கள் துலக்கமாயின. அவள் தலையசைத்துவிட்டு, 'இல்லை மன்னி! அதல்ல விஷயம். மனிதன் உண்மையில் மரணத்தை விரும்பும் போது அம்மாதிரிச் சமயம் உண்மையிலேயே வருகிறது. அன்றைய சமாசாரம் ஒன்று: இரவு

வெகு நேரத்திற்குப் பிறகு, திடீரென்று கண் விழித்துப் பார்த்தபோது மாமியாரைப் படுக்கையில் காணவில்லை. சட்டென்று எழுந்து வெளியே சென்று பார்த்தால், டாகுர் அறையிலுள்ள பூஜையறைக் கதவு சற்றே திறந்திருந்தது. பேசாமல் போய் நின்றேன். அவர் தலைப்பைக் கழுத்தில் போட்டுக் கொண்டு டாகுர்ஜியின் முன் கை குவித்துச் சாவை வேண்டிக் கொண்டிருந்தார்: "ஹே பகவானே! ஒரு நாளாவது உன்னை உண்மையான மனத்துடன் தொழுதிருந்தேனே யானால் இன்று என் வெட்கத்தை அகற்று. நான் முக்தியை விரும்பவில்லை, ஸ்வர்க்கத்தை விரும்பவில்லை. பகவானே! நீ என்னை வெட்க மடையும்படி செய்யாதே! இதுதான் என் விருப்பம். இனி என்னால் என் முகத்தை நாட்டுப் பெண் முன் காட்ட முடியாது!"'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே மிருணாளினியின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

இந்தப் பிரார்த்தனையில் தாய் - ஹிருதயத்தின் ஆழ்ந்த வேதனை எவ்வளவு இருந்த தென்பதை உணர யாருக்கும் நேரம் பிடிக்காது. ஸுரேசனின் இரு விழிகளிலும் கண்ணீர் நிறைந்துவிட்டது. பிறருடைய சாதாரணமான துக்கத்தினால் கூட அவன் உருகிவிடுவான்; இன்று பிள்ளையை இழந்த அந்தக் கிழவியின் தாய்-உள்ளத்தின் சோகக் கதையினால் அவன் ஹிருதயம் கொந்தளித்தது. அவன் சிறிது நேரம் அசையாமல் தரையைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். பிறகு திடீரென்று தலை நிமிர்ந்து, தழுதழுத்த குரலில், 'சரி, போ அக்கா! விருத்தாப்பிய தசையிலிருக்கும் உன் மாமிக்குச் சேவை செய்து கடமையை நிறைவேற்று. இனி நான் உன்னைத் தடுக்கமாட்டேன். இந்தத் துர்ப்பாக்கிய தேசத்தைக் கௌரவப்படுத்த இன்று ஏதாவது ஒரு பொருள் இருக்குமானால், அது உன் போன்ற ஸ்திரீகள்தான். இம் மாதிரியான வஸ்து வேறு எந்தத் தேசத்திலும் காண முடி

யாது!' என்று சொல்லி, ஆவல் நிறைந்த பார்வையுடன் அசலாவின் முகத்தை ஒரு முறை பார்த்தான். ஆனால் அவள் பேசாமல் உட்கார்ந்து ஜன்னலுக்கு வெளியே மேகத்தின் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளிடமிருந்து யாதொரு பதிலும் வரவில்லை.

ஆனால் மிருணாளினிக்கு அது வெட்கமாக இருந்தது. அவள் பேச்சு வார்த்தையை மாற்ற எண்ணிச் சட்டென்று சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, 'இல்லை! அதொன்றும் இல்லை! தங்களுக்குச் சகல தேசத்து விஷயங்களும் தெரியுமா? சரிதான், தாங்கள் அண்ணாவைவிடச் சிறியவரா—பெரியவரா?' என்றாள்.

இந்த அற்புதக் கேள்வியைக் கேட்டு ஸுரேசனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. 'ஏன்? என்ன விஷயம், சொல்லுங்களேன்?' என்றான்.

மிருணாளினி தடுத்துக்கொண்டே, 'வேண்டாம்! என்னை இப்பொழுதே "தாங்கள்" என்று அழைக்காதீர்கள்! நான் அக்காவாக இருந்தாலும் வயதில் சிறியவள்தான். தாங்கள் பெரிய சகோதரனா, சின்னச் சகோதரனா, அல்லது நடுச் சகோதரனா? சொல்லுங்கள்!...சொல்லுங்கள்! சீக்கிரம் சொல்லுங்கள்! யார்?' என்றாள்.

அசலா ஆகாயத்திலிருந்து பார்வையைத் திருப்பிப் பார்க்கலானாள். வெகு நாட்களுக்கு முன் இந்த ஸ்திரீ இம்மாதிரி அவசரத்தில் 'மன்னி' 'அக்கா' என்ற உறவை ஸார்ஜிதம் செய்த அந்தத் தினம் அவளுக்கு ஞாபகம் வந்தது. ஆனால் மிருணாளினியின் நடத்தை ஒன்றும் ஸுரேசனுக்குத் தெரியாது. ஆகையால் அவன், இந்த விசித்திரமான ரமணியின் முகத்தைப் பார்த்துக் குதூகலத்துடன் சிரித்துக்கொண்டே, 'சின்னச் சகோதரன், சின்னச் சகோ

தரன்தான்! உன் சகோதரனைவிட நான் ஒன்றரை வருஷம் சிறியவன்!' என்றான்.

'சரி, ஆனால் சின்ன அண்ணா! தயவு செய்து ஒரு ஆளை ஏற்பாடு செய்து கொடுங்கள். என்னை நாளைக் காலை வண்டிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கட்டும்!' என்றாள் மிருணாளினி.

ஸுரேசன் அப்பொழுதுதான் போவதற்கு அனுமதி கொடுத்தான். ஆனால் அவள் மறுநாள் காலையிலேயே போவதற்குத் தயாராவாள் என்று அவன் எண்ணவே யில்லை. ஆகையால் ஒரு கண நேரம் பேசாமல் இருந்துவிட்டு, பிறகு கம்பீரத்துடன், 'இன்னும் இரண்டு நாள் இருக்க முடியாதா, அக்கா? மஹிமின் பாரத்தை உன்னிடம் ஒப்படைத்துவிட்டு நாங்கள் கவலையற்று இருந்தோம். இம் மாதிரி இரவு பகல் இருபத்தி நாலு மணி நேரமும் ஜாக்கிரதையாக இருந்து அழகாகச் சேவை செய்ததை நான் ஆஸ்பத்திரியில்கூடப் பார்த்ததில்லையே! என்ன, அசலா?' என்றான்.

பதிலுக்கு அசலா தலையை மாத்திரம் அசைத்தாள்.

ஸுரேசன் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுத் திடீரென்று, 'சரி மிருணாள், அந்தப் பட்டிக்காட்டில் ஒரு கிழவிக்குச் சேவை செய்வதிலும் சந்தியா பூஜை செய்வதிலும் உன்னுடைய பொழுது எப்படிக் கழிந்து வருகிறது என்றுதான் எண்ணினேன்!' என்றான்.

மிருணாளினியின் முகத்தில் மீண்டும் வருத்தத்தின் ரேகை படர்ந்தது. ஆனால் சிரித்துக்கொண்டே, 'சின்ன அண்ணா, பொழுதைக் கழிக்கும் பார மென்னவோ என்னிடம் இல்லை! காலத்தை யார் சிருஷ்டித்தாரோ அவர் அதைக் கழிப்பதற்கும் ஏற்பாடு செய்வார்!' என்றாள்.

'சரிதான்! இதுதான் ஆகிவிட்டது. ஆனால் உன்னுடைய மாமியார் என்னவோ அதிக நாள் ஜீவிக்கமாட்டாள், மனுமிங்கூட டாக்டர்கள் சொன்னதன் பேரில் மேற்கே ஏதாவது ஒரு ஆரோக்கியமான வாசஸ்தலத்திற்குச் சென்று தங்க வேண்டியிருக்கும். அப்பொழுது நீ அங்கே தனிமையில் எப்படி யிருப்பாய்?' என்றான்.

மிருணாளினி மேலே பார்த்துச் சிறிது சிரித்துவிட்டு, 'அதை அவர்தான் அறிவார்!' என்றாள்.

யாருக்கும் தெரியாமல் ஸுரேசன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டான். மிருணாளினி அவனை நோக்கி, 'நீங்கள் இதை யெல்லாம் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள்!' என்றாள்.

'எதை யெல்லாம்?'

'இதுதான், பகவான்—'

'இல்லை!'

'ஆனால் ஜனங்களை எண்ணி நீங்கள் ஒரு அலட்சியப் பெருமூச்சு விட்டீர்கள் அல்லவா?'

ஸுரேசன் அந்தக் கேள்விக்குச் சட்டென்று யாதொரு பதிலும் சொல்லவில்லை. சிறிது நேரம் எங்கோ ஞாபகமாக அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு சட்டென்று தலையசைத்து, 'இல்லை மிருணாள்! அதல்ல! எதிர்காலத்தின் மர்மமான ஒரு பாரத்தை அம்மாதிரியே ஒரு புலனாகாத கடவுளிடம் விட்டுவிடுகிறவர்கள் நம்மைவிட அதிகமாக வெற்றியின் மார்க்கத்தில் செல்லுகிறார்கள். அம்மாதிரி நான் அநேகம் பார்த்திருக்கிறேன். ஆனால் இதெல்லாம் போகட்டும், அம்மா! அதனால் என் மேல் உனக்கு வெறுப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாம்' என்றான்.

மிருணாளினி சட்டென்று குனிந்து ஸுரேசனின் பாதங்களைத் தொட்டுக் கையைச் சிரசில் வைத்துக்கொண்டு, 'சரி, இருக்கட்டும்!' என்றாள்.

ஸுரேசன் ஆச்சரியத்தினால் பிரமித்துப் போனான். 'இதென்ன நடந்தது, மிருணாள்?' என்றான்.

'என்ன அண்ணா?'

'ஒன்றும் பேசாமல் திடீரென்று பாதங்களைத் தொட்டு விட்டாயே!'

'அண்ணாவின் பாதங்களைத் தொட நல்ல லக்னம் பார்க்கவேண்டுமா?' என்று சொல்லி மிருணாளினி சிரித்துக் கொண்டே எழுந்தாள்.

'நல்ல பெண்!' என்று சொல்லிக்கொண்டே, வாஞ்சையோடு கூடிய சிரிப்புடன், ஸுரேசன் அசலாவின் முகத்தைப் பார்த்ததும் ஆச்சரியத்தால் தன்னை மறந்தான். அவள் முகம் முழுதும் ஆவணி மாதத்து வானத்தில் மேகம் படர்ந்தது போல் இருந்தது. ஆனால் ஆச்சரியத்தின் தாக்குதலைச் சுதாரித்துக்கொண்டு, அந்த விஷயத்தைப் பற்றி அவன் ஏதாவது கேட்பதற்கு முயற்சிக்கு முன், பிரமையடைந்திருந்த ஸுரேசனுக்கு ஆலோசிக்கப் போதுமான சாவகாசமளித்து விட்டு, அசலா சட்டென்று மிருணாளினியுடனே அறையை விட்டு வெளியேறினாள்.

ஸுரேசன் அங்கேயே பேசாமல் உட்கார்ந்து மாறி மாறித் தன்னைத் தானே கேட்டுக்கொள்ளலானான்: 'இது எப்படி, என்ன ஆயிற்று? மிருணாளினி பாதங்களைத் தொட்டதில் இவளுக்கு ரகசியமான சம்பந்தம் என்ன இருக்கிறது!' என்பதை அவன் தனக்குள்ளேயே அனுமானம் செய்யலானான். ஆனால் அதன் சம்பந்தம் எங்கே? ஏன் மிருணாளினி திடீரென்று தன் பாதங்களைத் தொட்டுவிட்டுச் சென்றான், ஏன் கணத்திற்குள் அசலா அப்படி வருத்தமான தோற்றத்துடன் வெளியே சென்றாள்? தன்னுடைய நடத்தை, பேச்சு வார்த்தை முதலியவைகளை ஆதியோடந்தமாக ஞாபகப் படுத்திப் பார்த்தும் அதற்கு அவன் ஒரு முடிவு காண

முடியவில்லை. உடனுக்குடன் இவ்வளவு பெரிய இந்த இரண்டு சம்பவங்கள் வீணாக மட்டும் நடந்துவிடவில்லை என்பதையும் அவன் உணர்ந்தான். தன் மூலமாய் நடந்த நிந்திக்கத் தக்க எந்த ஒரு செய்கையோ பேச்சோதான் இந்த அனர்த்தத்திற்கு மூல காரணம் என்று அவனுக்குச் சந்தேகம் தோன்றி, அவனைக் குத்தலாயிற்று.

ஆனால் மிருணாளினியிடம் அதைப் பற்றி எதுவும் கேட்பதென்பது முடியாத விஷயம். இரவை எப்படியோ ஒருவிதமாகக் கழித்தான். ஆனால் காலையில் அசலாவைத் தனிமையில் சந்தித்து, 'நீ ஒரு வார்த்தைக்குப் பதில் சொல்லவேண்டும்!' என்றான்.

அசலாவின் முகம் வெட்கத்தால் உலர்ந்தது. அவன் கேள்வி என்ன என்பது அவளுக்குத் தெரியாமலில்லை. நடந்த இரவு நடந்த அந்த அற்புத நடத்தைக்கு ஏதாவது பதிலளித்தே தீரவேண்டும் என்பதை அறிந்து, அவள் சிவந்த முகத்துடன், 'என்ன சமாசாரம்?' என்றாள்.

ஸுரேசன் தயக்கத்துடன், 'நேற்று மிருணாளினி திடீரென்று என் பாதங்களைத் தொட்டாள். நீ முகத்தைத் தூக்கிக்கொண்டு கோபத்துடன் எழுந்து சென்றாய். நான் அவளுடைய மாமியார் இறக்கும் விஷயத்தைப் பற்றிச் சொன்னேனே, அதற்காகத்தானே?' என்றான்.

அந்த எதிர்பாராத கேள்வியினால் அசலாவுக்கு ஒரு வழி கிடைத்தது. அவள் மனத்திற்குள் சந்தோஷமடைந்து, 'இம்மாதிரி விஷயங்களை நீங்கள் கிளப்பவேண்டுமா? பாவம், அவளுக்குக் கணவன் இல்லை. மாமியார் இறந்த பிறகு, பாவம், அவள் எப்படிச் சகாயமற்ற நிலையுடையவளாவாள்! இதைக் கொஞ்சமாவது யோசிக்கக் கூடாதா?' என்றாள்.

ஸுரேசன் மிக்க வருத்தத்துடன், 'என்னால் பெருத்த அநியாயம் நடந்துவிட்டது. ஆனால் அவள் மாமியார் அநி

நாள் ஜீவித்திருக்க மாட்டாள் என்பதை மிருணாளினியே அறிந்திருக்கிறாள். மற்றொன்று, அவள் சகாயமற்றவளாகத் தான் ஏன் ஆகப் போகிறாள்?' என்றான்.

'இந்த விஷயத்தை என்னவோ நாம் அவளிடம் ஒரு தடவைகூடச் சொல்லவில்லை. தவிர, நீங்கள் அவளை இன்றும், "ஊரில் தனியாக எப்படி இருப்பாய்?" என்றும் பயமுறுத்திவிட்டீர்கள்!' என்றாள்.

ஸுரேசன் மிக்க விசனத்துடன், 'ஆகையால் அவள் செல்வதற்கு முன் அவளுக்குத் தைரியம் சொல்வது உசிதமல்லவா? அவளுக்கு யாதொரு பயமும் வேண்டாம்! இந்த விஷயத்தை அவளிடம்—' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே கருணையினால் அவன் குரல் தடைப்பட்டுவிட்டது.

அசலா அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். பிறர் துக்கத்தைக் கண்டு உருகும் நல்ல ஹிருதயமுள்ள அந்த யுவனின் காருண்யம் நிறைந்த பல கதைகள் அசலாவின் நினைவுக்கு வந்தன. அவள் தலையசைத்து, 'இல்லை! நீங்கள் தைரியம் சொல்லவேண்டிய அவசியமுமில்லை, பயமுறுத்தவேண்டிய அவசியமுமில்லை. அம்மாதிரி ஒரு சமயம் வரும்போது நான் சும்மா இருக்கமாட்டேன்!' என்றாள்.

ஸுரேசன் தன்னை மறந்து ஆவேகத்துடன் இ[illegible]ரென்று அவள் கரங்களைப் பற்றி வேகமாக அசைத்துக்கொண்டே, 'இதுதான் உனக்கேற்ற வார்த்தை, அசலா! இதைத்தான் நான் உன்னிடம் விரும்புகிறேன்!' என்று சொல்லி, சட்டென்று மிகுந்த வெட்கத்துடன் அவள் கையை விட்டுவிட்டு, வேகமாக வெளியே சென்றுவிட்டான்.

ஒரு கணத்திற்கு முன் பிறர் ஆனந்தத்தால் பிறந்த அவனுடைய பெருமூச்சு, இம்மாதிரி வெட்கத்துடன் சேர்ந்து வெளிப்பட்ட அடுத்த கணமே [illegible] தெ[illegible]து. அசலாவின் ஹிருதய ரத்தம் வேக[illegible]

யது. நெற்றியில் வியர்வை துளிர்த்தது. சரீரம் மாறி மாறி மயிர்க்கூச் செறிந்தது. அவள் அருகே இருந்த நாற்காலி யில் உயிரற்றவள் போல் அமர்ந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவளுடைய அந்த நிலைமை நீங்கியது. ஆனால் நோயுற்றிருந்த தன் கணவனின் படுக்கை யருகில் தன் இடத்தில் உட்கார அவளுக்கு அன்று காலையிலிருந்தே பய மாக இருந்தது.

'போகிறேன், போகிறேன்!' என்ற பேச்சிலேயே மிருணாளினிக்கு இரண்டு நாள் தாமதம் ஆகிவிட்டது. அன்று போகும் சமயம், மஹிமிடம் விடைபெற்றுக்கொள்ள வந்த போது, அவன் திரும்பிப் படுத்துக்கொண்டு தூங்கிக்கொண் டிருந்தான். விடை பெற்றுக்கொள்ள வந்தவளுக்கு அந்தப் பொய்த் தூக்கத்தின் காரணம் நன்கு தெரிந்திருந்தும், அவள் மேலுக்கு, 'அண்ணாவை இப்பொழுது எழுப்பவேண்டிய அவசியமில்லை, மன்னி! என்ன?' என்றாள்.

இதற்குப் பதிலாக அசலாவின் இதழ்களில் ஓர் அலட் சியச் சிரிப்புத் தென்பட்டது. மிருணாளினி அந்தக் கபடத் தைத் தன்னைத் தவிர மற்றொரு பெண்மணியும் தெரிந்து கொண்டாள் என்பதை உணர்ந்தாள். அவளுக்கு எதிராக மிருணாளினி தன் மனத்தில் ரகசியமான பொறாமை உணர்ச் சியை வைத்திருக்கிறாள் என்பதைப் பற்றி மஹிமின் மூலம் துளிகூட வெளிவராவிடினும், அதை அவள் அறிந்திருந்தாள். இந்த வீணான துவேஷம் அவள் மனத்தில் முள்ளைப் போல் குத்திக்கொண்டிருந்தது. ஆனபோதிலும் நோயாளியான மனிதனின் பரிசுத்தமான துர்ப்பலத்தை அலட்சியமாகப் பார்ப்பாள் என்று அவள் எண்ணவில்லை. கண நேரம் அவள் மனம் கொதித்தது. ஆனால் அதே கணம் அவள் தன்னைச் சமாளித்துக்கொண்டு அசலாவின் காதில், 'உனக்குத்தான் எல்லாம் தெரியுமே, மன்னி! என் சார்பாக இவனிடம் மன்

விப்புக் கேட்டுவிடு. சொஸ்தமடைந்து ஊர் திரும்பும்போது ஆயுசோடிருந்தால் சந்திப்பதாகச் சொல்லிவிடு!' என்றாள்.

கீழே கேதார் பாபு உட்கார்ந்திருந்தார். மிருணாளினி நமஸ்காரம் செய்து எழுந்து நின்றாள். அவர் கண்களில் கண்ணீர் நிறைந்துவிட்டது. இந்தச் சில நாட்களிலேயே இந்த விதவைப் பெண்ணிடம் எல்லோருக்கும் அன்பு ஏற்பட்டிருந்தது. கேதார் பாபு தம் சட்டையினால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, 'அம்மா! உன்னுடைய ஆசீர்வாதத்தாலேதான் நாங்கள் மஹிமை யமன் வாயிலிருந்து மீட்டோம். எப்போது உனக்கு இஷ்டமோ, எப்போது பிரயாணம் செய்ய மனம் விரும்புகிறதோ அப்போது இந்தக் கிழவரை மறந்துவிடாதே, அம்மா! என் வீடு இரவும் பகலும் உனக்குத் திறந்தே யிருக்கும்!' என்றார்.

அசலா அருகிலேயே பேசாமல் நின்றுகொண்டிருந்தாள்; மிருணாளினி அவள் பக்கம் சைகை காட்டி, சிரித்த முகத்துடன், 'இவள் கையிலிருந்து அண்ணாவைப் பிடுங்கிக் கொண்டு போக யமனுக்கு அவ்வளவு சாமர்த்தியம் இருக்கிறதா? என்று இவளிடம் அவனை ஒப்புவித்தேனோ அன்றே என் வேலை பூர்த்தியாகிவிட்டது!' என்றாள்.

கேதார் பாபுவின் முக பாவம் சற்று கம்பீர மாகியது. ஆயினும் அவர் ஒன்றும் பேசவில்லை.

ஒரு கிழ வேலைக்காரனும் வேலைக்காரியும் மிருணாளினியை ஊருக்குக் கொண்டுவிடத் தயாராக இருந்தனர். எல்லோரையும் ஏற்றிக்கொண்டு, குதிரை வண்டி ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டது. கேதார் பாபுவின் இருதயத்திலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. அவர் மெதுவாக, 'அற்புதமும் அபூர்வமுமான பெண்!' என்றார்.

ஸுரேசன் மனமும் இதே பாவத்தால் நிரம்பியிருந்தது. அவன் எந்தப் பக்கமும் கவனிக்காமல் ஆலோசித்

துக்கொண்டே, படபடப்புடன், 'கேதார் பாபு, இம் மாதிரிப் பெண்ணை நான் ஒருபொழுதும் எங்கும் கண்டதில்லை! இம் மாதிரி இனிய வார்த்தையை எங்கும் கேட்டதில்லை. இம் மாதிரிக் காரிய சாமர்த்தியத்தையும் எங்கும் கண்டதில்லை. எந்த வேலையை வேண்டுமானாலும் கொடுங்கள், ஆயுள் பூரா வும் அக் காரியத்தில் அனுபவப்பட்டவள் போல, அபூர்வ மான சாமர்த்தியத்துடன் அதைச் செய்து முடித்துவிடுவாள். இதில் ஆச்சரியம் என்னவென்றால், இவள் ஒருபொழுதும் கிராமத்தை விட்டு வெளியே எங்கும் போனதே யில்லை!' என்றான்.

கேதார் பாபு இதை உண்மையென்று அறிவார், ஆயி னும் ஆச்சரியத்தோடு, 'என்ன சொல்லுகிறாய்?' என்றார்.

'விஷயம் உண்மையில் சரிதான். அவள் பக்கம் பார்க் கும் போது, சில சமயம் எனக்கு என்ன தோன்றுகிற தென் றால், ஜன்மாந்திரத்தில் சம்ஸ்காரங்களைப் பற்றிச் சொல்லும் விஷயம் ஒருகால் உண்மையா யில்லாவிட்டால்—' என்று சொல்லி அவன் சிரிக்கலானான்.

பரலோக சம்பந்தமான விஷயம் ஆரம்பமானதால், கேதார் பாபு வருத்தம் தேங்கிய முகத்துடன், சற்று நேரம் சும்மா யிருந்துவிட்டு, பிறகு திடீரென்று, 'எந்த விஷயம் எப்படியாயினும் இருக்கட்டும். இங்கே இந்தச் சில தினங்களாக அவளைப் பார்க்கும்போது நிச்சயமாக அவள் ஸ்திரீகளில் விலையற்ற ஓர் இரத்தினம் என்று எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இவளை வாழ்நாள் முழுதும் உயிர்ப்பிணமாக்கி வைத்தல் துன்ப மிழைப்பது மாத்திர மல்ல; மகா கொடிய பாவமும் ஆகும். இவள் என் மகளாக இருந்தால் நான் எந்த நிலைமையிலும் சும்மா இருக்க முடி யாது!' என்றார்.

ஸுரேசன் ஆச்சரியத்துடன், 'என்ன செய்வீர்கள்?' என்றான்.

கிழவர் எடுப்பான குரலில், 'மறுபடியும் விவாகம் செய்துகொடுப்பேன். ஒரு கிழவனுக்கு விவாகம் செய்து கொடுத்து, இந்தப் பத்தொன்பது இருபது வயதிலேயே இவளைச் சந்நியாசினி யாக்கியவர்கள் இவளுடைய பந்துக்க ளல்லர்; அவர்கள் சத்துருக்கள். சத்துருக்களின் காரியத்தை எவ்விதத்திலும் நான் நியாயமென்று ஒப்புக்கொள்ள முடியாது!' என்றார். சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு மறுபடியும் பேசலானார்:

'இதைத் தவிர அவளுடைய கணவனின் விவகாரத் தைத்தான் ஒரு தரம் நினைத்துப் பார், ஸுரேஷ்! இரண்டு மனைவிகள் இறந்த பின்பு, ஐம்பதாவது வயதில், எப்பொழுது இப்பெண்ணை விவாகம் செய்துகொள்ள இசைந்தானோ, அப் பொழுது அந்தக் கிராதகன் தன் சுக சௌக்கியத்தைத் தவிர இந்த ஸ்திரீயின் எதிர்காலத்தைப் பற்றிச் சற்றாவது கண் திறந்து பார்த்தானா? கொஞ்சம் யோசித்துப் பாரேன்!' என்றார்.

ஸுரேசன் பேசாமல் இருப்பதைக் கண்ட கேதார் பாபு இன்னும் அதிக ஆத்திர மடைந்தார். 'இல்லை, ஸுரேஷ், நான் விதவா விவாகத்தின் நன்மை தீமையைப் பற்றி விவாதித்துக்கொண்டிருக்கவில்லை. ஆனால் இந்த இடத்தில், உன்னுடைய ஹிந்து சமூகம், கூக்குரலிட்டு மடிந்தாலும் சரி, இந்தக் கட்டுப்பாடு அந்த இளங் குழந்தைக்கு ஏற்றது என்றும், உயர்ந்தது என்றும் சொல்வதை நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன். அதன் முகத்தைப் பார்த்து ஒரு தினத்தைக் கழிப்பதற்குக்கூட அதனிடம் ஒன்றுமில்லை. வாழ்நாள் முழுவதையும் நீங்கள் என்ன விளையாட்டுப் பொருளென்று எண்ணினீர்களா? ஸுரேஷ், "பிரம்மசரியம்,

பிரம்மசரியம்!" என்று கத்திக்கொண் டிருப்பதனாலேயே உலகம் முழுவதும் ஒரே இரவில் ரிஷிகளின் தபோவனம் ஆகி விடுமா? அந்தப் பெண்ணின் ஆடையைப் பார்க்கும் போது என்னுடைய உள்ளம் வெடித்துவிடும் போலிருக்கிறது!' என்றார்.

ஸுரேசன் பதில் சொல்லவில்லை, தலைநிமிர்ந்தும் பார்க்க வில்லை. ஆனால் கடைக்கண்ணால் பார்த்தான். வாசற்படி யருகில், எங்கே அசலா சிலை போல் உட்கார்ந்திருந்தாளோ, அங்கே அவளைக் காணவில்லை. எப்பொழுது பேசாமல் உள்ளே சென்றா ளென்பதே தெரியவில்லை.

மிருணாளினி சென்ற பிறகு அசலா ஸுரேசன் முகத் தைப் பார்த்த சமயம், அவன் ஏதோ ஒரு மாதிரியாக இருக் கிறான், ஏதோ ஒரு சோகத்தால் சாம்பியிருக்கிறான் என் பது அவளுக்குத் தெரிய வந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மத்தியானம், ஸுரேசன் கீழறையில் ஒரு பக்கமாக ஒரு சாய்வு நாற்காலி யில் படுத்துக்கொண்டு, ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். காலடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவனுக்காக டீ எடுத்துக்கொண்டு அசலா வந்துகொண்டிருந்தாள். அம்மாதிரியான சம்பவம் முன்பு எப்பொழுதும் நடந்ததில்லை; ஆகையால் அவன் ஆச்சரியமடைந்தவனாய், சரியாக உட்கார்ந்துகொண்டு, 'சமை யற்காரன் எங்கே போனான்? இன்று நீ இப்படி...?' என்று கேட்டான்.

அசலா கேள்விக்குப் பதில் சொல்லாமல், ஒரு சிறிய மேஜையை அருகே இழுத்துப்போட்டு அதன்மேல் டீ கோப் பையை வைத்துவிட்டு, மற்றொரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு தானும் உட்கார்ந்தாள். இந்தப் புதிய செய்கையால் அவனுக்கு மறு கேள்வி கேட்கத் தைரியம்

ஏற்பட வில்லை. பேசாமல் டீ கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டான்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த பிறகு, அசலா மிருதுவான குரலில், 'சரிதான் ஸுரேஷ் பாபு, நீங்கள் விதவா விவாகத்தைச் சரியென்று நினைக்கவில்லையா ?' என்று கேட்டாள்.

ஸுரேசன், டீ கோப்பையை வாயிலிருந்து எடுக்காமலே, 'நினைக்கிறேன். இதற்குக் காரணம் கெட்ட ஆசாரம் இன்றுவரை என்னவ்வளவு தூரம் வரவில்லை; அதை நான் அறியவில்லை' என்றான்.

அசலா அவனுக்கு யோசிக்கச் சிறிதுகூட அவகாசம் கொடுக்காமல், 'அப்படியானால் மிருணாளினியைப் போன்ற பெண்ணைத் தாங்கள் விவாகம் செய்துகொள்ள லவலேசமும் தடை செய்யவேண்டியதில்லையே!' என்றாள்.

ஸுரேசன் டீ கோப்பையைக் கையில் பிடித்துக் கொண்டே, கொஞ்சம் கடுமையாக, 'இதன் பொருள் என்ன ?' என்றான்.

அசலாவின் முகத்திலோ குரலிலோ எவ்விதமான பதட்டமும் வெளிப்படவில்லை. மிகவும் சகஜமான முறையிலேயே, 'தங்களுக்கு நான் எவ்வளவோ கடன்பட்டவள். இதைத் தவிர நான் தங்கள் நன்மையை விரும்புகிறவளும்கூட......... தங்களை நான் கிரகஸ்தாசிரமத்தில் பார்த்துச் சந்தோஷப்பட விரும்புகிறேன். ஒரு தினம் தாங்கள் கலியாணம் செய்துகொள்ளத் தயாராயிருந்தீர்கள்; இன்று இதைத் தாங்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதே என்னுடைய விசேஷமான பிரார்த்தனை!' என்றாள். ஒரே மூச்சில், பாடம் படிப்பதைப் போல, இத்தனையும் சொல்லி விட்டு அசலா நடுங்கலானாள்.

ஸுரேசன் கற்சிலை போல் வெகுநேரம் பேசாமலிருந்து விட்டு, 'இதனால் நீ சுகமடைந்துவிடுவாயா?' என்றான்.

'ஆமாம்!' என்றாள் அசலா.

'அவள் சம்மதப்படுவாளா?'

'நான் அப்படித்தான் நம்புகிறேன்.'

ஸுரேசன் ஒரு மெல்லிய சிரிப்புச் சிரித்துவிட்டு, 'என் நம்பிக்கை அப்படியல்ல. உடன்கட்டை ஏறும் காலத்தில் சதி-ஸ்திரீகள் சிரித்துக்கொண்டே வெந்து இறந்தார்கள் என்று புஸ்தகத்தில் படித்திருக்கலாம். மிருணாளினி அந்த ரகத்தைச் சேர்ந்தவள். வாய் வார்த்தையால் அவளை ஒப்புக்கொள்ளச் செய்வதென்பது ஆகாத விஷயம். கை கால்களையெல்லாம் வெட்டிப் போட்டால்கூட அவளை மறு விவாகம் செய்து கொள்ளச் சம்மதிக்கச் செய்வதென்பது முடியாத காரியம். சாத்தியமற்ற இந்தக் காரியத்தில் முயற்சி செய்து என்னை அவள் கண்முன் அற்பமாக்கிவிடாதே, அசலா! என்னை அவள் "அண்ணா" என்று கூப்பிட்டிருக்கிறாள். இந்த மரியாதையை நான் நிரந்தரமாகக் காப்பாற்ற விரும்புகிறேன்' என்றான்.

பார்த்துக்கொண் டிருக்கும்போதே அசலாவின் முகம் கோபத்தால் கருமை யடைந்தது. ஸுரேசன் வார்த்தைகள் முடிந்ததுமே, கடினமும் மிருதுவுமான குரலில், 'ஸுரேஷ் பாபு! உலகில் மிருணாளினி மாத்திரம்தான் சதியல்ல! மனத்திற்குள் ஒரு முறை ஒருவரைக் கணவரென்று வரித்த பிறகு லட்சம் லட்சமாக ஆசை காட்டினாலும் மனத்தைத் திருப்ப முடியாத சதிகளும் இப்பொழுது இருக்கிறார்கள். .......இந்த விஷயங்களைத் தாங்கள் அச்சுப் புஸ்தகத்தில் படிக்காவிட்டாலும், இதை அறிந்து வைத்துக்கொள்ளுங்கள்!' என்று சொல்லிவிட்டு, தன்னை மறந்திருந்த ஸுரேசன் பக்கம் பார்க்காமலே, கர்வம் பூண்ட அந்த ரமணி திடமாக அடியெடுத்து வைத்துக்கொண்டு அங்கிருந்து எழுந்து சென்றாள்.

# II

ஒருவரைக் கபடமற்றுப் புகழ்வதில் பிறர்க்கு எவ்வளவு கடினமான மன வருத்தம் ஏற்படக் கூடுமென்பதை, சொல்பவர் கேட்பவர் இருவரில் ஒருவரும் கணநேரத்திற்கு முன் அறியவில்லை. ஸுரேசன் கையிலிருந்த கோப்பையுடன் அப்படியே ஸ்தம்பித்து உட்கார்ந்துவிட்டான். அசலா தன் அறையில் நுழைந்து, கதவைச் சும்மா சாத்திவிட்டு, தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுகையின் வேகத்தைத் தடுக்க முயன்றாள். ஏனென்றால், பக்கத்திலேயே மஹிமின் அறை இருந்தது. எங்கேயாவது கொஞ்சம் சத்தம் அவனுக்குக் கேட்டுவிடாதபடி பார்த்துக் கொண்டாள். உண்மையில் அந்தர்யாமியைத் தவிர, அந்த அழுகையின் சரித்திரத்தை வேறு யாரும் அறிய முடியாது.

ஆனால் அவள் இந்த ஆழ்ந்த துக்கத்தில் தானகவே ஒரு புதிய தத்துவத்தை அடைந்தாள். அத்தனை நாட்களுக்குப் பிறகு, பெண்மை - வாழ்க்கையில் சதித்துவம் எவ்வளவு பெரிய சம்பத்து என்பதும், அதனுடைய பூரணமான மகிமை என்ன என்பதும் அன்றுதான் அவள் கண்முன் தெளிவாகத் தெரிந்தது. அன்று, ஸுரேசன் ஸ்பரிசத்தையும் தந்தையின் அன்புப் பார்வையையும் அநியாயம் நிறைந்த உபத்திரவம் என்று எண்ணி அவள் கோபமும் வருத்தமும் அடைந்திருந்தாள். ஆனல் இன்று, திடீரென்று, முறையின்றிப் பர ஸ்திரீ ஆசைகொண்ட ஸுரேசன்கூடச் சதித்துவத்தின் பாதமலர்களில் அம்மாதிரித் தலை குனிந்து வணங்கு

...தக் கண்ட பொழுது, தன்னுடைய உண்மையான ...தானம்கூட அவளுக்கு விளங்காமலில்லை.

இன்னொரு விஷயம்கூட. ஒளிவு மறைவு இல்லாத வாக்கி...த்தில் எவ்வளவு விசாலமான சக்தி யிருக்கிறது என்ற ...ண்மைகூட முதல் முதல் அன்றுதான் அவளுக்குத் தெரிந்...து. அவள் படித்த ஸ்திரீ. கணவனிடம் மனம், வாக்கு, ...யங்களில் சுத்தமாக இருப்பதே சதித்துவம் என்பது அவ...ருக்குத் தெரியாமலில்லை. தேகமோ மனமோ இரண்டில் ...துவும் தனியாக சம்பூரணமல்ல. ஆயினும் அவ...டைய மனம் தளர்ந்து, அவள் கணவனை விரும்பவில்லை ...ன்ற வார்த்தையைத் தன் வாயால் சொல்வதில் அவளுக்குச் ...ங்கோசம் ஏற்படாதபோதுகூட, ஒரு நாளும் அவள் தன் ...த் துச்சமாக எண்ணியதில்லை. ஆனால், இன்று ஸுரேசன் அவளுடைய வாய் வார்த்தையைக் கேட்காமலே, அவள் ...பாருடன் அவள் வார்த்தையையே சேர்க்க விரும்பின ...போது, அவளுடைய அந்தராத்மா இதயத்தைக் கிழிக்கும் ...வேதனையுடன் சீற, அழுகை பொங்கியது.

இதன் அர்த்தம், மிருணாளினியிடம் அவளுக்கு மரி...யாதை ஏற்பட்டுவிட்டதென்பதல்ல. தவிர, 'இந்த ஸ்திரீயைப் ...பற்றிய பேச்சால் ஏற்பட்ட விழிப்பை வாழ்நாள் முழுதும் ...மறக்கமாட்டேன்!' என்று அவள் மாறி மாறிச் சபதம் ...செய்து கொள்ளலானாள்.

வெளியே தந்தையின் கைத்தடிச் சத்தமும், அதன்பின் ...ஸுரேசன் காலடிச் சத்தமும் அவளுக்குக் கேட்டன. அவர் ...கள் மஹிமைப் பார்க்கப் போகிறார்களென்பதை அறிந்து கொண்டாள். அதற்குச் சிறிது நேரத்திற்குப் பிறகு, தந்தையின் அழைப்பைக் கேட்டு, அவள் தலைப்பினால் முகத்தையும் கண்களையும் நன்றாகத் துடைத்துக்கொண்டு, கதவைத் திறந்துகொண்டு மஹிமின் அறைக்கு வந்தாள்.

கேதார் பாபு அவள் முகத்தைப் பார்த்து வருத்தத் துடன், ' இன்று என்ன விஷயம்? இரண்டு மணிக்குக் கஞ்சி கொடுக்க வேண்டியது! நாலு மணி அடித்துவிட்டதே! இதென்ன கண் இவ்வளவு வீங்கியிருக்கிறது? தூங்கினுயா என்ன?' என்றார்.

அசலா பதிலொன்றும் சொல்லாமல் வேகமாக வெளியே வந்துவிட்டாள். நோயாளிக்குக் கஞ்சி கொடுக்கும் திட்டம் ஏற்பட்ட பிறகு அந்த வேலையை மிருணுளினியேதான் செய்துவந்தாள். வேலைக்காரன் அடுப்பில் மட்டும் வைத்துவிடு வான்; அவள் அளவு பார்த்துச் சரியான சமயத்தில் இறக்கி விடுவாள். அவள் சென்ற பிறகு அந்தப் பாரம் அசலாவின் பேரில் விழுந்தது. அன்று அவளுக்கு அந்த ஞாபகமே இல்லை. ஓடோடியும் வந்து பார்த்தாள். அடுப்பு அணைந்து வெகு நேரமாகி, எல்லாம் எரிந்து சாம்பலாகிவிட்டது.

வெகு நேரம் வரை அங்கேயே அசைவற்று நின்று விட்டு அவள் திரும்பி வந்தபொழுது, கேதார் பாபு அந்த விஷயங்களைக் கேட்டு அசலாவிடம் ஒன்றும் சொல்லாமல், ஸுரேசனைப் பார்த்துக் கடுமையுடன், ' சரியான ஒரு " நர்ஸ் " வைக்காவிட்டால் மஹிமைக் காப்பாற்ற முடியாது என்று நான் உன்னிடம் அப்போதே சொல்லவில்லையா, ஸுரேஷ்? என் பெண்ணை நான் அறிந்ததைவிட நீங்கள் அதிகமாய் அறிந்துவிட்டீர்களா?' என்றார்.

ஸுரேசன் பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தான். ஆனால் அவ்வளவு நேரம் வரை வெட்கமடைந்து வாடியிருந்த மனைவியின் முகத்தை மஹிம் பார்த்துக்கொண்டிருந்ததை யாரும் கவனிக்கவில்லை. அவன் மெதுவாக, ' நர்ஸின் கையி னுல் நான் மருந்துகூடச் சாப்பிட முடியாது, ஸுரேஷ்! தவிர இவர்களுக்குச் சகாயத்துக்கு ஒரு ஆள் கொடு. நாளையும் மறு தினமும் இரவு பூராவும் கண் விழிக்க வேண்டியதாயிருக்

கும். பகலிலும் சிரம பரிகாரம் செய்துகொள்ளச் சிறிது நேரம் கிடைக்காவிட்டால் இயந்திர - மனிதன்கூட வேலை செய்ய முடியாது, அப்பா!' என்றான்.

விஷயம் உண்மையா யில்லாவிட்டாலும் பொய்புமல்ல. ஸுரேசன் சந்தோஷமடைந்து தலை நிமிர்ந்தான். கேதார் பாபு தம்முடைய கோப வார்த்தைகளால் வெள்கி, ஏதோ இன் சொல் சொல்ல முயன்றார். இதற்குள் அசலா அறையி லிருந்து வெளியே சென்றுவிட்டாள்.

இரவில், நலிவடைந்திருந்த தன் கணவனிடம் தன் னுடைய அநேகம் குற்றங்களுக்காக அழுது மன்னிப்புப் பிச்சை கேட்டு, 'என் போன்ற பாபியை வெறுப்பினின் றும் காப்பாற்ற உங்களுக்கு என்ன அக்கறை ஏற்பட்டது?' என்று சொல்லப் பல தடவைகள் தோன்றியது. ஆனால் வெட்கத்தின் காரணமாக இந்த வார்த்தை எதுவும் அவள் வாயினின்றும் வெளிவரவே யில்லை.

ஸுரேசன் நாள் தோறும் இரவு வெகு நேரத்துக்குப் பின் மஹிமின் அறைக்குள் சென்று அவசியமான எல்லாக் காரியங்களுக்கும் ஏற்பாடு செய்துவிட்டுப் படுக்கைக்குப் போவான். மிருணுளினி இருக்கும்போது அவன் இரவு மாத்திரம் வந்துவிட்டுப் போவான். அது அவசியமாகவும் இருந்தது. ஆனால் சில தினங்களாக அவன் சகஜமாக வீட் டுக்குள் நுழைவதில்லை யென்று தெரிந்தது. அவசியம் ஏற் பட்ட பொழுது வேலைக்காரியை அழைத்துச் சமாசாரத்தைத் தெரிந்துகொள்ளுவான். சாயங்காலம் சில சமயங்களில் தானே வந்து தகவல் விசாரித்துவிட்டுப் போவான். அவனுடைய இந்தப் புதிய செய்கையின் பேரில் எல்லோருக்கும் முன்பாக அசலாவின் கவனம்தான் சென்றது; ஆனால் அந்த விஷயத் தில் யாரும் சாதாரண அபிப்பிராயம் வெளியிடுவதுகூட முடியாதென்று அவளுக்கு எண்ணம். ஆகையால் அவள்

பேசாம லிருந்தாள். ஆனல் அன்று மஹிமே அதைக் கிளப்பியபோது, ' இப்பொழுதெல்லாம் விசேஷமாக அவர் வீட்டிலேயே இருப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன என்றும் தெரியவில்லை !' என்பதைச் சொல்லித் தீரவேண்டியே யிருந்தது. மஹிம் பேசாமல் கேட்டுக்கொண்டான். அவன் எவ்வித அபிப்பிராயமும் வெளியிடவில்லை.

மறுநாட் காலையில் அசலா கீழே இறங்கிக்கொண்டிருந்தாள். ஸுரேசனும் ஏதோ வேலையாகப் படிகளின் மேலே ஏறிக்கொண்டிருந்தான் ; தலை நிமிர்ந்து அசலாவைப் பார்த்தவுடனேயே அவன் விலகி நின்றுவிட்டான். அப்பொழுது அவன் தன்னிடமிருந்து நழுவிச் செல்லுகிறுன் என்பதில் அசலாவுக்குச் சற்றும் சந்தேகமில்லை. ஒரு நாள் எந்த நடத்தையை முழுமனதுடன் விரும்பினளோ, இன்று, ஸுரேசனின் அதே நடத்தையினல், அவளுடைய மனம் வேதனை கொண்டு துடிக்கலாயிற்று.



# III

அசலாவின் எல்லா வேலைகளினிடையிலும், அவள் எழுந்திருக்கும் போதும், உட்காரும்போதும், அவள் உள்ளத்தின் மூலையில் ஒரு விஷயம் ஒவ்வொரு நிமிஷமும் எரிந்து கொண்டிருந்தது. அதுதான், 'ஸுரேசனின் மனத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டு வேலை செய்துவருகிறது - அதற்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை!' என்பது.

எந்தப் பிரமாதமான காதல் தன் மூலம் தோன்றி அவ்வளவு பெருக்கெடுத்ததோ, அது அன்று இடமற்றதைப் போல அவளை விடுத்து எங்கேயோ மறைந்து போயிருந்தது. அவள் தன்னை ஆயிரம் தரம் வெறுத்தாள். நல்லது கெட்டதைச் சொல்லித் தன்னை இழிவு படுத்திக்கொண்டாள். ஆயினும் அந்த ஏணிப் படியில் ஏற்பட்ட வேதனையை அவள் தன் மனத்திலிருந்து எவ்விதத்திலும் அகற்ற முடியவில்லை. சிற்சில சமயம் தாங்க முடியாத பயத்தினால் அவளுடைய சர்வாங்கமும் மயிர்க்கூச் செறிந்தது. தான்கூட அறியாமல் ஸுரேசனைக் காதலித்தாளோ என்னவோ என்ற சந்தேகமும் எட்டிப் பார்த்தது! ஒவ்வொரு தடவையும் அவள் தன்னுடைய சந்தேகத்தை அர்த்தமற்றதென்றும் ஆதாரமற்றதென்றும் எண்ணி வேடிக்கையாக இருந்துவிடலானாள்; தன்னைத் தானே கேலி செய்துகொள்ளலானாள்—நடக்காத அந்த விஷயம் சம்பவிக்கு முன்னேயே அவள் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு மடிந்துவிடுவாள்; பிறகும் நிழல்

போல அந்த வார்த்தை அவளைத் தொடர்ந்துகொண்டே யிருந்தது. நடக்கும் போதும் திரும்பும் போதும் அவள் அதைக் கண்முன் காண்பது போலிருந்தது. அந்தப் பயங் கரத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத்தானே என்னவோ, ஸ்நானம் சாப்பாட்டு நேரங்களைத் தவிர இரவு பகல் தன் கணவனைப் பிரிந்திருக்க அவளுக்குத் தைரியம் ஏற்படவில்லை. பக்கத்திலிருந்த அவளுடைய அறை காலியாக இருந்தது. சில நாட்களாக அதில் நுழைவதற்கே அவளுக் குப் பிடிக்கவில்லை. இவ்விதமாகச் சில தினங்கள் கழிந்தன.

மஹிம் அநேகமாகக் குணமடைந்துவிட்டான். சீக்கிரத் தில் உடம்பு தேறுவதற்கு ஜபல்பூர் போவதாகவும் பேச்சு நடந்து வந்தது. அன்று காலை அசலா தரையில் உட்கார்ந்து 'ஸ்டௌ'வில் தன் கணவனுக்காகப் பால் காய்ச்சிக்கொண் டிருந்தாள். பால் அடிக்கடி பொங்கிக்கொண்டிருந்தது. ஆகையால் அவள் கவனத்தை வேறு எங்கும் செலுத்த முடியவில்லை. மஹிம் அதுவரை அவளையே பார்த்துக்கொண் டிருந்தது அவளுக்குத் தெரியாது. திடீரென்று கணவ னின் பெருமூச்சு அவளுக்குக் கேட்டதும், தலை நிமிர்ந்து அவன் பக்கம் பார்த்துவிட்டு, மறுபடியும் தன் காரியத்தில் ஈடுபட்டாள்.

மஹிம் என்றுமே அதிகமாகப் பேச மாட்டான்; ஆனால் அன்று திடீரென்று அவன் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆரம்பித்தான்: 'உண்மையில், அசலா, பெரும் துக்கமில்லா மல் பெரிய வஸ்துக்களை அடைய முடியாது! என் வீடு மறு படியும் கட்டப்பட்டுவிடும், நோயும் ஒரு நாள் சொஸ்தமாகி விடும்; ஆனால் இதனால் எனக்குக் கிடைத்திருக்கும் விலை மதிப்பற்ற பொருள் ஒன்றுண்டு. அது நீதான். நீ இல் லாமல் நான் ஒருநாள் கூடக் கழிக்க முடியாதென்று எனக்கு இன்று தோன்றுகிறது!' என்றான்.

அசலா பேசாமல் காய்ச்சின பாலை டம்ளரில் கொட்டி ஆற்றிக்கொண்டிருந்தாள். மஹிம் சிறிது பொறுத்து மறு படியும், 'மிருணாளினியும் ஸுரேசனும் எனக்கு மட்டான சேவையா செய்திருக்கிறார்கள்! ஆனால் ஏனோ தெரியவில்லை, நினைவு வரும்போ தெல்லாம் என்னவோ ஒரு அமைதி யின்மையே தோன்றியது. அடிக்கடி என் மனம், "இவர்க ளுக்கு எவ்வளவு கஷ்டம், எவ்வளவு இடைஞ்சலாக இருந் திருக்கும்—இவர்கள் கடனை நான் இந்த ஜன்மத்தில் எப்படித் தீர்க்கப் போகிறேன்?" என்று எண்ணியது. ஆனால் பகவான் கையினால் சேர்த்துவிடப்பட்ட இந்தச் சம்பந்தத்தால் உன் விஷயத்தில் மாத்திரம் என்னைக் காக்கவேண்டிய பொறுப்பு உன்னுடையதாகிவிட்டது. உன் சேவையின் கடனை ஒரு நாள் தீர்க்கவேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் ஒரு பொழுதும் எனக்கு ஏற்படவே யில்லை!' என்று சொல்லி மெல்லச் சிரித்தான்.

அசலா தலை குனிந்து பாலை ஆற்றிக்கொண்டிருந்தாள். பதிலொன்றும் சொல்லவில்லை.

'இன்னும் எவ்வளவு நாழிகை ஆற்றுவாய்? கொடுக்க மாட்டாயா?' என்றான் மஹிம்.

அப்பொழுதும் அசலா யாதொரு பதிலும் சொல்ல வில்லை. முன் போலவே தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள். முதலில் மஹிமுக்குச் சற்று ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அடுத்த கணமே, அவள் தன் கண்ணீரை மறைக்கவே அம்மாதிரித் தலை குனிந்துகொண்டிருக்கிறாள் என்பதை அறிந்தான்.

ஸுரேசன் அந்த அறைக்கு அதிகமாக ஏன் வருவ தில்லை என்பதன் காரணத்தை நிச்சயமாக அறியாவிட்டா லும், மஹிம் அதை அனுமானம்கூடச் செய்யவில்லை என்று சொல்ல முடியாது. அந்த உண்மையில் வருத்தமும் ஆனந்த

மும் அவனுக்கு ஒருங்கே ஏற்பட்டிருந்தன. காரணம், அசலா இப்பொழுது ஜாக்கிரதை யடைந்துவிட்டாள். எங்கே தனிமையில் ஸுரேசனுடன் சந்திப்பு ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தினுல் அவள் தன் அறையைவிட்டு வெளியே எங்கும் செல்ல விரும்பவில்லை என்பதை அறிந்தான். ஆகை யால் அன்று முழுவதும் அவன் மனம் இளவேனில் காற்றில் மூழ்கித் திளைத்துக்கொண்டிருந்தது. அவனுடைய கட்டிலுக் குச் சிறிது தூரத்தில் ஒரு சாய்வு நாற்காலி போடப்பட் டிருந்தது. அன்றிரவு வெகு நேரம் வரை அசலா அதில் அமர்ந்து ஏதோ புஸ்தகம் படித்துக்கொண்டிருந்தாள். களைப் படைந்ததால் இரவு முழுதும் அதிலேயே படுத்துத் தூங்கி னுள். மறுநாள் காலை மஹிம் கூப்பிட்டதும், அவள் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்து, ஜன்னலைத் திறந்து பார்த்தபோது நன்ருக விடிந்துவிட்டது.

மஹிம் எதைப் பற்றியோ சொல்லிக்கொண்டிருந்தவன் திடீரென்று நின்றுவிட்டான். அசலாவைப் பாதாதி கேசம் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ஆச்சரியத்துடன், 'உன்னுடைய சால்வை எங்கே?' என்ருன்.

அசலா அதைவிட அதிக ஆச்சரியத்துடன் தன் பக்கம் பார்த்துக்கொண்டாள். அவள் விழித்தெழுந்து அவசரமாகப் போர்த்துக்கொண்டு வந்த சால்வை ஸுரேசனுடையது என்று அப்பொழுதுதான் கண்டாள். கணவனின் கேள்வி அவளை வெட்டியது. வெட்கத்தினுலும் துக்கத்தினுலும் அவள் முகம் சுண்டியது. ஆனுல், அது நடந்தது எப்படி என்பது அவளுக்கு விளங்கவில்லை. முதல் நாள் இரவு தூங்கு முன் சால்வையைச் சுருட்டிக் காலின்கீழ்ப் போட்டுக் கொண்டு, புடவைத் தலைப்பைப் போர்த்துக்கொண்டு படிக்க உட்கார்ந்தது நினைவுக்கு வந்தது. தூங்கும்போது நடுநடுவே அவளுக்குக் குளிர் நடுக்கியது என்பதும் ஞாபகத்திற்கு

வந்தது; அதன் பின் தூங்கி விழித்தவுடன்தான் இந்த மாறுதல் ஏற்பட்டிருந்தது.

மிகுந்த வெட்கமும் வருத்தமும் அடைந்த மனைவியின் முகத்தைப் பார்த்து, மஹிம் அன்புடன் குதூகலமாகச் சிரித்தான். 'இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது, அசலா? வேலைக்காரன் ஒருகால் உன் சால்வையை அங்கே வைத்து, அங்கே வைக்கவேண்டியதை உன்னிடம் மாற்றி வைத்திருக்கலாம்; அல்லது ஸுரேசன் ஒருகால் நேற்று மாலை மறதியில் அதை இங்கே விட்டிருக்கலாம். இரவில் அறிய முடியாததால் நீ போர்த்துக்கொண்டுவிட்டாய். வேலைக்காரனைக் கூப்பிட்டு மாற்றிக்கொண்டு வரச்சொல்லு!' என்றான்.

'ஆகட்டும்' என்று கூறிச் சால்வையைக் கையிலெடுத்துக்கொண்டு அசலா வெளியே சென்று அடுத்த அறையில் சென்று அமர்ந்தபோது, அவள் மனம் எண்ணாதனவெல்லாம் எண்ணியது. இரவு வெகு நேரத்திற்குப் பிறகு ஸுரேசன் மெதுவாக உள்ளே வந்திருக்கிறான். தான் அம்மாதிரித் தூங்குவதைக் கண்டு, தன் சால்வையைத் தூங்குபவள் மேல் அன்புடனும் ஜாக்கிரதையுடனும் போர்த்திவிட்டுப் பேசாமல் சென்றுவிட்டான் என்பதில் அவளுக்குச் சந்தேகமே ஏற்படவில்லை. கண்களை மூடித் தலை குனிந்து உட்கார்ந்திருக்கும் அவள் கண்களுக்கு அது தெளிவாகத் தென்பட்டது. அவள் உடல் மயிர்க்கூச் செறிந்தது. அவளைப் பார்ப்பதற்காகவே, அதிலும் நன்றாகப் பார்ப்பதற்காகவே, அவன் அம்மாதிரி வந்திருப்பான்! ஒருகால் ஒவ்வொரு இரவும் யாருக்கும் தெரியாமல் வந்துகொண்டிருந்தாலும் இருக்கலாம்!

இந்தக் கீழான நடத்தையினால் அவளுக்கு எல்லையற்ற வெட்கம். இதை அவள் கேவலமென்றும், துச்சமென்றும், கண்ணியமற்ற தன்மையென்றும் எண்ணி, ஆயிரம் விதமாக

அவமானம் செய்யலானாள். அதோடு மனத்திற்குள், அதிதியிடம் வீட்டுக்காரன் நடந்துகொண்ட இந்தக் கள்ள நடத்தையை ஒரு பொழுதும் மன்னிக்க முடியாது என்று தீர்மானம் செய்துகொண்டாள். ஆனாலும் அவள் முழுமனமும் அதை ஆமோதிக்கவில்லை என்பதும் அவளுக்குத் தெரியாமலில்லை. கூடவே அவள் கண்களுக்கு எங்கோ யாரோ உட்காரும் போதும் எழுந்திருக்கும் போதும் முள்ளாகக் குத்திக்கொண்டிருந்தது அவளுக்கு ஸ்பஷ்டமாக விளங்கிற்று.

கேதார் பாபுவின் பால்ய சிநேகிதர் ஒருவர் ஜபல்பூர் நகரத்தில் இருந்தார். அவரிடமிருந்து பதில் வந்திருந்தது. அவ்விடத்தில் காற்று ரொம்ப நன்றாக இருக்கிறதென்றும், இயற்கைக் காட்சிகளும் நன்றாகவே இருக்கின்றன என்றும், தம் வீடு பெரிய வீடாகையால் மஹிம் வருவதாக இருந்தால் தம் வீட்டிலேயே சௌக்கியமாக இருக்கலாம் என்றும் எழுதியிருந்தார்.

ஒரு நாள் காலை கேதார் பாபு வந்து அந்த விஷயத்தைச் சொல்லி, 'மாசி மாதம் கழிந்துவிட்டதும் வழியில் ஏற்படும் அலுப்பை மஹிம் சகித்துக்கொள்ள முடியும். இனித் தாமதம் செய்வது சரியல்ல' என்றும் சொன்னார். சிறு வயதில் அவரே ஒரு முறை ஜபல்பூர் போயிருக்கிறார். அப்பொழுது ஏற்பட்ட நினைவுகள் அவருக்கு ஞாபகம் இருந்தன. அவர் மிக்க உற்சாகத்துடன் அவைகளை வர்ணிக்கலானார். 'ஜகதீசனின் மனைவி இன்னும் இருக்கிறாள். அவள் தாயாரைப் போல் மஹிமைப் பார்த்துக்கொள்வாள். கூடவே நானும் சுற்றி வந்துவிடலாம்!' என்றார்.

மஹிம் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால் கொஞ்சங்கூட உற்சாகம் காட்டவில்லை. அந்த உற்சாகமற்ற தன்மையை அசலா மாத்திரம் அறிந்துகொண்டாள்.

தந்தை சென்ற பிறகு அவள் தயக்கத்துடன், ‘ஏன், ஜபல்பூர் நல்ல இடம்தானே? உங்களுக்குச் செல்ல இஷ்டமில்லையா?’ என்று கேட்டாள்.

‘நீங்க ளெல்லோரும் என்னை எவ்வளவு சொஸ்த மடைந்தவன் என்று எண்ணிக்கொண் டிருக்கிறீர்களோ அவ்வளவுக்கு நான் இன்னும் குணமடையவில்லை. என்ரு வது அடைவேனு என்றும் எனக்கு நம்பிக்கை யில்லை!’ என்ருன் மஹிம்.

‘அதனுல்தான் டாக்டர் வெளியூர் வாசத்துக்குச் சிபா ரிசு செய்திருக்கிருர். ஒரு தடவை போய்ச் சுற்றிவிட்டு வந்தீர்களானுல் எல்லாம் சரியாகிவிடும்!’

மஹிம் மெள்ளத் தலை யசைத்துவிட்டுச் சற்று நேரம் சும்மா யிருந்தான். பிறகு, ‘எப்படிச் செல்வது? ஆனுல் இந்த நிலைமையில் என் பொறுப்பிலோ அல்லது பிறர் பொறுப்பிலோ ஸ்வர்க்கம் செல்லக்கூட எனக்குத் தைரியம் ஏற்படவில்லை. அசலா! உள்ளுக்குள் நான் ரொம்பப் பலவீன மாக இருக்கிறேன். மிகவும் குணமில்லாமல் இருக்கிறேன். நீ என்னுடன் இல்லாவிட்டால் நான் அதிக நாள் ஜீவிக்கக் கூட முடியாது!’ என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே அவன் குரல் தடைபட்டுவிட்டது.

வாய் திறந்து ஒரு பொழுதும் ஒன்றும் கேட்டிராத வன், ஒரு பொழுதும் தன் துக்கத்தையோ இல்லாமை யையோ பிறரிடம் சொல்லாதவன் வாயினின்றும் வெளி வந்த அந்த வியாகூலப் பிச்சை, வேல்-கம்பு போலக் குத்தி, அசலாவின் உள்ளத்தில் அடைந்து கிடைந்த பூர்ண அன்பை யும், கருணையையும், மதுரத்தையும் ஒரு கணத்தில் திறந்து விட்டுவிட்டது. அவள் தன்னை அடக்க முடியாதவளாய், அசந்தர்ப்பமாக எதையாவது தான் செய்துவிடாம லிருக்க வேண்டுமே என்ற பயத்தினுல், கண்ணில் பொங்கி வந்த

கண்ணீரை அடக்கிக்கொண்டு அறையினின்றும் வெளியே சென்றாள். மஹிம், பிரமை பிடித்தவன் போல், ஆச்சரியத்தாலும், வேதனையினாலும் திறந்திருந்த கதவின் பக்கம் வெகு நேரம்வரை ஒரே பார்வையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு மெள்ள மெள்ளத் தூங்கிவிட்டான்.

மறுபடி கணவனும் மனைவியும் சந்தித்தபோது, யாரும் அந்த விஷயத்தைப் பற்றி எதுவும் பேசவேயில்லை. மறுநாள் அசலா கையில் ஒரு தந்தியை எடுத்துக்கொண்டு வந்து, சிரித்துக்கொண்டே, 'ஜகதீச பாபு தந்திக்குப் பதில் தந்தி கொடுத்துவிட்டார். அவர் தம் வீட்டுக்கருகில் நமக்காக ஒரு சிறிய வீடு ஏற்பாடு செய்திருக்கிறார்!' என்றாள்.

மஹிம் விஷயத்தை நன்றாக அறிய முடியவில்லை. 'என்ன சொல்லுகிறாய்?' என்றான்.

'தந்தையின் நண்பரானதால் அவர் உங்களுக்குத் தம் வீட்டில் இடம் கொடுக்க முடியும். ஆனால் இருவர் சென்று அவர்களுக்குப் பாரமாக இருப்பது சரியாகுமா? ஆகையால் ஒரு தனி வீட்டை ஏற்பாடு செய்யும்படி அப்பா கடிதம் எழுதியிருந்தார். இதுதான் அதற்குப் பதில்!' என்று சொல்லிக்கொண்டே மஞ்சள் கவரிலிருந்த தந்தியை எடுத்து மஹிமின் படுக்கையில் போட்டாள்.

மஹிம் அதைக் கையி லெடுத்து, ஆதியோடந்தம் படித்துவிட்டு, 'சரி!' என்றான். அசலா, தானாகவே, தன் இஷ்டத்தின் பேரிலேயே அவன்கூட வர விரும்புகிறாள் என்பதை அவன் அறிந்தான். ஆனால் அவளுடைய முதல் நாள் நடத்தை இன்றுகூட அவனுக்கு அறிய முடியாமல் தான் இருந்தது. ஆனால் அதை எண்ணி அவன் எவ்விதத்திலும் சஞ்சலத்தைக் காட்ட இஷ்டப்படவில்லை.

ஆனால் அசலாவோ யாத்திரைக்கு வேண்டிய சகல முயற்சிகளையும் பூராணமாகச் செய்து வந்தாள். அன்று

ந்தியானம் அவள் தந்தையின் அறைக்குள் வந்து தன் மான்களை எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள். கேதார் ாபு வாசற்படிக்கு வெளியே நின்றுகொண்டு சிறிது நேரம் ரை பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு, 'நீ போகாவிட் ால், நடக்காதா அம்மா?' என்றார்.

அசலா திடுக்கிட்டு முகம் நிமிர்ந்து, 'ஏன் அப்பா?' ன்றாள்.

ஆரோக்கிய சிகிச்சைக்காகப் போகும்பொழுது மனைவி புவனுடன் இருப்பது சரியல்ல. தம் மகளிடம் இந்த விஷயத் ைதக் கூற கேதார் பாபுவுக்கு வெட்கமா யிருந்தது. ஆகை ால் மஹிமின் தற்காலப் பொருளாதார நிலைமையைச் சுட் டக் காட்டி, 'அதிக நாளைய விஷயம் இல்லை யல்லவா! துதைத் தவிர ஜகதீசன் வீட்டில் அசௌகரியமும் ஒன்றும் ரற்படாது. இந்தச் சில நாட்களுக்காக வீணாகச் செலவு செய்துகொண்டு—' என்று சொல்ல ஆரம்பித்தார்.

உண்மையை அசலா அறியவில்லை. அவள் தந்தையின் முகத்தைப் பார்த்து, 'ஒருகால் அவர் சொன்னாரோ?' என்றாள்.

'இல்லை, இல்லை! மஹிம் ஒன்றும் சொல்லவில்லை! நான்தான் யோசிக்கிறேன்—'

'நீங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம், அப்பா! நான் எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கொள்ளுகிறேன்!' என்று சொல்லி, மறுபடியும் தன் காரியத்தில் ஈடுபட்டாள். மறு நாளே, ஒருவருக்கும் தெரியாமல், அவள் தன் நகைகளில் இரண்டை விற்றுப் பணம் சேர்த்துக்கொண்டாள்.

பங்குனி மாத மத்தியில் போவதாக இருந்தது. ஆனால் ஜகதீசனின் அத்தை, புரோகிதரை அழைத்துப் பஞ்சாங்கத் தைப் பார்த்து, முதல் வாரத்திலேயே மஹிம் புறப்படும்படி நிச்சயம் செய்தாள். அந்த அபிப்பிராயத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.

புறப்படுவதற்கு இரண்டு நாளைக்கு முன், அசலாவின் உள்ளம் காற்றில் மிதப்பது போன்ற ஓர் உற்சாகம் அடைந்தது. கல்கத்தாவை விட்டுப் புக்ககத்தில் சில நாள் இருந்ததைத் தவிர, அவள் தன் வாழ்க்கையில் வேறெங்கும் வெளியே செல்லச் சந்தர்ப்பமே ஏற்பட்டதில்லை. அது வரை அவள் மேற்குத் திக்கின் முகத்தைக் கூடப் பார்த்ததில்லை. அங்கே எவ்வளவோ பழங் கால ஞாபகச் சின்னங்கள், மலைகள், வனங்கள், நதிகள், நீர்வீழ்ச்சிகள், இன்னும் எத்தனையோ பார்க்கத் தகுதியுள்ள காட்சிகள் உண்டு!—அவைகளை யெல்லாம் பிறர் சொல்லிக் காதால் கேட்டதைத் தவிர, தானே அவைகளைக் காணவேண்டுமென்ற கற்பனைகூட அவள் மனத்தில் எழுந்ததில்லை. அப்பொழுது அவள் தன் கண்களால் அவைகளை நேரில் காணப் போகிறாள்! இதைத் தவிர அங்கே சென்றபின் தன் கணவனின் கேடடைந்த ஆரோக்கியம் சீர்பெற்றுவிடும். அங்கே தனியாகத் தான் வீட்டுக்கு அதிகாரியாக இருந்து, கணவனுக்கு உதவி செய்து வருவாள். அவ்விடத்திய ஜலமும் காற்றும் ஆரோக்கிய முள்ளவையாக இருக்கும். அவ்விடத்தில் ஜீவன யாத்திரையின் மார்க்கம் சகஜமாகவும் தடையற்றதாகவும் இருக்கும். கணவன் சுகமடைந்ததும் சில நாட்கள் அவள் அங்கேயே குடித்தனம் செய்வாள்! சமீப எதிர் காலத்தில் பரிசயமற்ற அதிதிகளாக வரும் ஒவ்வொருவரும் அவர்கள் இல்லறத்தைச் செழிப்பாக்குவார்கள்! அவர்களுடைய இனிய முகங்கள் முற்றிலும் அறிமுகமானவை போல அவள் கண்முன் தெளிவாய்த் தென்படலாயின. இம் மாதிரி நிலைபெறாத இன்பக் கனவுகளில் இரவு பகல் அவள் சிந்தை சுற்றிக்கொண்டிருந்தது. அதைத் தவிர, அவளை விட்டு ஸ்வர்க்கத்திற்குச் செல்லக்கூட இஷ்டப்படவில்லை என்று கணவன் சொன்னது அவள் சிந்தனைப் பெருக்கைத்

தேன்மய மாக்கியது. அப்பொழுது அவளுக்கு யாரிடமும் எந்தக் கோபமோ புகாரோ ஒன்றும் கிடையாது. அவ ளுடைய உள்ளத்தில் நிறைந்திருந்த வருத்தம் முழுதும் கிதைந்து, நிர்மலமான கங்கை நீர்போல் புனிதமாகிவிட்டது. போவதற்கு முன் மிருணாளினியை ஒரு முறை பார்த்து, அவளை மார்புடன் தழுவிக்கொண்டு, தெரிந்தும் தெரியாம லும், தான் இழைத்த சகல பிழைகளையும் பற்றி மனப் பூர்வமாக அவளிடம் மன்னிப்புக் கேட்கவேண்டு மென்று அவளுக்குப் பெரும் விருப்பம் ஏற்பட்டது. ஸுரேசனுக் காகக்கூட இன்று அவள் மனம் அழலாயிற்று. அத்தியந்த கண்பனுக இருந்தும், வெட்கத்தாலும் சங்கோசத்தாலும் அவனைச் சந்திக்க முடியவில்லை. இந்தத் துர்ப்பாக்கிய மான வேதனையை அன்று அவள் ரகசியமாக அனுபவித் ததைப் போல அதற்கு முன எப்பொழுதும் அனுபவித்த தில்லை. அவனிடமும் முழு மனத்துடன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனல் விசாரித்த பிறகு அவன் முதல் நாளிலிருந்து வீட்டில் இல்லை என்பது தெரிந்தது.

புறப்படும் தினத்தன்று காலையிலேயே வானத்தில் மேகம் கவிந்துகொண்டு சிறு தூற்றல் போட்டுக்கொண் டிருந்தது. சாமான்கள் எல்லாம் கட்டியாய்விட்டது. சில சாமான்கள் ஸ்டேஷனுக்குக்கூடச் சென்றுவிட்டன. டிக் கட்டும் வாங்கியாகிவிட்டது. அசலாவுக்கு இரண்டாவது வகுப்பு டிக்கட் வாங்கப் பேச்சு நடந்தது. ஆனல் அவள் அதைப் பிடிவாதமாக எதிர்த்து, மஹிமிடம், 'வீணுக ரூபாயை நஷ்டமாக்கவேண்டு மென்று எண்ணியிருந்தால் வாங்குங்கள். நான் சௌக்கியமாக இருக்கிறேன்; பலமாக இருக்கிறேன். தவிர எத்தனை பெரிய மனிதர் வீட்டு ஸ்திரீ கள் மத்திய வகுப்பில் பிரயாணம் செய்கிறார்கள்! நான்

மட்டும் அப்படிப் போக முடியாதவளா? நான் மேல் வகுப்பு வண்டியில் போகவே மாட்டேன்!' என்று சொல்லிவிட்டாள். அப்படியே விஷயம் முடிவு செய்யப்பட்டது.

இரண்டு நாட்களாக ஸுரேசனைப் பற்றிய தகவலே இல்லை. ஆனால் அன்று காலை, மழையின் காரணமாகவோ, அல்லது வேறு காரணமாகவோ, அவன் தன் படிப்பறையில் உட்கார்ந்திருந்தான். அந்த ஆனந்தமற்ற அறைக்குள் அசலா தென்றல் காற்றைப் போல் புகுந்தாள். அவள் குரலில் ஆனந்தத்தின் ஆதிக்கம் பொங்கிக்கொண் டிருந்தது.

'ஸுரேஷ் பாபு! இந்த ஜன்மத்தில் தாங்கள் எங்கள் முகத்தைப் பார்க்க மாட்டீர்களா? அவ்வளவு பெரிய குற்றம் நாங்கள் என்ன செய்துவிட்டோம்? சொல்லுங்களேன்!' என்றாள்.

ஸுரேசன் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். தலை நிமிர்ந்து அசலாவின் பக்கம் பார்த்தான். தன் வீடு எரிந்ததும், அதன் அக்கம் பக்கத்திலுள்ள மரங்களின் முகத்தை அசலா எப்படிப் பார்த்து வந்தாளோ, அது போல், ஸுரேசனின் இன்றைய முகத்தை அந்த மரங்களுடன் ஒப்பிட்டு நினைவு படுத்திக்கொண்டு மனத்திற்குள் கொதித் தெழுந்தாள். அவள் எதைச் சொல்ல வந்தாளோ அதை யெல்லாம் மறந்தாள். அவன் அருகே வந்து, வருத்தமான குரலில், 'ஸுரேஷ் பாபு! தங்களுக்கு உடம்பு அசௌகரியமா? என்னிடம் இதைச் சொல்லவே இல்லையே!' என்றாள்.

ஒரு கணம்தான் ஸுரேசன் தலை நிமிர்ந்தான். அதே க்ஷணம் குனிந்துகொண்டு, 'இல்லையே! உடம்புக்கு ஒன்றும் இல்லையே! நன்றாகத்தானே இருக்கிறேன்!' என்று சொல்லிவிட்டு, புஸ்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டே மறுபடியும், 'இன்றைக்குத்தானே நீங்கள் புறப்படப் போகிறீர்கள்? எல்லாம் ஏற்பாடாகிவிட்டதா? இனி எப்பொழுது சந்திக்க முடியுமோ தெரியவில்லை!' என்றான்.

ஒரு நிமிஷம்வரை எதிர்த் தரப்பிலிருந்து யாதொரு பதிலும் வராததால், ஸுரேசன் ஆச்சரியத்துடன் தலை நிமிர்ந்து பார்த்தான். அசலாவின் இரு கண்களிலும் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. கண்கள் சந்தித்ததும் கண்ணீர்ப் பெருக்கு வழியலாயிற்று.

ஸுரேசனின் ரத்தம் கொதித்தது; அவன் உன்மத்தனுனன். ஆயினும், அன்று அவன் தன்னுடைய முழுச் சக்திகளையும் ஒன்று திரட்டித் தன்னை அடக்கிக்கொண்டு தலைகுனிந்துகொண்டான்.

அசலா தலைப்பினுல் கண்களைத் துடைத்துக்கொண்டு, வருத்தமான குரலில், 'ஸுரேஷ் பாபு, உங்கள் உடம்பும் சௌகரியமில்லை. நீங்களும் எங்களுடன் வாருங்கள்!' என்ருள்.

ஸுரேசன் தலையசைத்து, 'முடியாது!' என்ருன்.

'முடியாமலென்ன? உங்களுக்காக —'

வார்த்தை பூர்த்தியாகவே இல்லை. அதற்குள் வாசற்படிக்கு வெளியேயிருந்து, 'பாபுஜி, தங்களுக்கு இதோ டீ!' என்று சொல்லிக்கொண்டே வேலைக்காரன் திரையை விலக்கிக்கொண்டு அறைக்குள் வந்தான். ஆனுல், அதே க்ஷணம், அசலா மறுபக்கம் முகம் திருப்பிக்கொண்டு, அறையைவிட்டு வெளியேறினுள்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு தன் கணவன் அறைக்குச் சென்ருள். மஹிம் அவளிடம், 'ஸுரேசன் சில நாட்களாக எங்கே சென்றிருந்தான் தெரியுமா? அத்தையிடம் ஒன்றும் சொல்லிவிட்டுப் போகவில்லை. இன்றுகூட அவன் என்னைச் சந்திக்கமாட்டானு?' என்ருன்.

அசலா தயக்கத்துடன், 'இன்று அவர் வீட்டிலேதான் இருக்கிருர்!' என்ருள்.

'இல்லை! இப்பொழுதுதானே வேலைக்காரி என்னிடம் "பாபு காலையிலேயே எங்கோ சென்றுவிட்டார்" என்று சொன்னாள்!' என்றான்.

அசலா பேசாமல் இருந்தாள். ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அவள் அவனைச் சந்தித்தாள். 'அவர் ரொம்ப அசௌக்கியமாக இருக்கிறார். அவர் சிறு வயதில் செய்ததைப் போல இந்தத் தடவையும் உங்கள் உயிரைக் காப்பாற்றியிருக்கிறார். வேறு எதுவும் இல்லாவிட்டாலும், இந்த நன்றிக்காகவாவது அவரை ஒரு முறை இங்கு அழைத்து, இனி அவரிடம் யாதொரு வருத்தமும் இல்லை என்று காட்டவேண்டும். சந்தேகப் பார்வையுடன் பார்த்து இன்னும் அவரை லஜ்ஜைப்படச் செய்ய வேண்டாம்—' என்று சொல்ல நினைத்தும், தன் ஹிருதயத்திலுள்ள இந்த வார்த்தைகளில் ஒன்றைக்கூட அவள் வாயால் சொல்ல முடியவில்லை; பேசாமல் தன் கை வேலையில் ஆழ்ந்தாள்.

ஸ்டேஷனுக்குப் புறப்பட வேண்டிய சமயம் வந்தது. கீழே கேதார் பாபு கூப்பிடுவது கேட்டது. அத்தை கட்டுச் சாதம் கட்டுவதில் முனைந்திருந்தாள். வேலைக்காரர்கள் சாமான்களை வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தனர். ஆனால் வீட்டின் சொந்தக்காரனை ஸுரேசனைப் பற்றித் தகவலில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த விஷயமாக வெளிப்படையாகப் பேசவும் யாருக்கும் தைரியம் கிடையாது. அந்தச் சம்பவம் எல்லோரையும் உள்ளூர வருந்தச் செய்தது.

கேதார் பாபு தம் மகளைத் தனிமையில் அழைத்து, அவள் சிரத்தில் கை வைத்து வருடிக்கொண்டே, அன்பு பொங்கும் குரலில், 'அம்மா! நீ ஸதி-லக்ஷ்மியாக இரு! உன் தாயாருக்குச் சமானமாக இரு! தள்ளாத வயதில் அறியாமல் எவ்வளவோ நல்லது கெட்டதைச் சொல்லி

யிருப்பேன், அம்மா! அதற்காகக் கோபிக்காதே!' என்று சொல்லிவிட்டு விலகி நின்றார்.

மஹிம் வண்டியில் ஏறும்போது அசலா அவனிடம் மிக்க வருத்தத்துடன், 'நிஜமாகவே அவர் நம்மைச் சந்திக்கவே யில்லையே! அவரிடம் ஒரு வார்த்தை சொல்ல இரண்டு நாளாக அவரை வழிபார்த்துக்கொண்டிருந்தேன்!' என்றாள்.

தந்தையின் வார்த்தைகளால் அவள் கண்களில் கண்ணீர் பெருகலாயிற்று. முகத்தைத் திருப்பிக்கொண்டு அதை மறைத்துக்கொண்டாள்.

கதவின் மறைவில் அத்தை நின்றுகொண்டிருந்தாள். அசலா மிக்க பக்தியுடன் அவள் பாதங்களைத் தொட்டதும் அவள் தழுதழுத்த குரலில் அநேக ஆசீர்வாதங்களைச் செய்துகொண்டே, 'உன் நெற்றிக் குங்குமம் அக்ஷயமாக இருக்கட்டும் அம்மா! கணவனைச் சொஸ்தப்படுத்திக்கொண்டு சீக்கிரம் வீடு திரும்பவேண்டும். இதைத்தான் நான் கடவுளிடம் பிரார்த்திக்கிறேன்!' என்றாள்.

'அத்தை, அதுதான் என் பாக்கியம்!' என்று கூறி, தலைப்பினால் கண்களைத் துடைத்துக்கொண்டு, அசலா வண்டியிலேறி அமர்ந்தாள். வார்த்தைகள் கேதார் பாபுவின் செவிகளிலும் விழுந்தன. அவர் தம்முடைய வெட்கத்தினால் தாமே குன்றலானார்.



# IV

புகைவண்டி ஹௌரா ஸ்டேஷனிலிருந்து புறப் படப் பத்து நிமிஷம் இருந்தது. வெளியே மேகம் சூழ்ந்த வானம். தூற்றல் நின்றபாடில்லை. ஜனங்கள் இங்குமங்கும் செல்வதால் ஸ்டேஷன் எங்கும் சகதியாயிருந்தது. பிரயாணி கள், சருக்கலுக்குத் தப்பிக் கூட்டத்தில் புகுந்தடித்துக் கொண்டு, சாமான்களுடன் தங்களுக்கு இடம் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் ஒரு பெரிய சூட் கேஸுடன் ஸுரேசன் வருவதை அசலா கண்டாள்.

ஆச்சரியத்தாலும் வருத்தத்தாலும் கேதார் பாபுவின் முகம் சுண்டியது. அவன் அருகே வந்ததும் வராததுமாய், அவனிடம் உரத்த குரலில், 'என்ன விஷயம் சுரேஷ்? நீ எங்கே செல்கிறாய்?' என்றார்.

ஸுரேசன் அசலாவுக்குப் பதிலளித்தான். அவள் பக்கம் பார்த்து ஒரு வரண்ட சிரிப்புடன், 'இல்லை! நான் பார்த்தேன்,— உன்னுடைய யோசனையையும் அழைப்பையும் எவ்விதத்திலும் அசட்டை செய்ய முடியாது. இன்று காலை நீ அம்மாதிரி மூக்கின்மேல் விரல் வைத்து எனக்குத் தெரிவித் திராவிட்டால், என் தேகாரோக்கியம் எவ்வளவு சீர்கெட் டிருக்கிற தென்பது எனக்குத் தெரிந்தே இருக்காது! சரி, உங்களிடம் அதிதியாகச் சில நாள் இருக்கிறேன். நன்றாக இருக்கிறதா இல்லையா, பார்ப்போம்! நான் உண்மையாகச் சொல்லுகிறேன் —' என்றான்.

மஹிம் இடையிலேயே, 'நல்லதுதான் ஸுரேஷ், புது இடத்தில் எங்களுக்கும் போதுமான உதவி கிடைக்கும்' என்று சொல்லி, ஒரு கணம் அசலாவின் பக்கம் பார்த்தான். அந்த ஒரு கண நேரத்து மௌனப் பார்வை உத்தண்டமான குரலில், 'என்னிடம் ஏன் சொல்லவில்லை, அசலா? அவனுடைய தேகாரோக்கியத்திற்காக மனத்திற்குள் இவ்வளவு வருந்திக்கொண்டிருந்தாயே, இன்று காலை கூட அதைப் பற்றி இருவரிடையேயும் விவாதம் நடந்ததே, இதைப்பற்றி என்னிடம் துளிகூட நீ ஏன் அறிவிக்கவில்லை? ஒளித்து வைக்கவேண்டிய அவசியம் என்ன வந்தது, அசலா?' என்று கேட்பதைப் போல் இருந்தது.

ஆனால் அசலா மறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்தாள்; ஸுரேசன் ஒரு நிமிஷம் பிரமை பிடித்தவன் போல் நின்று, திடீரென்று உள்ளேயிருக்கும் குழப்பத்தை வெளியே தள்ளி, அகாரணமான வருத்தத்துடன், 'ஆனால் வண்டி புறப்பட இனி அதிக நேரமில்லை. ஏறு! ஏறு! முதலில் வண்டியில் ஏறி உட்காரு, பிறகு பேசிக்கொள்ளலாம். வாருங்கள் கேதார் பாபு!' என்று சொல்லி, அவன் எதிரே பார்த்துக்கொண்டே ஒருவிதமாக எல்லோரையும் விலக்கிக்கொண்டு முன்னே வந்தான்.

கேதார் பாபு வெகு நேரம்வரை ஒன்றும் பேசவில்லை. மஹிமை ஏற்றி உட்கார வைத்துவிட்டு, அசலாவை ஸ்திரீகள் வண்டியில் ஏற்றி உட்கார வைத்தார். வண்டி புறப்படும் சமயம், ஸுரேசன் குனிந்து அவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, மஹிமின் பக்கத்தில் சென்றமர்ந்தபோது, அவர், 'நீ கூடவே தான் இருக்கிறாய், ஸுரேஷ்! அதனால் வழியில் யாதொரு கஷ்டமும் ஏற்படாதென்று நம்புகிறேன். பெண்கள் வண்டி சற்று தூரத்தில் இருக்கிறது. இடையிடையே கவனித்துக் கொள்ளவேண்டும்' என்று கூறி மஹிமை ஒரு தரம் உஷார்ப்

படுத்தி, 'போய்ச் சேர்ந்ததும் கடிதம் போடு, மறந்துவிட வேண்டாம். நான் ரொம்பக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பேன்!' என்று சொல்லி, கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சென்றார். வருத்தமும் மலினமும் அடைந்த அவருடைய முகம் அவர்கள் கண்முன்னே நின்றுகொண்டிருந்தது; அன்பு பொங்கும் அவர் குரலும் வெகுநேரம் வரை அவர்கள் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தது.

வண்டி புறப்பட்டதும் குளிர் ஏற்படும் என்ற பயத்தினால் மஹிம் கம்பளியைப் போர்த்துக்கொண்டு படுத்துக்கொண்டான். சீக்கிரத்தில் தூங்கியும்விட்டான். ஆனால் ஸுரேசன் தன் இடத்தில் அப்படியே உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பவர்கள்கூட யாரும் இல்லை. இருந்திருந்தால், அவன் முகத்தைப் பார்த்து, அவன் கண்களின் பார்வை சுபாவமாக இல்லை, உள்ளே கோரமான ஒரு அக்னிக் காண்டம் நடவாமல் எந்த மனிதன் கண்களிலும் இம்மாதிரியான ஜ்வலிப்பு ஏற்பட முடியாதென்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

அது பாஸஞ்சர் வண்டி. எல்லாச் சிறிய ஸ்டேஷன்களிலும் நின்று நின்று மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது. வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது. வண்டி ஒரு பெரிய ஸ்டேஷனை நெருங்கியதும், மஹிம் தன் போர்வையை விலக்கித் தலையை நீட்டி, 'நெருக்கந்தான் இல்லையே! சற்றுத் தூங்குகிறதுதானே, ஸுரேஷ்! இம்மாதிரி சௌகரியம் நெடுகக் கிடைக்குமோ கிடைக்காதோ, நம்பிக்கையில்லை!' என்றான்.

ஸுரேசன் திடுக்கிட்டு, 'ஆமாம், ஆமாம்! இப்பொழுது தூங்குகிறேன்!' என்றான்.

அவன் இம்மாதிரியாகக் காரணமின்றித் திடுக்கிட்டதைக் கண்டு மஹிம் ஆச்சரியத்தால் பிரமித்துப் போனான். அவன்

தன்னை அறியாமல் ஏதாவது தவறிழைத்திருப்பானே? யாரா வது தன்னைப் பிடித்துக்கொள்வார்கள் என்ற பயத்தினால் தான் இம்மாதிரி நடுங்கிக்கொண்டிருக்கிறானே? அவனுடைய முகத்தோற்றத்தை மஹிம் வெகு நேரம் வரை தன் மனத்தி னின்றும் அகற்ற முடியவில்லை.

வண்டி ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது.

ஸுரேசன் தன் நிலைமையை உணர்ந்து, சிறிது சிரிப் புடன் முகத்தைச் சரளமாக்கிக்கொண்டு, 'நீ தூங்கு கிறாய் என்று எண்ணியிருந்தேன். அதனால்தான் திடுக் கிட்டேன்—' என்றான்.

மஹிம் 'உம்' என்று சொல்லிச் சும்மா இருந்துவிட் டான். ஸுரேசனின் இந்த அநாவசியமான வெளிவேஷம் அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஸுரேசன் மறுபடியும், 'அவளுக்கு ஏதாவது தேவையா யிருக்குமோ என்னவோ? ஒரு தடவை சென்று விசாரித்துவிட்டு வந்தால்—?' என்றான்.

'ஆனால் மழை பெய்துகொண்டிருக்கிறதே?' என்றான் மஹிம்.

'அதொன்றுமில்லை! நான் ஒரு நொடியில் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன்!' என்று சொல்லி, ஸுரேசன் கதவைத் திறந்துகொண்டு வெளியே இறங்கினான். பெண்கள் வண்டி யருகில் சென்று பார்த்தபோது, அசலாவுக்கு அவள் வயதுள்ள தோழி ஒருத்தி கிடைத்திருந்தாள். அவளிடம் அவள் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். அவள் முதலில் ஸுரேசனைப் பார்த்துவிட்டாள். பிறகு அசலாவின் உடம் பைத் தொட்டு அசைத்துவிட்டு மறுபக்கம் திரும்பிக்கொண் டாள். அசலா ஸுரேசனின் பக்கம் திரும்பியதுமே, 'ஏதாவது வேண்டுமா?' என்றான் ஸுரேசன்.

அசலா தலையை ஆட்டிவிட்டு, 'ஒன்றும் வேண்டாம். நீங்கள் மழையில் நனையவேண்டிய அவசியமில்லை. போங்கள்!' என்று சொல்லி, ஜன்னலருகே வந்து மிருதுவான குரலில், 'எனக்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். கவலைப்பட வேண்டியவர் மேல் கவனத்தைச் செலுத்துங்கள்!' என்றாள்.

'அது சரிதான்; ஆனால் உனக்கு ஏதாவது வேண்டுமா?' என்றான் ஸுரேசன்.

அசலா சிரித்துக்கொண்டே, 'இல்லை. ஒன்றும் வேண்டியதில்லை. நீங்கள் என்ன இந்த மழையில் நனைந்து ஜுரமாய்ப் படுத்துக்கொள்ள விரும்புகிறீர்களா?' என்றாள்.

ஸுரேசன் ஒரு க்ஷணம் அசலாவின் முகத்தைப் பார்த்துவிட்டுத் தலை குனிந்துகொண்டு, 'வெகு நாட்களாகத் தான் விரும்புகிறேன். இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்தவனிடம் வியாதிகூட வரத் தயங்குகிறதே!' என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு அசலா ஒரு நிமிஷம் திகைத்தாள்; ஆனால் ஸுரேசன் எங்கே தலை நிமிர்ந்து பார்த்துவிடப் போகிறானோ என்ற சந்தேகத்தினால், வார்த்தையை விளையாட்டாக்குவதற்காக, மெள்ளச் சிரித்துக்கொண்டே, 'சரி! முதலில் செல்லுங்கள். அங்கே அம்மாதிரி வேலை செய்விக்க......' என்று இழுத்தாள்.

ஆனால் வார்த்தையை முடிக்க முடியவில்லை. அவளுள்ளே மறைந்திருந்த வெட்கம் அந்தப் பரிகாசத்தின் வெளிப் பகட்டை மத்தியிலேயே வெறுப்புடன் நிறுத்தியது.

வண்டி புறப்பட மணி யடித்தது. ஸுரேசன் ஏதோ சொல்லத் தலை நிமிர்ந்தான். ஆனால் ஒன்றும் சொல்லாமலே திரும்பினான். திடீரென்று தடைபட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தான். அவனுடைய சால்வையின் ஒரு தலைப்பு அசலாவின் கையில் இருந்தது. அவள் கோபத்துடன் திடீரென்று அவனை மிரட்டலானாள்: 'நான் உங்களைக் கூட

வரும்படி சொன்னேன். இதை நீங்கள் எல்லோர் முன்னிலையிலும் பகிரங்கமாக ஏன் சொன்னீர்கள்? எல்லோர் எதிரிலும் என்னை இம்மாதிரி வெட்கப்படுத்தவேண்டுமா?' என்றாள்.

ஸுரேசனும் அதே விஷயத்தைத்தான் மாறி மாறி ஆலோசித்து வருந்திக்கொண்டிருந்தான். ஆகையால் அவன், வருத்தமான குரலில், 'அறியாமல் செய்துவிட்டேன், அசலா!' என்றான்.

அசலா லவலேசமும் சாந்தமடையாமல், முன் போன்றே படபடப்பான குரலில், 'ஆமாம்! அறியாமல்தான் செய்தீர்களா — இல்லை, இல்லை, எல்லோர் முன்னிலையிலும் என்னைத் தலைகுனியச் செய்யவேணுமென்றே சொன்னீர்கள்!' என்றாள்.

வண்டி புறப்பட ஆரம்பித்தது. மேற்கொண்டு பேச ஸுரேசனுக்குச் சமயம் கிடைக்கவில்லை. அசலா அவன் சால்வையை விட்டதும், அவன் பதிலொன்றும் சொல்லாமலேயே, துடிக்கும் உள்ளத்துடன் வேகமாகச் சென்றுவிட்டான். அவன் எந்தப் பக்கமும் பார்க்காமல் ஓடிக்கொண்டிருந்தான். ஆனால் அந்தத் திசையை அனுசரித்து அசலா பார்த்தாள். ஒரு மனிதனின் உள்ளத் துடிப்பு கிட்டத்தட்ட நின்றுவிட விரும்பும் நிலைமையி லிருந்தது. மற்றொரு ஜன்னல் வழியாகத் தலை நீட்டி மஹிம் இவர்கள் பக்கம் பார்த்துக்கொண்டிருப்பது அசலாவின் கண்களில் பட்டது. அவள் தன் இடத்தில் சென்றமர்ந்ததும், அந்த ஸ்திரீ, 'இவர்தான் உங்கள் பாபு போலிருக்கிறது?' என்றாள்.

அசலா எங்கோ கவனம் செலுத்தியவளாய், 'உம்' என்று சொல்லிவிட்டு, மற்றொரு ஜன்னல் வழியாக மாஞ் செடிகளையும் மைதானத்தையும் வரண்ட பார்வையுடன் நோக்கலானாள். அசலா ஸுரேசனுடன் பேச எழுந்த

போது பாதியில் விடுத்துச் சென்ற பேச்சை மீண்டும் தொடர்ந்து பூர்த்தி செய்ய அவளுக்கு மனம் வரவில்லை.

வண்டி கிராமத்திற்குப் பின் கிராமம், நகரத்திற்குப் பின் நகரமாகத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது. அவள் மனத் துயர் சற்று அகன்றது. முகம் நிர்மலமாகப் பிரகாச மடைந்தது. மறுபடியும், அவள் தன் தோழியுடன் மனம் விட்டு வார்த்தையாடலானாள். சற்று நேரத்திற்கு முன் அவளை அம்மாதிரிச் சங்கடத்தி லாழ்த்திய லஜ்ஜை அவளுக்கு அப்பொழுது ஞாபகமேயில்லை.

ஒரு பெரிய ஸ்டேஷனில் ஸுரேசன் ஒரு முஸ்லிம் சமையற்காரனுடன் டீயும் இன்னும் இதர ஆகாரங்களும் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அசலா அவைகளை வாங்கிக்கொண்டு, அன்புடன் பெருமிதமான குரலில், ‘இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளும்படி யார் உங்களிடம் சொன்னது? சொல்லுங்களேன்! உங்கள் நண்பர்தான் சொல்லியிருப்பார்!’ என்றாள்.

அந்த விஷயத்தில் யாரும் சொல்லும்படி ஸுரேசன் வைத்துக்கொள்ளவில்லை என்பதை அசலா நன்றாக அறிவாள்; ஆயினும் அந்த வேண்டாத உபசாரம் செய்பவனை இம்மாதிரி அன்புடன் வாயைக் கிண்டாமல் அவளால் இருக்க முடியவில்லை.

ஸுரேசன் புன்சிரிப்புடன் சென்றுகொண்டிருந்தான். அசலா அவனை அழைத்தாள். அவன் முகத்தில் அப்பொழுதும் அந்தப் புன்னகை தவழ்ந்துகொண் டிருந்தது. அவன் பக்கம் பார்த்ததும், அசலாவும் சட்டென்று சிரித்துவிட்டு சங்கோசத்தால் குன்றினாள். வெட்கத்தால் சிவந்த அவளுடைய வனப்பைத் தன் கண்களால் பருகினான் ஸுரேசன்.

அசலா கணவனைப் பற்றி விசாரிக்க ஸுரேசனைக் கூப்பிட்டாள். ‘அவருக்கு ஒன்றும் கஷ்டமோ, அசௌகரி

யமோ இல்லையே? ஏதாவது தேவையா? இல்லை, ஒன்றும் தேவை யில்லையா? ஒருமுறை வர முடியுமா, முடியாதா?—' இவைகளை யெல்லாம் ஒவ்வொன்றாகக் கேட்கவேண்டு மென்று விரும்பினாள். ஆனால் அதற்குப் பிறகு இதில் ஒன்றைக்கூடக் கேட்க அவளிடம் சக்தியில்லை. அவள் ஓர் அசட்டுக் கம்பீரத்துடன், 'நாம் அலஹாபாத் வண்டியில் மாறவேண்டாமா? ராத்திரி எத்தனை நாழிகைக்கு அங்கே போகிறதோ தெரியவில்லை. ஒரு தரம் பார்த்துச் சொல்ல முடியுமா?' என்று மாத்திரம் கேட்டாள்.

'சரி!' என்று சொல்லிவிட்டு, ஸுரேசன் சற்று ஆச்சரிய மடைந்தவனாய்ச் சென்றான்.

அசலா திரும்பிப் பார்த்தாள். அந்த ஸ்திரீ தன் இடத்தை விட்டுச் சிறிது தூரத்தில் அமர்ந்திருந்தாள். அசலா தன் மனத்திலுள்ள கோபத்தை யெல்லாம் மறைத்துக்கொள்ள முடியாமல், 'ஒரு வேளை உங்கள் வீட்டில் ரொட்டி, டீ ஒன்றும் சாப்பிடுவதில்லையோ?' என்றாள்.

அந்த ஸ்திரீ விநயத்துடன், 'ஐயையோ, இந்த உபத்திரவத்திலிருந்துகூட ஒரு வீடு தப்ப முடியுமா? அதை எல்லோருந்தான் சாப்பிடுகிறார்கள்!' என்றாள்.

'பின்னே வெறுப்புடன் ஏன் விலகி உட்கார்ந்திருக்கிறீர்கள்?' என்றாள் அசலா.

அந்த ஸ்திரீ லஜ்ஜையடைந்த குரலில், 'இல்லை அம்மா, வெறுப்பினால் அல்ல! புருஷர்கள் என்னவோ எல்லாவற்றையும் சாப்பிடுகிறார்கள்; என் மாமனாருக்கு இதெல்லாம் பிடிப்பதில்லை. தவிர, நம்ம ஸ்திரீகளுக்கு—' என்றாள்.

முன்பு ஒரு நாள், சாப்பாட்டைத் தொடும் விஷயமாக இதே மாதிரி மிருணாளினியுடன் அசலாவுக்குப் பேதம் ஏற்பட்டது. அன்று அவள் எந்தக் காரணத்தினால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லையோ, அதே உள்ளக் கொதிப்

பினுல் இன்றும் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. அந்த ஸ்திரீயின் வார்த்தை முடிவதற்கு முன்பே வெறுப்பான குரலுடன், 'நான் தங்களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. நீங்கள் உங்கள் இடத்தில் வந்து அமருங்கள்!' என்று சொல்லி, அதே க்ஷணம் டீயையும் ரொட்டியையும் எடுத்து வெளியே எறிந்தாள் அசலா. வெகு நேரம் வரை அந்த ஸ்திரீ அசலாவைப் பார்த்துக்கொண்டு அசையாமல் கற்சிலை போல் அமர்ந்திருந்தாள். அதன் பின் முகத்தை நன்றாகத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்து, தலைப்பினுல் கண்களைத் துடைத்துக்கொள்ளலாஞள். ஒருகால் அவள் இதைத்தான் எண்ணி யிருப்பாள்: இவ்வளவு நேரத்திய சந்திப்பு — இவ்வளவு நேரத்திய சம்பாஷணை இவைகளுக்கு அவள் சற்றும் மதிப்பு வைக்கவில்லை. கண்ணீரைப் பார்த்துவிட்டு அவள் வேறொன்றும் செய்யாமல் இருக்கட்டும் என்பது தான்.

சிறிது நேரம் மழை நின்றிருந்தும்கூட வானத்தில் மேகம் கவிந்திருந்தது. பிற்பகல் மீண்டும் கனத்த மழை பொழியலாயிற்று. அந்த மழையில் அந்த ஸ்திரீ ஆராவில் இறங்கவேண்டும். அதற்காக அவள் தயாராகிக்கொண்டிருந்தாள்.

அசலாவால் பொறுக்க முடியவில்லை. அவள் சட்டென்று அவள் பக்கத்தில் சென்றமர்ந்து, அவள் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, அன்பு பொங்கும் குரலில், 'என் செய்கைக்காக நான் மிகவும் வெட்கப்படுகிறேன். என்னை மன்னித்துக்கொள்ளுங்கள், அம்மா!' என்ருள்.

அந்த யுவதி சிரித்தாள். ஆனுல் பதில் சொல்லவில்லை. அசலா மறுபடியும், 'என் மனம் சரியா யில்லாவிட்டால், நான் எதைச் செய்துவிடுகிறேன் என்பதற்கு ஒரு நிலையே கிடையாது. என் கணவர் நோயுற்றிருக்கிருர். அவரை அழைத்

துக்கொண்டு சுகவாசத்திற்காக வேற்றூர் போகிறேன். சௌக்கியமாகிவிட்டால் நல்லதாகிவிட்டது. இல்லாவிட்டால், அந்த வேற்றூரில் எனக்கு என்ன ஆகும்? கடவுள் தான் அறிவார்!' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவள் குரல் தடைபட்டுவிட்டது.

யுவதி ஆச்சரியத்துடன், 'ஆனால் தங்கள் கணவரைப் பார்த்தால் அவர் நோயுற்றிருப்பவராகத் தோன்றவில்லையே!' என்றாள்.

'என் கணவர் இதே வண்டியில்தான் இருக்கிறார். நீங்கள் அவரை இன்னும் பார்க்கவில்லை. இவர் அவருடைய நண்பர்!' என்றாள் அசலா.

யுவதி பின்னும் அதிக ஆச்சரிய மடைந்தவளாய் மௌனமானாள்.

அந்த நண்பனைப் பற்றி அவள் 'உன் கணவரா?' என்று கேட்ட போது அசலா 'உம்' என்று சொல்லியிருந்தாள். அது அசலாவுக்கு ஞாபகமே இல்லை. ஆனால் அந்த ஸ்திரீ அதை மறக்கவில்லை. அசலா அவளுடைய ஆச்சரியத்தை முற்றிலும் மற்றொரு விதத்தில் உணர்ந்தாள். ஸுரேசனுடன் தன்னுடைய நடத்தை சம்பாஷணை முதலியவை சாதாரண ஹிந்துப் பெண்ணின் பார்வையில் எப்படி விநோதமாகப் பட்டிருக்கும் என்பதையே அவள் கற்பனை செய்து, வெட்கத்தினால் இடிந்து போனாள். பதிலுக்கு, அவள், 'நாங்கள் ஹிந்துக்களல்ல! பிரம்ம சாமாஜிகள்!' என்று அர்த்தமில்லாமல் கூறினாள்.

யுவதி பின்னும் மௌனமாக இருப்பதைக் கண்டு, அசலா சங்கோசத்துடன் அவள் கையை விட்டுவிட்டு, 'எங்களுடைய பழக்க வழக்கங்களை நீங்கள் அறியமாட்டீர்கள்; ஆகையால் உங்களுக்கு அதிசயமாகத் தோன்றுகிறது!' என்றாள்.

யுவதி மறுபடியும் சிரித்துவிட்டு, 'நான் அம்மாதிரி எண்ணவில்லை. நீங்கள்தான் எந்தக் காரணத்தினாலோ எங்களிடமிருந்து விலகியிருக்கவே விரும்புகிறீர்கள். எப்படித் தெரிந்துகொண்டேன், சொல்லட்டுமா? தங்கள் சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் எங்கள் சொந்தக்காரர்களில் சிலர் இருக்கின்றனர். அவர்களால் தெரிந்தது!' என்று சொல்லி அவள் சிரிக்கலானாள்.

'அது என்ன காரணம்?' என்றாள் அசலா.

'அதைத் தாங்கள் நிச்சயம் அறிவீர்கள். தெரியாவிட்டால் தங்கள் சமாஜத்தைச் சேர்ந்த யாரிடமாவது கேட்டுப் பாருங்கள்!' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே, அந்த விஷயத்தை இத்துடன் அடக்கிவிட்டு, 'சரி, அவ்வளவு தூரம் போகாமல் உங்கள் கணவரை எங்கள் ஊருக்கு ஏன் அழைத்து வரக் கூடாது?' என்றாள்.

'எங்கே? ஆராவுக்கா?'

'ஏனம்மா! அங்கே மனிதர் ஒருவரும் வசிப்பதே இல்லையா? அவருக்கு ஓவர்ஸியர் வேலை யல்லவா, ஆகையால் சிற்சில சமயம் நான் ஆராவுக்கு வரவேண்டியிருக்கிறது. நான் டேஹரியைப் பற்றிச் சொல்லுகிறேன். ஸோன் நதிக் கரை யருகிலேயே எங்களுடைய சிறிய வீடு இருக்கிறது. அங்கே நாலைந்து நாள் இருந்தாலே உங்கள் கணவர் சொஸ்தமாகிவிடுவார். வருவீர்களா அங்கே?' என்று சொல்லிக் கொண்டே, அசலாவின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு பதிலுக்காக அவள் முகத்தைப் பார்த்தாள்.

முன் பின் பரிசயமற்ற அந்த யுவதியின் உற்சாகத்தையும் அந்தரங்கமான வற்புறுத்தலையும் கண்டு, அசலாவின் உள்ளம் மகிழ்ந்தது. 'ஆனால், தங்கள் கணவரின் அபிப்பிராயத்தையும் கேட்க வேண்டாமா? அவரைக் கேட்காமல் என்னவோ ஒன்றும் செய்ய முடியாது!' என்றாள்.

யுவதி தலையசைத்துக்கொண்டே, 'ஆஹா ஹா! நாம் சேவை செய்வதில் ஊழியக்காரியாக இருந்தால், எல்லாவற்றி லும் ஊழியக்காரியா? அம்மாதிரி எண்ணவே வேண்டாம். உத்தரவு கொடுப்பதில் நாமேதான் எஜமானிகள். அந்த இடம் பிடிக்காவிட்டால் நேரே டேஹரிக்கு வந்துவிடுங்கள். சற்றும் யோசிக்க வேண்டாம். நான் உங்களிடம் சொல்லி வைக்கிறேன். உத்தரவு பெற வேண்டுமானால், நான் பெற் றுக்கொள்ளுகிறேன். தங்களுக்கு அதைப் பற்றி என்ன அக்கரை?' என்று சொல்லிக்கொண்டே, அந்த மாதிரிப் புருஷனை அடைந்த அந்தப் புண்ணியவதி தன் சந்தோஷ ஆதிக்கத்தினால் அசலாவைக் கலங்கச் செய்துவிட்டாள்.

ஆரா ஸ்டேஷன் நெருங்கிவிட்டது என்பது வண்டி மெது வாகப் போனதிலிருந்து தெரிந்தது. அந்த யுவதி மறுபடியும் அசலாவின் இரு கரங்களையும் தன் பக்கம் இழுத்து, உற் சாகத்துடன், 'என் ஸ்டேஷன் வந்துவிட்டது. நான் இறங்கப் போகிறேன். ஆனால் தாங்கள் யோசனையி லாழ்ந்து மனத்தைப் புண்படுத்திக்கொள்ளாதீர்கள். நான் சொல்லுகிறேன். தங்களுக்கு யாதொரு பயமும் வேண் டாம். தங்கள் கணவர் சீக்கிரம் குணமடைந்துவிடுவார். ஆனால் திரும்பி வரும்போது எங்கள் வீட்டுக்கு அவசியம் ஒரு முறை வருவதாக வாக்களியுங்கள்!' என்றாள்.

அசலா தன் கண்களில் பெருகிய கண்ணீரை அடக்கிக் கொண்டு, 'அம்மாதிரியான நாள் வந்தால் அவசியம் தங்களைச் சந்தித்துவிட்டுப் போகிறேன்!' என்றாள்.

'வராமல் என்ன? கட்டாயம் வரும். நான் தங்களை அறிந்துகொண்டேன். தங்களுடைய இவ்வளவு பக்தியை யும் அன்பையும் கடவுள் அசட்டை செய்யமாட்டார். நான் சொல்லி வைக்கிறேன் — விபரீதமாக ஒன்றும் நடக்காது!' என்றாள்.

அசலாவால் பதிலளிக்க முடியவில்லை. அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு எப்படியோ தன் பெருமூச்சை அடக்கிக்கொண்டாள்.

மழையிலே வண்டி பிளாட்பாரத்தில் வந்து நின்றது. அந்த யுவதியினுடைய சிறிய மைத்துனன் மற்றொரு வண்டியில் உட்கார்ந்திருந்தான். அவன் வந்து கதவைத் திறந்தான். அசலா அவள் காதருகில் முகத்தைக் கொண்டுபோய் மெதுவாக, 'கணவனின் பெயரை என்னவோ வாயால் சொல்ல மாட்டீர்கள். இது எனக்குத் தெரியும். ஆனால் தங்கள் பெயரைச் சொல்லுங்கள்! என்ன? திரும்பி ஒருகால் வருவதாக இருந்தால், தங்கள் விலாசத்தை எப்படிக் கண்டு பிடிப்பது?' என்றாள்.

யுவதி சிரித்துக்கொண்டே, 'என் பெயர் ராக்ஷஸி. டேஹறியில் வந்து எந்த வங்காளிப் பெண்ணிடம் கேட்டாலும் என் விலாசத்தைச் சொல்லிவிடுவாள். ஆனால் இரண்டு பேரும் சேர்ந்து வரவேண்டும், தெரியுமா அம்மா! என் தலைமேல் ஆணை. நான் வழிபார்த்துக்கொண்டிருப்பேன். ஸோன் நதியின் கரையிலேயேதான் என் வீடு!' என்று சொல்லி விட்டு, கைகுவித்துச் சட்டென்று நமஸ்காரம் செய்துவிட்டு, மழையில் நனைந்துகொண்டே கீழே இறங்கிவிட்டாள்.

வண்டி மறுபடியும் மெள்ள மெள்ளச் செல்லலாயிற்று. பொழுது சாய இன்னும் அதிக நாழிகை இல்லை; ஆனால் தொடர்ந்து மழையும் காற்றும் வேகமாக அடித்துக்கொண் டிருந்தது. ஆகையால் இரவு அதி பயங்கரமாக இருந்தது. ஜன்னல் கண்ணாடி வழியாக வெளியே பார்த்ததும் அசலாவின் பார்வை கலங்கியது. தன்னுடைய ஆதி அந்தங்கள் யாவற்றையும் இந்த இருள் பிடுங்கிக்கொண்டதைப் போல் அடிக்கடி தோன்றியது. பிரகாசத்தின் முகத்தை—ஆனந்தத்தின் முகத்தை—இனி அவள் ஒரு பொழுதும் காண முடியாதா?

இந்த வாழ்நாளில் அவளுக்கு இனி விடுதலையே கிடையாதா? துணை யொருவரும் இல்லாமல், காலி வண்டியில் ஒரு மூலையில் சால்வையைப் போர்த்துக்கொண்டு கண்களை மூடிப் படுத்தாள். அவள் கண்களினின்றும் கண்ணீர் பெருகியது. ஏன் அந்தக் கண்ணீர் பெருகிற்று? அவளுக்கென்ன அப்படிப்பட்ட துக்கம்? அதை அவள் யோசிக்க முடியவுமில்லை. அழுகையை அடக்கவும் முடியவில்லை. அது பொங்கி எழும் அலை போல் அவள் உள்ளத்தில் மோதலாயிற்று. அவளுக்குத் தன் தந்தையின் ஞாபகம் வந்தது, பிறகு சிறு வயதுத் தோழிகளின் ஞாபகம் வந்தது, அத்தையின் ஞாபகமும் வந்தது. அப்பொழுதுதான் பரிசயமான யுவதி ராக்ஷஸியின் நினைவும் வந்தது. வேலைக்காரன் யதுவரை, எல்லோரும் அவள் மனக் கண்முன் வந்து நின்றார்கள். எல்லோரிடமும் வாழ்நாள் முழுவதற்கும் விடைபெற்றுச் செல்வதைப் போன்ற ஒரு வேதனை அவள் உள்ளத்தில் கிடந்து குழம்பியது.

இம்மாதிரி முடிவற்றுக் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தபோது வண்டி அடுத்த ஸ்டேஷனில் வந்து நின்றது. அப்பொழுது அவளுடைய வேதனை யடைந்த உள்ளம் சிறிது சாந்த மடைந்தது. அவள் எழுந்து உட்கார்ந்து, வியாகூலமான பார்வையுடன், யாராவது ஸ்திரீ பிரயாணிகள் அகஸ்மாத்தாக அந்த மழைக் காற்றில் அந்த வண்டியில் ஏறுவார்களோ என்று ஆவலுடன் இங்கு மங்கும் பார்க்கலானாள். நனைந்துகொண்டே சிலர் இறங்கினர்; சிலர் ஏறினர். ஆனால் அவள் வண்டியின் பக்கம் யாரும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

வண்டி புறப்பட்டதும் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு தன் இடத்தில் வந்து முன்போல் போர்த்துக்கொண்டு படுத்தாள். அவள் படுத்ததும் சிந்திக்க முடியாத காரணத்தால் அவளுடைய துக்கமடைந்த சித்தம் திடீரென்று இன்பக்

கற்பனைகளில் இறங்கியது. ஆனால் அது புதிதல்ல. என்று ஆரோக்கியத்திற்காக இடம் மாறவேண்டு மென்ற பேச்சு எழுந்ததோ, அன்றே அவள் அம்மாதிரி இன்பக் கனவு களைத்தான் கண்டாள். அன்றும், அவள் தன் மெலிந்த கணவனை நினைத்து, அவன் ஆரோக்கியத்தையும் தீர்க் காயுளையும் விரும்பியே, பழக்கமற்ற ஓரிடத்தில், ஆனந்தம்-சுகம்-சாந்தி இவைகளின் வலையை வீசிக்கொண்டு, அதில் ஆழ்ந்துவிட்டாள்.

எப்பொழுது அவளுக்குத் தூக்கம் வந்தது, எவ்வளவு நேரம்வரை தூங்கிக்கொண்டிருந்தாள் என்பது அவளுக்கு நினைவில்லை. திடீரென்று பெயரைச் சொல்லி யாரோ அழைப் பதைக் கேட்டு, வாரி யடித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். பார்த்தாள் : கதவருகே ஸுரேசன் நின்றுகொண்டிருந்தான். திறந்திருந்த ஜன்னல் வழியாக வேகமாகக் காற்றும் சாரலும் வண்டிக்குள் வீசி, அதை ஈரமாக்கின.

ஸுரேசன் உரக்க, 'சீக்கிரம் இறங்கு! பிளாட்பாரத்தில் வண்டி நிற்கிறது! உன்னுடைய பெட்டி எங்கே?' என்றான்.

அசலா தூக்கக் கலக்கத்திலேயே இருந்தாள். ஆனால் அலஹாபாத்தில் இறங்கி ஜபல்பூருக்கு வண்டி மாற்ற வேண்டு மென்பது அவளுக்கு நினைவு வந்தது. அவள் தன் பெட்டியைக் காட்டிவிட்டு, வருத்தத்துடன் இறங்கி, 'இந்த மழையிலும் காற்றிலும் அவரை எப்படி இறக்குவீர்கள்? இங்கே பல்லக்கு ஒன்றும் கிடைக்காதா? இந்த மாதிரியானால் அவர் அசௌகரியம் இன்னும் பலப்பட்டுவிடுமே, ஸுரேஷ் பாபு!' என்றாள்.

ஸுரேசன் சொன்ன பதில் மழையின் இரைச்சலில் சரியாகக் கேட்கவில்லை. அவன் ஒரு கையில் பெட்டியையும், மற்றொரு கையில் அசலாவையும் பிடித்துக்கொண்டு, பிளாட் பாரத்தின் பக்கம் செல்லலானான். அடுத்த வண்டி புறப்படத்

தயாராக இருந்தது. காலியாக இருந்த முதல் வகுப்பு வண்டியில் அசலாவை ஏற்றிவிட்டு, ஸுரேசன் அவசரமாக, 'நீ போய் சௌக்கியமாக உட்காரு. நான் மஹிமை இறக்கிக்கொண்டு வருகிறேன்' என்றான்.

'அப்படியானால் என்னுடைய இந்தக் கெட்டியான போர்வையை எடுத்துக்கொண்டு செல்லுங்கள்! நன்றாகப் போர்த்து அழைத்துவர வேண்டும்' என்று சொல்லி, அசலா கையை நீட்டித் தன் போர்வையை ஸுரேசன் மேல் எறிந்தாள். ஸுரேசனும் வேகமாகச் சென்றான்.

இருளில் எவ்வளவு தூரம் பார்க்க முடியுமோ அவ்வளவு தூரம் அசலா எதிர்ப் பக்கம் பார்க்கலானாள். லாந்தர் கம்பங்களில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. ஆனால் அந்த மழையில் அவைகளின் வெளிச்சத்தைக் கொண்டு எதையும் பார்க்கக் கூடாத நிலைமையில் அவைகள் மங்கியிருந்தன. பிரயாணிகள் மழையில் நனைந்துகொண்டு இங்குமங்கும் போய்க்கொண்டிருந்தனர். கூலிகள் சாமான்களைத் தூக்கிக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தனர். ரயில்வே உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலைத் தொல்லையில் மூழ்கியிருந்தனர். எல்லாம் நிழல் போல அவளுக்குத் தென்பட்டது. வரவர அதுவும் குறைந்தது. ஸ்டேஷன் மணி யடித்தது. அசலா இறங்கி வந்த வண்டி, பயங்கரமான மலைப் பாம்பு போல் சீறிக் கொண்டு, வானம் நடுங்கும்படி பிளாட்பாரத்தை விட்டுச் சென்றது. அதன்பின் எதிரே விரிந்து கிடந்த அந்தகாரத்தைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை.

மறுபடியும் மணி யடித்தது. அது இந்த வண்டிக்காகத் தான் என்பதை அசலா உணர்ந்தாள்; ஆனால் அவர்கள் ஏறிவிட்டார்களா, இல்லையா, சாமான்களெல்லாம் வந்துவிட்டனவா, இல்லையா? — இவைகளொன்றும் தெரியாததால், அவள் மறுபடியும் கவலை கொள்ளலானாள்.

ஒரு போர்ட்டர் கம்பளியைப் போர்த்துக்கொண்டு கையில் லாந்தருடன் வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். அவன் அருகே வந்ததும், அசலா அவனை அழைத்து, 'பிரயாணிகள் எல்லாரும் ஏறிவிட்டார்களா?' என்று கேட்டாள்.

முதல் வகுப்பு வண்டியைப் பார்த்து, அவன் பயந்து நின்றுவிட்டான். 'ஆமாம் அம்மா!' என்றான்.

அசலா சற்று நிம்மதியடைந்து, 'மணி என்ன?' என்றாள்.

'ஒன்பது!'

'ஒன்பதா?' என்று அசலா திடுக்கிட்டாள். அலஹாபாத்துக்குப் பின் இரவில் செல்லவேண்டும். அவள் வருத்தத்துடன் 'அலஹாபாத் . . . . ?' என்று சொல்லிக்கொண்டாள்.

ஆனால் போர்ட்டர் அதிக நேரம் நிற்க முடியாது. மேலே திறந்த வெளி. மழை பெய்துகொண்டிருந்தது. வண்டியின் மேலிருந்து விழுந்த தண்ணீர் அவன் முகத்தில் சுள் சுள்ளென்று விழுந்துகொண்டிருந்தது. அவன் கையிலிருந்த விளக்கை ஆட்டிக்கொண்டே, 'முகல்ஸராய்! முகல்ஸராய்!' என்று கூவிக்கொண்டே வேகமாகப் போய்விட்டான்.

ரயில் ஊதிக்கொண்டு புறப்பட்டது. அதே சமயம் ஸுரேசன் ஓடிவந்து, 'பயப்பட வேண்டாம். நான் அடுத்த வண்டியில்தான் இருக்கிறேன்!' என்று சொல்லிவிட்டு, வேகமாக அவள் முன்னின்றும் ஓடிவிட்டான்.

## V

ஸுரேசன் அடுத்த வண்டியில் ஏறிக்கொண்டான். வாஸ்தவம்தான். ஆனால், அவர்?—அதுவரை அவள் கண்களை உருட்டி உருட்டி வெளியே பார்த்துக்கொண் டிருந்தாள். —அவர் முகம், அது எவ்வளவுதான் ஸ்பஷ்டமாகப் புலனாகா விட்டாலும், ஒரு தடவைகூட அவள் கண்களில் படாதா? அலஹாபாத்திற்குப் பதில் இந்தப் புதிய ஸ்டேஷனில் ஏன் வண்டி மாற்றப்பட்டது? மழைச் சாரலினால் அவள் தலை மயிர், மேலே இருந்த துணி — யாவும் நனையலாயின; ஆயினும் அவள் திறந்திருந்த ஜன்னலில் தலை நீட்டி, கவிந்திருந்த அந்தகாரத்தில், ஒரு தரம் வெளியேயும் ஒரு தரம் உள்ளேயும் எதைக் காண முயற்சித்துக்கொண்டிருந்தாளோ அதை அவள்தான் அறிவாள். ஆனால் அந்த வண்டியில் அவள் கணவன் இல்லை யென்பதை ஒப்புக்கொள்ள அவள் மனம் சற்றும் தயாராக இல்லை. ஒரே யடியாகப் பிறர் பொறுப்பின்றி, திசையற்ற — உத்தேச மில்லாத — யாத்திரை மார்க்கத்தில் ஸுரேசனுடன் அவள் தனியாகச் சென்றுகொண் டிருக்கிறாளா? இம்மாதிரி நடக்கவே நடக்காது! அந்த வண்டியிலேயே அவர் எங்காவது இருப்பார்!

ஸுரேசன் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அவன் எது வேண்டுமானாலும் செய்யட்டும். ஆனால் அவன் பிரபாதியான ரமணியை அவள் சமூகத்தினின்றும் — பெண்மையின் பூரணமான கௌரவத்தினின்றும்—ஏமாற்றி

வெளியே கொண்டுவந்து அவளைக் கட்டாயமான மரணத்தின் வாயில் தள்ளும் அத்தகைய மூர்க்கனாக இருக்கமாட்டான். குறிப்பாக அதில் அவனுக்கென்ன லாபம்? அவனுக்குப் பிரியமாக இருக்கும் அசலாவின் உடல் ஒரு கணிகையின் உடலாகப் பரிணமிக்க நேர்ந்தால், அசலா உயிர் தரியாள் — இந்தச் சாதாரண விஷயத்தை அவன் அறியாவிட்டால், அவன் காதல் பேச்சை எந்த வாயால் சொல்ல முடியும்? இல்லை, இல்லை. அம்மாதிரி ஒரு நாளும் நடக்க முடியாது. இஞ்ஜின் பக்கம் எங்காவது அவர் அவசரமாக ஏறியிருப்பார். அவளுக்குத் தெரியவில்லை, அவ்வளவுதான்.

திடீரென்று மழைச் சாரல் வேகமாக அவள் முகத்தில் வீசியதும் அவள் சிலிர்த்து மூலையின் பக்கம் நகர்ந்தாள். தன்னுடைய உடம்பைக் கவனித்துப் பார்த்தபோது, உடுத்தியிருந்த துணிகளி லெல்லாம் நனையாத இடமே பாக்கியில்லை. அவள் தலைப்பிலிருந்தும் தோள்களிலிருந்தும் தண்ணீர் சொட்டும் அளவிற்கு அவள் நன்றாக நனைந்திருந்தாள். அந்தக் குளிர் காலத்தில் தெரியாமல் இவ்வளவையும் சகித்தாள். தெரிந்த பிறகு அவளால் சகிக்க முடியவில்லை. அவள் நடுங்கிக்கொண்டே, ஆடையை மாற்றுவதற்குப் பெட்டியை இழுத்துத் திறக்க ஆரம்பித்தபோது, வண்டி மெதுவாகப் போவது தெரிந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றது. மழை முன்போலவே பெய்து கொண்டுதான் இருந்தது. அது எந்த ஸ்டேஷன் என்பதை அறியவும் வழியில்லை. ஆயினும் அவள் பெட்டியை அப்படியே போட்டுவிட்டு, உள்ளத்தின் அடக்க முடியாத வேகத்துடன் எழுந்து, கதவைத் திறந்துகொண்டு பிளாட்பாரத்தில் இறங்கி, இருளில் நிதானித்துக்கொண்டே, நனைந்தவண்ணம், வேகமாக ஸுரேசன் இருந்த வண்டியி னெதிரே வந்து சேர்ந்து, 'ஸுரேஷ் பாபு!' என்று கூப்பிட்டாள்.

அந்த வண்டியில் இரண்டு இந்தியர்களும் ஓர் ஆங்கிலேயனும் இருந்தனர். ஸுரேசன் ஒரு மூலையில் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தான். தன்னுடைய தொண்டையிலிருந்து சகஜமாகக் குரல் வெளியாகுமோ என்னமோ என்பது அசலாவின் சந்தேகம். அதனால் அவள் தொண்டையிலிருந்து வேகமாகக் கிளம்பிய குரல் அடிபட்ட மிருகத்தின் கூக்குரல் போல் கேட்டது. ஸுரேசன் மாத்திரமல்ல, அங்கேயிருந்த எல்லோருமே திடுக்கிட்டனர். ஸுரேசன் திடுக்கிட்டுக் கண்விழித்துப் பார்த்தான். வாசற்படியில் அசலா நின்றிருந்தாள். அவளுடைய திறந்திருந்த முகம், மழைத் தண்ணீரிலும் வண்டியின் வெளிச்சத்திலும் எல்லோர் பார்வையையும் ஆச்சரியத்தினால் திகைக்க வைக்கும் படி, ரூபத்தின் இந்திரஜாலம் போல் திகழ்ந்தது. ஸுரேசன் சட்டென்று அருகே வந்ததும், அசலா அவனிடம், 'அவரைப் பார்க்கவே இல்லையே! எங்கே யிருக்கிறார் அவர்? எந்த வண்டியில் அவரை உட்கார வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டாள்.

'வா, காட்டுகிறேன்!' என்று சொல்லி ஸுரேசன் மழையில் இறங்கி, அசலா எந்தப் பக்கமாக வந்தாளோ அதே பக்கமாக அவளைக் கையைப் பிடித்து இழுத்துச் சென்றான்.

இந்தியர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சிரிக்கலாயினர். ஆங்கிலேயனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் பெண் குரலின் துக்கச் செய்தி அவன் உள்ளத்தைத் தொட்டது. அவன் கீழே கிடந்த கம்பளியை எடுத்துக் கால்களில் போட்டுக்கொண்டு ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு மௌனமாக வெளியே இருளைப் பார்க்கலானான்.

அசலா ஏறியிருந்த வண்டிக்கெதிரே வந்ததும், ஸுரேசன் தயங்கி நின்றுவிட்டான். உட்புறம் பார்த்துவிட்டு,

பயத்துடன், 'உன் பெட்டி ஏன் இம்மாதிரித் திறந்து கிடக்கிறது ?' என்று சொல்லி, பதிலை எதிர்பாராமல் வேகமாகக் கதவை நெட்டி, அசலாவைப் பரபர வென்று உள்ளே இழுத்துக்கொண்டு போய்க் கதவை மூடினான்.

பிறகு கைவிரலால் பெட்டியைச் சுட்டிக் காட்டி, 'இதை யார் திறந்தார்கள் ?' என்றான்.

'நான்தான் ! அதிருக்கட்டும், அவர் எங்கே ? என்னை அழைத்துக்கொண்டு போய்க் காட்டுங்கள். இல்லாவிட்டால் எந்தப் பக்கம் இருக்கிறார் என்று மாத்திரம் சொல்லிவிடுங்கள், நானே தேடிப் பிடிக்கிறேன் !' என்று சொல்லிக் கொண்டே கதவின் பக்கம் இரண்டொரு அடி எடுத்து வைத்ததும், ஸுரேசன் சட்டென்று அவள் கையைப் பற்றி, 'இவ்வளவு அவசரம் என்ன ? வண்டி புறப்பட்டுவிட்டது, பார்த்தாயா ?' என்றான்.

அசலா வெளியே இருட்டில் பார்த்தாள். வண்டி புறப்பட்டுவிட்டது. அவள் இரு கண்களிலும் ஏமாற்றம் தென்படலாயிற்று. அவள் திரும்பி நின்றாள். அதே பார்வையுடன் ஒரு கண நேரம் வெளுத்துக் களையிழந்த ஸுரேசனின் முகத்தைப் பார்த்தாள். அடுத்த நிமிஷமே, அடியற்ற மரம் போல் தடாலென்று கீழே விழுந்து, ஸுரேசனின் இரு பாதங்களையும் பற்றி, அழுதுகொண்டே, 'எங்கே அவர் ? அவரைத் தூங்கும்போது வண்டியிலிருந்து தள்ளிவிட்டீர்களா ? நோயாளியான அவரைக் கொன்றுவிட்டீர்கள்....' என்று உளறலானாள்.

அவ்வளவு பெரிய கொடூரமான வார்த்தைகளைக் கடைசிவரை அவளால் சொல்ல முடியவில்லை. திடீரென்று உள்ளத்தை விள்ளும் அவள் அழுகை, தாரை அலைகளாகப் பெருகி, ஸுரேசனைக் கற்சிலை போல் ஆக்கி, நாற்புறமும் இருப்பது போன்ற அதே பயங்கரமான இருளில் சென்று

மறைந்தது. ஸுரேசன் அந்த மெத்தை தைத்த நாற்காலியில் உட்கார்ந்து அசையாமல் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பாதங்களுக் கருகில் என்ன நடக்கிற தென்பது அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. வெகு நேரம் பொறுத்து, அவன் கால்களை எடுக்க முயற்சித்துக் கொண்டே, மெதுவாக, 'நான் அம்மாதிரியான காரியத்தைச் செய்ய முடியும் என்று நீ நம்புகிறாயா?' என்றான்.

அசலா முன்போலவே அழுகையுடன், 'நீங்கள் எதையும் செய்வீர்கள்! எங்கள் வீட்டில் நெருப்பை வைத்து அவர் எரிந்து இறந்துபோக விரும்பினீர்கள்! நீங்கள் அவரை எங்கே என்ன செய்தீர்கள்? உங்கள் கால்களில் விழுகிறேன், எனக்குச் சொல்லுங்களேன்!' என்று சொல்லிக்கொண்டே, மறுபடியும் ஸுரேசனின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு, அதில் தன் முகத்தைப் புதைத்துக்கொள்ளலானாள். ஆனால் பாதங்களுக்குடையவன், அங்கேயே வேரூன்றியவனைப் போலப் பேசாமல் மிரள மிரள விழித்துக்கொண்டிருந் தான்.

வெளியே பயங்கரமான இரவு திணறிக்கொண்டிருந் தது. வானத்தில் மின்னல் அடிக்கடி இருளை வெட்டிக் கொண்டிருந்தது. காற்றும் மேகமும் இயற்கையைத் துவம்சம் செய்துகொண்டிருந்தன. ஆனால் அந்த இரண்டு துரதிருஷ்டக்காரர்களின் பாழ் உள்ளங்களில் கர்ஜித்துக் கொண்டிருந்த பிரளயத்தின் முன், அந்த வெளிப் பயங் கரங்க ளெல்லாம் துச்சமாகவே நின்றன.

திடீரென்று அசலா அம்பு போல் எழுந்து நின்றதும், ஸுரேசனின் கனவு கலைந்தது. அடுத்த ஸ்டேஷன் நெருங்கினதால் வண்டி மெதுவாகச் சென்றதை அவன் கண் டான். ஏன் அசலா அம்மாதிரி எழுந்து நின்றாள் என்பதை அவன் அறிந்துகொள்ள அதிக நேரமாகவில்லை. ரொம்ப

நூல் நிலையம்,
சென்னை - 600090.

முயற்சியுடன் தன்னைச் சுதாரித்துக்கொண்டு, தனது வலது கையை நீட்டி அவளைத் தடுத்துக்கொண்டே, 'உட்காரு! மஹிம் இந்த வண்டியில் இல்லை!' என்றான் ஸுரேசன்.

'இல்லையா! பின்னே எங்கே அவர்?' என்று சொல்லிக் கொண்டே அசலா எதிரே இருந்த பெஞ்சியில் தடாலென்று உட்கார்ந்தாள்.

அசலாவின் முகத்தில் ரத்தத்தின் கடைசித் துளிவரை சுண்டி வெளுத்துவிட்டதை ஸுரேசன் கவனித்தான். அவ்வளவு அழுகையும், அங்கலாய்ப்பும், தலை வேதனையும் தாக்கின நேரத்தில்கூட அவள் உள்ளத்தில் நிறைந்திருந்த பிரதிகூலமான எண்ணங்களுக்கு மாறாக ஒருவிதமான வியக்தமற்ற நம்பிக்கை இருந்தது. ஒருகால் அந்தப் பெரும் துக்கக் கனவின் சகிக்க முடியாத வேதனை, தூக்கம் கலைந்ததும் ஒரு பெருமூச்சுடன் முடிந்துவிடும்; பிறகு கணத்தில் எல்லாச் சராசரங்களும் இன்பமாகிவிடும் என்று எண்ணியிருந்தாள்.

அந்த நம்பிக்கை — அல்லது சிந்திக்க முடியாத அந்தப் பொருள்—அவள் உள்ளத்தைக் காலி செய்துவிட்டு, அதுவரை விடை பெற்றுக்கொள்ளாமலும் இருந்தது. ஏனென்றால், அப்பொழுதுதான் அதில் உலகின் ஆசைகள் யாவும் நிறைந்தன. அதன்பின் ஓர் இரவுகூடக் கழியவில்லை. அவைகளில் ஒன்றும் தங்கவில்லை — ஒன்றுமே இல்லை. கண் இமைப் பொழுதில் அவள் வாழ்க்கை, ஒரேயடியாய், துர்ப்பாக்கியத்தின் கடைசி எல்லையைத் தாண்டிவிட்டது. அவ்வளவு பெரிய பலனற்ற ஆபத்தில் தான் ஜீவித்திருப்பதென்பதில் அவளுக்கு நம்பிக்கையே இல்லை.

இருவரும் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். வண்டி சென்று முன்பின் தெரியாத ஒரு ஸ்டேஷனில் நின்றது. பிறகு, சற்று நேரத்திற் கெல்லாம் புறப்பட்டும்விட்டது.

MAHAMAHOPADHYAYA

ஸுரேசன் ஒரு தரம் ஏதோ சொல்ல விரும்பினான். முடியவில்லை. பிறகு சிறிது நேரம்வரை சும்மா இருந்துவிட்டு எழுந்து நின்றான். பிறகு ஜன்னல் கண்ணாடிகளை மூடிவிட்டு, பல தடவை இங்குமங்கும் உலாத்திவிட்டு, அசலாவின் முன் வந்து நின்று, 'மஹிம் சௌக்கியமாக இருக்கிறான். இதற்குள் அலஹாபாத் போயிருக்கலாம். அங்கிருந்து ஜபல்பூருக்கும் போக முடியும். கல்கத்தாவுக்கும் திரும்ப முடியும்' என்றான்.

அசலா மெதுவாகத் தலைநிமிர்ந்து, 'நாம் எங்கே சென்றுகொண்டிருக்கிறோம்?' என்றாள்.

அந்தக் கண்ணீர் தேங்கிய முகத்தில் துக்கம் ஏமாற்றம் இவைகளின் சாயை மறுபடியும் படிந்தது ஸுரேசன் கண்களில் பட்டது. தன்னால் எவ்வளவு பெரிய குற்றம் இழைக்கப்பட்டுவிட்டது என்பது அவனுக்குத் தெரியாமல் இல்லை. அதற்காக அவன் தற்கொலை செய்துகொள்ளவும் தயாரானான். ஆனால் யாருடைய ஆயிரக் கணக்கான ஏமாற்றங்கள், அவன் உண்மைப் பார்வையை மறைத்து, அந்தக் குற்றத்தில் கூட அவனை அடிக்கடி சமிக்ஞைசெய்துகொண்டிருந்தனவோ, அந்த ஏமாற்றுக்காரிக்கு எதிரிடையாகக்கூட அவனுடைய அந்தக்கரணம் துக்கத்தை யடைந்தது. அதனால் அவன் அசலாவின் கேள்விக்குப் பதிலாக, சட்டென்று துடுக்கான குரலில், 'ஒருகால் நாம் சரீரத்துடன் நரகத்திற்குச் சென்றுகொண்டிருக்கலாம்; ஆனால் எந்த வீழ்ச்சியின் வழியைக் காட்டி என்னை இவ்வளவு தூரம்வரை இழுத்து வந்தாயோ அதில் இடைவழியிலேயே நின்றுவிட முடியாது. இனிக் கடைசிவரை சென்றே தீரவேண்டும்!' என்றான்.

அந்த வார்த்தைகளைக் கேட்டு அசலாவின் உடம்பு பாதாதி கேசம் ஒரு முறை நடுங்கியது. ஆனால் அவள் பதில் சொல்லாமல் தலை கவிழ்ந்துகொண்டிருந்தாள். பா ஸ்திரீயை

அம்மாஜிரி ஏமாற்றி, கெட்ட வழியில் அழைத்து வந்து, சங்கோச மில்லாமல் அவ்வளவு பெரிய வெட்கமற்ற குற்றத்தையும் சுமத்துகிற அந்தப் பொய்யன் - காமத்தால் கண் இழந்தவன் - அவனிடம் யார்தான் என்ன சொல்ல இருக்கிறது, சொல்லத்தான் முடியும்?

ஸுரேசன் மறுபடியும் உலாவலானான். ஒருகால் அந்தக் கற்சிலை முன் நின்று வார்த்தையாட அவனுக்குச் சக்தி இல்லையோ என்னவோ! அவன் மறுபடியும், 'நீ மாத்திரம் சர்வநாசம் அடைந்துவிட்டதைப் போன்ற பாவத்தை வெளியிடுகிறாய்! ஆனால், அந்தச் சர்வநாசத்தின் உண்மையான பலன் என்னிடமும் எவ்வளவு அணுகி யிருக்கிறதென்பதை நீ அறிவாயா? நான் உங்களைப் போலப் பிரம்மஞானியல்ல. நான் நாஸ்திகன். நான் பாவ புண்ணியத்தைப் பற்றி வெட்டிப் பேச்சுப் பேசவில்லை. நான் உண்மையாக சர்வநாசத்தைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். உன்னிடம் அழகு இருக்கிறது. கண்களில் கண்ணீர் இருக்கிறது — பெண்களிடம் என்னென்ன அஸ்திர சஸ்திரங்கள் இருக்குமோ அவை யாவும் உன் அம்புக் கூட்டில் நிறைந்திருக்கின்றன. அதன் மூலம் உன் வழியில் யாதொரு தடையும் ஏற்படாது. ஆனால், என் கதியைக் கற்பனை செய்ய முடியுமா உன்னால்? நான் புருஷன். ஆகையால் சிறைவாசத்தைத் தவிர்க்க என் கையினாலேயே நான் என் மார்பில் துப்பாக்கியால் சுட்டுக்கொள்ள வேண்டும்' என்று சொல்லிக்கொண்டு ஸுரேசன் கையினால் தன் மார்பைத் தொட்டுக் காட்டலானான்.

அசலா ஏதோ சொல்லத் தலை நிமிர்ந்தாள். ஆனால் மறுபடியும் பேசாமல் தலை கவிழ்ந்துகொண்டாள். அவள் கண்களில் வெறுப்பு ஜ்வலித்துக்கொண்டிருந்தது. அதைப் பார்த்து ஸுரேசன் சினத்தால் பொங்கி எழுந்து, 'மயிலிற

கைத் தரித்ததால் காக்கை அழகாகிவிட முடியாது. அசலா! இந்த பாவத்தை எல்லாம் நான் அறிவேன். ஆனால் இவைக ளெல்லாம் உனக் கழகல்ல. யாருக்கு அழகாக இருக்குமோ அவள் மிருணாளினி, நீ யல்ல. சூரியனும் பார்க்காத ஹிந் துக்கள் வீட்டுக் குலப் பெண் அல்ல நீ. இதனாலேயே உன் ஜாதி போய்விடாது. நீ எங்கு இஷ்டமோ அங்கே இறங்கிச் செல்லலாம். நான் கடிதம் எழுதித் தருகிறேன். மஹி மிடம் காட்டினால் அவன் அங்கீகரித்துக்கொள்வான். பணம் தருகிறேன். உன் தந்தையிடம் கொடுத்துவிடு. அவர் வாய் அடைபட்டுவிடும்! உனக்கு எதற்குக் கவலை? இதென்ன அப்படிப்பட்ட அபராதம்?' என்று கூறி ஸுரே சன் மறுபடியும் உலாவலானான்.

தான் விடுத்த எரியும் சூலம், எங்கே, என்ன வேலை செய்த தென்பதைத் தலை நிமிர்ந்துகூட ஸுரேசன் பார்க்க வில்லை. உணவுப் பொருளுக்கு ஆசைப்பட்டு வலையில் சிக்கிய பிறகு வன விலங்குகள் எப்படிக் கடுங் கோபங் கொண்டு அதைக் கடித்துக் கடித்துத் துணித்துவிட விரும்புமோ அதே போல ஸுரேசனும் அசலாவை ஒரே யடியாய்க் கிழித்துத் துண்டு துண்டாக்க விரும்பினான். திடீரென்று இடையே நின்று, 'இதென்ன பயங்கரமான குற்றமா? கணவன் வீட்டில் நின்றுகொண்டு, அவன் முன்பு, வேறொரு புருஷனைக் காதலிப்பதாகச் சொல்லவில்லையா நீ? இதற்குள் அதை மறந்துவிட்டாயா? உன் வீட்டைக் கொளுத்தி உன் கணவனைக் கொல்ல நினைத்த மனிதனுடன் அங்கிருந்து புறப்பட்டுவரத் தயாராகி, நம்பிக்கைகொண்டு புறப்பட்டும் வந்தாயே, ஞாபகம் இருக்கிறதா? அவன் வீட் டிலேயே, அவன் ஆதாரவிலேயே இருந்து, மறைந்துமறைந்து அழுது, அவனும் கூட வரவேண்டும் என்று வற்புறுத்தி னாயே, ஞாபகம் இருக்கிறதா? அதைவிட இது பெரிய

குற்றமா? இன்னும் இது போல் எத்தனை விஷயங்கள் இருக்கின்றன? இதனால்தான் இன்று எனக்கு இவ்வளவு தைரியம் வந்தது! உண்மையில் நீ ஒரு கணிகை. அதனால் தான் உன்னை ஏமாற்றி அழைத்து வந்தேன். யோசித்துப் பார்த்தேன். முதலில் கொஞ்சம் திடுக்கிடுவாய்! அவ்வளவுதான்! அதைவிட அதிகமாக நான் உன்னிடம் ஆசையும் வைக்கவில்லை. உன்னிடம் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன், அசலா! நீ ஸதி-ஸாவித்திரி யல்ல. அவர்களுக்குள்ள வேகம், அந்தக் கர்வம் உனக்கழகல்ல; உனக்கு ஏற்றவையல்ல. அவையெல்லாம் பாத்தியமில்லாத உன்னுடைய முயற்சிகள்!' என்று சொல்லிவிட்டு, ஸுரேசன் மூச்சுவிட்டுக்கொண்டு, உயிரற்றவன் போல் மௌனமானான்.

அசலா உடனே தலை நிமிர்ந்து உடைந்த குரலில் கத்திக் கொண்டே, 'நீங்கள் நிறுத்தாதீர்கள், ஸுரேஷ் பாபு! சொல்லிக்கொண்டே போங்கள்! என்னைக் கொத்திக் கொத்தி, இந்த உலகத்தில் எத்தனை கடுஞ்சொற்கள் உண்டோ, எவ்வளவு கேவலமான பரிகாசம் உண்டோ, எவ்வளவு அவமானம் உண்டோ — எல்லாவற்றையும் செய்யுங்கள்!' என்று சொல்லி, பூமியில் கவிழ்ந்து படுத்து, வெடித்து வரும் அழுகையை அடக்கிக்கொண்டு, உடைந்த குரலில், 'இதைத்தான் நான் விரும்புகிறேன். இதுதான் எனக்கு வேண்டும்! இதுதான் உலகில் நம்முடைய உண்மையான சம்பந்தம்! கடவுளிடமும், உங்களிடமும் இந்த ஒரே வஸ்துதான் நான் பெறக் கூடியது!' என்றாள்.

ஸுரேசன் ஓரத்தில் சாய்ந்து கற்சிலை போல் நின்று பார்க்கலானான். அசலாவின் நீண்ட கருங்குழல் கலைந்து தரையில் இங்குமங்கும் புரண்டு கிடந்தது. மழையில் நனைந்திருந்த அவள் ஆடை வண்டியிலுள்ள தூசியில் பட்டு ஒரே அழுக்காகி யிருந்தது. ஆனால் ஸுரேசன் அந்தப்

பக்கம் காலெடுத்து வைக்கவில்லை, புதிய வேட்டைக்காரன், தான் முதன் முதலில் அடித்து வீழ்த்திய பக்ஷியின் மரணாவஸ்தையைப் பிரமிப்புடன் எப்படிப் பார்த்துக்கொண்டிருப்பானோ, அதே போல, அவன் தன் கண்களின் அசையாத பார்வையினால், ஏதோ ஒரு மரணாவஸ்தையிலுள்ள பெண்ணின் கடைசி நிமிஷங்களுக்குச் சாக்ஷியாகி நின்றான்.

மறுபடியும் வண்டி மெதுவாகச் செல்ல ஆரம்பித்து, பின்னும் ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது. ஸுரேசன் சரியாக நிமிர்ந்து நின்று, சாந்தமாக சகஜமான குரலில், 'ஜனங்கள் உன்னை இந்த நிலைமையில் பார்த்தால் வியப்படைவார்கள்! எழுந்து உட்காரு. நான் என் வண்டிக்குப் போகிறேன். பொழுது விடிந்ததும் நீ எங்கே இறங்க விரும்புகிறாயோ நான் இறக்கி விட்டுவிடுகிறேன். எங்கே போக விரும்புகிறாயோ, அங்கே அனுப்பிவிடுகிறேன். அதன் மத்தியில் யாதொரு பயங்கரமான விஷயத்தையும் செய்ய முயற்சிக்காதே. அதனால் யாதொரு லாபமும் ஏற்படாது!' என்று சொல்லிவிட்டு, கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கி, கதவை ஜாக்கிரதையாக அடைத்துவிட்டு, என்ன நினைத்துக்கொண்டானோ என்னவோ, சிறிது நேரம்வரை பேசாமல் வெளியே நின்றுகொண்டிருந்தான். அதன் பிறகு உள்ளே எட்டிப் பார்த்து, 'நீ என் விஷயத்தை அறியமாட்டாய். ஆனால் இதை மாத்திரம் கேட்டு வைத்துக்கொள். இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். இனி உனக்கு ஒரு கெடுதலும் நேரிடாது. இந்தக் கடன் யாவற்றையும் சல்லி பாக்கியில்லாமல் நானே தீர்க்கிறேன்!' என்று சொல்லிவிட்டு, மெள்ள மெள்ளத் தன் வண்டியின் பக்கம் சென்றான்.

வண்டியின் தொடர்ச்சியான சத்தம் நின்றதும், ஸுரேசனின் தூக்கம் எவ்வாறோ கலைந்தது; ஆனால், கண்

இமை திறந்து விழித்துப் பார்க்கும் சக்தி அவனிடம் இல்லை. ஈரத் துணியினுல் அவனுக்கு அதிகக் குளிர் ஏற் பட்டது. உண்மையில் அவன் நோயுற்றுப் படுக்கும் நிலை மையி லிருந்தான். அப்பொழுதுள்ள நிலைமையில், தான் எவ் வளவு பயங்கர ஸ்திதியில் இருந்தான் என்பதை மனத்திற் குள் அறிந்தான். ஆனுல் ஆடை மாற்றிக்கொள்ளும் முயற்சி கூடச் சாத்தியமற்றதாகத் தோன்றியது. அதே சமயம் அவனுக்குப் பரிசயமான குரல் ஒன்று 'கூலி' என்று கூப் பிடுவது கேட்டது. அவன் திடுக்கிட்டுக் கண் திறந்து பார்த்தான். வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனில் நின்றுகொண் டிருந்தது. இருள் கழிந்து மழையும் நின்றிருந்ததால் ஒரு மங்கிய ஒளி எங்கும் பரவி யிருந்தது. எத்தனை பேர் இறங்கி ஞர்கள், எத்தனை பேர் ஏறிஞர்கள் என்று கவனித்தான். அவர்களின் மத்தியில், சோகம் ததும்பும் வதனத்துடன் ஒரு பெண்மணி நின்றுகொண்டு ஆவலுடன் யாரையோ எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் அசலாதான். ஒரு கூலியின் தலையில் தன் தோல் பெட்டியை ஏற்றிவிட்டு வண்டியிலிருந்து இறங்கும்போது அவனிடம் ஏதோ கேட் டாள். பிறகு மெள்ள ஸ்டேஷன் வாயிலை நோக்கிச் செல்லலானுள்.

ஸுரேசன் அசையாமல் பார்த்துக்கொண்டுதான் இருந் தான். ஒருகால் அவன் கவனத்தில் பதியவில்லையோ என்னவோ! ஆனுல் வண்டி புறப்பட மணி யடிக்கும் சத்தம் பிளாட்பாரத்தின் ஒரு முனையிலிருந்து மற்ருெரு முனைவரை எதிரொலித்தது. ஒரு கணத்தில் அந்த ஒலி, மின்னலைப் போல், அவன் உடலையும் மனத்தையும் தாக்கி அவனை அதிரச் செய்து, அவன் பிரமையை நீக்கியது. கண்ணிமைப் பொழுதில், தன் சூட்கேஸை எடுத்துக் கொண்டு, கதவைத் திறந்து வெளியே வந்து நின்ருன்.

டிக்கட் விஷயத்தைப் பற்றி முதலில் அசலா யோசிக்கவே இல்லை. கேட்டில் டிக்கட் கேட்பவனைக் கண்டதுமே பயந்து நின்றுவிட்டாள். அதற்குள் ஸுரேசன் பின்னுலிருந்து அன்பான குரலில், ' நிற்காதே, போ! நான் டிக்கட் கொடுக்கிறேன்!' என்றான்.

ஸுரேசன் இறங்கி வந்தது அசலாவுக்குத் தெரியாது. ஒரு நிமிஷம் சங்கோசத்தாலும் பயத்தாலும் அவள் கால்கள் எழும்பவில்லை. ஆனால் தன் சங்கோசம் பிறர் பார்வையில் படுமுன்பே மெல்ல வெளியே சென்றாள்.

வெளியே வந்ததும் ஸுரேசன், ' நீ நேரே கல்கத்தா திரும்பிச் செல்ல விரும்புவாய் என்றெண்ணினேன். திடீரென்று டேஹரியில் ஏன் இறங்கினாய்? இங்கே பழக்கமானவர்கள் யாராவது இருக்கிறார்களா?' என்று கேட்டான்.

அசலா மறுபக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள். அங்கே பார்த்துக்கொண்டே, ' கல்கத்தாவில் நான் யாரிடம் போவது?' என்றாள்.

' ஆனால், இங்கே?'

அசலா பேசாமல் இருந்தாள். ஸுரேசனும் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ' என்னுடைய எந்த வார்த்தையிலும் இனி நீ நம்பிக்கை வைக்க முடியாது. அதற்காக என் சார்பாக வேண்டுகோளும் ஒன்றும் இல்லை. கடைசி சமயத்தில் உன்னிடம் சில பிச்சைகள் மாத்திரம் கேட்க விரும்புகிறேன்!' என்றான்.

அசலா முன்போலவே மௌனமாக நின்றிருந்தாள்.

' என் விஷயத்தை யாருக்கும் அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் அறிவிக்கவும் விரும்பவில்லை. என் பொருள் என்னிடமே இருக்கட்டும். எங்கே சென்றால் இந்த ஜ்வாலை என்னைச் சுடாதோ, அந்தத் தேசத்தை நோக்கி வழி நடக்கிறேன். என்னுடைய கடைசி சம்பத்தை எனக்குத்

கொடுத்துவிடு. நான் கைகுவித்து உன்னை வேண்டுகிறேன்!' என்றான்.

ஆயினும் அசலாவின் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை. ஸுரேசன் மறுபடியும், 'நான் உன்னிடம் பல கடுமையான வார்த்தைகளைப் பேசிவிட்டேன். ரொம்பக் கஷ்டத்தைக் கொடுத்தேன். ஆனால் அந்த வார்த்தைகள் உன் நல்ல நடத்தையை அமுக்கி, அதன்மேல் அமர்ந்து, உன் சிரசில் களங்கத்தின் கரியைப் பூசுமானால், நான் இறந்தாலும் கூட அதை என்னால் சகிக்க முடியாது. என்னால் இனி நீ துக்கம் அனுபவிக்க வேண்டி ஏற்படாது. விடை பெற்றுக் கொள்ளுமுன் நீ எனக்கு இந்தப் பிச்சையை மட்டும் கொடுத்துவிட்டுப் போ, அசலா!' என்றான்.

அவன் குரலில் என்ன இருந்தது என்பதைக் கடவுள் தான் அறிவார். திடீரென்று அசலாவின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவள் தன் குரலை முழு மனத்துடன் அடக்கிக்கொண்டு, மிருதுவான குரலில், 'நான் என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்!' என்றாள்.

ஸுரேசன் பையிலிருந்து ரயில் கால அட்டவணைப் புஸ்தகத்தை எடுத்து, வண்டி வரும் நேரத்தைப் பார்த்து, 'நீ ஒன்றும் செய்யவேண்டியதில்லை. சாயங்காலத்திற்கு முன் எங்கும் செல்ல வழியில்லை. ஆகையால் அதுவரை நீ என்னிடம் அவநம்பிக்கைப்படாதே! நான் அதைத்தான் விரும்புகிறேன். என்னால் உனக்கு இனி யாதொரு கெடுதியும் சம்பவிக்காது. இதை உன்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்!' என்றான்.

அசலா பதில் ஒன்றும் கூறவில்லை. ஆனால் அது அவளுக்குச் சம்மதம் என்பது மாத்திரம் தெரிந்தது.

ஜனங்கள் பார்வை தங்கள்மேல் விழும் என்ற பயத்தினால், ஸ்டேஷனுக்கு வந்து பிரயாணிகள் தங்கும் அறையில் உட்கார இருவருக்கும் தைரியம் வரவில்லை. விசாரித்த பிறகு,

டிக்கட் விஷயத்தைப் பற்றி முதலில் அசலா யோசிக்கவே இல்லை. கேட்டில் டிக்கட் கேட்பவனைக் கண்டதுமே பயந்து நின்றுவிட்டாள். அதற்குள் ஸுரேசன் பின்னுலிருந்து அன்பான குரலில், 'நிற்காதே, போ! நான் டிக்கட் கொடுக்கிறேன்!' என்றான்.

ஸுரேசன் இறங்கி வந்தது அசலாவுக்குத் தெரியாது. ஒரு நிமிஷம் சங்கோசத்தாலும் பயத்தாலும் அவள் கால்கள் எழும்பவில்லை. ஆனால் தன் சங்கோசம் பிறர் பார்வையில் படுமுன்பே மெல்ல வெளியே சென்றாள்.

வெளியே வந்ததும் ஸுரேசன், 'நீ நேரே கல்கத்தா திரும்பிச் செல்ல விரும்புவாய் என்றெண்ணினேன். திடீரென்று டேஹுரியில் ஏன் இறங்கினாய்? இங்கே பழக்கமானவர்கள் யாராவது இருக்கிறார்களா?' என்று கேட்டான்.

அசலா மறுபக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள். அங்கே பார்த்துக்கொண்டே, 'கல்கத்தாவில் நான் யாரிடம் போவது?' என்றாள்.

'ஆனால், இங்கே?'

அசலா பேசாமல் இருந்தாள். ஸுரேசனும் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, 'என்னுடைய எந்த வார்த்தையிலும் இனி நீ நம்பிக்கை வைக்க முடியாது. அதற்காக என் சார்பாக வேண்டுகோளும் ஒன்றும் இல்லை. கடைசி சமயத்தில் உன்னிடம் சில பிச்சைகள் மாத்திரம் கேட்க விரும்புகிறேன்!' என்றான்.

அசலா முன்போலவே மௌனமாக நின்றிருந்தாள்.

'என் விஷயத்தை யாருக்கும் அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் அறிவிக்கவும் விரும்பவில்லை. என் பொருள் என்னிடமே இருக்கட்டும். எங்கே சென்றால் இந்த ஜ்வாலை என்னைச் சுடாதோ, அந்தத் தேசத்தை நோக்கி வழி நடக்கிறேன். என்னுடைய கடைசி சம்பத்தை எனக்குக்

கொடுத்துவிடு. நான் கைகுவித்து உன்னை வேண்டுகிறேன்!' என்றான்.

ஆயினும் அசலாவின் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை. ஸுரேசன் மறுபடியும், 'நான் உன்னிடம் பல கடுமையான வார்த்தைகளைப் பேசிவிட்டேன். ரொம்பக் கஷ்டத்தைக் கொடுத்தேன். ஆனால் அந்த வார்த்தைகள் உன் நல்ல நடத்தையை அமுக்கி, அதன்மேல் அமர்ந்து, உன் சிரசில் களங்கத்தின் கரியைப் பூசுமானால், நான் இறந்தாலும் கூட அதை என்னால் சகிக்க முடியாது. என்னால் இனி நீ துக்கம் அனுபவிக்க வேண்டி ஏற்படாது. விடை பெற்றுக் கொள்ளுமுன் நீ எனக்கு இந்தப் பிச்சையை மட்டும் கொடுத்துவிட்டுப் போ, அசலா!' என்றான்.

அவன் குரலில் என்ன இருந்தது என்பதைக் கடவுள் தான் அறிவார். திடீரென்று அசலாவின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவள் தன் குரலை முழு மனத்துடன் அடக்கிக்கொண்டு, மிருதுவான குரலில், 'நான் என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்!' என்றாள்.

ஸுரேசன் பையிலிருந்து ரயில் கால அட்டவணைப் புஸ்தகத்தை எடுத்து, வண்டி வரும் நேரத்தைப் பார்த்து, 'நீ ஒன்றும் செய்யவேண்டியதில்லை. சாயங்காலத்திற்கு முன் எங்கும் செல்ல வழியில்லை. ஆகையால் அதுவரை நீ என்னிடம் அவநம்பிக்கைப்படாதே! நான் அதைத்தான் விரும்புகிறேன். என்னால் உனக்கு இனி யாதொரு கெடுதியும் சம்பவிக்காது. இதை உன்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்!' என்றான்.

அசலா பதில் ஒன்றும் கூறவில்லை. ஆனால் அது அவளுக்குச் சம்மதம் என்பது மாத்திரம் தெரிந்தது.

ஜனங்கள் பார்வை தங்கள்மேல் விழும் என்ற பயத்தினால், ஸ்டேஷனுக்கு வந்து பிரயாணிகள் தங்கும் அறையில் உட்கார இருவருக்கும் தைரியம் வரவில்லை. விசாரித்த பிறகு,

பெரிய ரஸ்தாவில் பாதுஷா ஷேர்ஷாவின் பெயரில் ஒரு சத்திரம் இருப்பதாகத் தெரியவந்தது. நகரத்தின் ஒரு புறமாக இருக்கும் அந்தச் சத்திரத்தில் தங்குவதென்று தீர்மானித்து, தங்கள் உள்ளத் துக்கத்தை ஒரு கணம் மறந்து, ஒரு மாட்டு வண்டி பேசி அதில் ஏறினர்.

வழியில் ஒருவரோ டொருவர் பேசவில்லை; ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவில்லை. மாட்டு வண்டி சத்திரத்து வாசலில் வந்து நின்றது. வண்டியிலிருந்து இறங்கும் போது ஒரு கணம் அசலாவின் பார்வை ஸுரேசனின் முகத்தில் விழுந்ததும், அவள் ஆச்சரியம் மட்டும் அடையவில்லை; அப்படியே பதறியும் போய்விட்டாள். அவன் கண்கள் சிவந்திருந்தன. முகம் கருமை கொண்டிருந்தது. உலகில் எத்தனையோ ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் அவள் கண்டிருக்கிறாள். ஆனால் அவனுடைய அந்த மாதிரித் தோற்றத்தை அதற்கு முன் ஒருபொழுதும் அவள் பார்த்ததில்லை. பார்த்ததாக நினைவும் வரவில்லை.

வண்டிக்காரனுக்குச் சத்தம் கொடுத்துவிட்டு பணப் பையை அங்கேயே வைத்துவிட்டு, 'இது உன்னிடமே இருக்கட்டும். ஏதாவது தேவையானால் சங்கோசப்பட வேண்டாம்!' என்றான் ஸுரேசன்.

'இதன் அர்த்தம் என்ன?' என்று கேட்கவேண்டுமென்று அசலாவின் மனம் விரும்பியது. ஆனால் அவளால் கேட்க முடியவில்லை. ஸுரேசன் மறுபடியும், 'இதோ எதிரே இருக்கும் அறை கொஞ்சம் நன்றாக இருக்கிறது, சற்று சிரமபரிகாரம் செய்துகொள். நான் அடுத்தாற்போலிருக்கும் அறைக்குச் சென்று ஆடை மாற்றிக்கொண்டு வருகிறேன். அதன் காரணமாகவே இவ்வளவு கனமாகத் தோன்றுகிறதோ என்னவோ!' என்று சொல்லி, அசலாவின் சௌகரியம் அசௌகரியம் யாதொன்றையும் பொருட்

படுத்தாமல், தன் பெட்டியை எடுத்துக்கொண்டு, ஒரு குடிகாரனைப் போலத் தள்ளாடிக்கொண்டே தாழ்வாரத்தைத் தாண்டி மூலே அறைக்குள் நுழைந்தான்.

அவன் சென்ற பிறகு அசலா வழியோரம் தனியாக நின்றுகொண்டிருக்க முடியவில்லை. ஆகையால் மிக்க சிரமத்துடன் தன் பெரிய பெட்டியை இழுத்துக்கொண்டு வந்து எதிரேயுள்ள அறையில் போட்டு, அதன் மேல் உட்கார்ந்துகொண்டு பேசாமல் ரஸ்தாவில் சென்றுகொண்டிருக்கும் ஜனங்களைப் பார்க்கலானாள்.



# VI

அசலா அந்த அறையில் அமர்ந்து நம்பிக்கை, மனச் சாந்தி ஆகியவைகளின் கனவுகளில் எப்படி ஒரு மணி நேரத்தைக் கழித்தாளென்பது அவளுக்கே தெரியவில்லை. சூரியோதயமாகிச் சற்று நேரமாகியிருந்தது. குளிர் காலத்தின் புழுதி படிந்த மரம் செடி கொடிகள் முந்தின நாள் மழையினால் குளிப்பாட்டப்பட்டு நிர்மலமாக விளங்கின. ஆகையால் அன்று காலை இளங் கதிர் வீசியதும் அவை ஜோதிமயமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஈரமா யிருந்த ராஜபாட்டையில் சிந்தனையற்றுச் சந்தோஷமாய்ச் செல்லும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆரம்பமாயிற்று. சிற்சில சமயம் இரண்டொரு குதிரை வண்டிகளும் தங்கள் சிறு மணிச் சத்தத்தால் திசையை இன்னொலி செய்துகொண்டு ஓடின. நடுநடுவே இடைச் சிறுவர்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு, ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத அற்புதப் பேச்சுக்களை உரக்கப் பேசிக்கொண்டு வயல்களை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். அருகேயுள்ள ஒரு குடிசையிலிருந்து மாவரைக்கும் இயந்திரச் சத்தத்துடன், குடும்பப் பெண்களின் பாட்டின் இசை அலையும் ஒலித்துக்கொண்டிருந்தது. எல்லாம் சேர்ந்து புதிய தினத்தின் பரபரப்பைப் பெருக்கின. அந்த விசித்திரப் பிரவாகத்தில் அசலாவின் துக்கம், அவளுடைய துர்ப்பாக்கியம், அவளுடைய கவலை - எல்லாம் சிறிது நேரத்திற்கு வேறு எங்கேயோ பெருகிக்கொண்

டிருந்ததைப் போல் தோன்றியது. அவள் எதற்காக அம்மாதிரி உட்கார்ந்திருந்தாள் என்பதொன்றும் அவளுக்கு நினைவில்லை. திடீரென்று இரண்டு கிராமச் சிறுவர்களின் ஆச்சரியம் நிறைந்த பார்வையைக் கண்டு அவளுக்கு நினைவு வந்தது. அவர்கள் வெளியே ஒரு பக்கமாக நின்று கொண்டு முறைத்து முறைத்து ஆச்சரியத்துடன் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கிலமாகிக் கிடந்த அந்தச் சத்திரத்தின் புராதன கௌரவத்தின் சரித்திரம் அந்தச் சிறுவர்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்களுடைய மௌனமான ஆச்சரியப் பார்வை, அவர்களுக்கு நினைவு வந்ததிலிருந்து இம்மாதிரி அதிசயமான அதிதிகள் யாரும் அந்த இடத்திற்கு வந்ததில்லை என்பதை அசலாவுக்கு விளக்கின. தூங்கி எழுந்ததும் அவர்கள் வழக்கம் போல் விளையாட வந்தார்கள். திடீரென்று அந்த ஆச்சரிய சம்பவத்தில் அவர்கள் பார்வை விழுந்தது.

அசலா திடுக்கிட்டு எழுந்து நின்றாள். அந்தச் சிறுவர்களிடம் ஏதோ கேட்க விரும்பினாள். ஆனால் கண்ணிமைப் பொழுதில் இரு சிறுவர்களும் மறைந்துவிட்டனர். ஸுரேசன் ஆடை மாற்றிக்கொண்டு வருவதாகச் சொல்லி மூலையிலுள்ள அறைக்குச் சென்று இரண்டு மணி நேரமான பின்னும் திரும்பி வரவில்லை என்பது அவளுக்கு நினைவு வந்தது. அவ்வளவு நேரமாக அவன் தனியாக அங்கே என்ன செய்கிறான் என்பதை அறிவதற்காக, அவள் மெதுவாக வெளியே வந்து, அந்த அறைக்கு முன் நெருங்கினாள். மூடியிருந்த அறைக்குள்ளிருந்து யாதொரு சந்தடியும் கேட்காமையால் ஒரு நிமிஷம் பேசாமல் நின்றாள். பிறகு மெதுவாகக் கதவைத் திறந்ததும் அங்கே கண்ட பயங்கரமான காட்சியால் அவள் மனமும் உடலும் ஒரு கணம் செயலற்று நின்றன. இருட்டறையில் உடைந்துபோன ஜன்னல் வழியாகச் சிறிது

வெளிச்சம் உள்ளே வீசிக்கொண்டிருந்தது. அந்த இடத்தில், அந்த மங்கிய வெளிச்சத்தில், ஸுரேசன் மண்ணிலும் புழுதியிலும் படுத்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவன் உடலில் முன்பிருந்த அதே ஆடைகள்தான் இருந்தன. திறந்திருந்த பெட்டியினின்றும் சில சாமான்கள் இங்கு மங்கும் சிதறிக் கிடந்தன.

அவன் கடைசியில் சொன்ன வார்த்தை சட்டென்று அசலாவுக்கு ஞாபகம் வந்தது. அவன் டாக்டர்; மனிதரின் வியாதியைப் போக்கக் கற்றுக்கொண் டிருப்பதன்றி, அவர்களை மெள்ள வெளியே இழுத்து வரவும் அவனுக்குத் தெரியும் என்பதும் நினைவுக்கு வந்தது. பிறகு, அவனுடைய அந்தப் பயங்கரமான குற்றத்திற்காக அவன் அடைந்த தீவிர மன வேதனை, அவன் விடை பெற்றுக்கொண்டது, சமாதானப்படுத்தியது, எல்லாவற்றையும்விட அடிக்கடி அதற்காகத் தான் பிராயச்சித்தம் செய்துகொள்வதாகக் கடுமையான சமிக்ஞை செய்தது — யாவும் ஒன்று சேர்ந்து அவன் தரையில் படுத்திருக்கும் காரணத்தை அவள் செவியில் மெள்ளச் சொல்லின. கதவைப் பிடித்துக்கொண்டு மெல்ல அங்கேயே உட்கார்ந்துவிட்டாள். அறைக்குள் நுழைய அவளுக்குத் தைரியம் வரவில்லை.

உணர்ச்சியற்ற அந்த உடலின் பக்கம் பார்த்து அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. அத்தகைய கெட்ட பெயரின் பாரத்தை அவள் தலையில் போட்டுவிட்டு, நிராசை யடைந்து, அம்மாதிரி உலகிலிருந்து அன்றைக்கு விடை பெற்றுக் கொண்டவனுடைய குற்றம் எவ்வளவு பெரியதாக வேண்டு மானாலும் இருக்கட்டும், அது மன்னிக்க முடியாதது என்று சொல்லும் கடினமான ஹிருதயம் உலகில் ஒரு சிலருக்குத் தான் இருக்க முடியும். அன்றுதான் முதன் முதல் தன்னுடைய குற்றமும் தெளிவாக அவளுக்குத் தெரிந்தது.

ஸுரேசனுடன் முதல் நாள் பரிசயத்திலிருந்து ஆரம்பித்து, அதுவரை இருவரிடையேயும் பெருகிய உணர்ச்சி, தவறுகள் - பிரமைகள், மோஹம்-மோசம், படபடப்பு-வற்புறுத்தல் — யாவும் ஒவ்வொன்ருகத் தென்படலாயின. அவளுக்குத் தன்னுடைய நடத்தையும் தன் தந்தையின் நடத்தையும் ஞாபகம் வந்ததும், திடீரென்று அவள் சரீரம் முழுதும் நடுங்கியது. தன்னுடையது மாத்திரமல்ல, வெகு பேர்களுடைய பாதகங்களின் பெரும்பாரத்தைத் திரட்டிக் கொண்டேதான் ஸுரேசன் அன்று நியாய கர்த்தாவின் முன் சென்றிருக்கிறுன். அங்கே அவன் பேசாமல் வாய்மூடிக் கொண்டு பூரா தண்டனையையும் ஏற்றுக்கொள்வான்; அல்லது ஒவ்வொன்ருகச் சகல துக்கங்களையும் சொல்லி அவரிடம் மன்னிப்புப் பிச்சை கேட்பான்.

அந்த மனிதனிடம் உலகில் அனுபவிக்கத் தக்க பல பொருள்கள் யதேஷ்டமாக இருந்தும், அவன், பேசாமல், லவ லேசமும் ஆடம்பரமின்றி, யாவற்றையும் தியாகம் செய்து விட்டுப் போய்விட்டான். அந்த ஆழ்ந்த வேதனை அசலாவைக் குத்திப் பிடுங்கலாயிற்று. அவன் அவளை உண்மையில் மனப்பூர்வமாக விரும்பினுன். அதை அன்று, அந்த மரணத்தின் முன்பு நின்றுகொண்டு, கேட்கவோ அவநம்பிக்கைப் படவோ சற்றும் சமயம் இல்லை.

அவளுடைய இரு தாடைகளிலும் கண்ணீர் வழிந்தோடியது. சென்ற இரவு வண்டியில் இருவருக்கும் ரொம்பக் கடுமையான வார்த்தைகளும், நியாய - அநியாயம், தர்ம-அதர்மம் இவைகளைப் பற்றிய விவாதமும் நடந்துவிட்டது. ஆனல் அது அவளுடைய அர்த்தமற்ற புலம்பல்! அசலாவுக்கு அதன் ரகசியம் அப்பொழுதென்ன தெரியும்? காதலுக்கு ஜாதி இல்லை, தர்மம் இல்லை. ஆலோசிக்கும் ஆற்றல், நல்லது கெட்டது - இவைகளைப் பற்றிய ஞானமே அதற்குக்

கொஞ்சமும் கிடையாது. அம்மாதிரி இறக்கக்கூடியவன் சமூகம் இயற்றும் சகல விதிகளுக்கும் சட்டங்களுக்கும் மேற்பட்டவன். அந்த விதியின் தடை அவனை ஸ்பரிசிக்கக் கூட முடியாது;—அந்த மரணத்தின் முன் நின்றுகொண்டு, அன்று அவள் இந்த விஷயங்களை எப்படி ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியும்?

அசலா தலைப்பினால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். திடீரென்று அவள் மார்பு நின்றது. பிணம் சற்று அசைந்தது போன்று அவளுக்குத் தோன்றியது; அடுத்த கணம் ஸுரேசன் முனகலுடன் புரண்டு படுத்தான். ஆனால், அவன் இறக்கவில்லை, உயிரோடிருக்கிறான்! ஒரு கடினமான எதிர்ப்பின் வேகத்தினால் அசலா ஓடி அவன் கால்களில் விழுந்து, 'ஸுரேஷ் பாபு!' என்றாள்.

யாரோ கூப்பிடுவதைக் கேட்டு, ஸுரேசன் தன் சிவந்த கண்களைத் திறந்து பார்த்தான். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

அசலாவும் மறுபடி ஒன்றும் பேசவில்லை. அடக்க முடியாத பெருமூச்சு அவள் குரலைத் தடுத்துக் கண்ணீர் ரூபமாக இடைவிடாது பெருகலாயிற்று. ஆனால் ஒரு கணத்திற்கு முன் வந்த கண்ணீருக்கும் அதற்கும் எவ்வளவு வித்தியாசம்!

எல்லாக் கவலைகளுக்கும் மேலாக அவள் உள்ளத்தை ரகசியமாக வருத்திக்கொண்டிருந்த கவலை அவனுடைய உண்மையான நிலைதான். முன் பின் தெரியாத அந்த இடத்தில் ஸுரேசனின் பிணத்தை எப்படி என்ன செய்வது? யாரைக் கூப்பிடுவது? யாரிடம் சொல்வது? இம்மாதிரியான வெறுப்பளிக்கும் எண்ணங்களும், கொடூரமான கேள்விகளும் எழுந்தன என்றே கூறலாம். ஊரார்களுக்கு அவள் என்ன பதில் சொல்லுவாள்? போலீஸ்காரர்கள் எப்படியோ

எல்லாவற்றையும் அறிந்துவிடக்கூடும். பொங்கி எழுந்த அந்தக் கோர எண்ணங்களால் அவள் மனமும் உடலும் எவ்வாறு துன்பமும் பீடையும் அடைந்தன என்பதன் பூரா அனுபவத்தையும் அவளும் உணரவில்லை. அப் பொழுது அந்த விபத்தின் எல்லையற்ற தொல்லையிலிருந்து திடீரென்று விடுதலை யடைந்ததும், அழுகையை அவளால் அடக்க முடியவில்லை. மேலும் அவன் இறக்கவில்லை என்ற அந்த ஒரு விஷயமே ஸுரேசனிடம் அவள் உள்ளத்தை நன்றியால் நிரப்பியது.

சிறிது நேரம் அம்மாதிரிக் கழிந்ததும், ஸுரேசன் மெதுவாக, 'ஏன் அழுகிறாய் அசலா?' என்றான்.

அசலா அழுகையுடன் கூடிய குரலில், 'ஏன் நீங்கள் இந்த மாதிரிப் படுத்திருக்கிறீர்கள்? ஏன் என் அறைக்கு வரவில்லை? ஏன் என்னை இவ்வளவு பயமுறுத்தினீர்கள்?' என்றாள்.

அவளுடைய குரலில் பொங்கிய அன்பிலிருந்த கருணையும் இனிமையும், ஸுரேசன் உள்ளத்தில் மாத்திரமல்ல, அவள் உள்ளத்திலும் ஒருவிதமான மோகத்தைச் சஞ்சரிக்கச் செய்தன. அவள் மறுபடியும், 'உங்களுக்கு இம்மாதிரித் தூக்க மயக்கம் வருவதானால் என்னிடம் ஏன் சொல்லியிருக்கக் கூடாது? அந்தப் பெரிய அறையைப் பெருக்கி அதில் எதையாவது விரித்து உங்களுக்காகப் படுக்கை தயாரித்திருப்பேனே! வண்டிக்குத்தான் இன்னும் நேர மிருக்கிறதே!' என்றாள்.

ஸுரேசன் பதில் ஒன்றும் கூறவில்லை. ததும்பும் அன்புடன் அவள் முகத்தைப் பார்த்து, மெதுவாகக் கை நீட்டி அவளது வலது கையைத் தன் கையிலெடுத்துத் தன்னுடைய கொதிக்கும் நெற்றியில் வைத்துக்கொண்டு, ஒரு பெருமூச்சு விட்டான்.

அசலா திடுக்கிட்டு, 'அட! இதென்ன ஒரே சூடாக இருக்கிறதே! ஜுரமல்லவா வந்திருக்கிறது!' என்றாள்.

'உம்! இது சொஸ்தமாகுமென்று தெரியவில்லை. ஒரு கால் —'

அசலா தன் கையை மெதுவாக இழுத்துக்கொண்டாள். பதிலுக்கு ஒரு பெருமூச்சுத்தான் வெளிப்பட்டது. பொங்கி எழுந்த அவளுடைய அன்பும் மோகமும் ஒரு கணத்தில் உறைந்து கல்லாய்விட்டன. சகிப்பதற்கு — தைரியப்படுத்திக் கொள்வதற்கு — அவளிடம் இருந்த சக்தி யாவற்றையும் ஒருங்கு சேர்த்து, மனத்திற்குள், 'எப்படி யாவது உறுதியாக இன்று வண்டி வரும் நேரம்வரை கழித்துவிடுவேன்!' என்று பிரதிக்ஞை செய்துகொண்டாள். ஆனால் நினைக்க முடியாத அந்த விபத்துக்களால் அவளுடைய ஆசையின் மெல்லிய ரேகையும் இமைப் பொழுதில் இ மற்றுப் போனதால் மரணத்தைத் தவிர எந்தப் பொருளும் பிடித்தமாக இல்லை.

ஸுரேசனை அம்மாதிரி அங்கே தனியாக விட்டுவிட்டுப் போய்விடுவதென்பதை அவளால் நினைக்கவே முடியாது. ஆனால் தலையில் பொறுப்பாக வந்திருக்கும் நோயாளி யுடன், அந்த முன்பின் தெரியாத இடத்தில், அவள் என்ன செய்வாள்? எங்கு யாரிடம் சென்று உதவியையும் அனு தாபத்தையும் கேட்பாள், இரவு பகல் எப்பேர்ப்பட்ட பயங் கரமான நாடகத்தை நடிக்க வேண்டி வரும் — இந்தக் கவலைக ளெல்லாம் மின்னல் போல் அவள் மூளையில் சுற்றலாயின. என்ன செய்வதென்று அவளுக்கு விளங்கவில்லை. எங்காவது ஓடிப் போய் நின்று அடித்துக்கொண்டு அழலாமா, அல்லது எங்காவது தலையை முட்டிக்கொண்டு அந்தத் துர்ப்பாக்கிய மான வாழ்க்கை நாடகத்தை உடனேயே முடித்துவிடலாமா என்று ஏங்கினாள்.

## VII

அன்று ஸ்டேஷனிலிருந்து திரும்பும் போது வழியில் மழையில் நனைந்ததால், கேதார் பாபு எட்டு நாட்கள் வரை ஜலதோஷத்தாலும் தலைவலியாலும் ஜுரமாய்ப் படுத்து விட்டார். பெண் மாப்பிள்ளை இவர்களைப் பற்றிய க்ஷேம சமாசாரம் ஒன்றும் வராததால் மிகுந்த கவலையடைந்தார். ஜபல்பூரிலுள்ள தம் நண்பருக்கு ஒரு போஸ்ட் கார்டு எழுதியதைத் தவிர விசேஷமாக அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அன்று அதற்குப் பதில் வந்திருந்தது:— 'இங்கே யாரும் வரவில்லை. ஒருவரைப் பற்றிய தகவலும் இல்லை.' — இந்த வரிகளைத் திரும்பத் திரும்பப் படித்து, முகம் வெளுத்து, வரண்ட பார்வையுடன் வெளியே பார்த்துக் கொண்டே, அவர் அடிக்கடி தம் மூக்குக் கண்ணாடியைக் கையிலெடுத்துத் துடைக்கலானார். அவர்கள் என்ன ஆனார்கள்? எங்கே சென்றார்கள்? அவர்களைப் பற்றித் தகவல் விசாரிக்கத் தாம் யாரை அழைப்பது? எங்கே, யாருக்குக் கடிதம் எழுதுவது? யாரிடம் கேட்பது? இவைகளொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. அவருடைய ஆபத்து விபத்துக்களில் உடல் பொருள் இரண்டினாலும் வழக்கமாக உதவி செய்யும் ஸுரேசனும் அங்கு இல்லை. அவனும் அவர்கள் கூடச் சென்றுவிட்டான்.

அப்பொழுது வேலைக்காரன் அவர் முன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து வைத்தான். கேதார் பாபு கண்ணாடியை

எடுத்துப் போட்டுக்கொண்டு ஆவலுடன் அதைக் கையி லெடுத்துப் பார்த்தார். கடிதம் அவர் மகள் அசலா பேருக்கு வந்திருந்தது. பெண்களின் கையெழுத்துப் போல் இருந் தது. கடிதம் எங்கிருந்து வந்தது என்பதை அறியும் ஆவ லில், பிறர் கடிதத்தைப் பிரிக்கலாமா கூடாதா என்ற பிரச்னை கூட அவர் மனத்தில் எழவில்லை. சட்டென்று உறையைக் கிழித்து, முதலில் கடிதம் எழுதியவரின் பெயரைப் பார்த்தார். 'உன் அன்புள்ள மிருணளினி' என்று எழுதி யிருந்தது. அதன் பின் அவர் கடிதத்தைத் திரும்பத் திரும் பப் படித்தார். மறுபடியும் வெறித்த பார்வையுடன் வெளியே பார்த்துக்கொண்டு, மூக்குக் கண்ணாடியைத் துடைக்கலானார்.

அவர் மனத்தில் என்னென்ன தோன்றலாயின என் பதைக் கடவுள்தான் அறிவார். வெகு நேரம் வரை மூக்குக் கண்ணாடியைத் துடைக்கும் வேலையில் இருந்துவிட்டு, பிறகு அதைப் போட்டுக்கொண்டு ஒரு தரம் கடிதத்தை ஆதியோடந்தம் படிப்பதில் முனைந்தார். மிருணளினி, ஸ்திரீகளின் பொறுமை, மன்னிப்பு, தைரியம் முதலியவை பற்றித் தீவிரமாகவும் இனிமையாகவும் பல உபதேசங் களைச் செய்துவிட்டு, கடைசியில் குறிப்பிட்டிருந்ததாவது: 'இருந்த போதிலும் அண்ணா உன் விஷயமாக ஒன்றும் சொல்லவில்லை. கேட்டால், ரொம்பக் கடிந்துகொள்ளுகிறார். என்ன இருந்தாலும் நான் ஸ்திரீ! நான் எல்லாவற்றையும் அறிவேன்! நல்லது அம்மா, சண்டை பூசல் போடாமல் யார் இருக்கிறார்கள், சொல்லு? ஆனால் இதற்காக இவ்வளவு பிணங்கிக்கொள்ள வேண்டுமா? உன் கணவனின் உடம்பு மனம் இவைகள் இப்பொழுது இருக்கும் நிலைமையில் தன்னை அறியாமல் கோபம் கொள்ளவும் கூடும், சஞ்சலமடைந்து செல்லவும் கூடும்; ஆனால் உனக்குப் பைத்தியம் இல்லையே, அவர் "போகிறேன்" என்று சொன்னதும், நீ சட்டென்று,

"ஆமாம், வனவாசம் செல்லுங்கள்!" என்று சொல்ல! நீ எப்படி மனம் வந்து குற்றுயிராக இருந்த உன்னுடைய கணவனை அவ்வளவு சுலபமாக அந்தக் காட்டில் விட்டு விட்டாய்? விட்டுவிட்டுப் பேசாமல் — ஏழெட்டு நாட்களாக என்று சொல்லட்டுமா, ஏழெட்டு வருஷங்க ளென்று சொல்லட்டுமா — கவலை யில்லாமல் தாய் வீட்டில் உட்கார்ந்து விட்டாய்! இதைத்தான் நான் இடைவிடாமல் யோசித்துக் கொண்டிருக்கிறேன். உண்மையாகச் சொல்லுகிறேன், அன்று அவர் சாமான்களை எடுத்துக்கொண்டு, வீட்டில் நுழையும் போது என்னுல் அடையாளம் கண்டுகொள்ளவே முடிய வில்லை. உங்களுக்குள் சண்டை ஏன் வந்தது, எப்பொழுது வந்தது, எதற்காக ஜபல்பூர் செல்வதற்குப் பதில், ஊருக் குத் திரும்பி வந்தார்! இந்த விஷயங்களெல்லாம் பூராவும் எனக்குத் தெரியாது. அறிந்துகொள்ளவும் விரும்பவில்லை. ஆனுல், என் தலையின் மேல் ஆணை, கடிதம் கண்டவுடன் புறப்பட்டு வரவேண்டும்! மாமியாரை விட்டுவிட்டு நான் எங் கும் போகமுடியா தென்பதுதான் உனக்குத் தெரியுமே, அம்மா! இருந்தாலும் நான் வந்து உன்னைக் காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்திருந்தால், அண்ணுவின் உடம்பு இவ் வளவு மோசமாக ஆகியிருக்காது. ஒரு முறை வா! ஒரு முறை உன் கண்களால் அவரைப் பார்! இந்த மாதிரி, சமய மில்லாத சமயத்தில் கோபித்துக்கொண்டு போய், நீ எவ்வளவு பெரிய அநியாயத்தைச் செய்திருக்கிறுய் என்பதை அறி வாய்! இந்த வீடும் உன் வீடுதான். நானும் உன்னுடைய வள்தான். ஆகையால் இந்த வீட்டுக்கு வரச் சற்றும் தயங்க வேண்டாம். உன்னை வழி பார்த்துக்கொண்டிருப்பேன். உன் பாதங்களுக்குக் கோடி கோடி நமஸ்காரம்! இன்னொரு விஷயம்: என்னுடைய இந்தக் கடித விஷயம் அண்ணு வுக்குத் தெரியவேண்டாம். நான் அவருக்குத் தெரியாமல்

இதை எழுதியிருக்கிறேன், தெரியுமா? — உன் அன்புள்ள மிருணாளினி.'

கடிதத்தை முடித்த பிறகு மிருணாளினி மறுபடியும் ஒரு யோசனை எழுதியிருந்தாள். 'கணவன் இல்லாத போது நீ ஸுரேசனின் வீட்டில் இருக்கமாட்டாய் என்று எண்ணுகிறேன், ஆகையால் உன் தாய் வீட்டு விலாசத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். உன் கைக்குக் கிடைக்க அதிகத் தாமத மாகாதென்று நம்புகிறேன்' என்று எழுதியிருந்தாள்.

கேதார் பாபுவின் கையிலிருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. அவர் மறுபடியும் வெளிறிப்போன பார்வையுடன் கண்ணாடியைத் துடைக்கும் வேலையில் இறங்கினார். மஹிம் ஜபல்பூருக்குப் பதிலாகத் தன் கிராமத்தில் இருக்கிறான். அசலா அங்கே இல்லை. பின் அவள் எங்கே இருக்கிறாள்? என்ன ஆனாள்? இந்த விஷயங்களெல்லாம் மஹிமுக்குத் தெரியாதா? அல்லது வேணுமென்றே வெளியிட விரும்பவில்லையா?

திடீரென்று நினைவு வந்தது! கடைசியில் ஸுரேசன் எங்கே இருக்கிறான்? அவன்தான் அவர்களுக்கு விருந்தாளியாக இருக்கவேண்டு மென்று கூடப் போனானே! அவன் வீட்டுக்குத் திரும்பி யிருக்கமாட்டான். வந்திருந்தால் ஒரு தரமாவது வந்து சந்தித்திருப்பான். இவ்வாறு சிந்தித்த பின், அந்தத் தந்தையின் உள்ளத்தில் ஒரு சந்தேகம் வேல் போல் வந்து தைத்தது. அது விளைத்த காயத்தினால் அவரால் சரியாக உட்கார்ந்திருக்க முடியவில்லை. அதே சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு கண்களை மூடினார்.

மதியத்தில், வேலைக்காரி ஸுரேசன் வீட்டிலிருந்து வந்து, அவன் அத்தைக்கு யாதொரு தகவலும் தெரியாதென்றும், கடிதம் ஒன்றும் வாராததால் அவர்களும் கவலைப் பட்டுக்கொண்டிருப்பதாகவும் சொன்னாள்.

இரவு படுக்கையில் கேதார் பாபு ஒரு தரம் மிருணாளினி யின் கடிதத்தைப் படித்தார். நிம்மதிக்கு ஏதாவது இடம் இருக்குமா என்று அதன் ஒவ்வோர் எழுத்தையும் ஜாக் கிரதையுடன் ஆலோசனை செய்தார். இல்லாவிட்டால் அவர் எங்கே சென்று எப்படித் தம் முகத்தை மறைத்துக்கொள்ள முடியும்? அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. வம்ச பரம் பரையாக அவர் கல்கத்தா வாசி. கல்கத்தாவுக்கு வெளியே ஒரு பெரிய மனிதன் உயிருடன் வாழ முடியுமா என்பதை அவர் யோசித்ததுகூட இல்லை. இந்த வாழ்நாள் பூராவும் பரிசயமான அந்த இடம், சமாஜம், பந்து மித்திரர்கள் — எல் லோரிடமிருந்தும் பிரிந்து, எங்காவது கண்காணாத இடத் தில் தம் வாழ்நாளின் கடைசித் தினங்களைக் கழிக்கவேண்டி வந்தால், அந்தத் துக்ககரமான துர்ப்பாக்கிய தினங்களை எப் படிக் கழிப்பார்? இது அவருடைய யோசனைக்குப் புறம் பான விஷயம். பெண்ணாய்ப் பிறந்த துர்ப்பாக்கியவதி இம் மாதிரி ஒரு கடும் தண்டனைப் பாரத்தைத் தன் மெலிந்து போன விருத்தாப்பியத் தந்தையின் சக்தியற்ற தலையின் மேல் போட்டதற்கு அவளை என்ன சொல்லிச் சாபமிடுவது? அதுவும் அவருடைய யோசனைக்கு எட்டவில்லை.

இரவு அவர் கண்ணை மூட முடியவில்லை. விடியற்காலம் அவருக்குப் பித்தத்தினால் அஜீர்ணமும் வந்தது. அன்று, தம்முடையது என்று சொல்லிக்கொள்ள உலகில் அவருக்கு ஒன்றும் தென்படாத போது, உயிரற்றவர் போலக் கட்டிலில் படுத்திருக்கவும் அவருக்கு வெறுப்பாக இருந்தது. அவ் வளவு பெரிய வேதனையை, சாந்தமான முகத்துடன் அவர் தம் மார்பில் அடக்கிக்கொண்டு, மற்ற தினங்களைப் போலவே வெளியே வந்தார்; ஸ்டேஷனுக்கு வண்டி கொண்டுவரும்படி யும், துணிமணிகளை எடுத்து மூட்டை கட்டும்படியும் உத்தர விட்டார்.

# VIII

குளிர் காலச் சூரியன் அஸ்தமனமாகச் சித்தமாயிருந்தான். அவனுடைய மெல்லிய வெப்பத்தினால் ஸோன் நதிக் கரையிலுள்ள மணல் மைதானம் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. ஒரு பங்களாவின் தாழ்வாரத்தில், கைபிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு, அசலா பேசாமல் அதன் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய வாழ்க்கையுடன் அந்த வரண்ட பாலை நிலத்திற்கு ஏதாவது சம்பந்தமுண்டா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அவளுடைய இமை கொட்டாத பார்வையின் பக்கம் ஒரு கணம் பார்த்தாலே போதும்: அந்த மாதிரியாகப் பார்த்துக்கொண்டிருப்பதால் அவளுக்கு ஒன்றும் தென்படவில்லை என்பதும், உலகம் முழுதும் விசித்திரமும் விசாலமுமான ஒரு நிழல் தோற்றம் போலத் தோன்றிற்று என்பதும் தெரிந்துவிடும்.

'ஜீஜி!'

அசலா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அன்றொரு நாள், தன் பெயர் ராக்ஷஸி என்று சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டு ஆரா ஸ்டேஷனில் இறங்கினாளே, அவளேதான்! அருகே வந்து, அவள் பிரமிப்படைந்து களையற்ற அசலாவின் முகத்தை ஒரு க்ஷணம் பார்த்துவிட்டு, அபிமானத்துடன், 'நல்லது ஜீஜி! ஸுரேஷ் பாபு குணமடைந்து வருகிறார் என்பதை எல்லோரும் பார்த்து வருகிறார்கள். இனி யாதொரு பயமும் இல்லை யென்று டாக்டர் சொல்லுகிறார்;

ஆயினும் இரவு பகல் உன் கவலை நீங்கவில்லை. முகத்தில் சிரிப்பையே காணோம். இது உன்னுடைய அநீதியல்லவா? எங்களுக்கும் வீட்டுக்காரர் இருக்கிறார். ஆனால், சத்தியம் பண்ணிச் சொல்லுகிறேன், அம்மா, உன்னுடன் எங்களை ஈடு சொல்லவே முடியாது!' என்றாள்.

அசலா முகம் திருப்பி ஒரு பெருமூச்சு மாத்திரம் விட்டுக்கொண்டாள்; பதில் சொல்லவில்லை.

ராக்ஷஸி கோபித்துக்கொண்டு, 'ஓஹோ! திணறிக் கொண்டு ஏன் பெருமூச்சு விட்டுக் கொள்ளுகிறாய்?' என்றாள். அதன் பின்னும் அசலாவிடமிருந்து பதில் வராததைக் கண்டு, அவள் கையைத் தன் கையிலெடுத்து, சிறிது நேரம் பேசாம லிருந்துவிட்டுப் பிறகு மிக்க வாஞ்சையான குரலில், 'சரி, ஸு ரமா ஜீஜி! நிஜமாகச் சொல்லம்மா, எங்களுடைய வீட்டில் உங்களுக்குக் கொஞ்சங்கூட மனம் கொள்ள வில்லையே? ஒருகால் ரொம்பத் தொல்லையும் கஷ்டமுமாகக் கூட இருக்கிறது, இல்லையா?' என்றாள்.

அசலா, நதியின் பக்கம் முன்னர் எப்படிப் பார்த்துக் கொண்டிருந்தாளோ, அப்படியே பார்த்துக்கொண் டிருந்தாள். ஆனால் இந்தத் தடவை பதில் சொன்னாள். 'உன்னுடைய மாமனார் எனக்குச் செய்த உபகாரத்தை நான் இந்த ஜன் மத்தில் மறக்க முடியுமா, அம்மா?' என்றாள்.

ராக்ஷஸி சிரித்தாள். 'மறப்பதற்காகத்தான் நான் கேலி செய்துகொண்டே யிருக்கிறேன்!' என்று சொல்லி, அடுத்த நிமிஷம் விஷமக் குரலுடன், 'இதனால்தான் அப்பா இவ்வளவு கூப்பிட்டும் பதில்கூடச் சொல்லவில்லையா? நீ எண்ணியிருக்கலாம் — கிழவர் எப்பொழுது இருக்கிறாரோ அப்பொழுது —' என்று முடிக்காமல் நிறுத்தினாள்.

அசலா மிக்க ஆச்சரியத்துடன் எதிரே முகம் திருப்பி, இல்லை, அம்மா திரி நடக்க முடியாது!' என்றாள்.

'இல்லை! அது நடக்க முடியுமா என்ன? நான் சாக்ஷியாக இல்லாவிட்டால் ஒப்புக்கொண்டும் விடுவாய். டாகூர்ஜியின் வாசலில் என் காதுவரை விழுந்துவிட்டது அந்தச் சத்தம். "ஸுரமா! ஓ ஸுரமா! — அப்பா கூப்பிடுகிறார் உன்னை!" என்று நாலைந்து தடவை கேட்டது. பூஜைக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன். எல்லாவற்றையும் ஒரு பக்கம் வைத்துவிட்டு ஓடி வந்து பார்த்தால், அவர் படியிலிருந்து கீழே இறங்கிச் சென்றுகொண்டிருந்தார். நிஜமாகச் சொல்லுகிறேன் ஜீஜி, விளையாட்டல்ல!' என்றாள்.

விருத்தரின் 'ஸுரமா' என்ற அழைப்புக்கு, கவனமற்ற அவளுடைய சித்தத்தின் வாசல் ஏன் தேடியும் கிடைக்கவில்லை என்பதை அசலா மனத்திற்குள் அறிந்தாள். ஆயினும் அவள் வெட்கத்தாலும் பச்சாத்தாபத்தாலும் சஞ்சலமடைந்தாள். 'ஒருகால் சகோதரி, நான் வீட்டுக்குள்——'

'எங்கே வீட்டுக்குள்! யாருக்காக வீடு இருக்கிறதோ அவர் அப்பொழுது வெளியே உலாவச் சென்றிருந்தார். முற்றத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது, — இதே மாதிரி, கைபிடியைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தாய்!' என்று சொல்லிக்கொண்டு வரும்போதே, நடுவில் சிரித்துக்கொண்டே, 'ஆனால் நீதான் அப்பொழுது உன் நினைவே இல்லாமலிருந்தாயே, அம்மா! அதுதான் அந்தக் கிழவரின் பேச்சு கேட்கவில்லை. நீ என்ன யோசித்துக்கொண்டிருந்தாய் என்பதைச் சொல்லிவிட்டால்—' என்றாள்.

அசலா பேசாமல் மறுபடியும் நதியின் அக்கரையைப் பார்க்கலானாள். அந்தக் கேலி வார்த்தைகளுக் கெல்லாம் பதில் சொல்ல முயற்சிக்கக்கூட இல்லை.

இங்கே ஒரு விஷயத்தைச் சொல்லவேண்டியது அவசியமாகிறது. 'ராக்ஷஸி' என்ற பெயர் அந்தப் பெயருடையவளுக்குக் கொஞ்சங் கூடப் பொருத்தமில்லை. அவள் பெயரும்,

ராக்ஷஸியல்ல. அவள் பெயர் வீணுபாணி. அவள் பிறக்கும் போதே தாய் இறந்து போய்விட்டாள். ஆகையால் அவளுடைய பாட்டி கோபத்தினுல் அவளுக்கு இந்தப் பெயரை வைத்துவிட்டாள். இது அக்கம் பக்கத்து வீட்டுக்காரர் முதல் மாமியார் வரையில் தெரிந்து, சகஜமான பெயராக மாறிவிட்டது.

அசலா திடீரென்று முகம் திருப்பிப் பேசாமல் நிற்பதைக் கண்டு மனத்திற்குள் அவளுக்கே வெட்கமாகப் போய்விட்டது. வீணு, அனுதாபக் குரலுடன், 'சரி ஸ்ூரமா ஜீஜி, உன்னிடம் இரண்டொரு கேலிப் பேச்சுக் கூடப் பேசக் கூடாதா, அம்மா! எனக்குத் தெரியாதா என்ன, நீ பாபுஜியிடம் எவ்வளவு பக்தி சிரத்தை கொண்டிருக்கிறுய் என்பது? அவர் மூலமாக நாங்கள் எல்லாவற்றையும் கேள்விப்பட்டோம்! அவர் காலையில் உலாவிவிட்டு வந்தார், நீ இந்த முன்பின் தெரியாத இடத்தில் அழுதுகொண்டே டாக்டரைத் தேடி ஓடிக்கொண்டிருந்தாய்! அதன் பின் அவர் உன்னுடன் சத்திரத்திற்குச் சென்ருர். பிறகு உன் கணவனை வீட்டுக்கு அழைத்து வந்தார். இவைகளெல்லாம் கடவுளின் செயல் அம்மா! இல்லாவிட்டால் இந்த வீட்டில் உன்னுடைய பாத தூளி படுமா? இதை அன்று வண்டியில் யாராவது நினைத்திருப்பார்களா? ஆனுல் என் வார்த்தைக்குத்தான் நீ பதிலே சொல்லவில்லையே? நான் கேட்கிறேன் — எங்கள் ஊர் உனக்குப் பிடிக்கவில்லை என்பதை நான் அறிவேன்—ஆனுல் ஏன்?—என்ன கஷ்டம்? — இங்கே உனக்கு என்ன அசௌகரியம் ஏற்படுகிற தம்மா?— இதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்!' என்று சொல்லி, முன் போலவே சிறிது நேரம் சும்மா இருந்தாள். பிறகு, என்ன காரணத்தினுலோ அவள் பதிலுக்காகக் காத்துக் கொண்டிருப்பது வீண் என்பது தெரிந்தது. அவளுடைய

மாமனார்தான் அசலாவுக்குத் தம் வீட்டில் இடம் அளித்திருந்தார். அவர் வயோதிகராயிருந்தும் அவளை, 'ஸுரமா ஜீஜி' என்று அழைத்துவந்தார். அவளிடத்தில் பேரன்பு கொண்டிருந்தார். இவ்வளவு அன்புக்கும் பாத்திரமாயிருந்த அந்த அசலாவின் முகத்தைப் பலவந்தமாகத் தன் பக்கம் திருப்பிப் பார்த்தாள் வீணாபாணி. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. வீணா பிரமித்து நின்றுவிட்டாள். பிறகு அசலா, தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, தன் சோகப் பார்வையை மறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

மறுநாள் பிற்பகலில், வீணாபாணி அப்பொழுதுதான் வந்திருந்த மாதப் பத்திரிகையிலிருந்து ஒரு கதையை அசலாவுக்குப் படித்துக் காட்டிக்கொண்டிருந்தாள். அசலா ஒரு பிரம்பு நாற்காலியில் ஒருக்களித்துச் சாய்ந்துகொண்டு சில பாகங்களைக் கேட்டுக்கொண்டிருந்தாள். சில பகுதிகள் அவள் காதுவரை எட்டவே யில்லை. அதற்குள் வீணாவின் மாமனார் ராமசரண பாபு, 'அம்மா ராக்ஷஸி!' என்று கூப்பிட்டுக் கொண்டே அங்கே வந்து சேர்ந்தார்; இருவரும் சட்டென்று எழுந்து நின்றனர். வீணா ஒரு நாற்காலியை அவரெதிரில் இழுத்துப் போட்டு, உற்சாகத்துடன், 'ஏன், பாபுஜி!' என்றாள்.

அந்தக் கிழவர் மிகவும் சிஷ்டாசாரமுள்ள ஹிந்து. அவர், மெதுவாகச் சௌகரியமாக உட்கார்ந்துகொண்டு, அசலாவின் முகத்தை அன்பு பொங்கும் பார்வையுடன் நோக்கிக்கொண்டே, 'ஒரு சமாசாரம் அம்மா! புரோகிதர் இப்பொழுதுதான் வந்தார். அவர் உங்கள் இருவரையும் கணவன் மனைவி என்று சங்கற்பித்துக்கொண்டு நாராயணனுக்கு துளசி சாத்தி அர்ச்சனை செய்துகொண்டு வருகிறாரே, அது நாளைப் பூர்த்தியாகும். ஆகையினால் நாளைக்கு நீ சற்று சிரமத்துடன் மத்தியானம்வரை சாப்பிடாமல் இருக்கவேண்

டும். அவர் இதே வீட்டில் நாராயணனைக் கொண்டுவந்து எல்லாவற்றையும் முடித்துவிட்டுப் போவார்! நீ எங்கும் போகவேண்டியே யிருக்காது!' என்றார்.

அவர் வார்த்தைகளைக் கேட்டு அசலாவின் முகம் ஒரே யடியாய்க் கறுத்துவிட்டது. மங்கிய வெளிச்சத்தில் கிழவரின் பார்வை அதில் விழவில்லை. ஆனால் வீணாவின் பார்வை அதில் விழுந்தது. அவள் ஹிந்து வீட்டில் பிறந்த பெண்! பிறந்ததிலிருந்தே அத்தகைய ஸம்ஸ்காரங்களில் பழகியவள். நோயுற்றிருக்கும் நாயகனின் க்ஷேமத்திற்காக இது எவ்வளவு உற்சாகமும் ஆனந்தமும் கொடுக்கக்கூடிய விஷயம் என்பதை அவள் பெரிய கடமையைப் போலவே அறிந்திருந்தாள்; ஆனால் அசலாவின் முகம் அவ்வாறு சட்டென்று மாறுதலடைந்தது அவளுக்கு எல்லையற்ற ஆச்சரியத்தை யளித்தது. ஆயினும், தன் தோழியின் சார்பாக அவள், 'சரி, பாபுஜி! நீங்கள் ஸுரேஷ் பாபுவுக்காக நாராயணனுக்குத் துளசி சாத்துகிறீர்கள். அவர் உபவாஸம் இல்லாத போது இவள் எதற்காக இருக்கவேண்டும்?' என்றாள்.

கிழவர் சிரித்துக்கொண்டே, 'அவரும் உன் அக்காவும் வேறு வேறா? ஸுரேஷ் பாபு இந்த மாதிரி நிலைமையில் உபவாஸம் இருக்க முடியாது. ஆகையால் ஸுரமா ஜீஜிதான் இருந்து தீரவேண்டும். சாஸ்திரத்தில் விதி இருக்கிறது, அம்மா! கவலைப்பட வேண்டாம்!' என்றாள்.

அசலா அதற்கு 'ஆம், அல்ல' என்று பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவளுடைய அமைதியான மௌனத்தில் திடீரென்று அந்தக் கிழவரின் கவனமும் இழுக்கப்பட்டது. அவர் அசலாவின் முகத்தைப் பார்த்து, 'அதில் உனக்கு ஏதாவது ஆட்சேபம் உண்டா, ஸுரமா?' என்று கேட்டு, பதிலை எதிர்பார்த்து அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

அசலாவினால் சட்டென்று அதற்கு யாதொரு பதிலும் கூற முடியவில்லை. சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு, மெதுவாகத் தன் இனிய குரலில், 'அவரிடம் சொல்லி விட்டால் அவர் ஒருகால் வேண்டியதைச் செய்துகொள்ளு வார்!' என்றாள்.

அதன்பின் எல்லோரும் மௌனம். விஷயம் எவ்வளவு மோசமானது, எவ்வளவு கசப்பும், மனத்திற் கொவ்வாதது மானது என்பதை அவளைவிட வேறு யாரும் — சொன்னவர் கள் யாரும் — உணரவே யில்லை. ஆனால் அந்தர்யாமி ஒரு வனைத் தவிர அந்த விஷயத்தை யாரும் அறியவும் முடியாது.

கிழவர் எழுந்து நின்றார். 'சரி, அப்படியே ஆகட் டும்!' என்று சொல்லிவிட்டு, மெள்ளக் கீழே இறங்கிச் சென்றார். வேலைக்காரன் விளக்கைக் கொண்டுவந்து வைத்து விட்டுப் போனான். ஆனால் அவர்கள் இருவரும் அப்படியே பேசாமல் உட்கார்ந்திருந்தனர். மாதப் பத்திரிகையிலுள்ள அந்த ஸ்வாரஸ்யமான கதையின் பாக்கியை முடிக்கும் சக்தி கூட யாருக்கும் இல்லை.

வெளியே இருள் குவியலாயிற்று. அதையும் துளைத் துக்கொண்டு, அந்தக் கரையிலுள்ள மணல் பூமி - ஒரு முனையி லிருந்து மறுமுனைவரை - மௌனமும் லஜ்ஜையும் அடைந்த அந்த இரு பெண்களின் கண்கள் முன்பு கனவு போல் தோன்றலாயிற்று.

இவ்விதமாக மேலும் சிறிது நேரம் கழிந்தது; ஆனால் வீணாபாணி என்ன நினைத்துக்கொண்டாளோ என்னவோ, சட்டென்று தன் நாற்காலியை இழுத்து அசலாவி னருகில் போட்டுக்கொண்டு, தன் வலது கையைத் தோழியின் தோளில் வைத்துக்கொண்டு, சாதாரணமாக, 'அந்தக் கரையி லுள்ள மைதானத்தைப் பார்த்துப் பார்த்து எனக்கு என்ன நினைவு வருகிறது தெரியுமா, ஜீஜி? அங்கே நீயே இருப்ப

தாகத் தோன்றுகிறது. இம்மாதிரி இருளில் சுற்றிக்கொண்டு, சிறிதுகூட — இதென்ன ஏன் இம்மாதிரி நடுங்குகிறாய் ?" என்றாள்.

அசலா ஒரு கணம் பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு விளக்கமற்ற குரலில், 'திடீரென்று குளிர் எடுத்துவிட்ட தம்மா !' என்றாள்.

வீணா சடக்கென்று எழுந்து, உள்ளேயிருந்து ஒரு சால்வையை எடுத்துக்கொண்டு வந்து அசலாவுக்குப் போர்த்தினாள். பிறகு தன் இடத்தில் அமர்ந்து, 'உன்னிடம் ஒரு விஷயம் கேட்கவேண்டுமென்று விருப்பம், ஆனால் வெட்கமாக இருக்கிறது. நீ கோபித்துக்கொள்ளாவிட்டால் —' என்று இழுத்துப் பேசினாள்.

விளங்காத அந்தச் சந்தேகத்தால் அசலாவின் உள்ளத்தில் நடுக்கம் வந்துவிட்டது. அதிகமாகப் பேசினால் குரல் நடுங்குமே என்ற பயத்தினால், 'இல்லை' என்று மாத்திரம் சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிட்டாள்.

வீணா, பிரியத்துடன் அவள் கையை லேசாகக் கசக்கிக் கொண்டே, 'நீ இப்பொழுது என் ஜீஜி இல்லையா ? நான் உன் தங்கைதானே! ஆனால் அன்று வண்டியில் நான் உனக்கு எவ்விதமானவளாகவும் இல்லை — இருந்தும்கூட ஏன் நீ என்னிடம் அம்மாதிரி உன்னுடைய வரலாற்றை ஒளித்து வைத்தாய் ? உன் கணவரைக் காட்டி அவர் உனக்கு உறவில்லை என்றாய் — "அவர் அசௌக்கியமாக இருக்கிறார், அடுத்த வண்டியிலிருக்கிறார், அவரை அழைத்துக்கொண்டு ஜபல் பூருக்குப் போகிறேன் !" என்றாய்—ஆனால் என்னை ஏமாற்றி விட முடியாது ! அவர் யாரென்பதை நான் நன்றாக அறிந்து கொண்டேன். நீ பிரம்ம சமாஜி என்று சொன்னாய் !' என்று சொல்லிவிட்டு, கொஞ்சம் புன்னகையுடன், 'இப்பொழுது பார்க்கிறேன் — அவருடைய பூணூலைப் பார்த்து விஷ்ணு

புரத்துப் புரோகிதர்கூட வெட்கிப்போவார்! அசலா அக்கா, இவ்வளவு பொய்கள் எதற்காகச் சொன்னுய், சொல்லு!' என்ருள்.

அசலா சிரமத்துடன் கொஞ்சம் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, 'சொல்லாவிட்டால்......?' என்ருள்.

'அப்படியானுல் நானே சொல்லிவிடுகிறேன். ஆனுல், முதலில் இதைச் சொல்லு! — நான் எல்லாவற்றையும் ஸ்பஷ்டமாகச் சொன்னுல் எனக்கு என்ன தருவாய்?'

அசலாவின் உள்ளத்தின் ரத்த ஓட்டம் நின்றுவிடும் போல் ஆகிவிட்டது. அவள் முகத்தில் பரவிய மரண வேதனையின் சாயையில் வீணுவின் பார்வை விழுந்ததா இல்லையா என்பதைக் கூறுவது கடினம்தான். வீணு மறுபடியும் சற்றே சிரித்துக்கொண்டு, 'சரி, ஏதாவது கொடுத்தால் கொடு, கொடுக்காவிட்டால் போ, நான் உண்மையைச் சொல்லிவிட்டால் எனக்குத் தின்பதற்கு என்ன கொடுப்பாய், அசலா ஜீஜி?' என்ருள்.

அசலாவுக்குத் தன் பெயரே காய்ச்சிய இரும்பைப் போல் செவியில் நுழைந்தது. அடுத்த க்ஷணமே அவள் பாதி உயிரும், பாதி உணர்ச்சியுமுள்ள நிலைமையில், அசையாமல் உட்கார்ந்துவிட்டாள்.

வீணுபாணி சொல்லலானுள்: 'நம் இரு சகோதரிகளுடைய குற்றமும், நம்முடைய அந்த மனிதர்களுடையதைப் போன்று அவ்வளவு பெரிதல்ல, அம்மா! ஒருவர் ஜ்ுர வேகத்தில் உன் உண்மைப் பெயரை வெளியிட்டார். மற்ருெருவர் அதனுலேயே உன்னுடைய உண்மை விவரத்தைத் தேடிக் கொண்டு வந்தார்!'

அசலா முழுபலத்துடன் தன்னுடைய கலங்கும் ஹிருதயத்தைச் சமாளித்துக்கொண்டு, 'உண்மை விவரம் என்ன? சொல்லேன், கேட்போம்!' என்ருள்.

'உண்மையோ, இல்லையோ அம்மா! ஆனால் அதில் புத்தி இருக்கிறது. இதை நீ ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். அவர் ஓர் இரவு திடீரென்று வந்து, "உன்னுடைய அசலா ஜீஜியின் நிலைமை என்ன? வீட்டிலிருந்து கோபித்துக்கொண்டு ஓடி வந்திருக்கிறார்கள்!" என்று சொன்னார். நான் கோபித்துக்கொண்டு, "இருக்கட்டும் போங்கள்! ரொம்ப வாத்தியார்த்தனம் பண்ணுகிறீர்கள்! இந்த வார்த்தை ஜீஜியின் காதில் விழுந்தால், அவள் இந்த ஜன்மத்தில் மறுபடி உங்கள் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டாள்!" என்றேன்!'

அசலா நாற்காலியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உறுதியாக உட்கார்ந்தாள்.

வீணாபாணி மீண்டும் சொல்லலானாள்: "என் முகத்தை அவள் பார்க்கட்டும், பார்க்காமல் போகட்டும். விஷயம் என்னவோ உண்மை! அதை நான் ஆணையிட்டுச் சொல்லுவேன். நாத்தனார் அல்லது மைத்துனர் மனைவியுடனோ - அல்லது மாமனார் மாமியாருடனோ - சண்டை போட்டுக்கொண்டு, வைராக்கியமடைந்து கணவனுடன் வீட்டைவிட்டு வெளியேறி வந்திருக்கிறாள். ஸுரேஷ் பாபுவின் தினுசைப் பார்த்தால், உன் ஜீஜி அவரைச் சமுத்திரத்தில் விழும்படி சொன்னால்கூட முடியாது என்று சொல்ல அவரால் இயலாது என்பது நன்றாகத் தெரிகிறது. கிழத் தாய் தந்தையர்கள் உலகமெல்லாம் தேடி அலைந்து தங்கள் பிள்ளையையும் நாட்டுப்பெண்ணையும் வீட்டுக்கு அழைக்கும்வரை, இவர்கள் எங்கு இஷ்டமோ அங்கு, மாறுபெயர் வைத்துக்கொண்டு அக்ஞாத வாசம் செய்யலாம். இதுவே உண்மை விஷயமாக இல்லாவிட்டால் நீ என்னை—" என்று அவர் சபதம் கூற ஆரம்பித்தார்!'

'நான், "சரி! இதுவே உண்மை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் வண்டியில் என் போன்ற ஒரு தெரியாத முட்டாள் பெண்ணிடம் பொய் சொல்லவேண்டிய

அக்கறை என்ன வந்தது?" என்று கேட்டேன். அதற்கு அவர் சிரித்துக்கொண்டு, "உன் ஜீஜியும் உன்னைப் போல் புத்திசாலியாக இருந்திருந்தால், உண்மையில் அக்கறையும் ஏற்பட்டிருக்காது. ஆனால் அவளென்னமோ அப்படியில்லையே? உன் வீடு டேஹ்ரியில் இருக்கிறது, நீ நாலைந்து நாட்களில் எப்படி டேஹ்ரிக்கு வந்துவிடுவாய் என்பதைத் தெரிந்துகொண்டாளோ, அதே போலத்தான் அசலாவுக்குப் பதில் ஸுரமாவாகவும், ஹிந்துவுக்குப் பதில் பிரம்ம சமாஜிகளாகவும், டேஹ்ரிக்குப் பதில் ஜபல்பூர் போகிறவர்களாகவும் ஆனார்கள். ஏண்டி ராக்ஷஸி, ஜபல்பூருக்கு டிக்கட் வாங்கி அங்கே செல்லப் புறப்பட்ட அவர்கள் திடீரென்று வண்டி மாறி இங்கே ஏன் இறங்கினார்கள்? நோயுற்ற கணவனை அழைத்துக்கொண்டு யாராவது ஒரு வங்காளி வீட்டில் இறங்காமல், இவ்வளவு தூரம் வந்து இந்தப் பட்டிக்காட்டில், அதுவும் அந்தப் பொட்டல் சத்திரத்தில், ஏன் தங்கப் போகிறார்கள்? இதுகூட உன் புத்திக்கு எட்டவில்லையா?" என்றார்—' இதைச் சொல்லிக்கொண்டு வீணு திடீரென்று அசலாவின் பக்கம் குனிந்து அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அன்பு பொங்கும் உணர்ச்சியுடன் அவள் காதருகில் முகத்தைக் கொண்டுபோய், விளக்கமில்லாத குரலில், 'சொல்ல மாட்டாயா ஜீஜி? என்ன ஆயிற்று? நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்! உன்னைத் தொட்டு நான் சத்தியம் செய்கிறேன்!' என்றாள்.

வீணுபாணியின் வாயினின்றும் தன்னுடைய உண்மையைப் பற்றிய இந்தப் பொய்ச் சரித்திரத்தைக் கேட்டு, அசலாவின் உடல் முழுவதும், அசேதனமான பொருளைப் போல், தோழியின் ஆலிங்கனத்தில் துவண்டது. தனது வாழ்க்கையில் படைசியாக வெட்கப்பட வேண்டியதாக ஏற்பட்ட சம்பவம், எப்படி உருப்பெற்று, கொஞ்சம் கொஞ்ச

மாகத் தன்னைப் பாதிக்கும் வழியில் முன்னேறி வருகிறது என்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் திடீரென்று அப்பொழுது அது வேறு வழியில் திரும்பி அவளைப் பாதிக்காமல் போகவே, அவள் ஒரு நிம்மதி அடைந்தாள். அதை அவள் எவ்விதத்திலும் மற்றொரு பாரம் என்று கருத முடியவில்லை. வெகு நேரம் வரை இரு கண்களிலும் பெருகிய கண்ணீரைத் தவிர, அவளிடம் உயிரின் அடையாளம் ஒன்றுமே தெரியவில்லை.

அம்மாதிரியாகச் சிறிது நேரம் கழிந்தது. வீணு தனது தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, அன்பு நிறைந்த கருணைக் குரலில், 'ஸுரமா ஜீஜி! நீ வயதில் பெரியவள். ஆயினும் இந்தத் தங்கையின் பேச்சைக் கேள்! இப்பொழுது வீட்டுக்குத் திரும்பிப் போ! நான் சொல்லுகிறேன். இந்த யாத்திரை உங்களுக்கு நல்ல யாத்திரையல்ல! பெருங் கஷ்டத்தின் மேல் நெற்றிக் குங்குமம் தப்பித்தது, ஜீஜி! இனியும் கோபித்துக்கொண்டு வயதானவர்களுக்குத் துக்கத்தைக் கொடுக்காதே! - இனி அவர்கள் கவலைப்படும்படி வைக்காதே! தலை குனிந்து புக்ககம் போவதில் வெட்கமென்ன? இதில் மரியாதையற்ற விஷயம் ஒன்றும் இல்லையே, அம்மா!' என்றாள்.

பிறகு ஒரு நிமிஷம் மௌனமாக இருந்துவிட்டு மறுபடியும், 'ஏன் அம்மா சும்மா இருக்கிறாய்? போகமாட்டாயா? அப்பா அம்மாவிடம் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பி வந்த பிறகுதான் ஸுரேஷ் பாபுவுக்கு உடம்பு சரியாக இல்லை. உன் வாயினால் இந்த வார்த்தையைக் கேட்டு அவர் சந்தோஷம் அடைவார். நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்!' என்றாள்.

அசலா கண்களைத் துடைத்துக்கொண்டு சரியாக உட்கார்ந்தாள். முதலில் சொல்ல அவளுக்கு ரொம்ப வெட்கமாகத்

தோன்றியது; தலை நிமிர்ந்து பார்த்த பொழுது வீணைபாணி தன்னையே ஆவலுடன் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். ஆனால் சும்மா இருந்தாலும் அந்த ஸ்திரீயிட மிருந்து விடுதலை கிடைப்பதாக இல்லை. இதில் சந்தேகமில்லை என்று தெரிந்ததும் அவள் தன் சங்கோசத்தை யெல்லாம் தியாகம் செய்துவிட்டு, மெதுவாக, 'எங்களுக்கு வீடு திரும்ப யாதொரு வழியும் இல்லை!' என்றாள்.

வீணாவுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. 'ஏன் வழி இல்லை? எனக்கு உன்னை வெகு நாட்களாகத் தெரியாது. ஆயினும் நான் தெரிந்துகொண்ட வரையில், உன் வழியை மறைக்கும் படியான காரியத்தை நீ ஒருபொழுதும் செய்ய மாட்டாய் என்பதை நான் உலகின் முன் நின்று கூற முடியும். சரி, நீ உன் புக்ககத்து விலாசத்தை எனக்குச் சொல்லு! நாங்கள் நாளை நின்று காலை வண்டியில் வீட்டுக்குப் போகி றோம் — பாபுஜியை அழைத்துக்கொண்டு நானே உன் புக் ககத்திற்குச் செல்கிறேன் — பார்ப்போம், கிழவனும் கிழவி யும் எனக்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை! உனக்கு இருக்கும் மாமியார் மாமனார் எனக்குந்தான் இருக் கிறார்கள். அவர்கள் முன் செல்ல வெட்க மென்ன வந்தது?' என்றாள்.

அசலா திடுக்கிட்டு, 'நீங்கள் நாளை நின்று ஊருக்குப் போகிறீர்களா? எனக்கொன்றும் தகவல் இல்லையே? இங்கே யார் யார் இருப்பார்கள்?' என்றாள்.

'ஒருவரும் இருக்க மாட்டார்கள். வேலைக்காரனும், தர்வானும், வீட்டைப் பார்த்துக்கொண் டிருப்பார்கள். என் பெரிய மாமியாருக்கு வெகு நாளாகத் தேக அசௌக்கியம். அவர்கள் இந்தத் தடவை பிழைப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லை. அவர்கள் எல்லோரையும் ஒரு தடவை பார்க்க விரும்புகிறார்கள்!' என்றாள்.

'உன் புக்ககம் எங்கே?' என்று கேட்டாள் அசலா.

'கல்கத்தாவில்தான், படல்டாங்காவில்!'

படல்டாங்காவின் பெயரைக் கேட்டதும் அசலாவின் முகம் வாடியது. சற்று நேரம் சும்மா இருந்துவிட்டுப் பிறகு தயக்கத்துடன், 'வீணு! அப்படியானால் நாங்கள் இந்த வீட்டைவிட்டு நாளைக்கே போகவேண்டும்! இனி இங்கே இருக்க முடியாதல்லவா?' என்றாள்.

வீணு சிரித்தாள். 'அதனால்தான் நீ வீடு திரும்பிப் போக இவ்வளவு உற்சாகப்படுத்திக்கொண் டிருக்கிறேன்? இவ்வளவு நாழிகைக்குப் பிறகு என் வார்த்தையில் இந்த அர்த்தத்தைத்தான் கண்டுபிடித்தாயா? இல்லையம்மா! என் மேல் தப்பு! உன்னை இனி எப்பொழுதும் எங்கும் போகும்படி சொல்லமாட்டேன். உங்களுக்கு இஷ்டமுள்ள வரை இந்தக் குடிசையிலேயே இருங்கள். எங்களுக்கு யாதொரு ஆட்சேபமும் இல்லை!' என்றாள்.

ஆனால் தயை பொங்கிய அந்த அழைப்புக்கு அசலாவினால் யாதொரு பதிலும் கூற முடியவில்லை. ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டு, 'நீங்கள் செல்வது உண்மையில் நிச்சயமாகிவிட்டதா?' என்றாள்.

'நிச்சயம் என்னவோ நிச்சயம்தான். இன்று எங்களுக்கு வண்டிகூட ரிசர்வ் செய்தாகிவிட்டது. பாபுஜியின் அறையை எட்டிப் பாரேன்! கிட்டத்தட்ட முக்கால்வாசி சாமான்கள் கட்டியாகிவிட்டன!' என்றாள்.

அதற்குள் வேலைக்காரி கதவருகில் வந்து, 'பஹூஜி, (நாட்டுப்பெண்) அம்மா உங்களைச் சமையலறைக்குக் கூப்பிடுகிறார்கள்!' என்றாள்.

'இதோ வந்துவிட்டேன்!' என்று சொல்லி, வீணு சட்டென்று சிரித்துவிட்டு, மறுபடியும் ஒரு தரம் இரு கைகளையும் அசலாவின் தோள்களில் போட்டுக்கொண்டு, காதோடு,

'இவ்வளவு நாள் இந்தக் கூட்டத்தில் ரொம்பச் சங்கடத்துடன் உங்கள் நாட்கள் கழிந்தன. இனி, காலி வீடு. எங்கும் யாரும் இருக்கமாட்டார்கள். என்ன, நான் சொல்வது ஏதாவது புரிந்ததா, என்ன, ஜீஜி ராணி!' என்று சொல்லி, இரு விரல்களால் அத்தோழியின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு, சட்டென்று அங்கிருந்து ஓடிவிட்டாள்.

ஆனந்தத்தின் ஒரு துணுக்கு, லேசான தென் காற்றைப் போல், அந்தப் புண்ணியம் செய்த யுவதியின் மெல்லிய மலரடி நடையுடன் கூடவே கண் முன்னின்றும் மறைந்தது; ஆனால், அவள் காதோடு சொல்லிச் சென்ற கடைசி வார்த்தை செவிகளிலேயே சுழல, அசலா அங்கேயே கற்சிலை போல் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். அன்றிரவும் அடுத்த தினமும்தான் பாக்கி. அதன் பின் யாதொரு தடையுமில்லை, யாதொரு விக்கினமும் இல்லை. அந்த நிர்ஜனமான மௌன புரியில், அருகேயும் தூரத்திலும், கண்ணுக்கெட்டிய தூரம் வரை, எதிர்காலத்தின் பக்கம் கண் திறந்து பார்த்தாள். அவள் தனி! ஸுரேசனைத் தவிர வேறு யாரையும் எங்கும் காணவில்லை.



# IX

அந்த ஜன சூனியமான ஊரில் தனியாக ஸுரேச னுடன் வாழ்நாளைக் கழிக்கவேண்டும், அந்த நாள் ஒவ் வொரு கணமும் நெருங்கிக்கொண்டே யிருக்கிறது. யாதொரு தடையுமில்லை, வரம்பு இல்லை, லஜ்ஜை யில்லை — 'இன்றல்ல, நாளை!' என்று சொல்லிச் சாக்குப் போக்குச் சொல்லக்கூடச் சந்தர்ப்பம் கிடைக்காது.

'புக்ககம் நம்முடையது! தலைகுனிந்து அங்கு செல்வது வெட்கப்படக் கூடிய விஷயமல்ல! லஜ்ஜையும் வேண்டிய தில்லை!' என்று சொன்னாள் வீணா.

ஆஹா! அவளுக்கு யார் இருக்கிறார்கள், யார் இல்லை? இந்த வரவு செலவு கணக்கை அந்தக் கடவுளைத் தவிர வேறு யாரும் அறிந்திலர். ஆயினும் அவளுடைய கணவன் இன்னும் இருக்கிறான்! தன்னுடையது என்று சொல்லிக் கொள்ள அவளுடைய எரிந்துபோன அந்த வீடு இன்னும் பூமியிலிருந்து அழிந்துவிடவில்லை. இன்றுகூட ஒரு கண மாகிலும் அவள் அதில் சென்று நிற்க முடியும்!

கட்டிப் போட்டிருக்கும் மிருகத்தின் கண்முன் வெளித் தோற்றம் முற்றும் மறையாத போது, அது எப்படி ஒரே இடத்தில் நின்று மாறி மாறித் தலையை மோதிக்கொள்ளு கிறதோ, அதே போல, அசலாவின் கட்டுப்பட்ட மனத்தின் வேகமான ஆசைகள்; அவள் உள்ளத்தில் ஆர்ப்பாட்டம் செய்து வெளியே வர மார்க்கத்தைத் தேடி மோதிக்கொள்ள

லாயின. இத்தனை நாட்களாக அந்தக் கட்டிலில் அவள் பக்கத்தில் வீணை படுத்துத் தூங்குவது வழக்கம். ஆனால் இன்று அவளுடைய கணவன் வந்துவிட்டான். அவள் தன் அறைக்குப் படுக்கச் சென்றுவிட்டாள் — மூடியிருக்கும் தன் அறையில் கட்டிலில் தனியாகத் தூங்கும்போது அந்தக் கெட்ட சிந்தனைகள் ஞாபகம் வராமலிருக்கவேண்டுமே என்ற பயத்தினால், துன்பமுற்ற தன் மனம் அவமானத்தாலும், வெட்கத்தாலும் குன்றாமலிருக்கவேண்டுமே என்ற எண்ணத்தாலும் தன்னைத் தானே பலத்துடன் அங்கிருந்து இழுக்க முயன்றாள். ஆனால், உடனே அவள் உடல் மின்னலால் தாக்கப்பட்டதைப் போல் நடுநடுங்கியது.

பக்கத்திலிருந்த ஏதோ ஒரு வீட்டிலிருந்து மணி இரண்டடித்தது. அசலா போர்வையை எடுத்துவிட்டு எழுந்து உட்கார்ந்ததும், அப்படிப்பட்ட குளிர் மிகுந்த இரவிலும் தன் நெற்றியில் வேர்வை துளிர்த்திருப்பதைக் கண்டாள். கட்டிலை விட்டெழுந்து, தலைமாட்டில் இருந்த ஜன்னலைத் திறந்ததும், கிருஷ்ண பக்ஷத்து அஷ்டமியின் பிறைச் சந்திரன் எதிரே தோன்றினான். அவனுடைய மெல்லிய கிரணங்களால் ஸோன் நதியின் நீல வெள்ளம் வெகு தூரம் வரை ஜ்வலித்துக்கொண்டிருந்தது. ஆழ்ந்த இரவின் குளிர் காற்று அவளுடைய தாபமடைந்த நெற்றியைத் தடவிச் சென்றது. அவள் அந்த ஜன்னலருகேயே அமர்ந்து தனது விதியின் கடைசிப் பிரச்னையைப் பற்றி யோசிக்கலானாள்.

அவளுடைய பாக்கியமற்ற துரதிர்ஷ்டமான வாழ்க்கையில் இருந்த உண்மைகள் பூராவும் உலக மக்களுக்கு ஓர் அற்புதமான நாவலைப் போலத்தான் தோன்றும் என்பதை அசலா நிச்சயமாக அறிந்திருந்தாள்: அந்தக் கதையின் முதல் அத்தியாயம் ஆரம்பமான தினத்திலிருந்து எவ்வளவு பொய்கள் இந்த வாழ்க்கையில் உண்மை வேஷம் பூண்டு

தோன்றி வந்திருக்கின்றன என்பதை ஒவ்வொன்றாக நினைவுபடுத்திப் பார்க்கலானாள். கோபத்தினாலும் துக்கத்தினாலும், அவள் கண்களில் கண்ணீர் பெருகியது.

தன்னுடைய யௌவனத்தின் ஆனந்தத்தைப் பொய்யினால் இம்மாதிரி சிதைத்து, தன்னை ஒரு பரிகாச வஸ்துவாக்கி உலகின் முன் தோற்றுவிக்கச் சிறிதும் இரக்கமின்றி முன் வந்த கடவுளைப் பற்றி, தான் சிறுவயதில் படித்த படிப்பெல்லாம் வீண், அர்த்தமற்றது என்று எண்ணலானாள். அவள் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, திரும்பத் திரும்ப, 'ஹே, ஈசுவரா! உன்னுடைய இந்தப் பரந்த உலகில் இந்த அபாக்கியவதியின் வாழ்க்கையைத் தவிர்த்து உனக்கு வேடிக்கை செய்ய வேறு வஸ்து ஒன்றுமே கிடைக்கவில்லையா?' என்று சொல்லிக்கொண்டாள்.

பிறகு தன் மனத்திற்குள், 'நான் எங்கே யிருந்தேன்! ஸுரேசன் எங்கே யிருந்தான்! பிரம்ம சமாஜிகளின் நிழலைக் கண்டால்கூட வெறுப்பும் துவேஷமும் கொள்ளும் ஒருவனுக்கு விதியின் விளையாட்டால் இன்று ஏற்பட்டிருக்கும் பற்றுதலுக்கு ஓர் ஆதி அந்தமே இல்லையே! அவன் ஒரு பொழுதும் காதலிக்க இயலாத ஒருத்தி, இன்று அவனுக்கு உயிரினும் இனியவ ளாகிவிட்டாள்! — இந்தப் பொய்யை எல்லோரும் உண்மை என்று எண்ண முடியுமா? எது உண்மையோ அதற்கு எங்காவது யாரிடமாவது ஆதரவு கிடைக்காதா? இந்தப் பொய்களை அவள் தன் வாயினாலேயே பிரசாரம் செய்ய அவசியமா, என்ன? விதியின் இத்தனை கொடுமைகள் வேறு யாருக்காவது இம்மாதிரி ஏற்பட்டிருக்கின்றனவா? எவ்வளவோ துக்கத்துடன் கணவனை அவள் அடைந்தாள். ஆனால் விதியால் அதைப் பொறுக்க முடியவில்லை. அதன் எல்லை? துரதிர்ஷ்டத்தின் சுமையுடன் ஸுரேசன் திடீரென்று ஒரு நாள் அபசகுனம் போல அவள் கிராமத்து

வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவளுடைய இன்பக் குடிசை எரிந்து சாம்பலாயிற்று. அதனுடன் அவளுடைய பாக்கியமும் எரிந்து பஸ்மமாகிவிட்டது. இவ்வளவையும் அறிந்திருந்தும், நோயாளியான தன் கணவனைக் கொண்டுவந்து அவன் மடியில் ஏன் விட்டாள்?

யாரை அவள் கிட்டத்தட்ட இழந்தேவிட்டாளோ, அவனை மீண்டும் தன்னுடைய சேவைக்குப் பாத்திரமாகத் திருப்பிக் கொடுக்கக் கடவுளுக்கு விருப்பமிருந்தால், ஏன் இன்று அவளுடைய துக்கம், துன்பம், பழி, அவமானம் முதலியவைகளுக்கு ஒரு கரை தென்படவில்லை?

அசலா இரு கரங்களையும் குவித்து, 'ஜகதீசுவரா! நோயுற்ற என் கணவனின் அன்பு ஆசீர்வாதத்தால் என்னுடைய சகல அபராதங்களும் பிராயச்சித்தம் அடைய நம்பிக்கையளித்த நீ, ஏன் இந்த அபாக்கியவதியை மறுபடியும் இந்தத் துர்க்கதியில் தள்ளினாய்? இவ்வளவெல்லாம் நடந்த பிறகும் ஸுரேசனை என்னுடன் வரும்படியழைக்க வெட்கப்படாத என்னுடைய இந்த அபராதத்தை உலகம் அலம்பிவிட முடியாதா? களங்கத்தின் இந்தச் சின்னம் இனி மறையாதா? ஆனால், ஹே கடவுளே! என்னுடைய துரதிர்ஷ்டத்தினால் நீயும் யோசனை செய்வதில் தவறு புரிந்துவிட்டாய். இந்த ஹிருதயத்திற்குள் எப்பொழுதும் என்ன நடந்துகொண்டிருக்கிற தென்பதில் உன் பார்வைகூடவா படவில்லை!' என்று சொன்னாள்.

தங்கையைப் பற்றியும், கணவனைப் பற்றியும் வந்த நினைவுகளை அவள் முயற்சி செய்தே விலக்கிவைக்க முடியும். இன்றும் அந்த நினைவுகளை அவள் தன்னிடம் அணுக விடவில்லை. ஆனால் மிருணாளினியின் அந்த வார்த்தைகள், அத்தை சொன்ன வார்த்தைகள் எல்லாம் அவளுக்கு நினைவுக்கு வந்துகொண்டுதான் இருந்தன. வரும்போது அத்தை அன்புடன் தன்னை

ஸதி - ஸாத்வி யென்று செய்த ஆசீர்வாதமெல்லாம் நினைவுக்கு வந்தது. தன் சம்பந்தமாக அவர்களுடைய மனோபாவத்தைக் கற்பனை செய்துகொண்ட பொழுது, திடீரென்று உள்ளத் தாக்குதலால் சிறிது நேரம் வரை அவளுடைய உணர்வுகள் யாவும் செயலற்றுப் போயின. மனமும் உடலும் சக்தி யற்று மறத்துப்போன அந்த நிலைமையிலேயே, ஜன்னலில் தலையைச் சாய்த்துக்கொண்டாள். அவளை அறியாமல் அவள் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. அதற்குள், பின்னால் யாரோ மெள்ள அடிவைத்து வரும் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் தலையைத் திருப்பிப் பார்த்தாள். போர்வை ஒன்றும் இல்லாமல் ஸுரேசன் நின்றுகொண்டிருந்தான். க்ஷண நேர ஆவேசத்தில் அவள் ஏதோ சொல்ல விரும்பினாள். ஆனால் பொங்கி வரும் கண்ணீரில் அவள் தொண்டை அடைத்துவிட்டது. அதை அடக்கிக்கொண்டு பேச அவளுக்கு மனமில்லை. ஆகையால் மறு நிமிஷம் முகத்தைத் திருப்பிக்கொண்டு, முன்போல் ஜன்னலின் கம்பிகளில் தலையைச் சாய்த்துக்கொண்டாள். கண்ணிலிருந்து துளிர்த்துக்கொண்டிருந்த கண்ணீர் திடீரென்று கரையுடைந்த வெள்ளம் போலப் பெருகலாயிற்று.

எங்கும் யாதொரு சத்தமுமில்லை. இரவின் ஆழ்ந்த நிசப்தம் வீட்டுக்குள்ளும் வெளியேயும் பரவியிருந்தது. பின்னால் ஸுரேசன் கற்சிலை போல் நின்றிருந்தான். திடீரென்று அவன் உடல் காற்றில் இலை போல் நடுங்கியது. சட்டென்று அவன் அசலாவின் தலையைப் பிடித்துத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டான்.

அசலா தன்னை விடுவித்துக்கொண்டு, தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். ஆனால் அதில் ஆச்சரியம் என்னவென்றால், அவளுடைய அவ்வளவு துக்கத்திற்கும் மூலகாரணமான அந்த மனிதனின் அந்தச் செயல் அச

லாவுக்கு அவ்வளவு வெறுப்பாகத் தோன்றவில்லை. அவள் மிருதுவான குரலில், 'நீங்கள் ஏன் இந்த அறைக்குள் வந்தீர்கள்?' என்றாள்.

ஸுரேசன் மௌனமாக இருந்தான். ஒருகால் குரல் கிளம்பாததினால் அவனால் பதில் சொல்ல முடியவில்லையோ என்னவோ!

அசலா மெதுவாக ஜன்னலை மூடிவிட்டு, 'குளிரினால் உங்கள் கை கால்கள் நடுங்குகின்றன. போங்கள், போர்வை இல்லாமல் நிற்காதீர்கள்! உங்கள் அறைக்குப் போய்த் தூங்குங்கள்!' என்றாள்.

ஸுரேசனின் கண்கள் கலங்கின. குரல் நடுங்கியது. அவன் அசலாவின் கையைத் தன் கையிலெடுத்துக்கொண்டு, விளக்கமற்ற குரலில், 'அப்படியானால் நீயும் என் அறைக்கு வா!' என்றான்.

அசலா ஒரு நிமிஷம் மௌனமாக ஆச்சரியத்துடன் அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு, 'இல்லை, இன்றைக்கு இல்லை!' என்று கூறிவிட்டு, மெள்ளத் தன் கையை விடுவித்துக்கொண்டாள்.

அந்தச் சாந்தமான விடுகதை போன்ற பதிலுக்கு அர்த்தம் என்ன என்பதை அறியாமல் ஸுரேசன் பேசாமல் நின்றிருந்தான். அசலா அவன்பக்கம் பார்க்காமலே, 'நான் விழித்துக்கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிந்துதான் நீங்கள் இந்த அறைக்கு வந்தீர்களா?' என்றாள்.

ஸுரேசன் தயக்கத்துடன், 'இல்லாவிட்டால் நீ தூங்குகிறாய் என்பது தெரிந்து வந்திருக்கிறேன் என்று நம்புகிறாயா?' என்றான்.

நம்பிக்கை! அசலா முகம் திருப்பிச் சற்று நகைத்தாள். அந்தக் கூர்மையான கொடுஞ் சிரிப்பு விளக்கின் மங்கிய பிரகாசத்தில்கூட ஸுரேசனின் பார்வையில் படாமலில்லை.

அந்தச் சிரிப்பு, 'அடே காமுகா! தூங்கிக்கொண்டிருக்கும் பெண்மணியின் அறையில் திருடனைப் போல் நுழைய வேண்டாம்! புருஷனின் மகத்துவத்தை இப்பொழுதுதான் காட்டுகிறாயா?' என்று கூறுவது போல் இருந்தது. ஆனால் அவள் வாயினால் யாதொரு வார்த்தையும் சொல்லவில்லை. ஒரு கண நேரம் பொறுத்து ஜன்னலை விட்டெழுந்து, அவள் மெதுவாக, 'உங்கள் உடம்பு சரியாக இல்லை. இனி விழித்துக்கொண்டிருக்காதீர்கள்! செல்லுங்கள்! சென்று தூங்குங்கள்!' என்று சொல்லிவிட்டு, படுக்கைக்குச் சென்று, காலோடு தலை போர்த்திக்கொண்டு தூங்கலானாள். சிறிது நேரம்வரை ஸுரேசன் அங்கேயே அசைவற்று நின்றுகொண்டிருந்தான்; பிறகு பேசாமல் மெள்ளத் தன் அறைக்குச் சென்றான்.



## X

இரண்டொரு வேலைக்காரர்களைத் தவிர வீட்டில் ஒருவரும் இல்லை. ஐந்தாறு நாட்களாயின. எல்லோரும் கல்கத்தா சென்றுவிட்டனர். போகாதவர் ராமசரண பாபு ஒருவர்தான். கடைசியில் ஒரு முக்கியமான வேலையினால் அவர் தங்கும்படியாகி விட்டது. சில தினங்களாக அவர் ஏதோ தம் வேலையில் மூழ்கியிருந்தார். வீட்டில் அதிகமாகக் காணப்படவில்லை. அன்று திடீரென்று அவர் அதிகாலையி லேயே எழுந்து, மேலே அசலா இருக்கும் தாழ்வாரத்திற்கு வந்து, 'ஸுரமா! ஸுரமா!' என்று கூப்பிடலானார்.

குளிர் காலம், அதிகாலை யாரும் படுக்கையை விட்டு அதுவரை எழுந்திருக்கவில்லை. சத்தத்தைக் கேட்டு அசலா வாரியடித்துக்கொண்டு எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து நின்றாள். சிறிது நேரத்திற் கெல்லாம் ஸுரேசனும் மற்றொரு கதவைத் திறந்துகொண்டு கண்களைக் கசக்கிக் கொண்டே வந்து சேர்ந்தான். அந்த நிலைமையில் விழித் தெழுந்து வந்த 'தம்பதிகள்' வெவ்வேறு அறைகளி லிருந்து வெளிவந்ததைக் கண்டு, அந்தக் கிழவரின் சந் தோஷப் பார்வை ஆச்சரியத்தில் கலந்தது. அதை ஸுரேசன் பார்க்கவில்லை. ஆனால் அசலாவின் கண்ணில் அது படாம லில்லை.

ராம் பாபு ஸுரேசனை நோக்கிச் சற்று அனுதாபத் துடன், 'ஸுரேஷ் பாபு! நான் பெரிய தவறைச் செய்து

விட்டேன். சமய மற்ற சமயத்தில் கூச்சல் போட்டு உங்கள் தூக்கத்தைக் கலைத்துவிட்டேன். பெரிய தவறுதான்!' என்றார்.

ஸுரேசன் சிரித்துக்கொண்டே, 'தவறொன்றுமில்லை. ஏனென்றால் நான் விழித்துக்கொண்டுதான் இருந்தேன், இல்லாவிட்டால் வெளியேயிருந்து கூப்பிட்டு என்னை எழுப்பி விடுவதென்பது அசாத்தியம். தலைமேல் பேரிகை யடித்துங் கூட எங்கள் தூக்கத்தைக் கலைக்க முடியாது. ஆனால் இவ் வளவு அதிகாலையில் எங்கே செல்லுகிறீர்கள்?' என்றான்.

கிழவர் அசலாவைச் சுட்டிக் காட்டி, 'இன்று நான் ஸுரமாவுக்குக் கொஞ்சம் தொந்தரவு கொடுக்கவேண்டி யிருக்கிறது!' என்று கூறி, அசலாவின் பக்கம் திரும்பி, சிரித்துக்கொண்டே, 'என் பல்லக்கு தயாராக நிற்கிறது. இப்பொழுதே போகவேண்டும். மத்தியானம் இரண்டு அல்லது மூன்று மணிக்கு முன் திரும்ப முடியாது. ஆகை யால் நீ இந்தக் கிழவனுக்காக ஒரு கை அரிசி களைந்து வைத்துவிடு, அம்மா! அவ்வளவு நாழிகைக்கு மேல் வந்து நான் அடுப்பு ஊதிக்கொண்டிருக்க முடியாது!' என்றார்.

அந்தப் பரம வைதிக சிஷ்டாசாரரான பிராம்மணர், தம்முடைய மனைவி, அல்லது நாட்டுப்பெண் ஆகியவர்களைத் தவிர வேறு யார் கையாலும் சாப்பிடுவதில்லை. அவருடைய சமையலறையும் தனி. யாரும் அந்த அறைக்குள் செல்ல அதிகாரமும் கிடையாது. இடையிடையே அவர் தம் கையாலேயே சமையல் செய்துகொள்வதும் உண்டு. ஆகை யால் ஸ்திரீகள் வீட்டை விட்டுத் தாராளமாக ஊருக்குச் சென்று வருவது வழக்கம். சில தினங்களாகவே அதைப் பற்றிய சர்ச்சை நடந்துவந்தது. ஆனால் அன்று திடீ ரென்று அந்தப் பரிசயமற்ற பெண்ணின் மேல் சாப்பாட்டுப் பொறுப்பைப் போட்டார். அத்தீர்மானத்தைக் கேட்டு, அசலா

ஆச்சரியத்தினுலும், வேதனையினுலும், அதைவிட அதிகமாகப் பயத்தினுலும் குன்றிப்போனுள்.

ராம் பாபு அவளுடைய வாடிய முகத்தைப் பார்த்து, அன்புடன், ' " இந்தக் கிழவர் இன்று என்ன சொல்லுகிறுர், சாப்பாட்டு விஷயத்தில் எவ்வளவு சண்டை சச்சரவு, ஆசார விவகாரங்கள் உள்ளவர், இன்று அவருக்கு என்ன ஆகிவிட்டது!" என்று நீ யோசிக்கிறுய் அல்லவா! போகட்டும். ராக்ஷஸியின் கையினுல் சாப்பிடுவதில் யாதொரு தடையும் ஏற்படாதபோது உன் கையினுல் ஒருவாய் சாப்பிட்டால் என்ன குந்தகம் ஏற்பட்டுவிடப் போகிறது? சரி! நல்லதாகட்டும், கெட்டதாகட்டும் அம்மா! அந்த அகாலத்தில் வந்து அடுப்பு ஊத என்னுல் முடியாது!' என்றுர். அதன் பின்பும் மௌனமாக இருந்த அசலாவின் முகத்தைச் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, பிறகு சிரித்துக்கொண்டே, அவர், ' " திடீரென்று இந்தக் கிழவனுக்கு இவ்வளவு உதாரத்வம் வந்திருந்தால் எனக்குக் கஷ்டம் கொடுக்காமல் சமையற்காரனைச் சமைக்கச் சொல்வதுதானே!" என்று நீ நினைக்கலாம்! அது முடியாது அம்மா! அது முடியாது! இதுவரை இந்தக் கிழவனிடம் அதே வைதீகம்தான்! அதே ஸம்ஸ்காரம்தான்! செத்தால்கூட ஸந்தியா வந்தனம் காயத்திரி செய்யாத அந்தச் சமையற்காரன் சமைத்த சோறு என் நெஞ்சில் இறங்காது. எங்கள் ராக்ஷஸியையும் உன்னையும் இதற்குள் ஒன்ருக நினைத்துவிட்டேன் என்பதும் உண்மையல்ல. ஆனுல் என்னுடைய இந்தத் தாயாரும் ஒரு நாள் சமையல் செய்து போட்டால் அதுவும் அன்னபூர்ணியின் அன்னமாகவே ஆகும் என்பதைப் பார்வை யளவில் காணுகிறேன். ஆனுல் இனி, தாமதிக்க முடியாதம்மா! மீதி சொல்லவேண்டியதைச் சாப்பிட்டுக்கொண்டே சொல்லுகிறேன். அங்கே சொல்வதுதான் எல்லாவற்றிலும் உண்மையாகும்' என்று சொல்லி

விட்டு, ராம் பாபு புறப்படத் தயாரானதும், அசலா வருந்தலானாள். என்ன சொல்வதென்பதைத் தீர்மானிக்க முடியாதவளாய், எது முதலில் வாயில் வந்ததோ அதைச் சொன்னாள். 'எனக்கு நன்றாகச் சமைக்க வராது! என் சமையல் உங்களுக்குப் பிடிக்காதே!' என்றாள்.

விருத்த ராம் பாபு திரும்பிச் சிரித்துக்கொண்டே, 'என்னை இதை நம்பும்படி சொல்லுகிறாயா, அம்மா?' என்றார்.

'சமையல் செய்ய எல்லாருக்குமே தெரியுமா என்ன?' என்றாள் அசலா.

'எல்லோருக்கும் தெரியும் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்?'

அசலாவினால் அந்த வார்த்தைக்குச் சட்டென்று யாதொரு பதிலும் சொல்ல முடியாமல் பேசாமல் இருந்து விட்டாள். ஆனால் ஸுரேசனுக்கு அங்கு நிற்பது ஒரு விதமாக முடியாமல் போய்விட்டது. அசலாவின் வெளுத்த முகத்தைப் பார்த்து ஒரு கணத்தில் அவள் வேதனையை உணர்ந்துகொண்டான். அந்தக் கிழவரின் ஸம்ஸ்காரமும், அவருடைய ஹிந்து ஆசாரமும்! நல்லதாக இருக்கட்டும் அல்லது கெட்டதாக இருக்கட்டும், உண்மையாக இருக்கட்டும் அல்லது பொய்யாகஇருக்கட்டும், அவருக்குச் சமையல் செய்து போடுவதில் உள்ள ஆசாரக் குறைவை அசலா அறிவாள். அந்த நிலைமையில் கண்யமுள்ள அந்தப் பெண்மணியின் உள்ளம், உண்மையை மறைக்கும் செய்கை ஆழ்ந்த துஷ்கிருத்தியம் என்ற எண்ணத்திலிருந்து விடுபட முடியவில்லை என்பதை அவளுடைய சோபையற்ற வெளுத்த முகத்தைக் கண்டே ஸுரேசன் அறிந்துகொண்டு, கை கால் கழுவும் சாக்கில் கீழே இறங்கிச் சென்றுவிட்டான்.

'சரி, அப்படியானால் நான் சென்று வருகிறேன்!' என்று சொல்லி, ராம் பாபுவும் ஸுரேசன் பின்னே இறங்கி

ளூர். ஒரு நிமிஷம்வரை அசலா சிந்தை கலங்கி நின்றாள். பிறகு தன்னை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, 'ஒரு வார்த்தை கேளுங்கள் —!' என்றாள்.

கிழவர் திரும்பிப் பார்த்தார். ஸுரமா ஏதோ சொல்வதற்குத் தயாராக இருந்தும் பேசாமல் தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள். அவர் சற்று முன்னால் வந்து, 'உன்னிடம் இன்னொரு விஷயம் சொல்லவேண்டும், அம்மா! உன்னுடைய சங்கோசம் போகாவிட்டால் - உனக்குத் தெரியுமா ஸுரமா - சிறுவயதில் நான் எங்கள் தெருவில் எல்லோருக்கும் "அண்ணா!" — வயதில் உன் தந்தையைவிட நான் சிறியவனல்ல — பின்னே என்னைப் "பெரியப்பா" என்று நீ கூப்பிடுவதற்கென்ன?' என்றார்.

அந்தக் கிழவருக்குத் தன்மேல் அளவற்ற பிரியம் என்பது அசலாவுக்கு நன்றாகத் தெரியும். அந்த அன்பு வெளிப்பட்டதைக் கண்டு அவள் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவள் பேசாமல் தலையசைத்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

'இன்னும் ஏதாவது சொல்ல வேண்டுமா?' என்றார் ராம் பாபு.

அசலா முன் போலவே மௌனமாகத் தரையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிக்கொண்டு, விளக்கமற்ற குரலில், 'ஆனால் என் தந்தை பிரம்ம சமாஜியாயிற்றே?' என்றாள்.

ராமசரண் பாபு சட்டென்று திடுக்கிட்டார். 'நிஜமாகத் தானா? அல்லது, பத்துப் பதினைந்து பேர் கல்கத்தாவுக்கு ஜோராகச் சென்று வருகிறார்களே, அப்படியா? பிரம்ம சமாஜிகள் ஹிந்துக்களைப் பற்றிச் சொல்லக்கூடாத வசனங்களைக்கூட அவர்கள் வைகிறார்கள்! பிறகு வீட்டுக்கு வந்த மதுர வசனமுள்ள பூர்வ ஹிந்துக்கள் வாயால் உச்சரிக்

முடியாத வார்த்தைகளால் பிரம்ம சமாஜிகளைத் திட்டுகிறார்கள். அம்மாதிரி இல்லையே என்றுதான் நான் கேட்கிறேன்; அம்மாதிரியானால் எனக்கு யாதொரு தடையும் இல்லை!' என்றார்.

வெட்கத்தால் அசலாவின் முகம் உலர்ந்தது. 'இல்லை, அவர் உண்மையான பிரம்ம சமாஜி!' என்றாள்.

பதிலைக் கேட்டு ராம் பாபு கொஞ்சம் சங்கடத்தில் ஆழ்ந்தார். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம், மலர்ந்த முகத்துடன், 'அவர் பிரம்ம சமாஜியாக இருந்தால் இருக்கட்டும். பெண் அவருடைய பிரஜையல்ல அவரிடம் பயப்பட. தவிர நீ யாருடன் தர்மத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறாயோ, அவர் ஹிந்துவாக இருந்து, அவர் மார்பில் பூணூல் திகழ்ந்து கொண்டிருக்கும் வரை, அவர் அதை அவமானம் செய்ய முடியாது. தந்தையின் கர்மம் உன்னைத் தொடக்கூட முடியாது. நீ எத்தனை சாக்குப் போக்குச் சொன்னாலும் சரிதான், ஸுரமா! இந்தக் கிழப் பெரியப்பாவை இன்று ஏய்த்து விட முடியாது. இன்று நீ சமையல் செய்து போட்டே ஆக வேண்டும். உன்னுடைய தந்தையின் இந்தப் படிப்பினால்தான் அன்று நீ உபவாசம்கூட இருக்கமாட்டேனென்றாய், இல்லையா! இன்று அதன் வட்டியுள்பட வசூல் செய்துகொண்டு தான் விடுவேன்!' என்று சொல்லிவிட்டு அவர் போக யத்தனிக்கையில், அசலா அவ்வளவு நேரத்திற்குப் பிறகு தன் சிந்தை தேங்கிய பாவத்தை உதறிவிட்டு, கம்பீரமான குரலில், 'சரி பெரியப்பா! நான் பிரம்ம சமாஜியாக இருந்தால், என் கையால் சாப்பிட மாட்டீர்களே?' என்றாள்.

'இல்லை! அதொன்றுமில்லை! ஒருகாலும் நீ அப்படி ஆகவே முடியாது!'

'ஆனால், அப்படி இருந்தால், என் மத தர்மம் மாறுபட்டதினாலேயே நான் உங்களுக்கு விருப்பமற்றவளாகிவிடுவேனோ?'

'விருப்ப மற்றவளாக ஏன் அம்மா ஆகப் போகிறாய்? விரும்பத் தகாதவள் அல்ல. ஆனால் உன் கையினால் சாப்பிட முடியாது!'

அந்த விஷயமாக அவளுக்கு விவரமாக அறிந்து கொள்ள வேண்டியிருந்தது. ஆகையால் அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை. அவள், 'ஏன் சாப்பிட முடியாது? வெறுப்பினாலா?' என்று கேட்டாள்.

கிழவரால் சட்டென்று யாதொரு பதிலும் சொல்ல முடியவில்லை. அவர் ஒருவிதமான பார்வையுடன் அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அசலா சங்கோசத்தை யெல்லாம் விட்டு, 'பெரியப்பா! தங்களிடம் தயை எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதற்கு உலகில் எத்தனை சாட்சிகள் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். ஆனால் எங்களைவிடச் சிறந்த சாட்சி வேறு யாரும் இருக்க முடியாது. அப்படியிருக்க, தங்களைப் போன்ற மனிதர்களின் மனம் எவ்வாறு உதாரத்துவமற்று இருக்க முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை. தாங்கள் மனிதரை எவ்வாறு வெறுப்பீர்கள்?' என்றாள்.

கிழ ராம் பாபு திடீரென்று வருத்த மடைந்தார். 'நான் வெறுக்கிறேனா? யாரை அம்மா? எப்பொழுது?' என்றார்.

'யார் கையினால் தொட்டது தங்களுக்கு விரும்பத் தகாததோ, அவர்கள் வெறுப்புக்குப் பாத்திரமானவர்கள் தானே! அவர்களைத் தாங்கள் மனத்திற்குள் வெறுக்கிறீர்கள்! வெறுக்கிறீர்கள் என்ற விஷயத்தை, நீண்ட அப்பியாசத்தினால் மறந்துவிடுகிறீர்கள். தங்கள் வேலை விஷயம் இருக்கட்டும். சமையற்காரன் சமையல்கூடத்தான் தங்கள் நெஞ்சில் இறங்காது என்பதை நீங்களே ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். இதனால் தேசத்திற்கு எவ்வளவு கெடுதல் - அது எவ்வளவு வீழ்ச்சியடைகிறது - என்பதை நீங்கள்.........'

ராம் பாபு பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தார். கூட அசலாவின் பதட்டத்தையும் பார்த்துக்கொண்டிருந்தார். அவளுடைய வார்த்தைகள் பூர்த்தியானதும், சிறிது சிரித்துக்கொண்டே, ' அம்மா! நாங்கள் யாரையும் வெறுப்பதில்லை. நீ சொல்லுவதைப் போன்ற புகார்களைப் பெரிய மனிதர்கள் சொல்லுவார்கள். அவர்களிடம் உன் தந்தை கற்றுக்கொண்டார். அவரிடம் நீ கற்றுக்கொண்டாய். இல்லாவிட்டால், மனிதன் கடவுளுக்குச் சமம் என்ற ஞானம் அவர்களிடம் தான் இருக்கிறது, எங்களிடம் இல்லை என்பது அல்ல. எங்களிடமும் எப்பொழுதும் இருக்கிறது!' என்றார்.

அதே சமயம் கீழே விளக்கமற்ற ஓர் ஆரவாரம் கேட்டது. ராம் பாபு ஒரு நிமிஷம் காது கொடுத்துக் கேட்டுவிட்டு, ' ஸுரமா, ஸ்நானம் சாப்பாடு யாருக்குப் பெரும் பாரமாக இருக்கிறதோ-யாருக்குத் தடபுடலாக நடக்கிறதோ-அவர்களோடு எங்களுக்கு ஒத்துக்கொள்ளாது. எங்கள் வீட்டில் சாப்பாடு எப்பொழுதும் சாதாரணம்தான். அதற்கு இன்று கொஞ்சம் ஏற்பாடு செய்து வை. சாப்பிடும் போது நாங்கள் யாரை வெறுக்கிறோம், அதனால் தேசம் எவ்வளவு வீழ்ச்சியடைகிறது என்பதை யோசிப்போம்! இப்பொழுது அங்கே ஒரே களேபரமாய் இருக்கிறது. இனித் தாமதிக்க முடியாது, சென்று வருகிறேன்!' என்று சொல்லிக் கொண்டே வேகமாக இறங்கிச் சென்றுவிட்டார்.

# XI

பிற்பகலில் போஜனத்தை முடித்துக்கொண்டு கிழவர் திருப்தியையும் மகிழ்ச்சியையும் காட்டும் குரலுடன் எழுந்திருக்கும்போது, அசலா சிரமத்துடன் சற்று சிரித்துக் கொண்டே, 'பெரியப்பா! ஒரு விஷயம் இப்பொழுதே நான் சொல்லிவைக்கிறேன். உங்களுக்கு உங்கள் குலாசாரம் நஷ்டமாகிவிட்ட தென்று எப்பொழுது தெரிந்துவிடுகிறதோ அப்பொழுது தாங்கள் கோபித்துக்கொள்ள முடியாது!' என்றாள்.

கிழவர் அன்புடன் புன்னகை செய்து, 'சரி அம்மா, அப்படியே ஆகட்டும்!' என்று சொல்லிவிட்டுக் கையலம்ப வெளியே சென்றார். அவருடைய கைத் தடி ஓசை கேட்டுக் கொண்டிருந்த வரை அசலா தன் பார்வை முழுவதையும் அந்த ஓசை வந்த பக்கம் செலுத்திக்கொண்டே இருந்தாள். அதன் பின் அந்த ஓசை எப்பொழுது அடங்கியது, எப்பொழுது வெளி யுலகம் அவள் உணர்ச்சிகளினின்றும் பிரிந்து அவளைக் கல்லாக்கியது என்பது அவளுக்குத் தெரியவே இல்லை.

வெகு நாளைய புர்பின் வேலைக்காரி, வங்காளி பாஷையுடன் வங்காளிகளின் ஆசார விவகாரங்களின் முறைகளையும் கொஞ்சம் கொஞ்சம் கற்றுவைத்திருந்தாள். அந்த வேலைக்காரி ஏதோ வேலையாக அந்தப் பக்கம் வந்ததும், அசலா அம்மா திரி உட்கார்ந்திருப்பதைக் கண்டு, திடுக்கிட்டுப் போனாள். அவள்

வயதில் பெரியவள் என்ற அதிகாரத்தினுல், சற்று கோபித்துக்கொண்டே, பொழுது போவதை அசலாவுக்கு அறிவுறுத்தி, 'இம்மாதிரி உட்கார்ந்திருக்கிருயே, அம்மா! ஸ்னானம் செய்து சாப்பிடக் கீப்பிட ஒன்றும் வேண்டாமா?' என்ருள்.

அசலா திடுக்கிட்டெழுந்தாள், தலை நிமிர்ந்து பார்த்தாள். பொழுது சாய அதிக நேரமில்லை. குளிர்கால இரவு பார்த்துக்கொண்டிருக்கும் போதே வந்துவிடும். ஒரு விதமான ஒளியற்ற மேகப் படலம் வானத்தில் படர்ந்திருந்தது. அசலா வெட்கத்துடன் எழுந்து நின்று சிரித்துக்கொண்டே, 'லாலூ அம்மா, நான் சாயங்காலந்தான் சாப்பிடப் போகிறேன். இன்றைக்குக் கொஞ்சங்கூடப் பசியே இல்லை!' என்ருள்.

லாலூ அம்மா ஆச்சரிய மடைந்து, 'பெரிய பாபு சாப்பிட்டவுடன் சாப்பிடுவதாக இப்பொழுதுதானே அம்மா சொன்னுய்!' என்ருள்.

'இல்லை, ராத்திரித்தான் சாப்பிடுவேன்!' என்று சொல்லி,அதிக விவாதத்திற்குச் சந்தர்ப்பமளிக்காமல் அசலா சட்டென்று மேலே சென்றுவிட்டாள்.

கொஞ்சம் சாவகாசம் கிடைத்தால்கூட அசலா மேலே வந்து கைபிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து பேசாமல் நதியைப் பார்த்துக்கொண்டிருப்பது வழக்கம். அன்றிரவும் அவள் அதே போல் உட்கார்ந்திருந்தாள். திடீரென்று ராம் பாபுவின் செருப்புச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவர் அருகே நின்றுகொண்டிருந்தார். அவள் பேசுவதற்கு முன்பே, அவர் கையிலிருந்து ஹுக்காவைச் சுவரோடு சாத்தி ஒரு மூலையில் வைத்துவிட்டு, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். பிறகு சிரித்துக்கொண்டே, 'பிரம்மஞானியான உன் தந்தையின் விஷயம் சரியா, இல்லை, இந்தக் கிழப் பெரியப்பாவின்

விஷயம் சரியா என்பதை முடிவுசெய்ய வந்திருக்கிறேன். இன்று என்ன ஆனாலும் சரிதான்; விவாதத்தை முடிவு செய்யாமல் கீழே செல்வதில்லை!' என்றார்.

இதுவும் அதே ஜாதி பேதத்தைப் பற்றிய பிரச்னை என்று எண்ணினாள் அசலா. அவள் சாவதானமான குரலில், 'எனக்கு என்ன விவாதிக்கத் தெரியும், பெரியப்பா?' என்றாள்.

ராம் பாபு தலையை ஆட்டிக்கொண்டே, 'அடேயப்பா! ஸுரமா, நீ என்ன சாதாரண மனிதனின் மகளா என்ன? ஆனால்! —ஆமாம் விஷயம் முற்றிலும் பொய். இதனால் தப்பித்தேன்; இல்லாவிட்டால் இந்த மத்தியானச் சாப்பாட்டிலேயே தோற்றிருப்பேன்! தெரிந்ததா?' என்றார்.

அசலாவின் மனம் எவ்வித விஷயத்தையும் ஆலோசிக்கும் நிலைமையில் இல்லை. இந்தத் தர்க்க யுத்தத்தில் தற்காப்புக்குச் சற்று இடம் தென்பட்டதும், அவள், 'பின் ஏன் பெரியப்பா தர்க்கம் செய்கிறீர்கள்? தங்கள் கட்சிதான் ஜயித்துவிட்டதே!' என்று சொல்லிச் சற்று நிறுத்திக்கொண்டு, 'ஒரு தரம் தோற்றுப் போனவளை இரண்டாம் தரம் தோற்க வைப்பதில் உங்களுக்கு என்ன லாபம்?' என்றாள்.

ராம் பாபு பதில் சொல்லவில்லை. அவருக்கு வயதாகி விட்டது. உலகத்தில் எத்தனையோ நல்லது கெட்டதைப் பார்த்திருக்கிறார்; ஆகையால் இந்தக் களைப்படைந்த குரல் அவருக்கு விளங்காமலில்லை. அந்தப் பெண் சௌக்கியமாக இல்லை; அவள் மனத்தில் ஏதோ ஒரு பயங்கரமான வேதனை அக்னி ஜ்வாலை போல் இரவு பகல் தகித்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிந்தார். அதனுடைய சாயை அசலாவின் வெளுத்த முகத்திலேயே நன்றாகத் தெரிந்தது. அவர் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்துவிட்டு, சட்டென்று சிரிக்க முயற்சித்துக்கொண்டே, மிக்க அன்புடன், 'இல்லை! விவாதம் இல்லை, அம்மா! கிழவன்! வம்பு பேசப் பிடிக்கிறது. சாயங்

கால வேளையில் தனியாக உட்கார்ந்து மனம் சலித்துப் போகிறது. ஆகையால், உன்னிடம் வந்து வெறுமனேயாவது ஏதாவது உனக்குக் கோபம் வரும்படி செய்தால், வம்புப் பேச்சில் பொழுது போகுமே என்று எண்ணினேன். ஆனால் சூது வெளிப்பட்டுவிட்டது!' என்று சொல்லிக்கொண்டு ஹுக்காவை எடுக்கக் கையை நீட்டினார்.

கிழே சென்று அவருக்குப் பொழுது போவது ரொம்பக் கஷ்டம் என்பதை அசலா அறிந்துகொண்டாள். அதனால் அவள் மனம் கலங்கியது. அவள் சட்டென்று எழுந்து ஹுக்காவை எடுத்து நீட்டியிருந்த அவர் கையில் கொடுத்துக்கொண்டே, 'தங்களுக்கு இஷ்டமான அளவு இங்கேயே அமர்ந்து புகை பிடியுங்கள். தங்களை இங்கிருந்து போக விடமாட்டேன்!' என்றாள்.

ராம் பாபு ஹுக்காவைக் கையில் வாங்கிச் சிரித்துக் கொண்டே, 'அடேயப்பா! ஒரேயடியாய் இவ்வளவு இடம் கொடுத்துவிடாதே, அம்மா! பின்னால் பொறுக்க முடியாது. நான் சும்மா உட்கார்ந்து புகை பிடிப்பதில் என்ன பலன்? அம்மாதிரி நீ ஒருபொழுதும் பார்த்ததில்லையே! இதைவிடக் கொஞ்சம் பேச்சு ஆரம்பம் செய்......இதனால்......' என்றார்.

'சும்மா இருந்தால் மூச்சுப் பொறுக்காது, இல்லையா பெரியப்பா? சரி! பேசுங்கள்! ஆனால் எந்த விஷயத்தைப் பற்றி வம்பு பேசுவது, அதைச் சொல்லுங்களேன்?'

ராம் பாபு, வாயிலிருந்து நிறையப் புகையை மேலே விட்டுக்கொண்டே, 'அதைத்தான் பெரிய கஷ்டத்தில் விட்டு விட்டாயே, அம்மா! அம்மாதிரியான கேள்விகள் கேட்டால் பெரிய பிரசங்கிகள்கூடப் பேசாமல் இருந்துவிட வேண்டியது தான்! நான் என்ன செய்ய முடியும்?' என்றார்.

'சரி, பெரியப்பா! நீங்கள் யார் கையால் சாப்பிட்டீர்களோ அவளைவிட நீசமானவளும், உலகினால் வெறுக்கப்பட்

டவளும் வேறு யாரும் இல்லை யென்பது என்றாவது ஒரு நாள் தெரிந்தால், அப்பொழுது தாங்கள் என்ன செய்வீர்கள்? பிராயச்சித்தமா? சாஸ்திரத்தில் அதற்கு விதிகூட இல்லாம லிருந்தால், அப்பொழுது?' என்றாள் அசலா.

'அப்பொழுது சச்சரவே ஒழிந்துவிடும்! தெரியுமா அம்மா! பிறகு பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியே இருக்காது!'

'ஆனால் என் மேல் தங்களுக்கு அப்பொழுது எவ்வளவு வெறுப்பு ஏற்படும்?'

'எப்பொழுது அம்மா?'

'எனக்கு ஜாதிகூட இல்லை என்று தெரியும் பொழுது!'

ராம் பாபு ஹுக்காவை வாயிலிருந்து எடுத்துவிட்டு, அந்த மங்கிய வெளிச்சத்தில் ஒரு கணம் அசலாவின் முகத்தைப் பார்த்துவிட்டு, பிறகு மெதுவாக, 'உங்களுடைய விஷயம் என் புத்திக்கு ஒன்றும் விளங்கவே இல்லை, அம்மா! உங்களை மாத்திரம் சொல்வானேன்! தெரியுமா? எங்கள் வீட்டுப் பிள்ளை வாயால்கூட இந்தப் புகாரைத்தான் கேட்டேன். அவன் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறான்! "இந்தச் சாப்பாட்டு விஷயம், தீண்டாமை விஷயம், இந்த எண்ணத்தினால்தான் தேசம் நாளுக்கு நாள் நாசத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. காரணம், இதன் வேரிலேயே வெறுப்பு இருக்கிறது. வெறுப்பினால் யாதொரு பயனும் கிடைக்காது" என்று சொன்னான்!' என்றார்.

அசலா மனத்திற்குள் மிகவும் ஆச்சரிய மடைந்தாள். அந்த வீட்டில்கூட அம்மாதிரியான விஷயங்கள் ஆலோசனைக்கு வரும் என்று அவள் எண்ணவே யில்லை. 'அப்படியானால் அந்த விஷயம் பொய்யா?' என்றாள்.

ராம் பாபு சிரித்துக்கொண்டு, 'பொய்யா இல்லையா என்பதற்கு நான் பதில் சொல்லாவிட்டால் என்ன அம்மா?

ஆனால் உண்மை யல்ல. சாஸ்திரத்தின் விதி நியமப்படி நடக்கிறேன். அவ்வளவுதான், அறிந்துகொள். அதை விடச் சற்று முன்னே போகிறவர்கள் — என் குரு தேவரைப் போல — அவர்கள் தங்கள் கையினால் சமைத்துச் சாப்பிடு கிறார்கள். தங்கள் பெண்ணைக்கூடத் தொட விடுவதில்லை. அதனால் அவர்கள் தங்களுடைய ஒரே பெண்ணிடம் வெறுப் புக்கொள்கிறார்கள் என்று எண்ண முடியுமா?' என்றார்.

அசலாவினால் பதிலொன்றும் கூற முடியாததால் பேசா மல் இருந்தாள்.

ராம் பாபு இன்னும் கொஞ்சம் புகையை இழுத்து விட்டு, 'அம்மா! என் பாலியத்தில் நான் எத்தனையோ இடங்கள் சுற்றியிருக்கிறேன். எத்தனையோ காடு வனாந் தரங்கள், குன்றுகள் மலைகள், எத்தனையோ விதமான மனிதர்கள், எத்தனையோ விதமான ஆசார விவகாரங்கள் பார்த்திருக்கிறேன்! சிற்சில இடங்களில் சாப்பாட்டு விவகாரங்களைப் பற்றிச் சில அபிப்பிராயங்கள் இருக்கின் றன. சிற்சில இடங்களில் ஜனங்கள் இந்தப் பழக்கங்களை அறியக்கூட மாட்டார்கள். ஆயினும் அவர்கள் எப்பொழுதும் நாகரிகமற்றுச் சிறு மனிதர்களாகவே இருக்கிறார்கள்!' என்று சொல்லிக்கொண்டே, புகைந்துகொண்டிருந்த ஹுக் காவை மற்றொரு முறை இழுத்துவிட்டு, அதைச் சுவரோர மாக ஒருபுறம் வைத்தார். அசலா முன்னிருந்தபடியே பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

ராம் பாபுவும் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்திருந் தார். பிறகு நிமிர்ந்து உட்கார்ந்து, 'உண்மை விஷயம் இது தான், தெரியுமா ஸுரமா? நீங்கள் பெரிய மனிதர்களிடம் பாடம் படிக்கிறீர்கள். அவர்கள் உன்னதமானவர்கள், ராஜாக் கள், தனவான்கள். அவர்கள் கையைக் கீழே வைத்து நடந்து காட்டினால், நீங்களும் அம்மாதிரி நடக்கக் கற்றுக்

கொள்ளாவிட்டால் மேன்மையடைய முடியாதென்று கூறு வீர்கள்!' ' என்றார்.

இம்மாதிரியான தர்க்கங்களை அசலா வங்காளி தின சரிப் பத்திரிகைகளில் நிரம்பப் படித்திருந்தாள். ஆகையால் பதிலொன்றும் சொல்லாமல் சற்றே சிரித்தாள். ராம் பாபு அந்தச் சிரிப்பைப் பார்க்காதது போல் பார்த்தார். தம் முடைய பேச்சை ஆதரித்து மீண்டும் அவர், 'ஸ்ரீ தாம க்ஷேத்திரத்திற்குப் போயிருந்த போது தெரிந்தவரும் தெரியாதவருமான அநேக ஜனங்களை அறியவேண்டியிருந் தது. தீண்டாமை விஷயம் அங்கே கிடையாது. அந்த எண்ணம்கூட அங்கு எழுவதில்லை. ஆனால் வெறுப்பினால் அது ஏற்பட்டிருந்தால் நான் இவ்வளவு சுலபமாக அந்தக் காரியத்தைச் செய்ய முடியுமா? பிறர் கையினால் நான் சாப் பிடுவதில்லை என்பதை ஒப்புக்கொள்வோம் — ஆனால் வழியில் உள்ள ஏழை எளியவர்களிடம் நான் மனத்திற்குள் வெறுப்பா கொள்ளுகிறேன்?' என்றார்.

அசலா வருத்தம் நிறைந்த குரலில், இடை மறித்து, 'எனக்கு உங்களைத் தெரியாதா, பெரியப்பா? இவ்வளவு தயை உலகில் வேறு யாரிடம் இருக்கும்?' என்றாள்.

'தயை இல்லை, அம்மா! தயை இல்லை, அன்பு! அந்த ஜனங்களிடம் எனக்கு மிகுந்த அன்பு. உண்மை என்ன, தெரியுமா? எந்த ஜாதியாக வேண்டுமானாலும் இருக்கட்டும், எந்த மனிதனாக வேண்டுமானாலும் இருக்கட்டும், மெள்ள மெள்ள அவன் தாழ்மை யடையும் போது, எல்லா வற்றையும் விடத் தாழ்மையான வஸ்துவின் மேல் எல்லாக் குற்றங்களையும் சுமத்தி அவன் சற்று சாந்தமடை கிறான். அந்தச் சாதாரணப் பொருளைச் சமாளிப்பத னாலேயே அவன் ஒரே இரவில் பெரியவனாகிவிடுவதாக எண்ணுகிறான். எனக்கும் அதே அபிப்பிராயம்தான்.

ஆனால் எது கடமையாக இருக்கிறதோ — எது மூல காரணமோ—'

வார்த்தைகளை அவர் முடிக்கு முன்பே வெளியே செருப்பின் சத்தம் கேட்டு முகத்தைத் திருப்பினார். ஸுரேசன் வந்துகொண்டிருந்தான். அவர் சட்டென்று அவனிடம், 'சரி, ஸுரேஷ் பாபு! நீங்கள் ஹிந்து. நீங்கள் நம்முடைய ஜாதி பேதத்தை ஒப்புக்கொள்ளுகிறீர்க ளல்லவா?' என்றார்.

ஸுரேசனுக்கு ஒன்றும் புரியவில்லை. இதென்ன கேள்வி? அவன் சென்றுகொண்டிருக்கும் கடும் வழியில், அவனுடைய ஒவ்வோர் அடியும் ஆராயாமல் திடீரென்று வைத்துவிட்டால், எங்கு புதைந்துவிடுமோ என்பதைக் கூற முடியாது. இங்கே உண்மையைக்கூட அது உண்மை தானா என்று ஜாக்கிரதையாகக் கணக்கிட்டுப் பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகையால் பயந்துகொண்டே அசலாவின் அருகே வந்து அவள் முகத்தைப் பார்த்து அர்த்தத்தை அறிய முயற்சித்தான். ஆனால் அவள் முகம் சரியாகத் தென்படவில்லை. அவன் ஒரு வரண்ட சிரிப்புடன், தயக்கமான குரலில், 'நாங்கள் யார் என்பது நீங்கள் அறிந்ததுதானே, ராம் பாபு!' என்றான்.

'நன்றாக அறிவேன். ஆனால் தங்கள் மனைவி ஆரம்பம் முதல் கடைசிவரை ஒரேயடியாய் எல்லாவற்றையும் குழப்ப விரும்புகிறாள். ஜாதி பேதம் போன்ற பெரிய அநீதத்தையும் சர்வ நாசத்தையும் ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறாள். மிலேச்சர்களின் சோற்றைத் தின்பதனால் யாதொரு கெடுதலும் இல்லை — பிறந்ததிலிருந்து இந்தப் படிப்புத்தான் அவள் தந்தையிடமிருந்து அவளுக்குக் கிடைத்தது. ஆகையால் இவள் கையால் சாப்பிட்டால் என் ஜாதி போய்விட்டதா, இல்லையா? இதற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமா, வேண்

டாமா? இவ்வளவு நேரம் இதைப்பற்றித்தான் சர்ச்சை நடந்துகொண்டிருந்தது. இப்பொழுது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?' என்றார் ராம் பாபு.

ஸுரேசன் பேசாமலிருந்தான். அசலாவின் மனநிலைமை அவனுக்குத் தெரியாமலில்லை. அவள் மனத்தில் புரட்சியின் ஜ்வாலை இரவு பகல் எரிந்துகொண்டிருந்தது — அந்த விஷயம் ஒன்றும் புதிதல்ல என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அந்த நெருப்பு அன்று திடீரென்று, எதற்காக, எதுவரை பரவியிருக்கிறதென்பதை அனுமானம் செய்ய முடியாமல் அவன் சந்தேகத்தாலும் படபடப்பினாலும் தயக்கமடைந்தான். ஆனால் மறு கணமே தன்னைச் சுதாரித்துக்கொண்டு, முன் போலவே சிறிது சிரிக்க முயற்சித்தான். ஆனால், இந்தத் தடவை அந்த முயற்சி, சிரிப்பை மறைத்து முகத்தை எடுத்துக் காட்டியது.

'தங்களிடம் அவள் தமாஷ் செய்துகொண்டிருக்கிறாள்!' என்றான் ஸுரேசன்.

ராம் பாபு கம்பீரத்துடன் தலையசைத்து, 'உசிதமில்லாவிட்டாலும், இந்த விஷயமாக ஆலோசிப்பதில் எனக்குத் தடை இல்லை. ஆனால் கணவன் நன்மைக்காகக்கூட ஒரு ஹிந்துப் பெண் தன் கடமையைச் செய்ய விரும்பாத போது — துளஸி கொடுக்கும் தினத்தன்று உபவாஸம் இருக்கவில்லை — நல்லது, இது விளையாட்டானால், இது ஒரு கொடுமையான விளையாட்டுத்தான்! சரி! ஸுரேஷ் பாபு, தங்கள் கலியாணம் ஹிந்து மதத்தின்படிதானே நடந்திருக்கும்?' என்றார்.

'ஆமாம்!' என்றான் ஸுரேசன்.

ராம் பாபு சிரித்துக்கொண்டே, 'அது எனக்குத் தெரியும்!' என்று சொல்லி, அசலாவின் பக்கம் பார்த்து, 'நீ எனக்கு எவ்வளவோ விஷயங்களைச் சொல்லியிருக்கிறாய்,

அம்மா! ஆயினும் உன் தந்தை பிரம்ம சமாஜியானதைக் குறித்து எனக்கு வருத்தமில்லை. அம்மாதிரி எவ்வளவோ பிரம்ம சமாஜிகளை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் சமூகத்தினிடம் அன்பாக இருப்பார்கள்! சில அனுசாரங்களையும் செய்வார்கள். ஆனால் மகளின் விவாகத்தின் போது கணக்கில் பிழை செய்ய மாட்டார்கள் — போகட்டும் ஒரு கவலை ஒழிந்தது!' என்றார்.

அதைவிட அதிகமான கவலை ஸுரேசனுக்கு ஒழிந்தது. அவன் உடனே ராம் பாபுவுடன் கூடவே, 'தாங்கள் சரியாகச் சொல்லுகிறீர்கள், ராம் பாபு! இப்பொழுதெல்லாம் அம்மாதிரி மனிதர்களின் எண்ணிக்கைதான் அதிகம் — அவர்கள்—' என்று ஆரம்பித்தான்.

திடீரென்று இருவரும் திடுக்கிட்டனர். பேச்சின் மத்தியில் அசலாவின் வேகமான குரல் கர்ஜித்தெழுந்தது. அவள் ஸுரேசனைத் தன் கூர்மையான பார்வையினால் ஒரு முறை பார்த்துவிட்டு, 'இவ்வளவு குற்றங்களுக்குப் பின்னும் இன்னும் குற்றம் செய்ய உங்களுக்கு வெட்கமாக இல்லையா? அதுவும் என் எதிரிலேயே? இவைகளெல்லாம் பொய் என்பது உங்களுக்குத் தெரியுமா? தந்தை மோசக்காரர் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாத விஷயமோ? அவர் மனத்தினாலும் புத்தியினாலும் உண்மையில் பிரம்ம சமாஜி. உங்களுக்குத் தெரியுமா?—' என்று சொல்லிக் கொண்டே அவள் நாற்காலியை விட்டு எழுந்தாள்.

முதலிலேயே ஸுரேசன் பிரமை யடைந்திருந்தான். திரும்பி, ஆச்சரியமடைந்த ராம் பாபுவின் பக்கம் பார்த்தான். அவனுக்குக் கோபம் வந்தது. 'எப்படிப் பொய்யாகும்? உன் தந்தை ஹிந்து வீட்டில் தம் மகளை விவாகம் செய்து கொடுக்கச் சம்மதிக்கவில்லையா? நீயும் உண்மையைச் சொல்லு!' என்றான்.

அசலா அதற்குப் பதில் சொல்லவில்லை. ஒரு கணம் சும்மா இருந்து தன்னைச் சமாளித்துக்கொண்டு, பிறகு மெது வாக, 'அதை ஏன் என்னிடம் கேட்கிறீர்கள்? உலகில் எல்லாவற்றையும்விட நீங்கள்தான் அதற்குக் காரணம் என் பது உங்களுக்குத் தெரியாதா? நான் யார், என் தந்தை யார் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆனால் இந்த விஷயமாக உங்களிடம் விவாதிக்க எனக்கு இஷ்டமில்லை. இது மாத்திரமல்ல, வெட்கமாகக்கூட இருக்கிறது. உங்க ளுக்கு என்னென்ன இஷ்டமோ எல்லாவற்றையும் கட்டுக் கட்டி இவரிடம் சொல்லுங்கள். ஆனால் அவற்றை யெல்லாம் நான் கேட்க விரும்பவில்லை. சொல்லுங்கள், நான் போகி றேன்!' என்று சொல்லிவிட்டு, அவள் வேகமாக அடுத்த அறைக்குச் சென்றுவிட்டாள்.

அவள் போய்விட்டாள். ஆனால் சிறிது நேரம்வரை மற்ற இருவரும் கற்சிலை போல் ஆனார்கள்.

ராம் பாபு ஏதோ சலிப்புடன் ஹுக்காவுக்காகக் கையை நீட்டினார். ஆனால் உடனே கையை மடக்கி, சற்று அசைந்து சரியாக உட்கார்ந்தார். சிறிது கனைத்துத் தொண் டையைச் சரிப்படுத்திக்கொண்டு, அவர், 'ஸுரேஷ் பாபு, இன் றைக்குத் தங்கள் உடம்பு எப்படியிருக்கிறது?' என்று கேட்டார்.

ஸுரேசன் எங்கோ கவனமாக இருந்தான். திடுக்கிட்டு, 'நன்றாக இருக்கிறது!' என்று சொல்லும் போதே உண்மை ஞாபகத்திற்கு வந்தது: 'மார்பில் சற்று வலி இருக்கிறது. நேற்றிலிருந்து அதிகமானதா என்ன என்று தெரிய-' என்று ஆரம்பித்தான்.

'நீங்களே யோசித்துப் பாருங்கள். இந்தக் குளிரில் இரவில் இவ்வளவு நேரம் வரை வெளியே சுற்றிக்கொண் டிருப்பது சரியா, நீங்களே சொல்லுங்கள்!'

'சும்மா சுற்றிக்கொண்டிருக்கவில்லை, ராம் பாபு! அந்த வீட்டுக்காக இரண்டாயிரம் ரூபாய் இன்று அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வந்தேன்!' என்றான் ஸுரேசன்.

ராம் பாபு ஆச்சரியத்துடன், 'ஆற்றங்கரை வீடென்னவோ நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் என்னிடம் கேட்டிருந்தால் நான் தடுத்திருப்பேன். அன்று பேச்சு வாக்கிலேயே ஸுரமாவுக்கு இங்கிருக்கச் சற்றும் இஷ்டமில்லை என்பதை அறிந்துகொண்டேன்!' என்று சொல்லி, மெல்லச் சிரித்துவிட்டு, 'அவளுடைய அபிப்பிராயம் கேட்டீர்களா? இல்லை, தங்கள் இஷ்டத்தின் பேரில் வாங்கினீர்களா?' என்றார்.

ஸுரேசன் இந்த வார்த்தைக்குச் சரியாகப் பதில் சொல்லாமல், 'இங்கே தங்காமல் இருப்பதற்கு அப்படிக் காரணம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. இதைத் தவிர வீட்டுக் குடித்தனத்திற்கு வேண்டிய சாமான்களுக்காகக் கல்கத்தாவுக்கு ஆர்டர்கூடக் கொடுத்துவிட்டேன். நாளை அல்லது மறுநாளைக்குள் வந்து சேர்ந்துவிடும்!' என்றான்.

ராம் பாபு சற்று நேரம் ஒன்றும் தோன்றாமல் உட்கார்ந்திருந்தார். பிறகு என்ன நினைத்துக்கொண்டாரோ என்னவோ, 'ஸுரமா! அம்மா, ஸுரமா!' என்று கூப்பிட்டார்.

அசலா பதில் சொல்லவில்லை. ஆனால் அறையிலிருந்து வந்து பேசாமல் தன் நாற்காலியில் அமர்ந்தாள். கிழவர் அன்பான குரலில், 'அம்மா! உன் கணவர் எங்கள் ஊரில் ஒரு பெரிய வீட்டை வாங்கிவிட்டார். இந்தக் கிழப் பெரியப்பாவை விட்டுவிட்டு நீ இனி எங்கேயும் போக முடியாது!' என்றார்.

அசலா மௌனமாக இருந்தாள்.

ராம் பாபு மறுபடியும், 'வீடும் சாமானும் மாத்திர மல்ல, குதிரை வண்டிகூட வரப் போகிறது. எனக்குத் தெரியும். இதைவிட இன்னொன்றுகூடத் தெரியும்! இவைகளெல்லாம் உனக்காகத்தான்!' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே, அசலாவின் பக்கம் ஒரு தரமும், ஸுரேசனின் பக்கம் ஒரு தரமும் பார்த்தார். ஆனால் ஆழ்ந்த வருத்தம் தேங்கிய அவள் முகத்தில் சந்தோஷத்தின் ஒரு சிறு ரேகைகூடக் காணப்படவில்லை. அந்த மங்கிய வெளிச்சத்தில் பிறர் கண்களில் அது படக்கூடியதாக இல்லாவிட்டாலும், விருத்த ராம் பாபுவின் கண்களுக்குத் தென்படாமல் இல்லை. ஆயினும் அவர், 'அம்மா! உன் அபிப்பிராயம்—?' என்று ஆரம்பித்தார்.

இந்தத் தடவை அசலா பேசினாள். 'என் அபிப்பிராயத்திற்கு யாதொரு அவசியமும் இல்லை, பெரியப்பா!' என்றாள்.

ராம் பாபு சட்டென்று, 'இதென்ன வார்த்தை, அம்மா! நீதான் எல்லாம், உன் இஷ்டத்தின் பேரில்தான்—' என்றார்.

அசலா எழுந்திருந்து நின்று, 'இல்லை, பெரியப்பா! இல்லை. என் இஷ்டத்தின் பேரில் ஒன்றும் செய்வதில்லை. தங்களுக்கு எல்லா விஷயங்களும் தெரியாது. நான் தங்களுக்குச் சொல்லவும் முடியாது — எனக்கு அவசியம் ஒன்றும் இல்லாவிட்டால், நான் போய்......' என்று சொல்லி நிறுத்தினாள்.

ராம் பாபுவின் வாயிலிருந்து பிறகு யாதொரு வார்த்தையும் வெளிப்படவில்லை. அதற்கு அவசியமும் இல்லை. அதற்குள் வேலைக்காரி ஒரு பாத்திரத்தில் நெருப்புத் தணலுடன் வந்து சேர்ந்தாள். எல்லோர் கவனமும் அவள் பக்கம் சென்றது. ராம் பாபு ஆச்சரியத்துடன் ஏதோ கேட்க விரும்பினார். ஆனால் அதற்குள் ஸுரேசன் சற்று கோபத்

துடன் கூறலானுன்: ‘ சமையற்காரனிடம் நெருப்புக் கொண்டு வரச் சொன்னேன். அவன் இவளுக்கு உத்தரவு கொடுத்து விட்டான் போலத் தெரிகிறது. இன்று என்னுடைய இந்த வலி — ’

நெருப்பின் அவசியத்தைப் பற்றி அதிக விரிவான பிர சங்கம் செய்யும்படி ஏற்படவில்லை; ஆனுல் அதற்காக இன் ெருருவரின் உதவியும் அவசியமாக இருந்தது. ராம் பாபு அசலாவின் முகத்தைப் பார்த்தார். அவள் சட்டென்று முகத் தைத் திருப்பிக்கொண்டு வருத்தமான குரலில், ‘ நான் போகிறேன்!’ என்று கூறி, பதிலை எதிர்பாராமலே வேக மாகச் சென்றுவிட்டாள். மறு நிமிஷம் அடுத்த அறை சாத்தப்படும் ஓசை கேட்டது.

ராம் பாபு மெதுவாக நாற்காலியை விட்டு எழுந்திருந்து வேலைக்காரியின் கையிலிருந்த நெருப்புத் தணலை வாங்கி, ‘ சரி! வாருங்கள், ஸுரேஷ் பாபு—’ என்ருர்.

‘ நீங்களா?’

‘ ஆமாம்! நானே ஒத்தடம் கொடுக்கிறேன். எனக்கு இது ஒன்றும் புதிதல்ல. என் ஆயுளில் நான் இந்த வேலையை எத்தனையோ தடவைகள் செய்திருக்கிறேன்!’ என்று சொல்லிக்கொண்டே அவனை இழுத்துக்கொண்டு தம் அறைக்குச் சென்று, தணலைக் கீழே வைத்துவிட்டு, அவனுடைய வாடிய முகத்தை ஒரு நிமிஷம் பார்த்துக் கொண்டிருந்தார். அவன் கையை அமுக்கிக்கொண்டே வருத்தமான குரலில், ‘ இல்லை, ஸுரேஷ் பாபு! இம்மாதிரி நடக்க முடியாது! அனுவசியம்! நான் நிச்சயம் அறிவேன்! ஏதோ நடந்திருக்கிறது. இந்த விஷயத்தைச் சொல்லுங் கள்—அவசியமானுல் இந்தக் கிழவன் மற்றொரு முறை—’ என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே தயங்கி நின்று விட்டார்.

ஸுரேசன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஆனால் சிறு குழந்தை போல முதலில் அவனுடைய உதடுகள் நடுங்கின. பிறகு கண்களில் பெருகிய கண்ணீரை மறைக்க முகத்தைத் திருப்பிக்கொண்டான்.



# XII

ஸுரேசன் ஒரு சோபாவில் படுத்துக்கொண்டிருந்தான். அருகே இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கிழ ராம் பாபு அவன் மார்பில் ஒத்தடம் கொடுத்துக்கொண்டிருந்தார். இதற்குள் இரண்டு கதவுகளும் திறக்கப்படும் சத்தம் கேட்டது. அசலா உள்ளே நுழைந்தாள். அவள் பீடிகையொன்று மின்றி, 'பெரியப்பா! ராத்திரி வெகு நாழிகையாகிவிட்டது, தாங்கள் படுக்கைக்குச் செல்லுங்கள்!' என்றாள்.

'அதற்காகத்தான் அம்மா வழி பார்த்துக்கொண்டிருந்தேன்!' என்று சொல்லிக்கொண்டே அவர் சட்டென்று எழுந்து, ஸுரேசனைப் பார்த்து, 'இத்தனை நாழிகை இருவரும் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தோம். இந்தக் காரியங்களெல்லாம் நானும் நீயும் செய்யக் கூடியதா?'' என்று கூறி, அசலாவின் பக்கம் நாற்காலியை நகர்த்தி, 'அவரவர் வேலையை அவரவர்தான் செய்யவேண்டும்! இந்தா, வாங்கிக்கொள்!— நான் சற்று நிம்மதியாகத் தூங்குகிறேன்!' என்று சொல்லிக் கொட்டாவி விட்டுக் கையைச் சொடுக்கிக் கொண்டே ஹுக்காவை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அறைக்கு வெளியே சென்று மெதுவாகக் கதவைச் சாத்திவிட்டு, சிரித்துக்கொண்டே, 'ஒத்தடம் கொடுத்துக் கைகாலைச் சுட்டுக்கொள்ளப் போகிறாள்! இது சும்மா வந்த

தென்று நினைத்துக்கொள்ள வேண்டாம், என்ன ஸுரேஷ் பாபு ?' என்றார்.

ஸுரேசன் வாய் திறந்து ஒன்றுமே சொல்லவில்லை. மூடியிருந்த இரு கண்களின் மேல் இரு கரங்களையும் குவித்து ஒரு நமஸ்காரம் செய்தான்.

அசலா அவர் விட்டுச் சென்ற ஆசனத்தில் அமர்ந்தாள். ஒத்தடம் கொடுப்பதற்காகத் துணியைச் சூடு செய்து கொண்டே, 'ஏன் மறுபடியும் வலி வந்துவிட்டது? எங்கே வலிக்கிறது ?' என்றாள்.

ஸுரேசன் கண் திறக்கவில்லை. பதிலும் சொல்லவில்லை. கையினால் மார்பில் இடது பக்கம் சைகை காட்டினான். பிறகு மௌனம்! இந்த மௌனம் கடைசிக் காட்சி வரை இதே மாதிரித்தான் கழியும் போல் தோன்றியது. ஆனால் அம்மாதிரி நடக்கவில்லை. திடீரென்று துணியோடு சேர்த்து அசலாவின் கையைத் தன் மார்புடன் அழுத்திக் கொண்டான் ஸுரேசன். அசலாவின் முகத்தில் எவ்வித ஆச்சரியக் குறியும் தென்படவில்லை. அவள் அதை எதிர் பார்த்தவள் போல, 'இன்னும் சற்று ஒத்தடம் கொடுக்கட்டுமா ?' என்றாள்.

ஸுரேசன் கையை விட்டுவிட்டு அடுத்த கணமே எழுந்து உட்கார்ந்தான். இரு கைகளாலும் அசலாவை நாற் காலியிலிருந்து இழுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண் டான். கணக்கற்ற முத்தங்களால் அவளைத் திணற அடித்து விட்டான். சற்று நேரத்திற்கு முன் தோன்றிய மௌன நாடகம் கடைசிக் காட்சிவரை அவ்வாறேதான் கழியுமோ என்றிருந்தது. ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. சில நிமிஷத்திற்கெல்லாம், 'இந்த வெறிபிடித்த, வெட்கமற்ற செய்கைக்கு ஒரு முடிவோ, எல்லையோ கிடையாதா? இந்த வெறி, எல்லாத் திசைகளையும், எல்லாச் சமயத்தையும் வியா

பித்து, மீண்டு, அசூயமாக இருக்குமா? எந்த நாளிலும், எந்த யுகத்திலும் இதற்குத் தடை ஏற்படாதா? அழிவு ஏற்படாதா?' என்று தோன்றியது.

அசலா தடுக்கவில்லை, முரண்டவில்லை. அவள் அதற்கும் தயாராக இருந்தவளைப் போல் தோன்றினாள். அவளுடைய சாந்தமான முகம் கல்லைப் போல் உறைந்துவிட்டது. ஸுரேசனுக்குத் தன் நினைவில்லை. சிருஷ்டியின் கடினமான காரிருளில் அவனுடைய இரு கண்களும் குருடாகிவிட்டன. இல்லாவிட்டால், அந்த முகத்தை மூத்தமிடும் வெட்கத்தையும் அவமானத்தையும் அன்று அவன் உணர்ந்திருப்பான். அவன் உணரவில்லை. அற்ப சாந்திக்காக அவனுடைய வெறி நெடுகத் தொடர்ந்த போது, அசலா மெதுவாகத் தன்னை விடுவித்துக்கொண்டு தன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

ஒரு நிமிஷம் மௌனமாகக் கழிந்ததும் ஸுரேசன் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு, 'நாம் இருவரும் இந்த மாதிரி இன்னும் எத்தனை நாட்கள் இருப்பது?' என்று சொல்லி, பதிலை எதிர்பார்க்காமலே, 'உன் கஷ்டங்களை நான் அறிவேன். ஆனால் என்னுடைய துன்பத்தையும் நீ சற்று யோசித்துப் பார்! நான்தான் சாகிறேனே!' என்றான்.

அசலா அதற்குப் பதில் சொல்லாமல், 'நீங்கள் இங்கே வீடு வாங்கியிருக்கிறீர்களா?' என்று கேட்டாள்.

ஸுரேசன் மிக்க ஆவலுடன், 'அது உனக்காகத்தானே, அசலா!' என்றான்.

அசலா அதற்கும் பதில் சொல்லாமல், 'சாமான்கள், குதிரைவண்டி இவைகள்கூட வாங்குகிறீர்களா?' என்று கேட்டாள். அதன் பின் அவள் மௌனமானாள். இந்தச் சாமான்களெல்லாம் அவளுக்கு அவசியமா? இவைகளை அவள் விரும்புகிறாளா இல்லையா? இந்த மனிதனிடம் இதைப்

பற்றிக் கேட்பதைவிடத் தன்னைக் கேலி செய்துகொள்ள வேறு என்ன வேண்டும்? ஆகையால் இது சம்பந்தமாக அவள் ஒன்றும் சொல்லாமல் மௌனமானாள். ஒரு கணம் பொறுத்து, 'ராம் பாபுவுக்குத் தாங்கள் என் தந்தையின் பெயரைக் கூறினீர்களா? வீடு எங்கே இருக்கிறதென்று சொன்னீர்களா?' என்றாள்.

'இல்லையே!' என்றான் ஸுரேசன்.

'இன்னும் ஒத்தடம் கொடுக்க என்ன அவசியம் இருக்கிறது?'

'இல்லை!'

'அப்படியானால் நான் போகிறேன்! தூக்கம் தலையைச் சுற்றுகிறது!' என்று சொல்லி, அசலா எழுந்து, நெருப்பு இருந்த பாத்திரத்தை ஒரு பக்கமாக நகர்த்திவிட்டுச் செல்லலானாள். அறையை விட்டு வெளியே வந்து கதவைச் சாத்திக்கொண்டிருக்கும் போதே ஸுரேசன் வாரியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து, 'இன்றைக்கு இன்னொரு விஷயத்தையும் சொல்லிவிட்டுப் போ, அசலா! நீ வேறு எங்கேயாவது செல்ல விரும்புகிறாயா? உண்மையைச் சொல்லு!' என்றான்.

'அதெங்கே?' என்றாள் அசலா.

'எங்கேயாவது! நம்மை யாரும் கண்டுகொள்ள முடியாத இடத்திற்கு, நம்மை யாரும் அறியாத இடத்திற்கு! அந்த ஊர் எவ்வளவு தூரத்தி லிருந்தாலும் சரி...........' ஆத்திரத்தாலும் படபடப்பாலும் ஸுரேசனின் குரல் நடுங்கலாயிற்று. அசலா அதை அறிந்துகொண்டாள். அவள் சுபாவமாக, சாதாரணமான குரலில், 'இந்த ஊரிலும் நம்மை யாரும் அறிந்துகொள்ள மாட்டார்கள். யாருக்கும் தெரியாது இப்பொழுதும் யாரும் அறியவில்லை!' என்று மெதுவாகப் பதிலளித்தாள்.

ஸுரேசன் உற்சாகமடைந்து, 'ஆனால் மெள்ள மெள்ள.........'

அசலா இடைமறித்து, 'மெள்ள அறிந்துகொள்வார்கள்! அறிந்துகொள்ளக்கூடியதுதான். ஆனால் எந்த ஊருக்குப் போனாலும் இது நடக்கக்கூடியதுதானே!' என்றாள்.

ஸுரேசன் உல்லாசத்தினிடையே சிறிது சஞ்சலமடைந்து, 'இங்கேயே சம்மதம்தானா? இங்கே இருக்கவே நீ அபிப்பிராயப்படுகிறாயா? அசலா, திறந்து சொல்லு!' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே திடீரென்று அவனை யாரோ தள்ளியதைப் போலிருந்தது. ஆனால் சட்டென்று அவன் சோபாவிலிருந்தபடியே பார்த்தான். கதவைச் சாத்திக்கொண்டு அசலா சென்றுகொண்டிருந்தாள்.

சில தினங்களாகவே வானத்தில் மேகம் சூழ்ந்து புயலுக்கு அறிகுறிகள் தென்பட்டுக்கொண்டிருந்தன. ஸுரேசன் தேவைக் கதிகமான சாமான்களை வாங்கிக்கொண்டு வந்து வீட்டில் குவித்திருந்தான்; ஆனால் அவற்றை எடுத்து வைத்துச் சிங்காரிப்பதில் யாரும் கவனம் செலுத்தவில்லை. ஒரு ஜோடிக் குதிரைகளுடன் விலையுயர்ந்த நேர்த்தியான ஒரு வண்டி அதற்கு முன் தினத்திலிருந்து குசினிக்காரனுடன் வந்து நின்றுகொண்டிருந்தது. ஆனால் அதை யாரும் கவனிக்கவில்லை. நாட்கள் என்னவோ, எப்படியோ, கழிந்து வந்தன. இந்த நிலைமையில் கிழ ராம் பாபு ஒரு நாள் மத்தியானம் ஒரு கையில் ஹுக்காவையும் மற்றொரு கையில் ஒரு கடிதத்தையும் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்.

அசலா தாழ்வாரத்தில் ஒரு பிரம்பு நாற்காலியில் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு ஏதோ ஒரு மாதப் பத்திரிகை

யைப் புரட்டிக்கொண்டிருந்தாள். பெரியப்பாவைக் கண்டதும் எழுந்திருந்து உட்கார்ந்தாள். ராம் பாபு கடிதத்தை முன்னால் நீட்டி, 'இந்தா ஸுரமா, உன் ராக்ஷஸியின் கடிதம்! அவள் இவ்வளவு நாட்களாக உனக்குக் கடிதம் எழுத முடியவில்லை. அதற்காக என் கடிதத்தில் அவள் பல தடவை மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். உனக்கு நமஸ்காரத்தைச் சொல்லச் சொல்லியிருக்கிறாள். நீ அவளை மன்னித்துவிடு!' என்று சொல்லி, சிரித்துக்கொண்டே கடிதத்தை அவள் கையில் கொடுத்துவிட்டு, அருகே இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். ஒரு கருத்துமில்லாமல் சும்மா ஆற்றைப் பார்த்துக்கொண்டே ஹுக்கா குடித்து, அங்கே புகை மண்டலத்தைப் பரப்பலானார்.

அசலா கடிதத்தை ஆதியோடந்தம் இரண்டு முறை படித்த பிறகு தலை நிமிர்ந்து பார்த்து, 'ஆனால் நாளை நின்று காலை வண்டிக்கு அவர்கள் எல்லோரும் வருகிறார்களா? அந்த அத்தை யார் பெரியப்பா? அவருடைய ரஜபுத்திர நாட்டுப் பெண்ணுமே!—ரஜபுத்திரர்! கார்டியன் டியூடர்—' என்றாள்.

ராம் பாபு சிரித்துக்கொண்டே, 'ராக்ஷஸிக்கு விளையாட்டு விஷயம் ஏதாவது கிடைத்துவிட்டால் அவள் சும்மா விடுவாளா? அத்தை என்பவள் என்னுடைய கைம்பெண் சகோதரி. ரஜபுத்திர நாட்டுப் பெண் என்பவள் அவள் பெண்; பாண்டாரபுரம் பவானி சௌதிரியின் மனைவி. அவள் எப்படி வேண்டுமானாலும் எழுதட்டும். ஆனால் வீடென்னவோ ராஜாக்களின் வீடு போல்தான் இருக்கிறது. ராஜகுமாரன் பிறந்திருக்கிறான். ஏழெட்டு வயதாயிற்று. கடைசியில் சொன்னவனைப் பார்க்காமல் யாரென்று சொல்ல முடியாது? யாராவது பெரிய சம்பளமுள்ள உத்தியோகஸ்த

ளுக இருக்கலாம்! பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து சுற்றுகிறான். யாராகவாவது இருக்கட்டும். ஆனால் அவனைப் பற்றி ஒரு கவலையும் இல்லை, ஸுரமா! வரட்டும்! உண்டு களித்து இந்த மேற்கத்தியக் காற்றில் உள்ளம் குளிர்ந்துவிட்டால் அது சந்தோஷமான விஷயம்தான். ஆனால் எனக்கு இதுதான் கவலை! எங்கள் வீடென்னவோ சின்னது. ராஜா ராணிகளின் விஷயத்தை யோசித்து நான் அதைக் கட்டவில்லை. வீடு வாசல் ஏற்பாடுகூட அவர்களுக்குத் தக்கதாக இல்லை. வேலைக்கார-வேலைக்காரிகள் தேவைக்கு அதிகமாகக்கூட வருவார்கள். இதனால்தான் யோசிக்கிறேன். ஒருகால் உன் வீட்டை—' என்றார்.

அசலா பதட்டத்துடன், 'ஆனால் இதற்கு இப்பொழுது சமயம் எங்கே இருக்கிறது, பெரியப்பா? தவிர தனியாக அவ்வளவு தூரத்தில் இருப்பது அவர்களுக்குச் சௌகரியமாக இருக்குமா?' என்றாள்.

'இப்பொழுதிலிருந்தே ஏற்பாடு செய்ய ஆரம்பித்தால் சமயம் இருக்கிறது. வேறு இடத்தில் யாருக்கு எவ்வளவு சௌகரியமாக இருக்கும் என்பதைத்தான் சுலபமாக நிர்ணயிக்க முடியுமா? ஸுரேஷ் பாபு கேட்டவுடனேயே ஒரு வாடகைத் தம்பட்டத்தைக் கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டார். உன்னுடைய வண்டியும் பூட்டி வந்துகொண்டிருக்கும். நீயும் சற்று சீக்கிரமாகத் தயாரித்துக்கொள்ள முடியுமானால், நானும் சாவகாசமாக இந்தச் செருப்பை மாற்றி வேறு செருப்பு அணிந்துகொண்டு, தோளில் ஒரு சால்வையைப் போட்டுக்கொண்டு வருகிறேன். உன் வீடு வாசல் ஏற்பாடுகள் எல்லாம் எங்களால் ஆகாது, அம்மா!' என்றார்.

அசலா நிமிஷ நேரம் மௌனமாக இருந்துவிட்டு, எழுந்து நின்று, 'சரி, நானும் ஆடை மாற்றிக்கொண்டு தயாராகிறேன்!' என்று சொல்லி மெள்ளச் செல்லலானாள்.

ராம் பாபுவின் தீர்மானம் உசிதமற்றதாகவோ, விளங்காமலோ இல்லை. தம்முடைய உறவினர்களான ராஜகுமார், ராஜமாதா இவர்களுக்கு இடமளிப்பதற்காக அந்த வீட்டை விட்டு அப்பொழுது அவள் வேறு வீட்டுக்குப் போக வேண்டு மென்ற விஷயம் சகஜமாகவே அசலாவின் மனத்திற்கு விளங்கிவிட்டது. ஆனால் சகஜமாக விளங்கிவிட்டதாலேயே அவளுடைய பாரம் குறைந்துவிடவில்லை. மனத்திற்குள் அவள் எவ்வளவு தூரம் சென்றாளோ அதுவரையுள்ள இடத்தை, ஒரு பெரும் 'ஸ்டீம்-ரோல'ரைப் போல, அவள் நொறுக்கிவிட்டாள்.

அத்தனை நாட்களாயிற்று. யாரும் அவளை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லத் துணியவில்லை. ஆனால், அன்று பதினைந்து நிமிஷங்களுக்குள் அவள் முதன் முதலாக விசேஷமான ஆடைகளால் அலங்கரித்துக்கொண்டு கீழே இறங்கி வந்தாள். நாற்புறமும் அவள் பார்வைக்கு எல்லாம் புதிதாகவும் ஆச்சரியகரமாகவும் காணப்பட்டது. தான்கூட வேறு விதமாக இருப்பதாக உணர்ந்தாள். வாசலுக்கு வெளியே இரட்டைக் குதிரை ஸாரட்டு தயாராக நின்றுகொண்டிருந்தது. புது ஆடை யலங்காரத்துடன் நின்றிருந்த வண்டிக்காரன் அவள் எஜமானி என்றறிந்து மேலேயிருந்தபடியே சலாம் செய்தான். குசினிக்காரன் வண்டிக் கதவைத் திறந்துவிட்டு ஒரு பக்கமாக நின்றான். அவளுடன் கிழ ராம் பாபு எதிர்ப் பக்கத்தில் ஏறி உட்கார்ந்தார். இவைகளெல்லாம் அவளுக்கு ஒரு கனவு போலத் தோன்றின. அவளுடைய கடைக்கண் பார்வை வண்டியின் எந்தெந்தப் பாகத்தைக் கண்டதோ, அந்தந்தப் பாகம், வெறும் விலை மதிப்புள்ளதாகவோ, பணக்காரரின் பெருமிதத்தைக் காட்டுவதாகவோ மட்டும் இல்லை; ஒவ்வொன்றும் யாரோ ஒருவருடைய எல்லையற்ற அன்பினால் மூடப்பட்டிருந்தது.

காட்டுத் தரையில் நான்கு ஜதைக் குதிரைக் கால்களின் சத்தத்துடன் வண்டி ஓடத் தொடங்கியது. அசலாவின் செவிகளில் அந்த ஓசை தெளிவில்லாமல் கேட்டுக்கொண்டிருந்தது. அவளுடைய மனமும் உள்ளுணர்ச்சிகளும் கடைசிவரை அம்மாதிரியே பிரமையில் ஆழ்ந்திருந்தன. ஆனால் திடீரென்று ராம் பாபுவின் குரலினால் அவள் உணர்வு பெற்றாள். அவர் எதிர்ப் பக்கம் பார்த்துக்கொண்டே, 'அம்மா! அதோ பார்! உன் வீடு தெரிகிறது! வேலைக்காரன் வேலைக்காரி எல்லாம் ஏற்பாடு செய்தாய்விட்டது. சாதாரணமாக, சாமான்களை எடுத்து வைக்கும் வேலை வெகுவாக நடந்தேறியிருக்கும். உன்னுடைய படுக்கை யறையில் மாத்திரம் யாரும் கைவைக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். போகும்போது ஸுரேஷ் பாபுவிடம், "வீடு நெடுக எங்கே என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை; ஆனால் என் ஸுராமாவின் அறையில் கை வைத்து, அவளுக்கு ஒரு வேலைக்கு இரு வேலை வைத்துவிடாதீர்கள்!" என்று சொல்லியிருக்கிறேன்' என்று சொல்லி, கிழ ராம் பாபு அசலாவின் வெட்கம் கலந்த நகை முகத்தைக் காணத் தலை நிமிர்ந்தார். ஆனால் அங்கே பார்த்ததும் பேசாமல் மௌனமானார்.

அவர் ஏன் இவ்வாறு தயங்கிவிட்டார் என்பதை அசலா அதே கணத்தில் அறிந்துவிட்டாள். ஆகையால், வண்டி புதிய பங்களாவின் வாசலுக்கு வரும்வரை தன் வெளுத்த முகத்தை வெளிப் பக்கம் திருப்பிக்கொண்டு, கிழவரின் ஆச்சரியப் பார்வையினின்றும் ஒளித்துக்கொண்டாள்.

வண்டியின் சத்தம் கேட்டு ஸுரேசன் வெளியே வந்தான். வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும், தங்கள் தங்கள் வேலையை விடுத்து, மறைந்து மறைந்து தங்கள் புதிய எஜமானியைப் பயந்த பார்வையுடன் பார்க்கலானார்கள்; ஆனால்

அந்த முகத்தைக் கண்டு யாருக்கும் உற்சாகம் ஏற்படவில்லை.

ராம் பாபுவுடன் அசலா பேசாமல் இறங்கி வந்தாள். ஸுரேசன் பக்கம் ஒரு தரம் கூடத் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை. அதன் பின் மூவரும் பேசாமல் மெள்ளப் புதிய மாளிகையில் நுழைந்தனர். மாளிகையினுள்ளே, மேலேயோ, கீழேயோ, எங்கேனும் சந்தோஷத்திற்குரிய அடையாளம் ஏதும் இருப்பதாக யாருக்கும் தென்படவில்லை.



## XIII

ஆனால், அதில் எவ்வளவு தவறு இருந்ததென்பது வெளிப்பட அதிக நேரமாகவில்லை. வீட்டை அலங்கரிக்கும் வேலையில், விலையுயர்ந்த தேவைக்கதிகமான உபகரணங்களுக்கிடையில் இதர கவலைகளுக்கெல்லாம் மேலாக ஒரு விஷயம் எல்லோர் மனத்தையும் வருத்திக்கொண்டிருந்தது. ரூபாய் உள்ளவர்கள் செலவு செய்கிறார்கள். அது பழைய விஷயம். ஆனால் இங்கே, அது மாத்திரமல்ல! ஒருவரைச் சந்தோஷப்படுத்த, சுகப்படுத்த, மற்றொருவர் எல்லையற்ற கவலைப்படுகிறார். வேலை வெட்டியின் மத்தியில், சாமான்களை எடுத்து வைக்கும்போது சாதாரணப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. கண்களும் பல தடவை சந்திக்க நேர்ந்தது. ஆனால், எல்லோருக்கும் மத்தியில் உச்சரிக்க முடியாத ஒரு வார்த்தை, வெளியிடப்படாத ஒரு சங்கேதம், இந்தப் பக்கம் விரலைச் சுட்டிக் காட்டலாயின.

வீட்டைப் பெருக்கி அலம்பும் வேலை முடிவடையவில்லை. ஆகையால் அதை வசிப்பதற்கு ஏற்றதாகச் செய்வதற்கே நாள் பூராவும் ஆயிற்று. மூவரும் களைத்துச் சோர்ந்து வண்டியில் வந்து அமர்ந்த போது ராத்திரி ஒரு ஜாமம் கழிந்துவிட்டது. வேகமான காற்று வீசி, எதிரேயிருந்த வானத்தை நிர்மலமாக்கியது. இடையிடையே ஆங்காங்கு சிறு கருமேகத் துணுக்குகள் திசைகளில் தோன்றி நதியைக் கடந்து மறு திசைக்குச் சென்றுகொண்டிருந்தன.

அலைகளிடையே மறைந்து, மறைந்து சில சமயம் பிரகாச மாகவும், சில சமயம் மங்கலாகவும், சந்திரிகையின் ஒளி நாற் புறமும் உள்ள மரங்களின் மீதும் தரையின் மீதும் விழுந்து கொண்டிருந்தது. அந்த அழகுக் காட்சியைக் கண் கொண்டு பார்க்கக் கிழ ராம் பாபு ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் கிழவராக இல்லாதவர்கள், இயற்கையின் பூரண இன்பத்தை அநுபவிக்கும் வயதினர் கள், வண்டியின் இரு மெத்தை ஆசனத்தின் மூலைகளில் அமர்ந்து, நெற்றியைத் தடவிக்கொண்டு, தலை குனிந்து கொண்டிருந்தார்கள்.

வெகு நாட்களுக்கு முந்திய ஒரு நினைவு அசலாவின் மனக் கண்ணின் முன் மங்கலாகத் தோன்றியது. இத்தனை நாட்களுக்குப் பிறகு அது நினைவுக்கு வரலாயிற்று. ஸுரேச னுடைய கல்கத்தா வீட்டிலிருந்து அவர்கள் இருவரும் ஓர் இரவு வண்டியி லமர்ந்து இது போல்தான் திரும்பிக் கொண்டிருந்தனர். அன்று தினம்,செல்வமும் சுக சௌக்கி யப் போகப் பொருள்களும் அதிருப்தியடைந்த அவள் மனத்தை மஹிமிடமிருந்து வெகுதூரம் இழுத்துச் சென் றன. அன்று தினம் இதே ஸுரேசனின் கையில் தன் உயிரை அர்ப்பணம் செய்ய அவளுக்கு முடியாததாகவோ தகுதியற்றதாகவோ தோன்றவில்லை. வெகு நாட்களுக்குப் பிறகு திடீரென்று அது ஏன் நினைவுக்கு வந்தது என்பதை ஆராய்ந்து ஆராய்ந்து அவளுக்குத் தன் அந்தக்கரணத்தின் ரகசியமான சித்திரம் தெளிவாகத் தெரிந்தது. அதனால் அவள் சரீரம் முழுவதும் வெட்கத்தின் புயலால் தாக் குண்டது.

வெட்கம்! வெட்கம்! அந்த வீடு, அந்த ஏற்பாடுகள்— யாவற்றையும் தன் கணவனுடைய அன்பின் வெகுமதி என்று அறிந்தாள். அதன் மேல் அவளுக்குச் சற்றும் அதிகாரம்

இல்லை. அதன் ஒரு மூலை முதல் மற்றொரு மூலைவரையும் 'பொய்' என்று எல்லோரும் ஒரு நாள் அறிந்துகொள்வார்கள் என்பதையும் அவள் அறிந்தாள். அன்று தினம் அந்த வெட்கத்தை அவள் எங்கே மறைப்பாள்? இன்று?—இன்று இவைக ளெல்லாம் அவளுடைய பூஜைக்காகத்தான் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் ஆதியோடந்தம் காதலாலும், அன்பாலும் மண்டிக் கிடக்கின்றன என்பது எவ்விதத்திலும் பொய்யல்ல. திசை நடுங்க ஓடிக்கொண்டிருக்கும் அந்த ஜோடிக் குதிரைகள் பூட்டிய அழகிய வண்டி, அதனுடைய மிருதுவான ஸ்பரிச சுகம், அதனுடைய எல்லையற்ற வேக ஓட்டத்தின் ஆனந்தம் — யாவும் இன்று அவளுக்காகத்தான், அவளுடையதுதான். அந்தக் கணக்கற்ற வேலைக்கார - வேலைக்காரிகள், ஆவலுடன் அவள் முகம் பார்த்து நின்றுகொண்டிருப்பது எதற்காக?

பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவள் மனத்தில் லோபமும், தியாகமும், வெட்கமும், கௌரவமும், அருகருகே வந்து கங்கை யமுனை சங்கமப் பெருக்கைப் போலப் பெருகலாயின. ஒரு கண நேரம் இவைகளில் எதையும் அவளால் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஆயினும் கூடவே வீட்டிற்கு வந்த ராம் பாபு சந்தியாவந்தனம் செய்யப் போன பிறகு, அவள் திடீரென்று, களைப்பு தலைவலி என்று சாக்குச் சொல்லிக்கொண்டு, வேகமாகத் தன் அறைக்குச் சென்று கதவைச் சாத்திக்கொண்டு படுக்கையில் படுத்துக்கொண்டாள். வெட்கமும் வேதனையும் அவளைப் பிடுங்கித் தின்னலாயின. தந்தையின் வெட்கம், கணவனின் வெட்கம், பந்து மித்திரர்களின் வெட்கம் — எல்லா வெட்கங்களும் அவள் கண்முன் ஒன்றுசேர்ந்து உடைக்க முடியாதவையாக நின்று அவளுடைய இதர துக்கங்களை மறைத்தன. இந்தப் பித்தலாட்டங்க ளெல்லாம் ஒரு நாள் வெளிப்பட்டுவிட்டால்,

தான் தலை மறைய இடம் எங்கே இருக்கிறது?—இந்த நினைவு தான் அவளுக்கு வந்தது.

இதில் வேடிக்கையான விஷயம் என்னவென்றால், எந்த மத ஸம்ஸ்காரங்களை அனுசரிப்பதில் அவள் தன் சிறு வயதைக் கழித்தாளோ, அதில் மான் தோலில் அமர்ந்து மர நிழலில் இருக்கவேண்டும் என்று யாரும் சொல்லி அவள் கேட்டதில்லை. அங்கே அவள் சந்தித்தவர்கள் பழகியவர்கள் யாரும் இன்ப வாழ்க்கைக்கு எதிரான அபிப் பிராயத்துடன் இருந்து அவள் பார்த்ததில்லை. அந்த விஷ யத்தில் அவர்கள் மென்மேலும் பிரியமாகவே இருப்பதைக் கண்டிருக்கிறாள். அங்கே ஹிந்து தர்மத்தின் லட்சியத்தைப் பற்றி அவள் ஒன்றையும் தெரிந்துகொள்ளவில்லை. பர லோகத்தின் நம்பிக்கையில் இகலோகத்தின் சகல இன்பங்களி னின்றும் வஞ்சிக்கப்படும் கொடுமையை அவள் கண்ட தில்லை. அவள் பார்த்ததெல்லாம், பிறருடைய அனுசரிப்பி னால் ஆக்கப்பட்ட தன் சமூகத்தில் ஸ்திரீ புருஷர் இரு பாலாரும் தீவிரமான சம்சார தாகத்தினால் வரட்சியடைந்து வந்ததைத்தான்.

ஆகையால் இந்தத் தனிமையான படுக்கையிலும்கூட, கண்ணை மூடிக்கொண்டு ஐசுவரியம் போன்ற பொருள்களை 'ஒன்றுமில்லை' என்று சொல்லிவிட முடியவில்லை. 'அவசிய மில்லை' என்பதற்கும் அவள் மனம் சாட்சியாக நிற்கவில்லை. அவளுடைய கல்வி ஸம்ஸ்காரம் ஆகியவைகள் இவைகளில் எதையும் துச்சம் என்று நினைக்க அனுகூலமாக இல்லை. ஆயினும் வருத்தத்தால் அவள் மெய் கொதித்தது. அதற்குக் காரணம் இதுதான்: அந்தச் செல்வங்கள், சுகத்திற்குத் தேவையான பலவித உபகரணங்கள் முதலியவை எல்லாம், அவள் கேட்காமலே, அன்று அவள் காலடியில் வந்து கிடந் தன; ஆனால், தவிர்க்க முடியாத மோகம், ஒரு கையால்

இழுத்துக்கொண்டும், மற்றொரு கையால் தள்ளிக்கொண்டும் இருந்தது.

துக்கத்தின் தீய கனவில் தெளிவற்ற விடுதலை ஒன்றைப் பெறவேண்டும் என்ற உணர்ச்சி ஒன்று தன் வேலையையும் கூடவே செய்துகொண்டிருந்தது. அப்படியே அவளுடைய அறிவு முற்றிலும் போய்விடவில்லை. விதியின் விளையாட்டினால் அன்று ஏமாற்றமாக இருப்பது, அவளுடைய உண்மை மார்க்கத்திற்கு என்றாவது ஒரு நாள் தடையாக இருக்காது. ஸுரேசன் அவளுக்குக் கணவனாக முடியும். பிறகு எதிர் காலத்தில் அம்மாதிரியும் நடக்கக்கூடும் என்பது முற்றிலும் சாத்தியமில்லை என்று யாரும் உரிமையுடன் சொல்லிவிட முடியாது.

அவர்களைப் போன்ற இதர சமூகங்களில் கைம்பெண் களுக்குப் புனர் விவாகம் நடப்பது வழக்கம். ஹிந்துப் பெண்களைப் போல, கேவலம் ஒரே புருஷனுடன் மனைவியாகி இகலோகத்திலிருந்து பரலோகம் வரை இருக்க முடியாது; ஆகையால் சாவிலும் வாழ்விலும் ஒன்றையே கதியென்று எண்ணிக் கவலைப்படும் கட்டுப்பாடுள்ள மனம் அல்ல அவளுடையது. அந்த மனம், ஒரு கணவன் உயிரோடிருக்கும் போதே மற்றொருவனைக் கணவனென்று சொல்வதில், குற்றம் என்ற பாரத்தால் பீடிக்கப்படலாம்; அவமானம் வெட்கம் என்ற ஜ்வாலையில் எவ்வளவு வேண்டுமானாலும் தடுக்கப்படலாம். ஆனால், தர்மம், பரலோகம் என்ற தண்டாயுதத்தால் அவளைத் தரை மட்டமாக்கி விடுவதாகப் பயங் காட்ட முடியாது.

சாத்தியிருந்த கதவைத் தட்டிக்கொண்டே, 'சாப்பிடாமலேயா அம்மா தூங்குகிறாய்? உன் உடம்பு ரொம்ப அசௌகரியமாக இருக்கிறதா?' என்று சொல்லிக் கூப்பிட்டார் ராம் பாபு.

அசலாவின் சிந்தனை - இழை அறுந்தது. திடீரென்று அவளுக்கு அது தன் தந்தையின் குரலைப் போல் தோன்றியது. கோபித்துக்கொண்டு சமயமற்ற சமயத்தில் தூங்கப் போகும் போது அவர் இதைப் போலத்தான் கதவைத் தட்டிக் கூப்பிடுவார்.

இந்தக் கவலைக்கு அவள் தன் மனத்தில் இடம் கொடுக்க மாட்டாள். ஆனால் அந்த அன்பின் அழைப்பை அவள் எவ்விதத்திலும் அலட்சியம் செய்ய முடியாது. ஒரு கணம் அவள் கண்களில் கண்ணீர் பொங்கியது. சட்டென்று அதைத் துடைத் தெறிந்துவிட்டு, குரலைச் சரிப் படுத்திக்கொண்டு, பதில் சொல்லிக்கொண்டே கதவைத் திறந்து எதிரே வந்து நின்றாள்.

அந்தக் கிழவர், இத்தனை நாள் நெருங்கிப் பழகியவராக இருந்த போதிலும், தம்மை ஓர் அளவுக்கு உட்படுத்திக் கொண்டிருந்தார். ஆனால் அன்று அவருக்கு அந்த வீட்டில் கடைசித் தின மாகையால், கண நேரம் அந்தச் சட்டத்தை அப்புறப்படுத்திக்கொண்டு, தம்முடைய ஒரு கையை அசலாவின் தோளில் வைத்து, மற்றொரு கையினால் அவளுடைய முகவாய்க்கட்டையைப் பற்றி, சிரித்துக் கொண்டே, 'கிழப் பெரியப்பாவிடம் கோபித்துக்கொண் டிருக்கிறாயா, அம்மா? ஒன்றுமில்லையே!' என்று சொல்லி, கையைப் பிடித்து அவளை இழுத்துக்கொண்டு வந்து, தாழ் வாரத்து நாற்காலியில் உட்கார வைத்தார்.

அருகேயே மற்றொரு நாற்காலியில் ஸுரேசன் உட்கார்ந்திருந்தான். அவன் தலை நிமிர்ந்து ஒரு தரம் பார்த்துவிட்டு மறுபடியும் குனிந்துகொண்டான். விஷயம் இதுதான். இரவு சொஸ்தமாக அமர்ந்து பகலின் வேலைகளைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். இதற்காகத்தான் அவன் தனியே அமர்ந்து ராம் பாபுவின் வரவை எதிர்பார்த்துக்

கொண்டிருந்தான். ராம் பாபு அவன் பக்கம் பார்த்து மெல்லிய சிரிப்புடன், 'ஸுரேஷ் பாபு! உங்கள் வீட்டு லக்ஷ்மிதான் ஒரு சீமை பாபுவின் பெண்ணாயிற்றே! அவள் இந்த நாள் முகூர்த்தம் ஒன்றையும் சட்டை செய்யமாட்டாள். பிறகு நீங்கள் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளா விட்டாலும் சரி எனக்கொன்றும் இல்லை. ஆயினும் இந்த வய தானவனின் வழக்கம் என்னவோ போகாது. நாளைக்குப் பிற்பகலுக்குள் ஒரு லக்னம் இருக்கிறது!' என்றார்.

ஸுரேசன் அந்த ஜாடையைத் தெரிந்துகொள்ள முடியாமல் ஆச்சரியத்தி லாழ்ந்தவனாய், 'எதற்கு லக்னம்—?' என்றான்.

ராம் பாபு சரியாகப் பதில் சொல்லவில்லை. பக்கத்தில் எட்டிப் பார்த்துக்கொண்டே, 'இதற்குப் பிறகு ஒரு வாரத் திற்குப் பஞ்சாங்கத்தில் நல்ல நாள் எனக்குக் கிடைக்கவில்லை. ஆகையால்தான் சொல்கிறேன்—' என்றார்.

விஷயம் அப்பொழுது ஸுரேசனுக்கு விளங்கிவிட் டது. ஆனால், அவன் அதற்கு 'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ சொல்ல முடியாமல், பயந்துகொண்டே தலை நிமிர்ந்து அசலாவின் பக்கம் பார்த்து, உடனே தன் பார்வை யைத் திருப்பிக்கொண்டான். அவள் கண் கொட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அசலா சாந்தமாக இனிய குரலில், 'நாளைக் காலை யிலேயே நாங்கள் அந்த வீட்டுக்குப் போகலாமே?' என் றாள்.

ஆச்சரிய மடைந்திருந்த ஸுரேசனுக்கு இந்த நேரான கேள்விக்குச் சரியான பதில் தேடியும் கிடைக்கவில்லை. அவன் திடமற்ற குரலுடன், 'அந்த வீடு இன்னும் வசிப்ப தற்குரிய சௌகரியத்துடன் தயாராகவில்லை. தரையெல்லாம் ஈரமாக இருக்கிறது. சுவர்களுக்குச் சுண்ணாம்பு பூசவில்லை.

ஒருகால் குடிபுகுந்த பிறகு அசலாவுக்குக் கஷ்டமோ அசௌக்கியமோ.........' என்றான்.

ஆனால் தடைகளின் எண்ணிக்கை பூர்த்தியாகவில்லை. அசலா சிரித்துக்கொண்டே, 'ஆனால் ஆகட்டும்! நாய் நரிகள்கூடத் தங்கள் இடத்தைவிட்டு வெளியே கிளம்ப விரும்பாத தினத்தில் நான் முன் பின் தெரியாத இடத்தில் மரத்தடியில் நிற்க முடியுமானால், இந்த ஈரமான தரை, சுண்ணும்பு பூசாத சுவர் இவற்றைப் பற்றி எனக்காகப் பயந்து நீங்கள் யோசித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை! அன்றைக்குச் சாவு வராதவளுக்கு இன்றைக்கு வந்துவிடப் போவதில்லை!' என்றாள்.

பிறகு ராம் பாபுவின் பக்கம் பார்த்து, 'நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம், பெரியப்பா! நாங்கள் நாளைக் காலையிலேயே போகிறோம். தங்கள் கடனை நான் ஜன்ம ஜன்மாந்தரங்களிலும் தீர்க்க முடியாது! பெரியப்பா, நாளைக்கே நாங்கள் விடைபெற்றுக்கொள்ளுகிறோம்!' என்று சொல்லி, அழுது கொண்டே, சட்டென்று தன் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

கிழ ராம் பாபு மின்னலால் தாக்கப்பட்டவர் போலச் செயலற்று உட்கார்ந்துவிட்டார். அவருடைய வருத்தமடைந்த பார்வை ஒரு தரம் ஸுரேசனின் கவிழ்ந்திருந்த முகத்திலும் பட்டது. பிறகு சாத்தப்பட்ட கதவின் பக்கம் பார்த்துவிட்டு, 'இதென்ன நடந்தது?' என்று கேட்கலாயிற்று.

ஆனால், அந்தர்யாமியைத் தவிர அந்த உள்ளத்தின் துடிப்புக்கு யாரால் பதிலளிக்க முடியும்?

## XIV

மறுநாள் காலையிலேயே வானத்தில் மேகம் சூழ்ந்து கொண்டது. அந்த மங்கிய வானத்தின் கீழ் உலகம் ஏதோ ஒரு வருத்தத்துடனும் பிரகாசமற்றும் தோற்றமளித்தது. வண்டி பூட்டப்பட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தது. பெட்டி படுக்கை முதலியவைகள் ஏற்றப்பட்டன. பஞ்சாங்கத்தின் சுப முகூர்த்தப்படி அசலா கீழே இறங்கி வந்தாள். வண்டியில் ஏறி அமரு முன் ராம் பாபுவின் பாதங்களைத் தொட வந்தபோது, அவர் சிரமத்துடன் முகத்தில் சிரிப்பை வர வழைத்துக்கொண்டு, 'அம்மா! கிழவனுக்குப் பெண்ணுவதால் பல கஷ்டங்கள் வந்து சேருகின்றன. பாதங்களைச் சிறிது தொடுவதனுலோ, இரண்டொரு மைல் தூரத்தில் தள்ளிப் போய்விடுவதனுலோ விட்டுவிடும் என்று நினைத்து விடவேண்டாம்!' என்ருர்.

அசலா நீர் நிறைந்த கண்களுடன் மேலே தலை நிமிர்த்தி மெதுவாக, 'நான் அப்படி விரும்பவில்லையே பெரியப்பா?' என்ருள்.

இந்தக் கருணை நிறைந்த வார்த்தையைக் கேட்டதும் விருத்தருடைய கண்களிலும் கண்ணீர் வந்துவிட்டது. முன்பு அறிமுகமில்லாத அந்தப் பெண் பரிசயமான பின்பு இப்பொழுது மறுபடி வெகு தூரம் விலகிச் செல்வதைப் போல் தோன்றியது. அன்பு ததும்பும் குரலில், 'அது தெரியாதா அம்மா எனக்கு? இல்லாவிட்டால், கணவனுடன் உன்

வீட்டுக்குப் போகிறாய், இதற்காக நான் சந்தோஷப்பட வேண்டும்! நல்லது! கண்களில் ஏன் கண்ணீர் வருகிறது? ஆயினும் அதைத் தடை செய்ய முடியவில்லை!' என்று சொல்லிக் கையினால் கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சிரித்துக்கொண்டே, 'அருகே இருந்தாய், இரவு பகல் தொந்தரவு செய்துகொண்டிருந்தேன். இனிமேல் அவ்வளவு செய்ய முடியாது. ஆனால் வட்டியும் முதலுமாகச் சேர்த்துப் பிறகு வசூல் செய்துகொள்வேன், பார்த்துக்கொள்!' என்றார்.

ஸுரேசன் பின்னால் நின்றுகொண்டிருந்தான். அவன் அன்று உண்மையான பக்தியுடன் கிழவரின் பாதங்களைத் தொட்டான். ராம் பாபு அவனிடம், 'என் வீட்டில் உனக்குச் சுகமில்லை. இது எனக்குத் தெரியும், ஸுரேஷ் பாபு! உங்கள் வீட்டில் அந்தத் தொல்லை நீங்கிவிடும், என்னுடைய மனம் வாக்கு காயங்களால் இதுதான் என்னுடைய ஆசீர்வாதம்!' என்று சும்மா கூறிவைத்தார்.

ஸுரேசன் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை. மறு முறை குனிந்து நமஸ்காரம் செய்துவிட்டு வண்டியிலேறி அமர்ந்தான்.

ராம் பாபு மறுபடியும் ஒரு முறை ஆசீர்வாத மளித்து உரத்த குரலில், 'அவர்களும் வண்டி கொண்டுவர ஆள் அனுப்பியிருக்கிறார்கள். சாயங்காலத்திற்கு முன்பே அவர்களும் வந்துவிடுவார்கள். ஆனால் அந்தச் சமயம் இந்த மாதிரி கோபித்துக்கொண்டால் ஒன்றும் நடவாது. தெரிந்ததா இல்லையா?' என்று சொல்லி வேடிக்கை செய்ய விரும்பினார்; ஆனால் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு மௌனமானார்.

வண்டி புறப்பட்டுச் சென்ற பிறகு அவர் தம் மனத்திற்குள், 'இவர்கள் சற்று சாவகாசம் இருக்கும்போதே சென்றது நல்லதாயிற்று' என்று சிந்திக்கலானார். பின்னர்

அங்கே இடத்திற்குக் குறைவில்லை. ஆனால் அவருடைய விதவையான சகோதரியின் குணம் அவருக்குத் தெரியும். பிறருடைய அந்தரங்க விஷயங்களை யெல்லாம் ஒன்று விடாமல் அறிவதில் அவளுக்கு வெகு சந்தோஷம். அவள் வந்ததுமே ஸுரமாவைக் கடினமான பரீட்சை செய்ய ஆரம்பித்துவிடுவாள். அதன் பலன் என்னவானாலும் ஆகட்டும். ஆனால் அவள் சந்தோஷம் மட்டும் அடைய மாட்டாள். இந்தப் பெண்ணைப் பற்றி ஒன்றும் தெரியாமலிருந்தும் அவள் ஒரு கண்ணியமான ஸ்திரீ என்பதை அறிந்துகொண்டார். தன்னுடைய சௌகரியத்திற்காக அவள் பொய் பேசமாட்டாள். அவள் தந்தை பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர். அவளும் தீண்டாமை, சாமி-தெய்வம், இவைகளை மதிப்பதில்லை என்பதை ஒளிக்க மாட்டாள். இதனால் வீட்டில் ஏற்படும் ரகளையைக் கற்பனை செய்யும் போதே அவர் மனம் நடுங்கியது. ஆனால், இது நடந்தது அவளுடைய சுக சௌகரியத்திற்கு நல்லதாயிற்று. இன்னொரு விஷயமும் இருந்தது. இதை அவர் ஒரு பொழுதும் வெளியிட விரும்பவில்லை. அவருக்குப் பெண் குழந்தை கிடையாது. முதல் குழந்தையாக ஒரு பெண் பிறந்தது. ஆனால், உடனே இறந்துவிட்டது. இன்று அவள் இருந்திருந்தால் அசலாவுக்குத் தாயாக இருந்திருப்பாள். ஆகையால், வயதோ முக ஒற்றுமையோ ஒன்றும் இல்லாதிருந்தது. ஆயினும்கூட இந்த விஷயத்தில் அவருக்கு எவ்வளவு ஆத்திரம் இருந்த தென்பது அன்று கணவனின் வைத்தியத்திற்காக அசலா இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்ததைப் பார்த்த போது வெளியாயிற்று. அன்று அவருக்கு, வெகு நாட்களாகத் தாம் இழந்திருந்த தம்முடைய குழந்தை திடீரென்று கிடைத்துவிட்டதைப் போலவே தோன்றியது. அதிலிருந்து அந்த ஆசையும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தது. அவர் மனத்

திற்குள், 'இந்தப் பெண்ணை ஏதோ ஓர் ஆழ்ந்த ரகசியம் சூழ்ந்திருக்கிறது. அதை இவள் பிறரிடம் வெளியிடுவதில்லை' என்பதை உணர்ந்தார். ஆனால் அதோடு கூடவே, 'கண்ணுக்குத் தெரியாமல் மறைவாக இருப்பது மறைவாகவே இருக்கட்டும். முயற்சி செய்து அதை வெளியே கொண்டுவர வேண்டிய அவசியமில்லை' என்றும் எண்ணினார்.

ஒரு நாள் ராக்ஷஸி, 'இதில் ஏதோ குடும்பச் சண்டை இருக்கிறது. சண்டையிட்டுக்கொண்டுதான் ஸுரேஷ் பாபு தம் மனைவியுடன் வீட்டை விட்டு வந்துவிட்டார்!' என்று சொல்லியிருந்தாள். திடீரென்று ஒரு நாள் அசலா தன்னைப் பிரம்ம சமாஜி என்று சொல்லிக்கொண்டாள். ஸுரேசன் மார்பில் பூணூல் இருந்தது; அதைப் பார்த்ததும் அன்று இந்தக் கிழவர் சிறிது பிரமித்துப் போனார். ஆனால் மனத்திற்குள் அந்த ரகசியத்திற்கு ஒரு காரணமும் அவருக்குக் கிடைத்துவிட்டது. ஸுரேசன் பிரம்ம சமாஜிகள் வீட்டில் கலியாணம் செய்துகொண்டதால்தான் இந்த வம்புகளெல்லாம் ஏற்பட்டன என்பதில் சந்தேகம் இல்லை என்று எண்ணினார். இதே நம்பிக்கை அவர் மனத்தில் உறுதிப்பட்டது.

உண்மையான அர்த்தத்தில் ராம் பாபு ஒரு ஹிந்து. இதே காரணத்தால்தான் அவர் ஹிந்து தர்மத்தின் நிஷ்டையை அனுசரித்து வந்தார். ஆனால் அதன் கொடுமைகளை அடையவில்லை. பிராமண சந்தானமான ஸுரேசனுக்கு இந்தக் கதி ஏற்படாதிருந்தால் அவர் சந்தோஷமடைந்திருப்பார். ஆனால், அந்தக் காதல் மணமும், சுற்றத்தாரை விட்டு அவர்கள் பிரிந்ததும், அம்மாதிரியான அஞ்ஞாத வாசமும், இவைகளின் சௌந்தரியமும், இனிமையும் அவரைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. அந்த மணத்தை ஆதரிப்பதில் அவர் மனம் அவரை அறியாமலே மூழ்கிவிட்டது. ஆகையால் இந்தத் துரோகக் காதலர்களின் காதல் - கர்வம் அவர் முன்

மனத் தளர்ச்சியுடன் தென்படும்போது, அவர் மனம் மிக்க வேதனையடையும்; பிறர் வீட்டில் சங்கையினால் ஒருவருக் கொருவர் சந்தித்துக்கொள்ள ஏற்படும் தடைகள் தங்கள் வீட்டுக்குச் சென்றதும் சுதந்திரமாகவும் அமைதியாகவும் குடும்பம் நடத்தவேண்டிய காரியங்களில் ஆழ்ந்து அனு கூலத்தையும் சாந்தியையும் அடையட்டும் என்று எண்ணும்.

ஸ்நானத்திற்குச் செல்ல நாழிகை ஆகிவிட்டது. துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு ஆற்றை நோக்கிச் சென்றுகொண்டே அவர் சிரிப்புடன் மனத்திற்குள் சொல்லிக்கொண்டார்: 'ஸுரமா போகும்போது இந்தக் கிழவனிடம் ரொம்பக் கோபித்துக்கொண்டு போயிருக்கிறாள். "நம்ம சுற்றத்தாரைப் போலப் பெரியப்பாவும் நமக்கு இருக்க இடமளிக்கவில்லை" என்று எண்ணியிருப்பாள். ஆனால் நாலைந்து நாட்களுக்குப் பிறகு சந்தோஷத்துடன் இருக்கும் போது இதற்குப் பதிலுக்குப் பதில் செய்கிறேன். அன் றைக்குச் சொல்லுகிறேன்! "இந்தக் கிழவன் தலைமேல் ஆணை. —உண்மையைச் சொல்லு, அந்தக் கோபத்தில் இன்னும் பாக்கி எவ்வளவு இருக்கிறது?" என்று கேட்கிறேன். அப் பொழுது என்ன பதில் சொல்லுகிறாள், பார்க்கிறேன்!' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அவர் முகம் சாந்தமும் நிர்மலமுமான சிரிப்பினால் பிரகாச மடைந்தது. அவர் மனக் கற்பனையில் ஒரு காட்சி ஸ்பஷ்டமாகத் தோன்றியது. ஸுரமா புன்சிரிப்புடன் வேலையைச் சாக்கு வைத்துக்கொண்டு செல்கிறாள். அடுத்த க்ஷணம் ஒரு தட்டில் தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு வந்து, முகத்தை ரொம்பக் கம்பீரமாக்கிக் கொண்டு, 'பெரியப்பா, என் கையினால் தயாரித்த இந்தத் தின்பண்டங்களைச் சாப்பிடாவிட்டால் நான் நிஜமாக உங்க ளிடம் பெரிய சண்டை போடுவேன்!' என்று சொல்லுகிறாள்.

ஸ்நானம் செய்த பிறகு தண்ணீரில் நின்றுகொண்டு கங்கா ஸ்தோத்திரம் பண்ணும்போது, இடையிடையே அவருக்கு அந்தப் பெண் தன் சிரிப்பை மறைக்கச் செய்த வீண் பிரயத்தனத்தை முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் கதையுடன் ஒப்பிட்டுப் பார்த்ததும், அவருக்கே அடக்க முடியாத சிரிப்பு வந்துவிட்டது. அவர் மனத்தில் சென்ற இரவிலிருந்து பெருகிக்கொண்டிருந்த வருத்தம், இன்று சந்தியா வந்தனம் செய்துவிட்டுத் திரும்பும் போது, வழியிலேயே கற்பனையின் இன்ப மழையில் சாந்தமாகி விட்டது.

மறுநாள் காலையிலேயே எல்லோரும் வந்துவிடுவதாகத் தந்தி வந்துவிட்டது. ராஜகுமார், பாட்டி, நாட்டுப்பெண், கூட அவர்கள் மனிதர்கள் எல்லோரும் சற்று கும்பலாகத் தான் வருவார்கள். அவருக்கு வீட்டில் வேலை நிறையக் கிடக்கிறது. இன்றும் வானநிலை சரியாக இல்லை. ஆயினும் கூட எங்கே மழை வந்துவிடப் போகிறதோ, தாம் போக முடியாமல் போய்விடப் போகிறதே என்று எண்ணி, ராம் பாபு, பொழுது சாயு முன்பே வண்டி வாடகைக்குப் பேசி அனுப்பிவிட்டு, வண்டிக்காரனுக்கு இனும் கொடுப்பதாகச் சொல்லி அவனை வேகமாக அழைத்துச் செல்லலானார். ஆனால் வழியில் மழைக் காற்று ஜில்லென்று வீசலாயிற்று. அங்கே போய்ச் சேர்ந்ததும் சிறு தூற்றலும் ஆரம்பமாகிவிட்டது.

அசலா வெளியே வந்தாள். 'இந்த மழையில் ஏன் பெரியப்பா வந்தீர்கள்? இன்னும் சற்று நேரம் ஆகியிருந்தால் நனைந்திருக்க மாட்டீர்களா?' என்றாள்.

அவளுடைய முகத்திலும் குரலிலும் எதிர்கால ஆனந்தத்தின் சின்னத்தைக்கூடக் காணாமல் கிழவரின் மனம் விழுந்து போய்விட்டது. அவர் இதை எதிர்பார்க்கவில்லை. யாரோ அவருடைய கற்பனை மாலையை இழுத்து அறுத்து

விட்டதைப் போல் தோன்றியது. ஆயினும் அவர் தம் உற்சாகத்தை நிலைநிறுத்திக்கொண்டு, ' அடேயப்பா! மறுபடியும் என் கவலைதானா? மழையில் நனைந்தால் நான் சமாளித்துக் கொள்வேன். ஆனால் குழந்தைகளை விட்டுவிட்டு எப்பொழுதும் எப்படி இருக்க முடியும்?' என்றார்.

இந்த அறிய முடியாத பெண்ணை இந்தக் கிழவர் ஒருபொழுதும் அறிந்ததில்லை. குறிப்பாக முந்தின இரவு நடந்த காரியங்களால் ஆச்சரியத்தில் அவர் சிந்தை கலங்கிப் போனார். அன்றைச் செய்கையால் திசை தவறித் தவிக்கலானார். அவருடைய ஸுரமா, என்றைக்காவது, எந்தக் காரணத்தினாலாவது, இப்படிச் செய்வாளென்று அவர் கனவில்கூடக் காண முடியாது. விஷயம் என்னவோ இவ்வளவுதான். ஆனால் இதற்குள்ளேயே அந்தப் பெண், பித்துப் பிடித்தவளைப் போல ஓடிவந்து, அவர் மார்பில் விழுந்து தேம்பித் தேம்பி அழுதுகொண்டே, 'பெரியப்பா, நீங்கள் ஏன் என்னிடம் இவ்வளவு அன்பாக இருக்கிறீர்கள்? — நான் வெட்கத்தால் மண்ணோடு மண்ணாக மக்குகிறேனே!' என்றாள்.

வெகு நேரம் வரை ராம் பாபுவால் ஒன்றும் பேச முடியவில்லை. ஒரு கையால் அவளைத் தம் மார்புடன் அணைத்துக் கொண்டு, மற்றொரு கையினால் அவள் தலையைத் தடவிக் கொண்டே நின்றார். சமூகத்தால் ஆமோதிக்கப்படாத அவளுடைய விவாகம், சுற்றத்தார் தாய் தந்தையர்களுடன் சண்டையிட்டு வீட்டைவிட்டு அவர்கள் வந்தது — ஆகிய விஷயங்களை எண்ணி அவருடைய அன்பு கனியும் மனம் அநேகம் தடவைகள் பழக்கமான அதே பழைய போக்கிலேயே போய்க்கொண்டிருந்தது. வேறு விதமான புது வழியைக் காண அவர் நினைக்கவேயில்லை. இந்த விதமாக, அந்த மௌனமாக இருந்த விருத்தரும், அழுதுகொண்டிருக்

கும் பெண்ணும் வெகு நேரம் வரை ஒரே பாவத்துடன் நின்றிருந்தார்கள்.

அதன் பின் ராம் பாபு சாதாரண சுபாவத்துடன், இதில் வெட்கப்படுவதற்கு என்ன அம்மா இருக்கிறது? நீ என் மகள். வெகு நாட்களுக்கு முன் இரண்டு நாள் என் மடியில் தவழ்ந்துவிட்டுச் சென்ற அதே ஸதிலக்ஷ்மிதான் நீ! ஆசையை விட முடியாமல் மறுபடியும் அப்பாவின் மடிக்கு வந்து சேர்ந்துவிட்டாய். நான்தான் உன்னைப் பார்த்ததுமே அறிந்துகொண்டுவிட்டேனே, ஸுரமா!' என்று சொல்லி, அவளை ஒரு நாற்காலியில் உட்காரவைத்துப் பற்பல விதமாக, 'இதில் வெட்கம் ஒன்றும் இல்லை. லஜ்ஜை ஒன்றுமில்லை. யுக யுகமாக இதுதான் நடந்து வருகிறது. ஸதியாக இருப்பவளும், ஆதி சக்தியாக இருப்பவளும் கூட, கணவனுடன் இருப்பதற்காகத் தாய் தந்தையர்களுடனும் சுற்றத்தாருடனும் சண்டை போட்டுக்கொண்டு சென்று விட்டாள். பின்னால் எல்லாம் இனிது நடக்கும், எல்லாம் திருப்பிக் கிடைக்கும். இன்று கோபித்துக்கொண்டிருப்பவர்கள் நாளை முகம் திரும்பிப் பார்ப்பார்கள்; மறுபடி தங்கள் மகனையும் மருமகளையும் வீட்டுக்கு அழைப்பார்கள்! பார்த்துக்கொள் அம்மா! என்னுடைய இந்த ஆசீர்வாதம் பலனற்றுப் போகாது!' என்று அறிவுறுத்தலானார்.

இந்த விதமாகத் தம் மனத்திலுள்ள வேகத்தைக் கிழவர் சொல்லிக்கொண்டே போனார். அதில் சாரமில்லாமல் போனால் போகட்டும், ஆனால் கேட்டவளின் தலை கொஞ்சங் கொஞ்சமாகக் குனிய ஆரம்பித்தது. வெளியே பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. அதே சமயம் ஸுரேசன் நனைந்து கொண்டே சகதியோடு வெளியேயிருந்து ஓடி வந்தான். அவனைக் கண்டதும் அசலா கண்களைத் துடைத்துக்கொண்டு

எழுந்து சென்று, கொஞ்சம் மழைத் தண்ணீரை ஏந்திக் கண்ணீர் வடிந்த சின்னத்தையும் துடைத்துக்கொண்டு, தன்னிடத்தில் அமர்ந்தாள். காரணம் எதுவாயிருப்பினும், ஸுரமா தன் கண்ணீரின் சரித்திரத்தைக் கணவனுக்குத் தெரியாமல் மறைத்துவைக்க விரும்புகிறாள் என்பதை ராம் பாபு உணர்ந்துகொண்டார்.

ஸுரேசன் மேலே வந்து ராம் பாபுவைக் கண்டதும் ஆச்சரியமடைந்து போனான். அவன் ஏதோ சொல்ல விரும்பினான். அதற்குள் ராம் பாபு வருத்தத்துடன், 'பிறகு பேசலாம்! நான் ஓடிப்போக மாட்டேன்! நீங்கள் முதலில் சென்று ஆடை மாற்றிக்கொண்டு வாருங்கள்!' என்றார்.

ஸுரேசன் சிரித்துவிட்டு, 'இதொன்றுமில்லை!' என்று சொல்லி ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்காரலானான். இதற்குள் அசலா தலை நிமிர்ந்து அவன் பக்கம் பார்த்து, 'பெரியப்பாவின் வார்த்தைகளைக் கேட்பதில் கெடுதலென்ன இருக்கிறது? ஒரு மாதங்கூட ஆகவில்லையே படுக்கையை விட்டெழுந்து — திரும்பத் திரும்ப எனக்கு எவ்வளவு தண்டனை கொடுக்க விரும்புகிறீர்கள்?' என்றாள்.

அவள் பேச்சு, அவள் தோற்றம் இவைகள் இருந்த முறையைக் கண்டு இருவரும் ஆச்சரிய மடைந்தனர். ஆனால் இந்த ஆச்சரியத்தின் பெருக்கு எதிரிடையாக வேறு திசையில் பெருகியது. ஸுரேசன் பதில் சொல்லாமல் கட்டளையை நிறைவேற்றச் சென்றான். ராம் பாபு வெளியே பார்க்கலானார்.

வெளியே மழை பெய்துகொண்டிருந்தது. இரவு ஆக ஆக மழையும் வலுத்துக்கொண்டே வந்தது. வெகு நாட்களாக மழையில்லாததால் பூமி வரண்டு கிடந்தது. அந்த வரட்சியை அன்று ஓர் இரவிலேயே நீக்கிவிட இயற்கை கங்கணம் கட்டிக்கொண்டதைப் போல் தோன்றியது.

ராம் பாபுவின் உத்வேகத்தைப் பார்த்து அசலா தயக்கத்துடன், 'வீட்டுக்குப் போவதற்குச் சிரமமாக இருக்கும் போலிருக்கிறதே பெரியப்பா, இன்றிரவு போகாவிட்டால் என்ன ?' என்றாள்.

அவர் சிரித்துக்கொண்டே தம்முடைய மனோ சஞ்சலத்தை அடக்கிக்கொண்டு, 'கஷ்டம் என்ன இருக்கிறது? இம்மாதிரியான மழையிலும் காற்றிலும் உங்களை இந்தப் புதிய இடத்தில் விட்டுவிட்டு நான் போக மாட்டேன். ஆனால் நாளைக் காலையிலேயே எல்லோரும் வருகிறார்கள். ராத்திரி வீட்டுக்குப் போகாவிட்டால் ஒன்றும் நடக்காது, ஸாரமா! என் அபிப்பிராயம் இதுவல்ல. மழை இப்படியே இருக்காது. ஒருமணி நேரத்திற்கெல்லாம் நின்றுவிடும். அதுவரை இருக்கிறேன்!' என்றார்.

இந்தப் பிரசங்கத்தில், நாளை வரப்போகிறவர்களில் ஆரம்பித்து, உலக தர்மம், சமூக தர்ம - அதர்மம், இகலோக பரலோக விஷயம்வரை சர்ச்சை நடந்தது. இரவு நேரம் எவ்வளவு ஆயிற்றென்பதே தெரியாமல் இருவரும் அதில் ஆழ்ந்திருந்தனர். வெளியே இடி மின்னலுடன் மழை மேன்மேலும் வலுத்து வருகிறது, இருள் எவ்வளவு பயங்கரமாகிறதென்பதை யாரும் கவனிக்கவே யில்லை. அந்தக் கிழவர் தம்மிடமுள்ள ஞானம், சாரமற்ற இந்த உலகில் உள்ள ஞான சூனியம், பக்தி பாவம் — யாவற்றையும் தம்முடைய அன்புமிக்க இந்தப் பெண்ணின்முன் கூறத் தடையேதும் இல்லாமல், இருவர் மட்டுமே நிறைந்த அந்தச் ச்பையை மாதுரியம் நிறைந்ததாகச் செய்தார். அசலாவுக்கிருந்த உணர்ச்சியில் இவ்வளவுதான் தெரிந்தது. பாபமற்ற ஓர் உள்ளத்தின் உண்மையான அனுதாபம், சிரத்தை, அன்பு இவைகளைப் பூரணமாகத் தான் பெற்றுக்கொண்டிருப்பதாகவே தோன்றியது.

திடீரென்று காலடிச் சத்தம் கேட்டு இருவரும் பின்னல் திரும்பிப் பார்த்தார்கள். வேலைக்காரன் நின்றுகொண்டிருந்தான். அவன், 'அம்மா! இரவு நெடுநேர மாகிவிட்டது. மணி பன்னிரண்டுக்குக் கிட்டத்தட்ட ஆகிவிட்டது! தங்கள் சாப்பாட்டுத் தட்டைக் கொண்டுவரட்டுமா?' என்றான்.

அசலா திடுக்கிட்டு, 'பன்னிரண்டு அடித்துவிட்டதா? பாபு—?'

'அவர் இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குச் சென்றார்.'

ஸுரேசன் அப்பொழுது சென்றவன் அதுவரை திரும்பி வரவில்லை என்பது அப்பொழுதுதான் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அசலா எட்டிப் பார்த்தாள். ஸுரேசனின் அறையின் திரையின் பின் வெளிச்சம் தெரிந்தது. ராம் பாபு வருத்தமும் வெட்கமும் அடைந்தவராய், 'என்னல் பெரிய தவறு நேர்ந்துவிட்டதம்மா! உன்னை இங்கே தடை செய்துவிட்டேன். அவருக்குச் சாப்பாடுகூடச் சரியாகக் கிடைக்கவில்லை. நீ பார்க்கக்கூட இல்லை. நீ போ அம்மா! சாப்பிட்டு......' என்று திரும்பத் திரும்பக் கூறலானர்.

அசலா இந்த வார்த்தைக்குப் பதில் சொல்லாமல் வேலைக்காரனிடம், 'வண்டிக்காரன் ஏன் சரியான சமயத்தில் வண்டியைப் பூட்டிக்கொண்டு வரவில்லை?' என்றாள்.

'புதுக் குதிரைகள்! இந்த மழையிலும் காற்றிலும் வண்டியைப் பூட்டிக்கொண்டு வரத் தைரியம் வரவில்லை!'

'அப்படியானல் வேறு ஏதாவது ஒரு வண்டியைக் கொண்டுவருவதுதானே!'

வேலைக்காரன் சும்மா இருந்தான். இதன் கருத்து குற்றத்தை ஒப்புக்கொண்டதாக அர்த்தமல்ல. இந்த மாதிரி உத்தரவு கிடைக்கவில்லை என்று அவன் பதில் சொல்வது போலிருந்தது.

ராம் பாபு ஆத்திரமடைவதற்குப் பதிலாக வெட்கத்துடன், திரும்பத் திரும்ப, 'வண்டிக்கு அவசியமில்லை. போகாவிட்டாலும் ஒன்றும் முழுகிப்போகப் போவதில்லை. காலையில் எழுந்து ஸ்டேஷனுக்குச் சென்றால் காரியம் ஆகிவிடும். நான் இரவில் சாப்பிடுவதில்லை. அதைப் பற்றியும் சங்கடமில்லை. நீ மாத்திரம் ஏதாவது சாப்பிட்டுவிட்டுத் தூங்கப் போ அம்மா! பேசிப் பேசி ராத்திரி வெகுநேரமாகிவிட்டது. நான் பெரிய தவறு செய்துவிட்டேன்!' என்று சொல்லிக்கொண்டே அவர் ஒருவிதமாக அசலாவைக் கட்டாயப்படுத்திச் சாப்பிடுவதற்காகக் கீழே அனுப்பினார். கிட்டத்தட்டப் பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவள் மேலே வந்தபோது, அவர் ஆத்திரமும் வருத்தமும் அடைந்தவராய், 'போதும் இனி ஒரு நிமிஷம்கூடத் தாமதம் செய்யாதே! போ, போய்த் தூங்கு! போ! நான் கூடத்தில் சோபாவில் சுகமாகத் தூங்குகிறேன். எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. போ; போய்த் தூங்கு!' என்றார்.

கிழவர் திரும்பத் திரும்ப வற்புறுத்தியதினாலும், தன்னுடைய மனக் குழப்பத்தினாலும், அசலாவுக்குத் தன்மேல் யாரோ ஒரு வலையை வீசியதைப் போல் தோன்றியது. தன்னுடைய நன்மையைக் கருதும் தந்தை போன்ற இந்தக் கிழவரிடம் இதுவரை ஏமாற்றிப் பெற்றுவந்த அன்பு, மரியாதை இவைகளே அன்று அந்தத் துக்ககரமான சமயத்தில் அவள் குரலைத் தடுத்து, எதிர்ப்புப் பலத்தினால் அவளைப் பலவந்தமாக ஸுரேசனின் சயன அறையின் பக்கம் தள்ளலாயின. இதே மாதிரி மழையும் காற்றும் சூழ்ந்திருந்த ஓர் இரவுதான் தன்னைத் தன் கணவனிடமிருந்து பிரித்தது என்பது அவள் நினைவுக்கு வந்தது. இன்று மறுபடியும் அதே மாதிரியான ஓர் இரவின் தவிர்க்க முடியாத சாபம் அவளை எக் காலத்திற்கும் எல்லையற்ற அந்தகாரத்தில்

ஆழ்த்தத் தயாராக நின்றிருந்தது. இனி சகிக்க முடியாத அவமானத்தினால், வெட்கத்தின் ஆழ்ந்த சேற்றில் அவள் கழுத்துவரை அழுந்திவிடுவாள். இது அவள் கண்களுக்கு ஸ்பஷ்டமாக விளங்கியது. ஆயினும் கூட அன்று அந்தப் பொய்யே வெற்றியடைந்தது. அவளை எவ்விதத்திலும் உண்மையைச் சொல்ல விடவில்லை. வாழ்க்கையின் இந்தக் கடைசி நிமிஷத்தில், கர்வமும் ஆசையுமே அவளை நிரந்தரமாக ஜயித்துவிட்டன. அவள் தடுக்கவில்லை, பேசவில்லை. ஒருதரம் பின்னால் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவள் பேசாமல் மெள்ள மெள்ள ஸுரேசனின் படுக்கை யறைக்கு வந்துசேர்ந்தாள்.

வெளியே வெறிகொண்ட இயற்கை அப்படியேதான் இருந்தது. ஆழ்ந்த இருளில் மின்னல் சிரித்துக்கொண்டிருந்தது. இரவு முழுவதும் துளிகூட மாறுதல் இல்லை.

* * * *

புது இடத்தில் ராம் பாபுவுக்குத் தூக்கம் வரவில்லை. விசேஷமாக மனத்தில் கவலை இருந்ததினால் கிழக்கு வெளுத்ததுமே விழிப்புக் கொடுத்துவிட்டது. வெளியே வந்து பார்த்தார். மழை நின்றிருந்தது. ஆனால் அவர் ஆத்திரம் அகலவில்லை. வேலைக்காரர்கள் எழுந்திருந்துவிட்டார்களா இல்லையா என்பதைப் பார்ப்பதற்காகத் தாழ்வாரத்தின் ஒரு பக்கமாக வந்ததும் அவர் திடுக்கிட்டுப் போய்விட்டார். யாரோ மேஜையின் மேல் தலை கவிழ்த்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள். அருகே சென்று பார்த்தால் - அசலா! அவர் ஆச்சரியத்துடன், 'ஸுரமா நீ எங்கே இங்கு......? இவ்வளவு சீக்கிரம் ஏனம்மா எழுந்தாய்?' என்றார்.

ஸுரமா ஒருதரம் தலை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் அதே போல் மேஜைமேல் கவிழ்ந்துகொண்டாள். அவள் முகம் சவம் போல் வெளுத்திருந்தது. கண்களின் கீழ்

கருமை கொண்டிருந்தது. கரும் பாறையிலிருந்து தண்ணீர் பெருகுவதைப் போல் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது.

கிழ ராம் பாபுவின் வாயினின்றும் ஸ்பஷ்டமற்ற சப்தம் ஒன்று வெளியாயிற்று. அவர் ஒரே விறைப்புடன் பாதி இறந்த அந்தப் பெண்ணின் பக்கம் பார்த்துக் கொண்டே நின்றார். ஒரு வார்த்தைகூட அவர் வாயினின்றும் வெளிவர முடியவில்லை.



# XV

காலையில் எழுந்து ஒரு வாய் ஆகாரம் போட்டுக் கொண்டு, அரை டம்ளர் டீயும் குடித்துவிட்டு, கேதார் பாபு திருப்தியாக ஒரு பெரு மூச்சு விட்டுக்கொண்டார். சாப்பிட்ட பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போவதற்காக மிருணாளினி வந்த போது, அவர் அவளிடம், 'அம்மா, உன்னுடைய இந்த ஒரு வாய் ஆகாரத்திலும், ஒரு வாய் டீயிலும் எவ்வளவு அமிர்தம் நிறைந்திருக்கிறது! ஒரு மாதமாயிற்று, நான் இங்கிருந்து அசைய முடியவில்லையே!' என்றார்.

அசலாவின் உறவினால் மிருணாளினி அவரை 'அப்பா' என்று சொல்ல ஆரம்பித்திருந்தாள். 'ஏன் அப்பா, நீங்கள் இதை விட்டு ஓட முயற்சித்துக்கொண்டிருக்கிறீர்களா என்ன? உங்களுடைய இந்த...எனக்குச் சேவை செய்யத் தெரியாதா?' என்றாள்.

'உங்களுடைய இந்தப் பெண்' என்று மிருணாளினி தன்னைப்பற்றி அஜாக்கிரதையாகச் சொல்லிக்கொண்டு போனாள். ஆனால் அதை மறைத்துக்கொண்டு வாக்கியத்தின் முடிவை மாற்றினாள். கேதார் பாபுவும் அறிந்தும் அறியாதவர் போலிருந்தார். ஆனால் அவருடைய குரல் சட்டென்று இளகி விட்டது. அவர், 'ஓடுவதற்கு எங்கே முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்? உன் கையால் போட்ட 'டீ', உன் கையால் சமைத்த சாப்பாடு, உன்னுடைய இந்த மண் வீடு - இவைகளை விட்டுவிட்டு எனக்கு ஸ்வர்க்கத்திற்குச் செல்லக்

கூடப் பிரியமில்லை. நான் அந்தச் சிறிய ஜன்னல் முன் உட்கார்ந்து, 'கடவுள் கிருபையால் இன்னும் இரண்டு வருஷம் ஜீவித்திருந்தால், கல்கத்தாவிலேயே இருந்து நஷ்டப் படுத்திக்கொண்ட வாழ்க்கையை யெல்லாம் இங்கே பூர்த்தி செய்துகொள்வேன். மூல தனத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவர் முன் சென்று நிற்க முடியும் என்பதைத்தான் அடிக்கடி யோசிக்கிறேன்' என்றார்.

எவ்வளவு வேதனையுடன் இதைச் சொன்னார், உள்ளத்தைச் சுடும் எத்தகைய வெட்கத்தினால் வெகு நாட்களாகப் பழகிய கல்கத்தா வீட்டையும் சமூகத்தையும் விட்டுவிட்டு, 'இந்தப் பட்டிக்காட்டில் இந்த ஓட்டைக் குடிசையில் மிகுந்த நாட்களைக் கழிக்கிறேன்' என்று தம் கருத்தை வெளியிட்டார் என்பதை மிருணாளினி அறிந்துகொண்டாள். ஆகையால் அவள் பதிலே சொல்லாமல் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு மெள்ளச் சென்றாள்.

இங்கே முந்திய சில விஷயங்களைச் சொல்லவேண்டியது அவசியமாகிறது. கேதார் பாபு இங்கே வந்து கிட்டத்தட்ட ஒரு மாதமாகிறது. அப்பொழுதிலிருந்து திரும்ப முடியவில்லை. மஹிம் தேக அசௌக்கியமாக இருந்த பொழுது கல்கத்தாவில் ஸுரேசனின் வீட்டில் இந்த விதவைப் பெண்ணுடன் அவருக்குப் பரிசயம் ஏற்பட்டது. ஆனால் இங்கே அவளுடைய வீட்டுக்கு வந்து தங்கின பிறகு ஏற்பட்ட பழக்கம் அவருடைய மனம் உடல் இரண்டையும் தங்கச் சங்கிலி போட்டுப் பிணித்துவிட்டது. இந்தக் கட்டிலிருந்து தம்மைத் தாம் விடுவித்துக்கொள்ள முடியவில்லை. ஆகையால் அவருடைய அநேக முக்கிய வேலைகள் முடிவுறாமல் கிடந்தன.

மஹிமை அவர் சந்திக்கவில்லை. இவர் வருகிறார் என்ற செய்தியைக் கேட்டதுமே அவன் வருத்தத்துடன் சென்று

விட்டான். போகும் போது மிருணாளினி அவனை இருக்கும்படி வற்புறுத்தவில்லை. காரணம், சிறு வயதிலிருந்தே தன்னுடைய அந்தச் சகோதரனின் பொறுமை, புத்தி, ஆராயுந் தன்மை இவைகளில் அவளுக்கு மிக்க மதிப்புண்டு. அசலாவைச் சந்திக்க விரும்பாததினால்தான் அவன் அங்கிருந்து செல்கிறான் என்பதை அவள் நன்கு அறிந்து கொண்டாள். தன்னுடைய கடிதத்தைப் பார்த்துவிட்டே கேதார் பாபு மகளையும் மருமகனையும் ஒன்று சேர்த்துவிடவே இவ்வளவு வேகமாக அவளைக் கூட அழைத்துக்கொண்டு வருகிறார் என்றெண்ணினாள்.

இதுவரை இதைப் பற்றி ஒன்றும் வெளிப்படவில்லை. சம்சயத்தின் சுமையினால் தவித்துக்கொண்டே நாட்கள் ஒன்றன் பின் ஒன்றாக மௌனமாகக் கழிந்தன. மேலெழுந்த வாரியாக மாத்திரம் பார்த்தால், வானத்தில் இருக்கும் சிதைக்க முடியாத கருமேகம் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் சிதறக்கூடும். ஆயினும் அதனுள் அந்தகாரம்தான் சூழ்ந்திருந்தது; சந்திரனின் ஒளியே இல்லை.

ஸுரேசனின் அத்தை காணமற் போன தன் மருமகனைப் பற்றிக் கவலை கொண்டு மிருணாளினிக்கு ஒரு கடிதம் எழுதினாள். அது கேதார் பாபுவின் கைக்குக் கிடைத்தது. மஹிமும் தான் ஒரு ஜமீன்தாரிடம் வீட்டு உபாத்தியாயராக இருப்பதாக எழுதியிருந்தான். அந்தக் கடிதமும் அவருக்குக் கிடைத்தது. அதைத் திருப்பித் திருப்பிப் படித்தார், ஆனால் அதில் தம் பெண்ணின் பெயரைக்கூட மஹிம் குறிப்பிடவில்லை. இந்த விதமாக இரண்டு கடிதங்களும் ஒரே விஷயத்தை இந்தத் துரதிர்ஷ்டத் தந்தையின் செவிகளில் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தன. ஆயினும் அதை உண்மையென்று உணர அவரிடம் சக்தியில்லை.

அசலா அவருடைய ஒரே பெண் என்பது மட்டும் விஷயம் அல்ல; சிறு வயதில் அவளுடைய தாய் இறந்ததும் அவரே தாயின் ஸ்தானத்தில் இருந்து அவளை எடுத்து வளர்த்தார். அந்தப் பெண்ணுக்கு நேரும் பெரும் தீங்கை எண்ணி அவர் உடல் நாளுக்கு நாள் மெலியலாயிற்று. பொன் போன்றிருந்த அவர் சரீரம் கறுத்தது. ஆனால் இந்தத் தீமை எந்த வழியாக வந்துகொண்டிருந்ததோ அந்த வழி அவருக்கு உலகில் பெரும் மூடு மந்திரமாகவே இருந்தது.

அக்கம் பக்கத்திலுள்ள கிராமத்துக் கிழவர்கள் இரண்டொருவர் அவரிடம் பேச வருவது வழக்கம். ஆனால் சங்கோசத்தினால் அவர் யார் வீட்டுக்கும் போவதில்லை. மிருணாளினி இது விஷயமாக எப்பொழுதாவது ஏதாவது சொன்னால் கூட, அவர் சிரித்துக்கொண்டே, 'அவசிய மென்ன இருக்கிறது, அம்மா? என் போன்ற மிலேச்சர்கள் பிறர் வீட்டுக்குச் செல்லாம லிருப்பதே நல்லது' என்று சொல்லி விடுவார்.

'அப்படியானால் அவர்கள் ஏன் வருகிறார்கள்?' என்று கேட்பாள் மிருணாளினி. கேதார் பாபு அவள் வார்த்தைகளுக்குப் பதில் சொல்லாமல் குடையை எடுத்துக்கொண்டு திறந்த வெளியைப் பார்க்கப் போய்விடுவார். அங்கே குடியானவர்களுடன் தாமே பேச்சுக் கொடுத்துப் பரிசயம் செய்து கொள்வார். அவர்களுடைய சுக துக்கங்கள், நியாய - அநியாயம், பாப - புண்ணியம் இவ்விதம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு, வெகு நேரம் கழித்து வீட்டுக்கு வந்து சேருவார். பிரதி தினம் டீ குடித்த பிறகு இதுதான் அவருடைய வேலை.

பிறந்ததிலிருந்து அவர் கல்கத்தாவிலேயே இருந்தவர். நகரத்திற்கு வெளியே உள்ள கணக்கற்ற கிராமங்களின் தொடர்புச் சரடு பல தலைமுறைகளுக்கு முன்பே அறுந்து விட்டது. சுற்றத்தாரும், அவருடைய மத மாறுதலால் விலகி

விட்டனர். ஆகையால் பெருவாரியான நகர வாசிகளைப் போல் அவருக்கும் இவைகளைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருந்தும்கூட, இதைப்பற்றி விதவிதமான நினைவுகள் இருந்த தென்றால், அது ஆச்சரியம் அல்ல. படிப்பற்று நகரத்தை எட்டிப் பார்க்கும் பாக்கியம்கூடச் செய்யாமல் தூரத்துக் கிராமத்தில் வசிக்கும் குடியானவர்களை அவர் ஒருவிதமான மிருகங்கள் என்றே எண்ணியிருந்தார். அந்தச் சமூகத்தை ஒரு காட்டுமிராண்டிச் சமூகம் என்றே எண்ணியிருந்தார். ஆனால் இன்று, துர்ப்பாக்கிய வசத்தால் தம்முடைய விஷப் பல்லே தம் ஹிருதயத்தைத் துளைத்துத் தம் சமூகத்தி னிடம் வெறுப்புக்கொள்ளச் செய்த போது, எழுத்தறிவற்ற கிராமத்து ஏழைக் குடியானவர்களிடம் அவருடைய நட்புப் பெருகப் பெருக, அவர்களிடம் அன்பும் மதிப்பும் பெருகியது. கூடவே தம்முடைய சமூகம், அதனுடைய பழக்க வழக்கங்கள், கல்வி, நாகரிகம், தர்மம், சட்ட திட்டங்கள் இவைகளிலெல்லாம் துவேஷமும் விரக்தியும் ஏற்பட்டு அவர் மனம் அவைகளுக்கு எதிரிடையாக முரண்டியது.

இவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்த போதிலும் சிக்ஷையற்றவர்களல்ல. யுகக் கணக்கான பிராசீன நாகரிகம் இன்று இந்தச் சமூகத்தின் நரம்புகளில் இருக்கிறது. நீதியின் முக்கிய விஷயங்களை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். எந்த மதத்திடமும் இவர்களுக்குத் துவேஷமேயில்லை. காரணம் உலகத்தின் மதங்களுக் கெல்லாம் மூலம் ஒன்றுதான். முப்பத்தி முக்கோடி தேவதைகளைப் பூஜித்தும் ஒரு கடவுளை ஒப்புக்கொள்ளுகின்றனர். இந்த விஷயத்தில் இவர்களுக்கு இருக்கும் ஞானம் வேறு யாருக்கும் குறைந்ததல்ல. ஹிந்துக்களின் பகவான், முஸ்லிம்களின் அல்லா, எல்லாம் ஒரே பரம்பொருள்தான் என்ற உண்மை இவர்களுக்குத் தெரியாத தல்ல என்பதை ஸ்பஷ்டமாகக் கண்டார்.

அவர் மனம் வெட்கமடைந்து, அடிக்கடி, 'இவர்கள் எந்த விஷயத்தில் நமக்குக் குறைந்தவர்கள்? இவர்களைவிட அதிகமாக நமக்கு என்ன தெரியும்? எதற்காக இவர்களுடைய சமூகத்தையும் இவர்கள் சம்பந்தத்தையும் தியாகம் செய்துவிட்டு நாம் இவ்வளவு தூரம் சென்றிருக்கிறோம்? அந்தத் தூரம் ஏன் நம்மை முற்றிலும் மிலேச்சனுக்கக்கூடிய அவ்வளவு தொலையாக இருக்கிறது?' என்று எண்ணும்.

இந்த விதமான மனத்துடன் அன்று அவர் வீடு திரும்பும் போது மணி பத்தாகிவிட்டது. மிருணாளினி அவரிடம் வந்து, 'அப்பா, நேற்று உங்கள் உடம்பு சரியாக இல்லை. இன்று ஸ்நானம் செய்யக் குளத்திற்கு எங்கேயும் போக வேண்டாம். உங்களுக்காக நான் வெந்நீர் போட்டிருக்கிறேன்' என்றாள்.

'வெந்நீர் போட்டுவைத்து விட்டாயா?' என்று கேட்டுக் கொண்டே கேதார் பாபு அவள் முகத்தைப் பார்த்தார்.

ஸ்நானம் செய்துவிட்டு ஸந்தியா ஜபம் செய்ய உட்கார்ந்திருந்தாள் மிருணாளினி. இவர் வரும் சப்தத்தைக் கேட்டு எழுந்து வந்தாள். அவளுடைய நனைந்த தலை மயிர் முதுகின் மேல் விரிந்து கிடந்தது. பட்டாடை அணிந்திருந்தாள்; முகம் சந்தோஷமாக இருந்தது. அவளுடைய மேனி முழுவதும் நிர்மலமான பரிசுத்தம் குடிகொண்டிருந்தது. கேதார் பாபு அவளைப் பார்த்துக்கொண்டே, 'ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளுகிறாய்? இதற்கு அவசியமொன்றுமில்லையே!' என்று சொல்லிச் சற்று நிறுத்தி, பிறகு, 'நான் கல்கத்தா மனிதன், ஆறு குளங்களில் ஸ்நானம் செய்துதான் எனக்கு வழக்கம். ஆனால் மிருணாளினி, நீ எனக்களித்திருக்கும் ஆச்சரியம் உன்னுடைய இந்த நாற்றக் குளம்கூட எனக்குத் தொண்டு செய்யாமலிருக்க முடியாது. அதன் தண்ணீரினால் என் ஆரோக்கியம் கெட்டுவிடாது. நான்

குளத்திலேயே ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன்' என்றார்.

மிருணாளினி தலை நிமிர்ந்து, 'இல்லை அப்பா! அது முடியாது. நேற்று உங்களுக்கு உடம்பு சரியில்லை. அது எனக்குத் தெரியும். நான் வெந்நீர் எடுத்து வைக்கிறேன். நீங்கள் அதற்குள் எண்ணெய் தடவிக்கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டு அவள் போய்க்கொண்டிருக்கும் போதே, கேதார் பாபு, 'ஆனால் கொண்டுவரத்தான் போகிறாய்! இன்றைக்கு ஒரு விஷயத்தைச் சொல்லு, மிருணாளினி! இம்மாதிரி பிறருக்குச் சேவை செய்யும் படிப்பு இந்த வயதில் உனக்கு யார் சொல்லிக்கொடுத்தார்கள்? இம்மாதிரி நான் எங்குமே கண்டதில்லையே, அம்மா!' என்றார்.

வெட்கத்தினால் மிருணாளினியின் முகம் வாடியது. ஆயினும் அவள் பலவந்தமாகச் சிரித்துக்கொண்டே, 'நீங்கள் எனக்கு அந்நியரா, அப்பா?' என்றாள்.

'இல்லை! அந்நியனல்ல! நான் உன் மகன்! ஆனால் இம்மாதிரி விடுதலை கிடைத்துவிடாது. இதற்கு நீ பதில் சொல்லியே ஆகவேண்டும்!' என்றார்.

மிருணாளினி திரும்பி நின்று முன்போல் வெட்கத்துடன் சிரித்துக்கொண்டே, 'முயற்சி செய்து கற்றுக் கொள்ள அப்படிப்பட்ட கடினமான வேலையா என்ன? இது நாங்கள் பிறந்ததிலிருந்தே கற்றுக்கொண்டிருக்கிறோம். சரி, வெந்நீர் ஆறிப் போகிறது, செல்லுங்கள்!' என்றாள்.

'அது ஆறினால் ஆறிப் போகட்டும்' என்று சொல்லி, கேதார் பாபு சற்றுக் கம்பீரத்துடன் மேலும், 'மிருணாளினி நானும் சில தினங்களாக இதைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். மனிதன் கற்றுக்கொண்டு நீந்துகிறான். ஆனால் நீர்வாழ் ஜந்துக்கள் பிறந்ததிலிருந்தே நீந்த ஆரம்பித்துவிடுகின்றன. அவை கற்றுக்கொள்வதை யாரும் பார்த்ததே கிடை

யாது. ஆனால் உழைப்பினின்றும் மனத்தைத் திருடிப் பல னடைய உபாயம் ஒன்றுமில்லையே, அம்மா! இதுதான் கடவு ளின் நியதி. எங்கேயாவது எப்படியாவது கற்றுக்கொள்ளும் சிரமத்தை மேற்கொள்ள வேண்டியே இருக்கிறது. ஆகை யால் நீ எந்தக் கூண்டி லிருந்துகொண்டு பிறந்ததிலிருந்தே சுலபமாக இந்த வித்தையைக் கற்றாயோ உன்னுடைய விசால மான அந்தச் சமூகத்தின் விஷயத்தைப் பற்றித்தான் யோசித் துக்கொண்டிருக்கிறேன். நான் நினைக்கிறேன்—' என்று கூறி நிறுத்தினார்.

'அதிருக்கட்டும், உங்கள் ஜலம் ஆறிப்போகிறது—'

'இருக்கட்டும் அம்மா அந்த ஜலம். குளம் வற்றியா போய்விட்டது! உன்னுடைய கிழப் புதல்வன் சிறு குழந் தையைப் போலத் தாயினிடம் எத்தனை விஷயங்களை மௌன மாகக் கற்றுக்கொள்ளுகிறான் என்பதே அவனுக்குத் தெரி யாது என்று நினைக்கிறேன். இதுவரை சாமி, தெய் வம், மந்திர தந்திரங்களில் துளிகூட நம்பிக்கை யில்லாத வனுக்குத் தன் தாய் ஸ்நானம் செய்து பட்டு வஸ்திர மணிந்து ஜபம் செய்யச் செல்லும் போது தானும் பூணூ லணிந்து அதே மாதிரி பூஜா பாத்திரங்கள் எடுத்துக் கொண்டு செல்லலாமா என்று தோன்றுகிறது!' என்றார் கேதார் பாபு.

'ஏன் அப்பா, நீங்கள் உங்கள் தர்மம், உங்கள் சமூகம் இவைகளை விட்டுப் பிறருடைய ஆசாரங்களை ஏன் கடைப் பிடிக்கப் போகிறீர்கள்? அதையும் யாரும் ஒன்றும் குறை கூற முடியாதே!'

'யாராவது குறை கூற முடியுமோ முடியாதோ, அது வேறு விஷயம். நான் அதற்குத் தீங்கிழைக்க மாட்டேன். அது நல்லதாக இருக்கட்டும், இல்லை, கெட்டதாக இருக்கட்டும். இந்த வயதில் அதை விட்டுவிட என்னிடம் சக்தியும் இல்லை.

மாற்றிக்கொள்ள வேண்டிய புருஷார்த்தமும் இல்லை. அந்த வழியிலேயேதான் ஆயுள்முடியும்வரை போய்த் தீரவேண்டும். ஆனால் இந்த வயதிலேயே இவ்வளவு தன்னலப்பற்றற்ற தன்மையும், ஸ்வர்க்கம் சென்றுவிட்டவரிடம் இவ்வளவு பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருக்கும் உன்னைப் பார்க்கும் போது உன்னைத் தாய்க்குத் தாயாக எண்ணி—......சரி போகட்டும்! இனிமேல் சொல்ல மாட்டேன், ஆனால் நான் எந்தச் சமூகத்திலிருந்து குழந்தைப் பருவம் முதல் கிழவன் வரை வளர்ந்தேனோ, அந்தச் சமூகத்தை மனத்திற்குள் ஒத்திட்டுப் பார்க்காமல் இருக்க முடியாது. சமூகமில்லாமல் இருக்கும் தர்மத்தினிடம் என் சிரத்தை நிலைத்திருக்காது போல் தோன்றுகிறதே!' என்றார்.

மிருணாளினி மனத்திற்குள் வருத்த மடைந்தாள். அவளுடைய தனி மனித வாழ்க்கையின் துர்ப்பாக்கியத்தை அவர் இம்மாதிரி தம் சமூகத்தின் சிக்ஷை - தீக்ஷைகளின் மேல் சுமத்துவது அவளுக்கு முற்றிலும் அநீதியாகத் தோன்றியது. அவள், 'அப்பா! நீங்கள் இந்த மாதிரி நமது சமூகத்தைப் பார்க்கப் புகுந்தால் இதிலும் தங்களுக்குப் பல பிழைகளும் பல தோஷங்களும் தென்படும். நாமும் நமது குற்றங்களைச் சமூகத்தின் தலையில் சுமத்த ஆவலுடன் இருக்கிறோம். நாமும்—' என்றாள்.

வார்த்தை பூர்த்தியாகு முன்பே, கேதார் பாபு, 'நான் ஆவலுடன், 'இல்லை, அம்மா! உன்னுடைய சமூகத்தில் எவ்வளவுதான் குறைபாடுகள் இருந்தாலும், பிழைகள் இருந்தாலும், நீ தான் அங்கே இருக்கிறாயே! இந்த வஸ்து எங்கவிடம் தலையை முட்டிக்கொண்டாலும் கிடைக்காது!' என்றார்.

மிருணாளினி வெட்கத்தினால் குன்றிப்போய், 'நீங்கள் இந்த மாதிரி என்னை அடிக்கடி வெட்கப்படுத்திக்கொண்டே

இருக்கப் போகிறீர்களா, அப்பா? பிறகு நான் நீங்கள் தேடி ஞலும் கிடைக்காத இடத்திற்கு ஓடிப் போய்விடுவேன்! இதை முதலிலேயே சொல்லி வைக்கிறேன்!' என்ருள்.

கிழவர் தற்காலிகமாகப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பேசாமல் வரண்ட முகத்துடன் அவள் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு மெள்ள, 'நானும் உன்னிடம் இன்றைக்குச் சொல்லி வைக்கிறேன், அம்மா! உன்னை இந்தக் காரியம் செய்ய விடமாட்டேன்! நீ என் கண்ணின் மணி, என் தாய்! நீதான் என் ஒரே ஒரு புகலிடம். இந்த அறைத் தந்தையின் பாரத்திலிருந்து உனக்கு விடுதலை பெறும் தினம் வரும், அம்மா! அதற்கு அதிகத் தாமதம்கூட ஆகாது. நான் அதைக் கண்ணுல் பார்க்க முடியாது, ஆயினும் நான் நன்ருக அறிவேன்' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவர் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

கேதார் பாபு சட்டைத் தலைப்பினுல் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'என்னுடைய இன்னொரு வேலை பாக்கியிருக்கிறது. மஹிமைச் சந்திக்க வேண்டும். ஏன் அவன் இம்மாதிரி அலைந்து திரிந்துகொண்டிருக்கிருன் என்று அவனிடம் ஒருதரம் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். அவன் உயிரோடு இல்லாமலும் இருக்கலாம்!' என்ருர்.

'அப்பா, நீங்கள் ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்?'

'பயமா?' கிழவர் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு, 'குழந்தையின் சாவுதான் தாய் தந்தையருக்குப் பெரும் பயம் என்பதல்ல, அம்மா!' என்ருர்.

## XVI

தம்முடைய ஒரே பெண்ணின் மரணத்தைவிட மோசமான துர்க்கதி தந்தையின் கண்முன் பெரிதாகிக் காட்சி யளிக்கிறது என்பதை அறிந்துகொண்ட மிருணாளினி, சங்கையும் வெட்கமு மடைந்து, ஒரு பக்கமாக நழுவிச் சென்றாள். இந்த ஸதி-ஸாத்வியான விதவைப் பெண்ணின் வெட்கம் ஒரு பெரும் கோடரி போல் அவர் மார்பில் வந்து விழுந்தது. வெகு நேரம் வரை பேசாமல் உட்கார்ந்து தம் வெள்ளைத் தாடியை உருவிக்கொண்டிருந்தார் கேதார் பாபு. கடைசியில் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு எண்ணெய்க் கிண்ணத்தை எடுத்துக்கொண்டார்.

அன்று காலையிலிருந்து வானம் நிர்மலமாக இருந்தது. உச்சி வேளைக்குப் பிறகு சிறிது மப்புப் போட ஆரம்பித்தது. கேதார் பாபு படுக்கையில் உட்கார்ந்து மேற்குப் பக்கத்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தார். எதிரே ஒரு மாமரம் இருந்தது. நன்றாகப் பூத்திருந்த அந்த மரத்தில் கணக்கற்ற தேன் வண்டுகள் ரீங்காரமிட்டுத் தேன் குடித்துக்கொண்டிருந்தன. அருகே நீண்ட கயிற்றால் கட்டியிருந்த மிருணாளினியின் பசு 'உச்உச்' சென்று மூச்சு விட்டுக்கொண்டு புல் மேய்ந்துகொண்டிருந்தது. தூரத்தில் கிராமத்தின் ஒற்றையடிப் பாதையின் ஒரு பாகம் நன்றாகத் தெரிந்தது.

' அப்பா உங்களுக்கு டீ கொண்டுவரட்டுமா ?'

கேதார் பாபு திரும்பிப் பார்த்து, 'இப்பொழுதே கொண்டுவந்து விடுகிறாயா, அம்மா ?' என்றார்.

'நன்றாயிருக்கிறது ! பொழுது போக இன்னும் எவ்வளவு நேரமிருக்கிறது ?'

அவர் சிரித்துக்கொண்டே தலையணை யடியிலிருந்து கடிகாரத்தை எடுத்து, 'இன்னும் மணி மூன்றடிக்கவில்லையே, அம்மா !' என்றார்.

மிருணாளினி கண நேரம் சும்மா நின்றிருந்தாள். பிறகு, 'சரி, அப்பா ! உங்களுக்கு உசிலித்த அவல் பிடிக்குமென்று ரொம்பச் சொல்லியிருக்கிறீர்களே !..' என்று ஆரம்பித்தாள்.

'அதென்ன பொய்யா அம்மா ?'

'ஆனால் அதுவும் கொஞ்சம் கொண்டுவருகிறேன் !'

'கொண்டு வருகிறாயா ? சரி, கொண்டு வா !' என்று சொல்லி அவள் முகத்தைப் பார்த்துச் சற்றே சிரித்தார்.

மிருணாளினி சென்ற பிறகு மறுபடியும் ஜன்னல் வழியாக வெளியே பார்க்கலானார். எல்லாம் மங்கியிருந்தது. அடுத்த கணம் ஐந்தாறு சொட்டுக் கண்ணீர் அவர் மடியில் விழுந்தது. சட்டென்று சட்டையை எடுத்துக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு முகத்தில் சாந்த ஸ்வபாவத்தைக் காட்டுவதற்காக எமர்ஸனின் புஸ்தகத்தை விரித்து எதிரே வைத்துக்கொண்டார்.

அதன் ஏடுகளில் என்ன வேண்டுமானாலும் இருக்கட்டும், அவர் மனத்தில் 'எப்படிப்பட்ட ஆச்சரியம் ! அறிய முடியாத சிருஷ்டிதான் இது!' என்ற அபிப்பிராயமே தோன்றிக்கொண்டிருந்தது. உலகத்தின் நாட்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய நிலைமைக்கு வந்த பொழுது, இந்த நீண்ட வாழ்க்கையின் ஆற்றல்கள், ஏற்பாடுகள் யாவற்றையும் ரத்துச் செய்துவிட்டு ஒரு புதிய அனுபவத்தை நடைமுறைக்குக்

கொண்டுவர அவசியம் ஏற்பட்டது. அவருடைய இந்த மானிட ஜன்மத்தின் கழிந்த நாட்கள் எல்லாம் முழுதும் வியர்த்தமாகவே போய்விட்டன. கூடவே, இந்த நீண்ட கால வியர்த்தத்தைப் பூர்த்திசெய்ய இந்த ஒரு மாதமே போது மானதாக ஆகியது.

வாசற் படியில் காலடிச் சத்தம் கேட்டு முகம் திரும்பிப் பார்த்தார். மிருணாளினி ஒரு தட்டில் அவலும், டம்ளரில் டீயும் எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள். இரு கைகளா லும் அதை வாங்கிக்கொண்டே, ' இன்று நான் வயிறு நிறை யச் சாப்பிடவில்லை என்பது இப்பொழுது தெரிகிறது. ஆனால் ஒன்று கேள், அம்மா—'

' இல்லை, அப்பா! நீங்கள் பேச ஆரம்பித்துவிட்டால் எல்லாம் ஆறிப்போய்விடும்!'

கேதார் பாபு பேசாமல் டீயைக் குடித்துவிட்டு டம்ள ரைக் கீழே வைத்து, ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே, ' நீ அடுத்த ஜன்மத்தில் என் மகளாகப் பிறக்கவேண்டும்! இதைத்தான் நான் விரும்புகிறேன். மார்போடணைத்து, கல்வி கற்பித்துப் போஷித்து வளர்க்க எனக்குத் தெரியும். அடுத்த ஜன்மத்தில் வாழ்நாள் பூராவும் அவளிடம் வேலை வாங்கிக்கொள்கிறேன்' என்று சொல்லும்போதே அவர் குரல் நடுங்கியது.

இந்தத் தினுசான பேச்சினால் மிருணாளினி ரொம்பப் பயந்தாள். ஆகையால் அவள் அவருடைய விளங்காத இந்த உணர்ச்சியைக் கவனிக்காமலே, சிரித்துக்கொண்டு, ' நல்லது தானே, அப்பா! உங்களுடைய அநேகம் குழந்தைகளில் நானும் ஒருத்தி யாகிவிடுகிறேன்!' என்றாள்.

கிழவர் உடனே தலையசைத்துக்கொண்டு, ' இல்லை! இல்லை! அநேகம் இல்லை! அநேகம் இல்லை! நீ என்னுடைய ஒரே பெண்ணாக மாத்திரம்தான்! நீயே தனியாக என்

உள்ளம் முழுவதையும் சூழ்ந்துகொள்வாய். இந்தத் தடவை உன்னிடம் நான் கற்றுக்கொண்டு போவதை ஒவ்வொன்றாக என் பெண்ணுக்குச் சொல்லிக்கொடுத்து, இதே மாதிரி விருத் தாப்பியத்தில் எல்லாவற்றையும் அவளிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொண்டு, அடுத்த ஜன்மத்திற்காக யாத்திரை செய் வேன்!' என்று சொல்லி அலட்சியமாக ஒருதரம் கண்களைத் தடவிக்கொண்டார்.

மிருணாளினி வருத்தமான குரலுடன், 'அப்பா, நீங்கள் என்னைச் சும்மா வெட்கப்படுத்துகிறீர்கள்! எனக்கு என்ன தெரியும்?' என்றாள்.

'இதைப் பாரேன்! நான் நன்றாகச் சாப்பிடவில்லை. இது எனக்கே தெரியாது. ஆனால் உனக்குத் தெரிந்துவிட்டது!'

'இது ஒரு பெரிய காரியமா? கண் இருப்பவர்கள் பார்க் கத்தானே பார்ப்பார்கள்!'

'ஆனால் இந்தக் கண்கள் எல்லோருக்கும் இருப்ப தில்லையே, மிருணாள்!' என்று கூறிச் சற்றுத் தயங்கி, மறுபடி யும், 'கடவுள் எங்கே, எப்பொழுது, எந்த வழியாக மனிதனைத் தன் உண்மையான மனிதர்களிடம் கொண்டுவந்து சேர்த்து விடுகிறார் என்பதை யாரும் அறியமாட்டார்கள்! இதைக் கண்டுதான் எனக்குப் பெரிதும் ஆச்சரியமாக இருக்கிறது. இதில் ஆடம்பரம் ஒன்றும் இல்லை. சம்பந்தத்தின் பலம் இல்லை. காலத்தின் அளவும் இல்லை. முழு உள்ளத்துடனும் நாம் அதை அடையும்போது இவ்வளவு நாட்கள்வரை இந்தக் குறைகளை எப்படிச் சகித்து வந்தோம் என்றுதான் தோன்று கிறது' என்றார்.

மிருணாளினி தயக்கத்துடன், 'அது சரிதான், அப்பா! இல்லாவிட்டால் இவ்வளவு நாட்களாக இந்தப் பட்டிக் காட் டில் கிடக்கும் இந்தப் பெண்ணைப் பற்றி நினைக்காமல்கூட இருப்பீர்களா?' என்றாள்.

'அவருடைய கட்டளை வராத வரை எனக்கு நினைப்ப தற்கு என்ன அதிகாரம் இருக்கிறது? கட்டளை வந்ததும் ஒரு தடையும் ஏற்படவில்லை. யார் என்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தார்க ளென்றும் தெரியவில்லை. இது ஒரு மாதத்தியப் பழக்கம் என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இது என் வீட்டுக் கணக்கல்ல, பக்கங்களைப் புரட்டியவுடன் அதனுடைய கணக்கு கிடைத்துவிடுவதற்கு. எத்தனையோ யுக-யுகாந்தரங்களாக உன்னுடைய நிழலில் அமர்ந்திருக்கிறேன். இதில் நாள், மாதம், வருஷம் என்ற கேள்விக்கே இடமில்லை என்பதுதான் என் அபிப்பிராயம்' என்று சொல்லிச் சற்றே தயங்கினார்.

மிருணாளினியும் ஏதோ சொல்ல விரும்பினாள். ஆனால் சட்டென்று அவர் முகத்தைப் பார்த்ததும் சும்மா இருந்துவிட்டாள். 'இந்தக் கிழவர் தம் உள்ளத்தில் இத்தனை நாள் வரை மௌனமாக எரிந்துகொண்டிருந்த துக்கத்தின் சிதை இப்பொழுது அவிய விரும்புகிறது. அதனுடைய கடைசித் தோற்றம் அவர் முகத்தில் ஜ்வலிக்கிறது. அந்த மங்கிய ஒளியில் ஆழ்ந்த அன்பும் எல்லையற்ற கருணையும் மலர்ந்து நிற்கிறது' என்று தோன்றியது அவளுக்கு.

சிறிது நேரம் வரை யாரும் ஒன்றும் பேசவில்லை. மிருணாளினியின் கவிழ்ந்த பார்வை பூமியை நோக்கிய வண்ணமே இருந்தது. கடைசியில் கேதார் பாபு மௌனத்தைக் கலைத்தார்: 'மிருணாள்! நான் ஒரு தர்மத்தை விட்டு மற்றொரு தர்மத்தில் தீக்ஷை பெற்றுக்கொள்ளும் போது, வெளியே உள்ளவர்களின் முன் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் என் முன்னாவது நான் ஒரு பதில் சொல்லியே ஆகவேண்டும். இதுவரை அதிலிருந்து தப்பித்து வந்திருக்கிறேன். ஆனால் இனி ஒருகால் தப்ப முடியாது. தர்மத்தைப் பற்றி இப்பொழுது மனத்தில் இந்த விஷயங்கள்—'

கண்ணிமைப் பொழுது மிருணாளினி தலை நிமிர்ந்ததும், கேதார் ப்ாபு, 'பயப்படாதே அம்மா! பயப்படாதே! நான் அடிக்கடி உன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு உன்னை சங்கோஜத்தில் ஆழ்த்தமாட்டேன். ஆனால் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு சண்டை-சச்சரவு, வாத-விவாதம், போட்டா-போட்டி இவைகளால் எது கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால் தர்மம் போன்ற பொருள் கிடைக்க முடியாதென்ற உண்மையை நன்கு அறிகிறேன்' என்றார்.

மிருணாளினி அவர் மனத்திலுள்ளதை உணர்ந்து கொண்டதும், மெதுவாக, 'இது உண்மையாக இருக்கலாம், அப்பா! ஆனால் தர்மத்தை நான் நல்லதாக எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஆகையால் அதை அங்கீகாரம் செய்து கொள்ளச் சண்டை-சச்சரவு, வாத-விவாதம் செய்யவேண்டியிருக்கிறதென்று எனக்குத் தோன்றவில்லை!' என்றாள்.

'எனக்கும் ஒரு நாள் தோன்றலாம். ஆனால் அதல்ல விஷயம். ஆனால் அவசியம் என்னவோ ஒன்று கிடக்க ஒன்று வந்தே விடுகிறது, மிருணாள்! எந்தப் பொருளையும் நாம் அன்புடன் தியாகம் செய்வதில்லை. அதன் சம்பந்தமாக மனம் குன்றினால் அது மாறுவதே இல்லை. ஆகையால்தான் இன்று பலவந்தமான இந்த உபதேசம் செய்வதில் இறங்கியிருக்கிறேன்! ஆனால் நீங்கள் பிறவியிலேயே அடைந்தவை நல்லதாக இருக்கட்டும், இல்லை, கெட்டதாக இருக்கட்டும், அதையே அவலம்பித்துச் சென்றுகொண்டிருக்கிறீர்கள்! இந்த வித்தியாசத்தைக் கொஞ்சம் யோசனை செய்து பார்!' என்றார்.

மிருணாளினி சும்மா இருந்தாள். எதிர் வாதம் செய்யப் பதிலே அவளுக்குத் தோன்றவில்லை. கேதார் பாபுவும் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தார். பிறகு, 'அம்மா! வெகு நாட்களாக மறந்திருந்த விஷயங்கள் இன்று மெள்ள மெள்ள

நினைவுக்கு வருகின்றன. ஆனால் இவைகள் இவ்வளவு நாட்கள் எங்கே ஒளிந்து கிடந்தன?' என்றார்.

மிருணாளினி பார்வையைத் தூக்கி, 'யார் விஷயங்கள், அப்பா?' என்றாள்.

'என்னுடைய விஷயங்கள்தான்! பெரியவனாவதற்குக் கடவுள் புத்தியை அளிக்கவில்லை. ஒருபொழுதும் பெரியவனாகவும் ஆகவில்லை. நான் சாதாரண மனிதன். சாதாரண மனிதர்களுடன் சேர்ந்துதான் வாழ்நாளைக் கழித்திருக்கிறேன். சமூகத்தின் சிரோமணியாகவும் சமூகத்தின் ஆசாரியர்களாகவும் இருக்கிறவர்களின் கட்டளையையும் உபதேசத்தையும் பக்தி சிரத்தையுடன் மதித்து வந்திருக்கிறேன். அவர்களுடைய எத்தனையோ நாளைய விஷயங்கள் இன்று எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. "தர்மத்தை ஏற்றுக்கொள்வதில், நல்ல வஸ்துக்களைப் பிரித்தெடுப்பதில், சண்டை சச்சரவுகள் ஏன் செய்யவேண்டும்? அதற்கு அவசியமென்ன இருக்கிறது?" என்றுகேட்டாய் நீ! நானும் இவ்வளவு நாள் இப்படித்தான் எண்ணி வந்திருக்கிறேன். இதைத்தான் சொல்லி வந்திருக்கிறேன். ஆனால் இன்று அவசியம்தான் என்பதைக் காண்கிறேன். சுதேசத்திலும் விதேசத்திலும் ஹிந்துக்களின் தலையை நாம் குனியச்செய்யும் அளவு கிறிஸ்தவப் பாதிரிகள் கூடச் செய்ய முடியாதென்று ஹிந்துக்கள் புகார் கூறுகிறார்கள். இந்தப் புகாரைப் பொய்யென்று கூறி நான் தள்ளிவிட முடியாது! உண்மையாகப் பார்க்கப் போனால், விதேசிகளான அந்நிய மதஸ்தர்களின் கையில் நம் போன்ற விபீஷணர்கள் வேறு யாரும் காணப்படுவதில்லை!' என்றார்.

மிருணாளினி மிக்க சஞ்சலமடைந்தாள். ஆனால் விருத்த கேதார் பாபு அதைக் கவனிக்கவே யில்லை. அவர் மேற்கொண்டு, 'மிருணாள்! துவேஷ பாவம் இல்லாவிட்டால் நம்மிடம் லட்சியம் என்று சொல்லப்படுவது — அதாவது

மனித சமூகத்தில் லட்சியம் என்றுகூடச் சொல்லுவதை — தர்மத்தின் மதக் கோயிலில் — தர்மத்தின் பலிபீடத்தில் நின்றுகொண்டு, "ராமனுக்கு ரமவா, ஹரிக்கு ஹரியா, நாராயணனுக்கு நாராயணு" என்று ஏன் அவர்கள் வாயினின்றும் வெளிப்படுகிறது? "துர்ப்பாக்கிய ஜனங்கள் சிறிய மடுவில் மூழ்கி இறக்க விரும்பாவிட்டால் இந்தப் பெரிய மடுவிற்கு வாருங்கள்!" என்று உரத்த குரலில் ஏன் கோஷிக்கப்படுகிறது? அம்மா! தர்மோபதேசங்களின் முரசறிவிப்பினுல் நமது சமூகத்து ஜனங்களின் ரத்தம் கொதிப்பேறி வருவதைப் போல சிரத்தையினுல் கோபமும் கொள்ளுகிறது. இந்த எண்ணத்தில் புளகாங்கிதமடைய எங்கும் சற்றும் குறைவுபடுவதில்லை. ஆனுல் அதில் உபதேசம் கொஞ்சம் இருந்தாலும் இருக்கலாம். தர்மம் துளிகூட அதில் இருக்கவே முடியாது என்பதை இன்று வாழ்க்கையின் கடைசி மூலைக்கு வந்து நான் தெளிவாக உணர்கிறேன்' என்று சொல்லி, அவர் இரு கைகளையும் குவித்துத் தலைமீது வைத்துக்கொண்டார்.

மிருணுளினி வருத்தமான குரலில், 'இதை யெல்லாம் என்னிடம் ஏன் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? அவைகளெல்லாம் நான் பூஜிக்கத் தகுந்தவை. நான் வணங்கத் தகுந்தவை' என்ருள்.

அந்தப் பக்தையான யுவதியின் குனிந்த முகத்தின் பக்கம் பார்த்து விருத்தர் தலை வணங்கி நின்ருர். மறு கணம் வேலைக்காரியின் கூப்பாட்டைக் கேட்டு மிருணுளினி எழுந்து சென்ற பிறகும்கூட, அவர் அப்படியே உட்கார்ந்திருந்தார்.

மாமியார் ஏன் கூப்பிட்டாள் என்பதைக் கேட்டுவிட்டுச் சிறிது நேரம் பொறுத்து மிருணுளினி திரும்பி வந்ததும், கேதார் பாபு திடீரென்று இரு கைகளையும் விரித்து, பெருகும்

ஆவலுடன், ' மிருணுள்! இம் மாதிரி பிறரிடமுள்ள குற்றங் களைப் பற்றிப் புகார் கூறியே என்னுடைய வாழ்நாள் பூராவும் கழிந்துவிடுமா? இதிலிருந்து விடுதலையே கிடைக் காதா, அம்மா?' என்று கேட்டார்.

' அப்பா, உங்கள் மெத்தையின் மூலை கொஞ்சம் கிழிந்து விட்டது. சற்று நகர்ந்து உட்காருங்கள். அதைத் தைக் கிறேன்' என்று சொல்லி, அவள் பெட்டியிலிருந்து ஊசி நூல் உள்ள சிறு டப்பியை எடுத்து வந்தாள். கேதார் பாபு படுக்கையிலிருந்து நகர்ந்து ஒரு பக்கமாக உட்கார்ந்து மௌன மாகக் காரியத்தில் முனைந்துள்ள அந்தப் பெண்ணின் குனிந்த முகத்தின் பக்கம் கண் கொட்டாமல் பார்க்கலாஞர். அவள் தலை நிமிராமலே தன் போக்கில் வேலை செய்துகொண் டிருந்தாள். ஆனுல் பார்த்துக்கொண்டிருக்கும்போதே கேதார் பாபுவின் கண்களில் காரணமில்லாமல் கண்ணீர் பெருக லாயிற்று. திரும்பத் திரும்பத் தம் வேஷ்டியினுல் அதைத் துடைத்துக்கொண்டார்.

மிருணுளினி தையலை முடித்துவிட்டு, டப்பியைக் கொண்டு அது இருந்த இடத்தில் வைத்துவிட்டு, கேதார் பாபுவிடம் வந்து, ' ராத்திரி நீங்கள் என்ன அப்பா சாப்பிடப் போகிறீர்கள்?' என்று கேட்டாள்.

கேள்வியைக் கேட்டதும், கேதார் பாபு ஒரு நீண்ட பெரு மூச்சுடனும், நீர் மல்கிய கண்களுடனும், தம் இதழில் சற்றே சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, ' ராத்திரிச் சாப்பாட்டைப் பற்றி யோசிக்கவேண்டிய அவசியமே யில்லை. அதைப் பற்றிய கவலையை அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம். ஆனுல் நீ சற்று நிம்மதியாக உட்காரு!' என்று சொல்லிச் சிறிது தயங்கி, ' இந்தக் குற்றத்திற்கு இன்றுதான் முடிவு. என் வாயினுல் இனி யாரைப் பற்றியும் எந்தப் புகாரையும் நீ கேட்கமாட்டாய், மிருணுள்!' என்றுர். பிறகும் சற்றுத்

தயங்கி, 'ஆனால் என் மேல் நீ கோபிக்காதே! நான் இதற்காகப் பேச்சை ஆரம்பிக்கவில்லை' என்றார்.

அவருடைய குரலைக் கேட்டு மிருணாளினி திடுக்கிட்டாள். 'இம்மாதிரி ஏன் அப்பா சொல்லுகிறீர்கள்? நான் எப்பொழுதாவது உங்களிடம் கோபித்துக்கொண்டிருக்கிறேனா?' என்றாள்.

கேதார் பாபு உடனே தலையசைத்துவிட்டுத் திரும்பவும், 'ஒருபொழுதும் இல்லை, அம்மா! ஒருபொழுதும் இல்லை! நீ என் தாயல்லவா! ஆகையால் இந்த வயோதிக மகனுடைய நியாயமற்ற உபத்திரவங்களையெல்லாம் சிரித்துக்கொண்டே அன்புடன் சகித்துக்கொண்டு வருகிறாய். ஆனால் என் உள்ளத்தின் ரத்தத்திற்குப் பதிலாக நான் அடைந்த உண்மையை மாத்திரம் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு உனக்குக் காட்ட விரும்புகிறேன். மிருணாள்! பிறரை நிந்திக்க நான் விரும்பவில்லை. தர்மத்தின் பொருளை ஒரு நாள் நாம் கட்சி கட்டி ஆலோசித்து எப்படிப் பிடித்து வைக்க விரும்புகிறோமோ அம்மாதிரி பிடிக்க முடிவதில்லை. பிடிக்காமல் அதை அடையவும் முடியாது. துக்கத்தின் பிம்பமாக அது மனிதனின் கடைசித் துன்பத்தின் மார்பின் மேல் கால்வைத்து நிற்கும் போதுதான் அதை அறிந்துகொள்ள வேண்டும். சிறிதுகூட மறதியையும், பிரமையையும் அதனால் சகிக்க முடியாது. சின்ன விஷயத்தினால்கூட அது முகம் திருப்பிச் சென்றுவிடுகிறது! ஆனால் இம்மாதிரியான துர்ப்பாக்கியம் நம்முடைய கொடிய விரோதிக்குக் கூட வர எண்ண வேண்டாம், மிருணாள்!' என்றார்.

தான் எந்த விஷயத்திலிருந்து எப்பொழுதும் தப்பித்துக்கொள்ள முயற்சித்து வந்தாளோ அதன் ஜாடையைக் கண்ட மிருணாளினிக்கு ஏற்பட்ட சங்கோசத்திற்கும் வேதனைக்கும் ஓர் எல்லை யில்லை. ஆனால் அப்பொழுது அவள்

எந்தச் சாக்கையும் சொல்லி ஓடிவிட முயற்சிக்கவில்லை. பதில் சொல்லாமல் மௌனமாகவே உட்கார்ந்திருந்தாள்.

தொடர்ச்சியாகத் தடங்கலடைந்து வந்ததால் கேதார் பாபுவின் பார்வையும் இங்கு மிக்க கூர்மையாக ஆகிவிட்டது. ஆனால் அன்று அவரும் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. அவர் கூறலானார்: 'அம்மா! ஒரு வார்த்தையைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கூட எனக்குச் சந்தோஷமேற்படவில்லை. உன்னைத் தவிர இவ்வளவு பெரிய உலகில் எனக்கென்று யாரும் கிடையாது, முன் இருந்ததுமில்லை. ஆகையால் என்னுடைய கடைசி வாழ்நாளின் பாரம், நன்மை-தீமை யாவும் உன் தலை மேல் வந்து பொறுத்து எப்படி ஸ்திரமாகிவிட்டனவோ தெரியவில்லை. சகல விதி-வரம்புகளுக்கும் எஜமானன்தான் இதற்கும் வரம்பு செய்திருக்கிறான் என்பதை நான் சந்தேகமின்றி அறிந்துகொண்டேன். இதில் எனக்குச் சிறிதும் வெட்கமில்லை. ஆரம்பத்தில் சங்கோசத்தினால் சற்றே தயக்கம் ஏற்பட்டது. ஆனால் இன்று என்னுடைய மனத்திலிருந்து அதனுடைய பலங்களெல்லாம் தூர விலகிவிட்டன!' என்றார்.

மிருணாளினி தலை நிமிர்ந்து சற்றே சிரித்தாள். கேதார் பாபு கொஞ்சம் மேலும் கீழும் பார்த்துவிட்டு, 'ஆயினும்கூட ஒரு தயக்கம் போல் படுகிறது. மிருணாள், தொண்டையிலிருந்து வார்த்தை வெளிவரவே விரும்பவில்லை!' என்றார்.

'அது அப்படியே இருக்கட்டுமே, அப்பா! அந்த வார்த்தைகளை இன்று சொல்லாவிட்டால் என்ன முழுகிப் போகிறது?'

கேதர் பாபு தலையை ஆட்டிக்கொண்டு, 'இல்லை! இல்லை! இனி தடங்கல் ஏற்படாது. இனித் தயங்கினால் காரியம் நடக்காது—எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. அவள் ஸுரேசனுடன்—'

இந்தச் சம்சயம் மிருணாளினியின் மனத்திலும் தோன்றிப் பல தடவை வருத்தத்தை உண்டாக்கியிருந்தது. ஆகையால் அவள் தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள். ஒன்றும் பேசவில்லை. சிறிது மௌனத்திற்குப் பிறகு கேதார் பாபு பெரும் முயற்சியுடன் தம்மைத் தாமே தோற்கடித்துக் கொண்டு, 'ஒரு தடவை மஹிமிடம் செல்ல விரும்புகிறேன், மிருணாள்! ஒருதரம் அவன் வாய் வார்த்தையைக் கேட்க விரும்புகிறேன். இதற்காகத்தான் என் உள்ளத்தில் இரவு பகல் கனல் வீசிக்கொண்டிருக்கிறது. ஆனால் தனியாகச் சென்று அவன் முன் நான் எவ்வாறு நிற்க முடியும்?' என்றார்.

மிருணாளினி உடனே தலை நிமிர்ந்து தன்னுடைய கருணை பொங்கிய கண்களால் அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த கிழத் தந்தையின் வெட்க மடைந்த முகத்தை நோக்கி, 'ஏன் அப்பா! நீங்கள் ஏன் தனியாகப் போகவேண்டும்? போக வேண்டுமானால் நாம் இருவரும் சேர்ந்து ஒன்றாகவே போனால் போகிறது!' என்றாள்.

'உண்மையாக நீயும் கூட வருவாயா, அம்மா?'

'வராமல் என்ன, அப்பா? இதைத் தவிர நான் உங்களைத் தனியாக எப்படி விட முடியும்? நீங்கள் எங்கே போவதானாலும் சரிதான், நான் தங்களைத் தனியாகப் போகவிட மாட்டேன். இதைச் சொல்லிவைக்கிறேன். என்னை யாரும் கூட அழைத்துக்கொண்டு போக விரும்புவதில்லை. நான் எங்கும் வெளியே சற்று உலவிவிட்டு வரக்கூட முடிவதில்லை' என்றாள்.

மிருணாளினி பேசாமல் அவர் தலைமாட்டுக் கருகில் உட்கார்ந்திருந்தாள். ஒரு வார்த்தை, ஆறுத லளிக்கும் ஒரு சப்தத்தைக்கூட அவளால் உச்சரிக்க முடியவில்லை. தம் ஒரே பெண்ணின் வெறுக்கத்தக்க நடத்தையினால் உள்ளம் துடி

துடிக்கும் தந்தைக்கு ஆறுதல் கூற அவளிடம் என்ன இருக்கிறது?

இந்த விதமாக வெகு நேரம் கழிந்த பிறகு கிழவர் தம்மைச் சமாளித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து, 'அம்மா!' என்று கூப்பிட்டார்.

அவர் முகத்தைப் பார்த்து மிருணாளினியின் மார்பு வெடித்துவிடும் போல் ஆகிவிட்டது. ஆனால் அவள் தன் மனம் கொண்ட மட்டும் முயற்சிசெய்து கண்ணீரைத் தடுத்துக்கொண்டு, 'என்ன அப்பா?' என்று கேட்டாள்.

'மிருணாளினி! உலகில் வேதனையின் பரிமாணம் இவ்வளவு பெரியதாக ஆகுமென்று நான் எண்ணியதே யில்லை. இதிலிருந்து விடுதலை பெற, எங்கும், யாதொரு மார்க்கமும் இல்லையா? ஓர் உபாயமும் தெரியாதா?' என்றார்.

'ஆனால், அப்பா! மனிதன் மரணத்தின் சோகத்தைக் கூடத்தான் சகித்துக்கொள்ளுகிறான்!'

'என்னைப் பொறுத்தவரை அவள் இறந்துவிட்டாள். இதைத்தானே அம்மா நீ சொல்ல விரும்புகிறாய்? ஒரு விதத்தில் இதேதான் விஷயம். நானே பல தடவை யோசித்திருக்கிறேன். ஆனால் மரணத்தின் சோகம் பெரியதாக இருப்பதைப் போல அதனுடைய சாந்தியும் இனிமையும் கூடப் பெரிதாகத்தான் இருக்கின்றன. ஆனால் இங்கே அந்த ஆறுதல்களுக்குத்தான் இடம் எங்கே யிருக்கிறது, மிருணாள்? இந்தச் சகிக்க முடியாத வருத்தமும், சகிக்க முடியாத லஜ்ஜையும் என் ஹிருதயத்தைச் சூழ்ந்து சதா குத்திக்கொண்டிருக்கின்றன' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே கண்களை மூடிக்கொண்டு, கண நேரம் மார்பில் கையை வைத்துக்கொண்டு, மெதுவாக, 'அம்மா! குழந்தைகளின் மரணத்தால் ஏற்படும் விளைவுகளை நாம், "இதெல்லாம் என்ன காரணத்தால் விளைந்தன என்பதை நம்மால் அறிய

முடியாது" என்று சகஜமாகச் சகித்துக்கொள்கிறோம். நாம்—' என்றார்.

மிருணாளினி சட்டென்று தடுத்து, 'அப்படியானால், அப்பா! நாமும் அப்படிச் செய்யலாம்! யாரா யிருந்தா லென்ன! காரண காரியங்கள் தெரியாதவர்கள் யாராக வாவது இருக்கட்டும். அவர்களை நாம் மன்னிக்கவும் முடியா விட்டால், குறைந்தது அவைகளை யோசித்து அபராதிகள் என்றாவது சொல்ல மாட்டோம்!'

கேதார் பாபு திடுக்கிட்டார். தம் இரு கண்களின் தீவிரமான பார்வையையும் மிருணாளினியின் பக்கம் திருப்பி, கற்சிலை போல் அசைவற்று உட்கார்ந்தார்.

மிருணாளினி வெட்கமடைந்த முகத்துடன், மெதுவாக, 'இதைத் தவிர நான் அண்ணாவின் வாயிலாகக்கூட, உலகில் நாம் விரும்பினால் மன்னிக்க முடியாத குற்றங்கள் ரொம்பக் குறைவு என்று கேட்டிருக்கிறேன்' என்றாள்.

கேதார் பாபு படபடப்பிலிருந்து சரியாக உட்கார்ந்து, 'இந்தக் குற்றத்தைக்கூட யாராவது மன்னிக்க முடியுமா, மிருணாள்?' என்றாள்.

மிருணாளினி மௌனமாக இருந்தாள். அவர் முன் போன்ற தீவிரமான குரலில், 'இல்லை, அநாவசியம். தந்தை யாக இருந்து அவளுடைய இந்தக் கெட்ட செய்கையை நான் மன்னிக்க முடியாது. மன்னிப்பதற்குத் தகுதியுள்ளவளல் லள் அவள். மன்னிப்பது உசிதமல்ல. இதை நான் உன்னிடம் உறுதியாகச் சொல்லுகிறேன்!' என்றார்.

மிருணாளினி மெதுவாக, 'தகுதி, தகுதியில்லை என்பது யோசிக்கவேண்டிய விஷயம் அல்லவா, அப்பா! அதை மன் னிப்பென்று சொல்ல முடியாது. இரண்டாவது, மன்னிப் பின் பலன் குற்றவாளிக்குத்தான் கிடைக்கிறதா? மன்னிப் பவர்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லையா, என்ன?' என்றாள்.

விருத்தர் ஓய்ந்து போனார். அந்தப் பெண்ணின் சாந்தமும் அன்பும் நிறைந்த வார்த்தைகள் ஒரே நிமிஷத்தில் அவரை மெய் மறக்கச் செய்தன. சிறிது நேரம்வரை கனவு நிலையிலிருந்துவிட்டுப் பிறகு அவர் திடுமென்று, 'இந்த மாதிரி நான் யோசித்துப் பார்க்கவில்லை, மிருணாளினி! உன்னிடம் நான் இன்று மற்றொரு தத்துவத்தைக் கற்றுக் கொண்டேன். விஷயம் என்னவோ சரிதான்! ஏற்றுக்கொள் பவர்கள் லாபக் கணக்கில் முழுக்க முழுக்க எழுதிக்கொண்டு கொடுப்பவர் கணக்கைச் சூனியமாகவா விட்டுவிடுகிறார்கள்? இம்மாதிரி நடக்க முடியாது! சரிதான்! சரிதான்! யாருடைய குற்றம் எவ்வளவு பெரிய தென்பதை யார் வேண்டுமானாலும் யோசிக்கட்டும், நான் என்னவோ என் பக்கம் பார்த்து மன்னித்து விடுகிறேன்! இந்த உபதேசம்தானே அம்மா உன்னுடையது?' என்றார்.

'ஏன் அப்பா இந்த மாதிரிப் பேசி என் தவறுகளை அதிகமாக்குகிறீர்கள்?'

'உன்னுடைய தவறு? உலகில் அதற்கு இடம்கூட இருக்கிறதா, அம்மா?'

மிருணாளினி சட்டென்று எழுந்து நின்று, 'அம்மா என்னைக் கூப்பிடுகிறாள் போலிருக்கிறது. நான் இதோ வருகிறேன்!' என்று சொல்லிவிட்டு, வேகமாக வெளியே சென்றாள்.

## XVII

மிருணாளினி எழுந்து சென்றாள். ஆனால் கேதார் பாபு அதைக் கவனிக்கவே யில்லை. அவர் தம் வார்த்தைகளின் சிந்தனையிலேயே மனத்திற்குள்,' 'நான் ஜயித்துவிட்டேன், நான் ஜயித்துவிட்டேன். நீ என்னைக் காப்பாற்றிவிட்டாய், அம்மா! துர்க்கதியின் கடக்க முடியாத வனத்தில் இரு கண்களும் கட்டப்பட்டுவிட்ட பொழுது, மரணத்தைத் தவிர மற்ற வழிக ளெல்லாம் அடைபட்டுவிட்ட பொழுது, கைக் கருகே யிருக்கும் முக்தியின் ராஜ மார்க்கத்தைக் காட்ட உன்னையன்றி யாரால் முடியும்? மன்னிப்பு என்ற விஷயத்தை என்றுமே நான் எண்ண முடியாது. எப்பொழுதாவது மனத் தில் தோன்றினால்கூட, கர்வத்துடன் அதை இரு கைகளா லும் பிடித்துத் தள்ளி, 'இல்லை! அவசியமில்லை. பெண்ணாக இருந்தும் இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்தவள், தந்தை யாக இருந்து இவ்வளவு பெரிய தானத்தைச் செய்ய முடி யாது. ஆனால், அடே அந்தகா! அடே மூடா! அடே கருமி! தந்தையாக இருந்து நீ அவளுக்குக் கொடுக்க முடி யாததைப் பிறர் எப்படிக் கொடுக்க முடியும்? அதிலிருந்து அவள் எவ்வளவைப் பெற்றுக்கொள்ளத்தான் முடியும்? உன்னுடைய மன்னிப்புகள் யாவும் உன் வீட்டுக்கே திரும்பி வந்துவிடும். உன்னுடைய மிருணாளினி மகளின் இந்தத் தத்துவங்களைச் சற்றே கண் திறந்து பார்த்தால் போதுமே!' என்று நேரே எதையோ பார்க்கவேண்டி மேகங்

கவிழ்ந்த வானத்தைப் பார்க்கலானார். பிறகு மனம் பொறுத்து, 'நான் மன்னித்துவிட்டேன்! நான் மன்னித்து விட்டேன்! ஸுரேஷ்! உன்னையும் மன்னித்துவிட்டேன்! அசலா, உன்னையும் மன்னித்துவிட்டேன்! மிருகங்கள், பக்ஷிகள், புழுப் பூச்சிகள் என்னென்ன இருக்கின்றனவோ— யாவற்றையும் இன்று மன்னித்துவிட்டேன்! இன்று முதல் எதனிடமும் எனக்கு அபிமானம் கிடையாது, புகாரும் கிடையாது. நான் இன்று விடுதலையடைந்தவன். இன்று நான் சுதந்திரன். இன்று நான் பரமானந்தமயன்!' என்று சொல்லிக்கொண்டே, வர்ணிக்க முடியாத கருணையினால் தம்முடைய இரு கண்களையும் மூடி, இரு கைகளையும் ஒன்று சேர்த்து மெதுவாக மடியில் வைத்துக்கொண்டதும், மூடியிருந்த அவர் கண்களிலிருந்து தந்தை - அன்பு கட்டுக் கடங்காமல் கண்ணீர் வீழ்ச்சியாக மாறியது. நடுங்கும் உதடுகளால், விளங்காத குரலில், 'அம்மா, அசலா! நீ எங்கே இருக்கிறாய்? ஒரு தரம், ஒரே ஒரு தரம் திரும்பி வா! நான் உன்னை உலகிற்குக் கொண்டுவந்தேன். மார்புடனணைத்து வளர்த்தேன். அம்மா! நீ உன்னுடைய சகல குற்றங்கள், அவமானங்கள், மோசங்கள் எல்லாவற்றிற்குமாக ஒரு தரம் உன் தந்தையின் மடிக்குத் திரும்பி வா, அசலா! நான் என் ஹிருதயத்தால் உன்னுடைய புண்களை யெல்லாம், உன் கொதிப்பை யெல்லாம் அலம்பித் துடைத்து, மறுபடியும் உன்னை முன்போலச் சீராட்டி வளர்த்துப் பெரியவளாக்குகிறேன். நான் இனி ஜன சமூகத்திற்குள் வரவேண்டாம். வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம்! நீயும் நானும் மாத்திரம் —' என்று கூவிக்கொண்டிருந்தார்.

'அப்பா!'

விருத்தர் முகம் திரும்பி மிருணாளினியின் பக்கம் பார்த்தார். தம்மை அடக்கிக்கொள்ளவும் முயற்சி செய்து

கொண்டார். ஆனால் அடுத்த நிமிஷமே தரையில் படுத்து, சிறு பாலகனைப் போல அலறி அழலானார். 'அம்மா, அசலா! என் மார்பு வெடிக்கிறது! எல்லோரும் அதற்கு எத்தனையோ கஷ்டத்தையும் வருத்தத்தையும் கொடுக்கிறார்கள்! என்றால் இப்பொழுது சகிக்க முடியவில்லையே!' என்று கதறினார்.

மிருணாளினி ஒன்றும் சொல்லவில்லை. அருகே வந்து தரையில் கிடந்த அவர் தலையை எடுத்துத் தன் மடிமீது வைத்துக்கொண்டு மெதுவாகக் கையினால் அதை வருடலானாள். அவள் கண்களிலும் கண்ணீர் வந்துவிட்டது.

பங்குனி மாதத்து மேகமடர்ந்த முதல் நாள் இவ்விதமாகக் கழிந்தது. ஆனால் திடீரென்று கேதார் பாபு கண் விழித்து எழுந்து உட்கார்ந்து, 'மிருணாள்! மஹிமுக்கு எழுதிய கடிதத்திற்குப் பதில் கிடைக்காதா?' என்றார்.

'ஏன் கிடைக்காது, அப்பா? நாளை அல்லது நாளை நின்று பதில் வந்துவிடுமென்றுதான் நான் நினைக்கிறேன்.'

'நீ ஏதாவது அவனுக்கு எழுதியிருக்கிறாயா?

மிருணாளினி தலையசைத்து, 'ஆமாம்' என்றாள்.

சங்கோஜத்தின் காரணமாக கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்ற விஷயத்தை விருத்தர் கேட்கவில்லை. வெளியே பார்த்துக்கொண்டே, 'சற்றே பொழுது இருக்கிறது! நான் கொஞ்சம் உலாவிவிட்டு வருகிறேன்!' என்று சொல்லி, சால்வையைப் போர்த்திக்கொண்டு, கையில் தடியுடன் இரண்டடி நடந்தார். ஆனால், திடீரென்று தயங்கி நின்று, 'ஆனால் பார், அம்மா—' என்றார்.

'என்ன அப்பா?'

'எனக்குப் பயமாக இருக்கிறது! இல்லை, பயம் இல்லை ஆனால் நான் நினைக்கிறேன்—'

'என்ன அப்பா ?'

'இதுதான் அம்மா விஷயம். சரி, நீ என்ன நினைக்கிறாய் ? நாம் போக விரும்பினால் மஹிம் தடை செய்வானா ?' என்றார்.

இந்தப் பயம் கவலை இரண்டும் - மிருணாளினிக்கும் இருந்தது. மனத்திற்குள் இதற்குச் சரியான பதிலையும் அவள் யோசித்து வைத்திருந்தாள். ஆகையால் அந்த க்ஷணமே, 'இப்பொழுதிலிருந்து இதைப்பற்றி என்ன கவலை, அப்பா ? அவருடைய விலாசம் தெரிந்ததும் நாம் புறப்பட்டுப் போகலாம். பிறகு அண்ணா நம்மை விரட்டியடிக்கும் பொழுது உலகத்தில் அறிந்துகொள்ளவேண்டிய அநேக விஷயங்கள் தாமாகவே தெரிந்துவிடும். பிறகு இந்த விஷயத்தைப்பற்றி யாரிடமும் கேட்கவேண்டிய அவசியமே இருக்காது !' என்றாள்.

கேதார் பாபு க்ஷண நேரம் பேசாமல் இருந்துவிட்டு, 'ஆனால் உண்மையாகவே நீ என்னுடன் வருகிறாயா ?' என்றார்.

'உண்மையாக வருவேன் ! ஆனால் நான் உங்களுடன் வரமாட்டேன். அப்பா ! நீங்கள்தான் என்னுடன் வருவீர்கள் !' என்றாள் மிருணாளினி.

பதிலுக்கு இன்னும் எதையோ சொல்ல விரும்பினார் கேதார் பாபு. ஆனால் சிறிது நேரம் அவள் பக்கம் பார்த்துவிட்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டு பேசாமல் வெளியே சென்றுவிட்டார்.

* * *

இதே மாதிரியான பங்குனி மாதத்து ஒரு நாள் மாலையில், இந்த வங்காளத்திற்கு வெளியே இரு நர-நாரியர்கள் தங்கள் கண்ணீரை இதே போல் அடக்கிக்கொள்ள முடியவில்லை. ஸுரேசன் முத்திரையிட்ட ஒரு பெரிய கவரை

அசலாவின் கையில் கொடுத்து, 'இவ்வளவு நாட்களாகக் கொடுப்பதைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன். ஆயினும் இந்தக் காகிதத்தை உன்னிடம் கொடுக்கத் தைரியம் வரவில்லை. ஆனால் இன்று கொடுக்காமல் வேறு வழியில்லை!' என்றான்.

அசலா கவரைக் கையில் வாங்கிக்கொண்டு சங்கடத்துடன், 'இதன் அர்த்தம்?' என்றாள்.

ஸுரேசன் சிறிது சிரித்துவிட்டு, 'உலகில் எனக்குத் தைரியம் ஏற்படாத விஷயத்தைப் போல ஆச்சரியகரமான விஷயம் இருக்க முடியுமா? இதைத்தானே நீ யோசித்துக் கொண்டிருக்கிறாய்? இதன் அர்த்தம் ஏதாவது இருக்குமானால், ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் வெளியாகிவிடும். ஆனால் உலகத்தில் சகிக்க முடியாத அவமானம், துக்கம் இவைகளின் பாரத்தை என் பொருட்டு அர்த்தமில்லாமல் எப்படி வகித்தாயோ, இதையும் அதைப் போல எடுத்துக் கொள்ளக் கூடாதா, அசலா?' என்றான்.

அசலா சாந்தமாக, 'இதனுள்ளே என்ன இருக்கிறது?' என்றாள்.

ஸுரேசன் கைகுவித்து, 'இதுவரை உன்னிடமிருந்து நான் அடைந்திருப்பதெல்லாம் கொள்ளைக்காரனைப் போலப் பலவந்தமாகப் பறித்தே அடைந்திருக்கிறேன். ஆனால் இன்று உன்னிடம் ஒரே ஒரு பிச்சை கேட்கிறேன். அதாவது - நீ இந்த விஷயத்தை அறிய விரும்பாதே!' என்றான்.

அசலா மௌனமானாள். அதன் பின் அவள் என்ன சொன்னாள் என்பது ஒன்றும் அவனுக்கு விளங்கவில்லை.

வெளியே படுதாவின் மறைவிலிருந்து வேலைக்காரன், 'பாபுஜி, இனித் தாமதம் செய்தால் போய்ச் சேரும் போது இரவாகிவிடும். வழியில் மழை காற்று வந்தாலும் வரும் என்று வண்டிக்காரன் சொல்லுகிறான்!' என்றான்.

அசலா திடுக்கிட்டு, 'இன்று மறுபடியும் இந்த வேளை யில் நீங்கள் எங்கே போகிறீர்கள் ?' என்றாள்.

ஸுரேசன் சிரித்துக்கொண்டே, 'சமயமற்ற சமயத்தில் மஜெளலிக்குப் போகிறேன். பிளேக் டாக்டர் எங்கும் கிடைக்கவில்லை. கிராமத்துக்குக் கிராமம் ஸ்மசானங்களாகி வருகின்றன. இந்தத் தடவை ஐந்தாறு நாட்கள் இருக்க வேண்டியிருக்கும். யார் அறிவர்? ஒருகால் எப்பொழுதுமே அங்கேயே இருக்கும்படியாக இருந்தாலும் இருக்கும்!' என்று சொல்லி, மறுபடியும் சிரித்தான்.

அசலா அசையாமல் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கும் கொஞ்சம் சமாசாரம் எட்டி யிருந்தது. பத்துப் பதினைந்து மைல் தூரத்தில் கிராமத்துக் குக் கிராமம் பிளேக்கினால் சுடுகாடாகி வருகிறது என்பதை அவள் கேள்விப்பட்டிருந்தாள். நகரத்திலிருந்து இவ்வளவு தூரத்திலிருக்கும் கிராமத்தில் மஹா மாரியினால் அவஸ் தைப்படும் ஏழைகளுக்கு வைத்தியன் அகப்படாதது ஓர் ஆச்சரியமல்ல. ஸுரேசன் மறைத்து மறைத்து ரூபாயை யும் மருந்துகளையும் நாற்புறமும் அனுப்பிக்கொண்டிருந் தான். இதுவும் அவளுக்குத் தெரியும். அவன் சில சமயம் அதிகாலையில் எழுந்து எங்கேயாவது சென்றுவிடுவான். திரும்பி வரும்போது சில சமயம் சாயங்காலமாகிவிடும், சில சமயம் இரவாகிவிடும். சில தினங்களுக்கு முன் ஒரு நாள் அவன் வரவே முடியவில்லை. ஆனால் இன்று அவன் வீட்டை யும் அவளையும் விட்டு, சில தினங்கள் மரணத்தின் மத்தியில் சென்று வசிக்கத் தீர்மானம் செய்துகொள்வான் என்று அவள் கற்பனைகூடச் செய்யவில்லை. அதனால்தான் அவன் புறப்படுவதாகச் சொன்னதைக் கேட்டதும் சிறிது நேரம் வரை அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றுவிட் டாள்.

இம்மாதிரியான மகா பாவி, கடவுளை மதியாதவன், பாவ புண்ணியங்களை மதியாதவன், தன் ஒரே நண்பனையும் அவனுடைய நிரபராதியான மனைவியையும் சுலபமாக சர்வ நாசம் செய்தவன், அப்படிச் செய்வதில் எவ்விதத் தடைகளையும் சற்றும் பொருட்படுத்தாதவன்—அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவள் மனம் ஒருவித வெறுப்பினால் விஷமாக மாறிக்கொண்டிருந்தது. ஆனால், இன்று அவனைப் பார்த்து அவள் உள்ளம் விஷத்தினால் நிறையவில்லை; ஆனால் திடீரென்று ஓர் ஆச்சரியத்தால் நிரம்பியது. அவன் உதடுகளில் மெல்லிய சிரிப்பின் ரேகைகள் மட்டும் இருந்தன. ஆனால் அந்தச் சிரிப்பிலேயே அவன் உலகின் மேல் பூர்ணமான வைராக்யம் கொண்டிருப்பது அசலாவுக்குத் தெரிந்தது. அவன் முகத்தில் ஆவல்இல்லை, படபடப்பில்லை. அவன் மரணத்தின் நடுவே போய் நிற்கச் சென்றுகொண்டிருக்கிறான். ஆயினும் முகத்தில் சந்தேகத்தின் சின்னம் துளிகூட இல்லை. கடவுள் நம்பிக்கை யில்லாத இந்தக் கொடிய சுயநலக்காரனுக்குக்கூட இன்று தன் உயிர் இவ்வளவு எளிதாகப் போய்விட்டதா? உலகில் போகத்தைவிட வேறெதையும் மதியாமல், போகத்தின் பூரண வசதிகளில் மூழ்கி, வெறுக்கத்தக்க துச்சமான வாழ்க்கை வாழ்ந்தவனுக்கு இன்று உயிர்வாழ்வது இவ்வளவு சங்கையாயும், துச்சமாயும், அசட்டையாயும் போய், இவைகளை யெல்லாம் சுலபமாய் விட்டுவிட அவன் ஒரே கணத்தில் தயாராகிவிட்டானா? திரும்பி வரக்கூடாமலும் போகும்! இது வேறெதுவாக இருந்தபோதிலும் விளையாட்டல்ல. ஆனால் இந்த விஷயம் இவ்வளவு சுலபமாகச் சொல்லக் கூடியதா?

சட்டென்று உள்ளத்தின் மோதுதலால் அவள் கலகலத்துப் போனாள். கையிலிருந்த கவரைக் காட்டி, "ஆனால், இது என்ன, உங்கள் உயிலா?" என்று கேட்டாள்.

'சற்று முன் கொடுத்த பிச்சையைத் திரும்பிப் பெற விரும்புகிறாயா, அசலா?' என்று கேட்டான் ஸுரேசன்.

அசலா சற்று மௌனமாக இருந்துவிட்டு, 'சரி, நான் அறிய விரும்பவில்லை. ஆனால் நான் உங்களைப் போக விட மாட்டேன்!' என்றாள்.

'ஏன்?'

பதிலுக்கு அசலா அந்தக் கவரைச் சற்று அசைத்துக் கொண்டே, பக்கத்தில் நகர்ந்து, 'நீங்கள் எனக்கு என்ன செய்திருந்த போதிலும் சரி! ஆனால் நான் எனக்காக உங்களை மரணமடைய விட முடியாது!' என்றாள்.

ஸுரேசன் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

அசலா தன் வார்த்தைகளால் சிறிது வெட்கமடைந்து, விஷயத்தை மழுப்புவதற்காக, '"உனக்காக ஏன் இறக்கப் போகிறேன்! நான் ஏழைகளுக்காக உயிரை விடப்போகிறேன்!" என்று நீங்கள் சொல்லுவீர்கள்! உண்மைதான். ஆனால் அதற்கும் நான் விடமாட்டேன்!' என்றாள்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் ஸுரேசனுக்குச் சட்டென்று மஹிமின் வார்த்தை ஞாபகத்திற்கு வந்தது. அவன் ஹிருதயத்தின் அடியிலிருந்து ஒரு பெருமூச்சு வெளிவந்து நிசப்தமான அந்த அறையில் வியாபித்தது. உயிரின் ஆசை அவனுக்குத் துச்சமான வஸ்துவாகி, அவன் அதை எவ்வளவு சுலபமாகத் தியாகம் செய்ய முடியும் என்பதற்கு ஒரே சாக்ஷி இன்று எதிரே இருந்தது. அதுதான் மஹிம்! இன்று அவன் புறப்படுவது கடைசி மஹா யாத்திரையானால், அவனுடைய துணையற்ற மௌன நண்பனை அந்த ஏழை மாத்திரம் தன் மனத்தில், 'ஸுரேசன் உயிரை விட்டது ஆசையினால் அல்ல, துக்கத்தினால் அல்ல, வருத்தத்தினால் அல்ல, வெறுப்பினால் அல்ல, இகலோக - பரலோகத்திலுள்ள எந்தப் பொருளின் ஆசையினாலும் அல்ல; அவனுக்

யாது. அவள் அழுதுகொண்டே யிருந்தாள். ஸுரேசன் உட்கார்ந்து கண் கொட்டாமல் அவளைப் பார்த்துக்கொண்டே ஒன்றும் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்தான்.

சில நாட்களாகவே அவனுக்குத் தன் தவறுகள் புலனாகிக்கொண்டு வந்தன. கட்டிலில் கவிழ்ந்து துவண்டுகொண்டிருந்த அந்தப் பசுங் கொடி, அதன் வேதனையினாலும், அத்துடன் கலந்திருந்த இனிமையினாலும், அவனுடைய கண் கட்டுக்களை ஒரே கணத்தில் அவிழ்த்தெறிந்துவிட்டது. காலை இளங் கதிரவனின் ஒளி வீச்சினால் இலைகளின் நுனியில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பனித் துளியின் பேரழகை உலோபி ஒருவன் தன் கையிலெடுத்து அநுபவிக்க விரும்புவதைப் போலத் தானும் ஒரு தவறு செய்ததாக அவனுக்குத் தோன்றியது. அவன் நாஸ்திகன், ஆன்மாவை அவன் மதிப்பதில்லை. எந்தப் பெருக்குடன் அனந்தமான சௌந்தரியங்களும் பெருகுகின்றனவோ, அது பொய்யானது என்பது அவன் எண்ணம். சூட்சுமத்தில் நாட்டமின்றி வெறும் ஸ்தூலத்தை வைத்தே நிதானிப்பது போல், அந்த அழகிய தேகத்தைத் தீண்டுவதனாலேயே தான் பெறவேண்டியதெல்லாம் பூர்த்தியாகிவிடும் என்று சந்தேகமற எண்ணியிருந்தான். ஆனால், அவனுடைய வானளாவிய குற்றத்தின் மண்டபம் இன்று ஒரு கணத்தில் தூள் தூளாகிவிட்டது. கிடைக்கக்கூடாததைப் பூமியிலிருந்து கைப்பற்றுதல் எவ்வளவு பாரம், அதற்கு எவ்வளவு பலாத்காரப் பிரமை என்பது இன்று அவன் உள்ளத்தில் சென்று குத்தியது. பனித் துளி கையில் வந்ததும், அது ஒரு சிறு நீர்த் துளி போலப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே உலர்ந்துவிடுகிறது. அசலாவின் பக்கம் பார்த்துக்கொண்டிருந்த அவன் இந்த உண்மையைத்தான் காணலானான். ஆஹா! இலையின் விளிம்புதான் ஏற்ற இடம் என்று பகவானால் அளிக்கப்பட்

டிருப்பதை மாற்றி, இந்த ஐசுவரியப் பாலைவனத்தில் கொண்டு வந்து அதை எப்படிக் காப்பாற்றி வைக்க முடியும் ?

அவனை அறியாமல் அவன் கண்களிலும் கண்ணீர் வந்துவிட்டது. அதைத் துடைத்துக்கொண்டு, 'அசலா!' என்று கூப்பிட்டான்.

அசலா திடுக்கிட்டாள். ஆனால் முன்போலவே பேசாமல் படுத்திருந்தாள்.

ஸுரேசன் மறுபடியும், 'உன் வண்டி தயாராக இருக்கிறது. நீ இன்று ராம்பாபுவின் வீட்டுக்குப் போக விரும்பினாயல்லவா ?' என்றான்.

இதற்கும் பதில் ஒன்றும் கிடைக்காததால், 'இஷ்டமில்லாவிட்டால் வண்டியை அவிழ்த்து விட்டுவிடலாம். நானும் இன்று வெளியே போக முடியாது. ஜட்காவைத் திருப்பி விடுகிறேன்!' என்று சொல்லிவிட்டு, அவன் தன் அறைக்குச் சென்றான்.

அங்கே பத்துப் பதினைந்து நிமிஷங்கள் வரை என்ன யோசித்துக்கொண்டிருந்தான் என்பது ஒரு வேளை அவனுக்கே தெரிந்திருக்காது. திடீரென்று புடவையின் கசமுசவென்ற சப்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். முன்னால் அசலா நின்றுகொண்டிருந்தாள். அவள் கண்களைத் தண்ணீரால் நன்றாக அலம்பித் துடைத்துக்கொண்டு, பெரிய மனிதர் வீட்டுப் பெண்களைப் போல் உயர்ந்த ஆடை யணிந்து தயாராகவே வந்திருந்தாள். 'அவர்களிடம் இன்று ஒரு தடவை சென்றே தீரவேண்டும்!' என்றாள்.

இந்த அலங்காரங்களெல்லாம் அவனுக்காக அல்ல, அங்கே வந்திருந்த ராஜ குடும்ப விருந்தினருக்காக என்பதை ஸுரேசன் அறிந்துகொண்டான்; ஆயினும் மணி-முத்து-ரத்தின ஆபரணங்களால் அலங்கரித்துக்கொண்டிருந்த அந்தச் சுந்தரி ஒரு கணம் அவன் மனத்தைக் கவர்ந்துவிட்

டாள். அவன் ஆச்சரியத்துடன், 'ஏன், சென்றே தீர வேண்டுமோ?' என்று கேட்டான்.

'ராக்ஷஸி ஜுரத்துடனேயே கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறாள். பெரியப்பாவுக்கும் நேற்றிலிருந்து ஜுரம் என்று கேள்விப்பட்டேன்!' என்றாள் அசலா.

'அவர்கள் வந்த பிறகு ஒரு தடவைகூட நீ அங்கே போகவில்லையா?'

'இல்லை!'

'அவர்கள் ஒருவரும் வரவில்லையா?'

அசலா தலையை அசைத்து, 'இல்லை' என்றாள்.

'ராம் பாபுகூட வரவில்லையா?'

'இல்லை!'

இந்த வீட்டுக்கு வந்த பிறகு ஸுரேசன் தன் கவனம் முழுவதையும் பிளேக்கிலேயே செலுத்திக்கொண்டிருந்ததால் வீடு வாசல், வேண்டியவர்கள், நண்பர்கள் இவை போன்ற சிறிய விஷயங்களில் அவன் கவனம் செலுத்தவே முடியவில்லை. ஆகையால் இதைக் கேட்டு அவனுக்குப் பெருத்த ஆச்சரியம் ஏற்பட்டது. 'ஆச்சரியந்தான்! அசலா, போ!' என்றான்.

'நம் பக்கத்தில் இருக்கும் அவ்வளவு ஆச்சரியம் அவர்களிடத்தில் இல்லை. ஒருவருக்கு ஜுரம். மற்றொருவர் ஜுரத்தில் விழும்வரை வந்திருந்தவர்களுக்கு உபசாரம் செய்வதில் கவனம் செலுத்தினர். ஆகையால் நாம்தான் போகவேண்டும்!' என்றாள் அசலா.

'சரி, போ! ஆனால் கொஞ்சம் சீக்கிரமாகவே திரும்பி விடு!'

அசலா ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டு, 'நீங்களும் கூட வாருங்கள்!' என்றாள்.

'நான் எதற்கு?'

அசலா கோபமடைந்து, 'உங்கள் தேக அசௌக்கிய விஷயம் ஞாபக மில்லாவிட்டால் சரி. நீங்கள் டாக்டர்! இதற் காகவாவது வாருங்கள்!' என்றாள்.

'சரி, போ!' என்று சொல்லி, ஸுரேசன் எழுந்து ஆடை மாற்றிக்கொள்ளச் சென்றான்.

ஜட்கா வண்டிக்காரன் பாவம் யாதொரு உத்தரவும் பெறாமல் அதுவரை நின்றுகொண்டிருந்தான். கீழே இறங்கி வந்து அவனைப் பார்த்ததும் அசலா தன் வேலைக்காரனைச் சும்மாவாவது கோபித்துக்கொண்டு, உடனே அவனுக்கு வாடகையைக் கொடுத்து அனுப்பும்படி கட்டளையிட்டாள். அவன் ஸுரேசன் முகத்தைப் பார்த்துப் பயந்துகொண்டே, 'நானே......' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

'இல்லை! பாபு போகவில்லை! ஜட்காவுக்கு அவசிய மில்லை!' என்று அசலாவே அவனுக்குப் பதில் சொல்லிவிட் டாள்.

வண்டியிலேறி ஸுரேசன் எதிர்ப் பக்கத்து ஆசனத் தில் அமர்ந்தான். ஆனால் அசலா சட்டென்று அவன் சட் டையைப் பிடித்து இழுத்துப் பக்கத்தில் உட்காரும்படி சைகை செய்தாள். வண்டி செல்லலாயிற்று. இருவரும் ஒன் றும் பேசவில்லை. அடுத்தடுத்து உட்கார்ந்து இருவரும் தத் தம் பக்கத்திலிருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தனர்.

தோட்டத்தின் வாசற்படியைக் கடந்து வண்டி சாலைக்கு வந்ததும், ஸுரேசன் தயக்கத்துடன், 'அசலா!' என்று அழைத்தான்.

'என்ன?'

'இப்பொழுது நான் என்ன எண்ணுகிறேன், தெரி யுமா?'

'தெரியாது!'

'இதுவரை, என்ன எண்ணி வந்தேனே அதற்கு நேர் எதிரிடையாக! முன்பு உன்னை எப்படி அடைவேன் என்று எண்ணி வந்தேன். இப்பொழுது இரவு பகல் உனக்கு எப்படி விடுதலை அளிப்பேன் என்று எண்ணுகிறேன். உன்னுடைய பாரத்தை என்னால் தாங்க முடியவில்லை!'

நினைக்க முடியாத இந்தக் கொடிய சொல்லம்புகளால் ஒரு நிமிஷம் அசலாவின் உள்ளமும் உடலும் பற்றி யெரிந்தன. சரியாக நம்பினளோ இல்லையோ! பிரமை பிடித்தவளைப் போலத் தெளிவில்லாத குரலில், 'எனக்குந் தெரியும். ஆனால் இதென்னமோ......' என்று சொல்ல ஆரம்பித்தாள்.

'ஆமாம், என்னுடைய தவறுதான். நீங்களெல்லாம் இதைப் பாவத்தின் பலன் என்று சொல்லுகிறீர்கள். ஆயினும் விஷயம் உண்மை. மனமில்லாத பொழுது இந்த உடல் - இதன் பாரம் - இவ்வளவு சகிக்க முடியாததாகும் என்று நான் கனவிலும் கருதவில்லை!' என்றான் ஸுரேசன்.

அசலா கண் நிமிர்ந்து, 'நீங்கள் என்னை இங்கே விட்டு விட்டுச் செல்லுகிறீர்களா?' என்றாள்.

ஸுரேசன் சிறிதும் தயங்காமல், 'சரி, அப்படியே வைத்துக்கொள்!' என்றான்.

இந்த வெட்கமற்ற பதிலைக் கேட்டு அசலா மௌனமானாள். அவளுடைய புண்பட்ட உள்ளத்தைக் கிளறிக் கொண்டு ஒரே ஒரு வார்த்தை எழுந்து நாற்புறமும் தலையை மோதிக்கொள்ளலாயிற்று. இவன் அதே ஸுரேசன்தான்! இவன் அதே ஸுரேசன்தான்! இன்று அந்த ஸுரேசனுக்கு அவள் பாரமாகிவிட்டாள்! இன்று அதே ஸுரேசன் அவளை விட்டுவிட்டுப் போக விரும்புகிறான்! இந்த வார்த்தையை அவள் முன் சொல்ல இன்று அவனுக்குக் கொஞ்சங்கூடத் தயக்கம் ஏற்படவில்லை!

இன்னொரு பெரிய ஆச்சரியம் என்னவென்றால், இதே மனிதன்தான் அவளுடைய எல்லையற்ற துக்கத்திற்கு மூல மான வேர். நேற்றுவரை இவனுடைய காற்றினால்தான் அவள் உடல் முழுதும் விஷமாகிக்கொண்டிருந்தது. மேகம் கவிழ்ந்த அந்தி வானத்தின் அடியில் ஜனங்களின் சந்தடியற்ற சாலையை எதிரொலிக்கச் செய்துகொண்டு வண்டி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அதில் உட்கார்ந்திருந்த ஆண் பெண் இருவரும் மௌனமாக இருந்தனர். ஸுரேசன் என்ன யோசித்துக்கொண்டிருந்தானோ அது அவனுக்குத்தான் தெரியும். ஆனால், அவன் சொன்ன வார்த்தையிலுள்ள கற்பனைக்குப் புறம்பான பயத்தையும் தாண்டி இன்று ஒரு புதிய பயத்தினால் அசலாவின் மனம் நிறைந்தது. ஸுரே சன் இல்லை - அவள் தனியாக இருக்கிறாள்! இந்தத் தனிமை எவ்வளவு பயங்கரமானது! எவ்வளவு மோசமானது! இந்தக் கற்பனைகள் அவள் சிந்தனையில் மின்னலைப் போல் பாய்ந்தன. விதியின் விளையாட்டால் வாழ்க்கைக் கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கும் அவளுடைய ஓடம், கொஞ்சங் கொஞ்சமாக நிச்சயமான மரணத்தில் முழுகிக் கொண்டிருக் கிறது என்பதை அவளைவிட வேறு எவர்கள் அறிவார்கள்? இதுவரை அவளுக்கு நன்றாகப் பரிசயமான ஒரு புகலிடம் இருந்து வந்தது. ஆனால், அந்தப் பயங்கரமான புகலிடத் தைக் கைவிட்டு இன்று திசை தெரியாத சமுத்திரத்தில் தத் தளித்துக்கொண்டிருப்பதை நினைக்கும்போது, அவள் உடல் முழுதும் சில்லிட்டுப் போய்விட்டது. இனி அவளுக்கு ஒரு வரும் இல்லை! அவளிடம் அன்புகொள்ளுகிறவர், அவளை வெறுப்பவர், அவளைக் காப்பவர், அவளைக் கொல்பவர்கூட யாருமில்லை. உலகில் இனி அவள் துணையற்றவள், தன்னந் தனியாக இருப்பவள். இந்த விஷயத்தை எண்ணும்போது அவள் மூச்சே நின்றுவிடும் போலத் தோன்றியது.

சக்தியற்றுத் துவண்டிருந்த அவளது வலது கை திடீ ரென்று ஸுரேசனின் மடியில் சென்று விழுந்தது. அப் பொழுது அவள் திடுக்கிட்டு ஸுரேசன் முகத்தைப் பார்த்து, கூடியவரை முயன்று அடைத்துக்கொண்டிருந்த தன் குரலைச் சரிப்படுத்திக்கொண்டு, 'ஆனால், இனி என்னிடம் அன்பு கொள்ள மாட்டீர்கள்?' என்று கேட்டாள்.

ஸுரேசன் அவளுடைய கையை மெதுவாகத் தன் கையி லெடுத்துக்கொண்டு, 'இந்தக் கேள்விக்கு முன்போல் சந்தேகமறப் பதில் சொல்ல முடியாது, அசலா! எப்படி யிருந்தாலும் இருக்கட்டும். இந்தப் பூதத்தின் பாரத்தை வகிக்க என்னிடம் சக்தியில்லை யென்றே தெரிகிறது!' என்றான்.

அசலா பின்னும் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, மிகுந்த இரக்கமும் மென்மையும் கலந்த குரலில், 'நீங்கள் என்னை இன்னும் வேறெங்காவது அழைத்துச் செல்லுங்கள்!' என்றாள்.

'வங்காளிகளே யில்லாத இடத்திற்கா?'

'ஆமாம்! ஒவ்வொரு நிமிஷமும் வெட்கம் என்னைப் பிடுங்கித் தின்னாத ஏதாவது ஓர் இடத்திற்கு!'

'அங்கே நீ என்னைக் காதலிக்க முடியுமா, அசலா? இது உண்மைதானா?' என்று சொல்லிக்கொண்டே திடீ ரென்று தோன்றிய உணர்ச்சியினால் அசலாவின் முகத்தைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு அவள் இதழ்களில் முத்தமிட்டான்.

அசலாவின் முகம் இன்றும் அவமானத்தால் வாடியது. இதழ்களில் தேள் கொட்டியதைப் போல் எரிந்தது. ஆயினும் அவள் தலையசைத்து, மேலுக்கு, 'ஆமாம்! ஒரு சமயம் நான் உங்களைக் காதலித்தேன். இல்லை, இல்லை, சீச்சீ! யாராவது பார்க்கப் போகிறார்கள்!' என்று சொல்லித் தன்னை விடுவித்

துக்கொண்டு சரியாக உட்கார்ந்தாள். ஆனால் கை ஸுரேசன் பிடியில்தான் இருந்தது. அவன் அதை மிக்க அன்புடன் வருடிக்கொண்டு ஒரு பெருமூச்சு விட்டான்.

பெரிய சாலையை விட்டுத் திரும்பி வண்டி ராம் பாபு வின் வெளி வாசலைத் தாண்டி வீட்டை அதிரச் செய்து கொண்டு மரத்தடியில் வந்து நின்றது.

புது ஆடை அணிந்துகொண்டிருந்த வண்டிக்காரன் இறங்கி வந்து கதவைத் திறந்தான். ஸுரேசன் இறங்கி அசலாவைக் கையைப் பிடித்து இறக்கினான். அசலாவின் பார்வை மேல் தாழ்வாரத்திற்குச் சென்றது. அங்கே பல ஸ்திரீகளுடன் ராக்ஷஸியும் படுக்கையை விட்டு எழுந்து வந்து நின்றுகொண்டிருந்தாள். வெகு நாட்களுக்குப் பிறகு இன்றுதான் இரண்டு தோழிகளும் கண்களினாலேயே ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர். ராம் பாபு அப்பொழுது கீழேயே இருந்தார். அவர் ஒரு போர் வையைப் போர்த்துக்கொண்டு வெளியே வந்து, சந்தோஷத் துடன், 'வா, அம்மா! குழந்தாய் வா!' என்றார்.

அவளுக்குப் பழக்கமா யிருந்த அந்தக் குரலில் சோகம் கலந்திருந்தது. அந்த அழைப்பினால் ஹாஸ்யம் நிறைந் திருந்த அசலாவின் கண் பார்வை ஒரு கணத்தில் அவர் பக்கம் சென்றது. ஆனால், அவர் அருகிலேயே நின்றிருந்தான் மஹிம்!—அவனைப் பார்த்ததும் அவள் கல்லாகச் சமைந்து விட்டாள்! இருவர் கண்களும் சந்தித்தன. ஆனால் அந்தக் கண்கள் இமைக்கவே யில்லை. அசலாவின் உடல் முழுதும் அந்த ரத்ன-அலங்காரம் முன்போலவே ஜ்வலித்துக்கொண் டிருந்தது, வைர-மாணிக்கங்களின் பிரகாசம் சற்றும் மங்கவில்லை, - ஆனால், அவற்றின் மத்தியில் மலர்ந்தி ருந்த தாமரை மட்டும் ஒரு கணத்திற்குள் வாடி இறந்து விட்டது.

ஆனால், அந்த மாலை நேரத்தின் மங்கிய ஒளியில் ராம் பாபுவால் அந்தப் பிழை ஏற்பட்டுவிட்டது. முன்பின் தெரியாத ஒரு புருஷன் முன் அவள் வெட்கமும் சங்கோசமும் அடைந்தாள் என்று எண்ணி, அவர் வருத்தத்துடன் குனிந்திருந்த அசலாவின் தலையை இரு கைகளினாலும் நிமிர்த்தி, 'இருக்கட்டும் அம்மா! நீ எனக்கு நமஸ்காரம் செய்யவேண்டிய அவசியமில்லை! மேலே வா!' என்றார்.

அசலா ஒன்றும் சொல்லவில்லை, தடுமாறிக்கொண்டே சென்றாள். ராம் பாபு, 'ஸுரேஷ் பாபு! இவர்—' என்று அறிமுகம் செய்துவைக்கத் தொடங்கினார்.

ஸுரேசன் ஏதோ சொல்ல ஆரம்பித்தான். 'என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்! நாங்கள் ஒரே வகுப்பில் - சிறு வயதில் நாங்கள் இருவரும் -' என்று கூறிச் சட்டென்று சிரிக்க முயற்சித்து முகத்தை மாற்றிக்கொண்டு, மஹிம் பக்கம் பார்த்து, 'என்ன மஹிம்ஜீ! திடீரென்று நீ—' என்று சொல்லி நிறுத்தினான்.

ஆனால் வார்த்தையை அவனால் முடிக்க முடியவில்லை. மஹிம் முகத்தைத் திருப்பிக்கொண்டு வேகமாக உள்ளே சென்றுவிட்டான்.

சித்தம் கலங்கிய கிழவர் ஸுரேசனைப் பார்த்தார். ஸுரேசனும் பதிலுக்கு ஒரு முறை சிரிக்க முயற்சித்தான். ஆனால் அதுவும் முடியவில்லை.

மேலே செல்லும் மரப் படிக்கட்டில் திடீரென்று ஏதோ ஒரு பெரிய சாமான் விழும் ஓசை கேட்டு இருவரும் திடுக்கிட்டனர். ஒரு கூக்குரல் கிளம்பியது. ராம் பாபு அங்கே ஓடினார். பார்த்தால், அசலா விழுந்து கிடந்தாள். அவள் இரண்டு மூன்று படிகள்தான் ஏறியிருந்தாள். அதன்பின் மூர்ச்சித்து விழுந்துவிட்டாள்.

## XVIII

திரும்பி வரும்போது வண்டியில் ஒரு மூலையில் தலையைச் சாய்த்துக் கண்களை மூடிக்கொண்டிருந்தாள் அசலா. அன்று அந்த மூர்ச்சை தெளியாமலே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று யோசித்தாள். தானே தன்னைக் கொன்றுகொள்வதென்ற பயங்கரத்திற்கு அவள் தன் மனத்தில் இடமளிக்க முடியவில்லை. ஆனால், திடீரென்று மூர்ச்சையடைந்து, பிறகு ஒரு பொழுதும் விழிப்படையாமல் போய்விடுவது — இதுபோன்ற சகஜமான மரணமானால் பரவாயில்லை. இவ்வாறு மரணத்தைச் சுலபமாக அடைவது எப்படி? இதை யாரும் அறியார்களா? இதுதான் அவள் சிந்தனை.

ஸுரேசன் அவளைத் தொட்டு, 'நீ வேறு எங்கேயாவது போக விரும்பினாயே, போகிறாயா?' என்றான்.

'போகலாம்!'

'இனி நாளை முதல் இங்கு தலைகாட்ட முடியாது!'

'ஆனால் அவரென்னவோ யாரிடமும் எதுவும் சொல்ல மாட்டார்.'

ஸுரேசன் ஒரு பெருமூச்சு விட்டான். ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு தயங்கிக்கொண்டே, 'இல்லை, மஹிமை நான் அறிவேன். வெறுப்பின் காரணமாக அவன் நம்முடைய கெட்ட பெயரைக்கூட வாயால் சொல்ல விரும்ப மாட்டான்!' என்றான்.

இந்த வார்த்தையை ஸுரேசன் சகஜமாகச் சொல்லி விட்டான். ஆனால் இதைக் கேட்டு அசலாவின் சரீரம் நடுங்கியது. பிறகு வண்டி வீட்டு வாசலில் வந்து நிற்கும் வரை இருவரும் பேசவில்லை. ஸுரேசன் அவளை மெதுவாக ஜாக்கிரதையுடன் இறக்கி, 'நீ போய்க் கொஞ்சம் தூங்கு, அசலா! நான் சில முக்கியமான கடிதங்கள் எழுத வேண்டியிருக்கிறது' என்று சொல்லி, அவன் தன் படிப் பறைக்குச் சென்றான்.

அசலா கட்டிலில் படுத்துக்கொண்டு யோசிக்கலானாள்: 'எனக்கு இப்பொழுது வயது இருபத்தொன்று. எனக்கு இத்தகைய துர்க்கதி வந்துசேர நான் இந்த வயதில் யாருக்கு என்ன தீங்கிழைத்தேன்? இந்தக் கவலை புதிதல்ல!' அவள் இதே வார்த்தையைத் தன்னைத்தான் கேட்டுக்கொள்ளும் போதெல்லாம் குழந்தைப் பருவத்தைப் பற்றி அவள் நினைவுக்கு எட்டும் வரை நினைத்துப் பார்ப்பாள். மிருணாளினி ஒரு நாள் விவாதித்த விஷயம் திடீரென்று இன்று ஞாபகத்திற்கு வந்தது. அதனுடைய இழையைப் பற்றிக்கொண்டு தன் எண்ணங்களை யெல்லாம் மறுபடியும் ஆராயலானாள்.

அவளுடைய மண வாழ்க்கை ஒருவாறு கணவனுடன் விரோதத்துடனேயே கழிந்தது. கடைசியில் சில தினங்கள் மாத்திரம் அவன் தேக அசௌக்கியமாய்ப் படுக்கையிலிருந்த பொழுது அவனை முற்றிலும் தன்னுடையவனாக அடைந்தாள். அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி யாதொரு சந்தேகமும் இல்லாமல் மனம் கவலையற்றுப் பயமற்று இருந்த சமயத்தில், அந்த அன்பு பொங்கும் நிர்மலமான சந்தோஷத்தின் நடுவே பிறருடைய துர்ப்பாக்கியம், வேதனை இவைகள் அவளை மிகவும் வருத்தின. அப்பொழுது ஒரு நாள் மிருணாளினியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, கண்ணீர் பொங்க, தழுதழுத்த குரலில், 'அக்கா! நீ மாத்திரம்

எங்கள் சமாஜத்தை - எங்கள் மதத்தைச் சேர்ந்தவளாக இருந்தால் எவ்விதத்திலும் உன் வாழ்க்கை வீணாக விட்டிருக்க மாட்டேன்!' என்றாள்.

மிருணாளினி சிரித்துக்கொண்டே, 'என்ன செய்வாய், மன்னி? எனக்கு மறுபடியும் கலியாணம் செய்து வைத்து விடுவாயா?' என்றாள்.

'செய்யாமல் என்ன? ஆனால் போகட்டும், அக்கா! உன் கால்களைப் பிடித்துக்கொள்ளுகிறேன். இனி சாஸ்திரங்களிடம் சரணடையாதே! இதைப்பற்றி வேண்டிய அளவு மல் யுத்தம் செய்தாகிவிட்டது. இதன் பெயரைக் கேட்டாலே எனக்குப் பயமாக இருக்கிறது!' என்றாள்.

மிருணாளினி முன்போலவே சிரித்துக்கொண்டு, 'பயப்படக்கூடிய விஷயந்தானே அது! ஏனென்றால் அதன் உபத்திரவம் எங்கே எப்பொழுது வந்துவிடும் என்பதைச் சொல்ல முடியாததுதான் காரணம். ஆனால் ஒரு விஷயத்தை யோசித்துப் பார்த்தாயா, மன்னி? யுத்தம் செய்பவர்கள் அது ஜீவனோபாயம் என்று செய்கிறார்கள்; உடம்பில் பலமும், கையில் ஆயுதமும் இருக்கிற காரணத்தினாலேயே செய்கிறார்கள். இதனால் அவர்களுடைய வெற்றி - தோல்வி அவர்களிடமே இருந்து வருகிறது. அதனால் நமக்கு யாதொரு நன்மையும் தீமையும் இல்லை. நம்மிடம் எந்தக் கட்சியும் எந்த விஷயத்தையும் கேட்பதில்லை!' என்றாள்.

'கேட்பதனால் ஆவதென்ன?' என்று கேட்டாள் அசலா.

'அதுதான் அம்மா சரியாகத் தெரியவில்லை! உன்னைப் போல் யோசிக்கக் கற்றுக்கொண்டோ, அல்லது உன் தீர்மானத்தையே ஒப்புக்கொண்டோ இருந்தால், இத்தனை நாளில் எனக்கு ஒரு வரன் ஏற்பாடாகியிருக்கும்!' என்று சொல்லி நகைத்தாள் மிருணாளினி.

இந்தச் சிரிப்பைக் கண்டு அசலா கோபங்கொண்டு, 'எங்கள் சமாஜத்தைப் பற்றி ஏதாவது பேச்சு ஆரம்பமானதுமே நீ அலட்சியத்துடன் பேச ஆரம்பித்துவிடுகிறாய். இது எனக்குத் தெரியும். ஆனால் எங்கள் விஷயத்தை விட்டுவிடு! இந்த விஷயமாகச் சண்டையிடுகிறவர்கள் எல்லோருமே வெறும் வியாபாரிகள்தானா? உண்மையான வேதனையுடன் யாருமே போரிடவில்லையா?' என்றாள்.

மிருணாளினி நாக்கைக் கடித்துக்கொண்டு, 'இந்த மாதிரி விஷயத்தை மனத்தால் நினைத்தால்கூடப் பாவம், மன்னி! உண்மையில் விஷயம் அப்படியல்ல! நாளைக் காலை நான் போகிறேன். பிறகு எப்பொழுது சந்திப்போமோ தெரியாது. போவதற்கு முன் ஒரு வேடிக்கைகூட நான் செய்யக் கூடாதா, அம்மா!' என்று சொல்லும் போதே அவள் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவள் தன்னைச் சுதாரித்துக்கொண்டு, கம்பீரமாக, 'ஆனால், நீ என்னவோ என்னுடைய விஷயங்களை யெல்லாம் அறிந்துகொள்ள முடியாது, அம்மா! விவாகம் உங்கள் சமாஜத்தில் ஒரு சமூகச் சட்டம். ஆகையால் அது விஷயமாக நல்லதா கெட்டதா என்ற ஆலோசனைகள் நடக்கின்றன. அதனுடைய விதிகள் யுக்தி - தர்க்கங்களால் மாற்றப்படுகின்றன. ஆனால் எங்களுக்கு விவாகம் என்பது தர்மம், கணவனை நாங்கள் சிறு வயதிலிருந்தே இதே ரூபத்தில் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறோம். சகல தர்க்க - ஆலோசனைகளையும் தாண்டிய விஷயம் அம்மா இது!' என்றாள்.

அசலா ஆச்சரியமடைந்து, 'சரி, அப்படியானல் தர்மம் மனிதனால் மாற்றப்படுவதில்லையா, அக்கா?' என்றாள்.

'தர்மத்தைப் பற்றிய அபிப்பிராயம் மாறுகிறது. ஆனால் மூல வஸ்து எங்கே அம்மா மாறுகிறது? இதனால் இவ்வளவு சண்டை சச்சரவுகள் நடந்தும்கூட, அந்த மூல வஸ்து இ

றுங்கூட சகல ஜாதிகளுக்கும் ஒன்றுகவே இருந்து வருகிறது. கணவரின் குண தோஷங்களை நாம் ஆராய்கிறோம். அவர்கள் சம்பந்தமாக நாமும் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளுகிறோம். கடைசியில் நாமும் மனுஷ்ய ஜீவன்கள் தானே! ஆயினும் கணவர் நமக்குத் தர்மம் ஆகையால் அவர் நித்தியமானவர். வாழ்க்கையிலும் நித்தியம் - மரணத்திலும் நித்தியம். அவரை நாம் மாற்ற முடியாது!' என்றுள்.

அசலா ஒரு கணம் ஸ்திரமாக அமர்ந்து, 'இதுவே உண்மையானுல் இவ்வளவு அனுசாரம் எதற்கு?' என்றுள்.

'அது இருக்கத்தான் செய்யும். தர்மம் இல்லாத போது அதுவும் இருக்காது. நாய் நரிகளிடையேகூட அனுசாரம் இருக்கிறது, அம்மா!'

அசலாவுக்குச் சட்டென்று யாதொரு பதிலும் சொல்லத் தோன்றுமையால் சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு, 'உங்களுடைய சமூகத்தின் போதனை இவ்வளவு மகத்தானதாக இருக்கும்போது, போதனை யளிப்பவர்களிடம் இவ்வளவு சந்தேகமும், ஜாக்கிரதையும் எதற்காக? இவ்வளவு மறைவு, இத்தனை கட்டுப்பாடு, உலகத்தினின்றும் மறைந்து வாழ இத்தகைய பெரு முயற்சி இவைக ளெல்லாம் ஏன்? இந்தப் பலவந்தமான ஸதித்வத்தின் மதிப்பைப் பரீட்சிக்க அவகாசம் வரும்போது அறிந்துகொள்ளுகிறேன்!' என்றுள்.

அசலாவின் படபடப்பைக் கண்டு மிருணுளினி திடுக்கிட்டுவிட்டாள். ஆனுல் சிரித்துக்கொண்டே, 'இந்தச் சட்ட திட்டங்களை ஏற்படுத்திவிட்டுப் போனவர்களிடம் இதற்குப் பதிலைக் கேள், அம்மா! நாங்கள் என்னவோ தாய் தந்தையரிடம் கற்றதைப் போற்றி வருகிறோம். ஆனுல் உன்னிடம் ஒரு விஷயத்தை மாத்திரம் உறுதியாகக் கூறுகிறேன். கணவன்தான் உண்மையில் தர்மம், அவன்தான் இகலோக - பரலோகப் பொருள் என்று எண்ணி ஏற்றுக்

கொண்டவளின் கால் விலங்குகளை வேண்டுமானால் உடைத்தெறி, இல்லையானால், அவள் கட்டுப்பட்டே கிடக்கட்டும். ஆனால் அவளுடைய ஸதித்வத்தின் பரீட்சை அவளுக்குள்ளேயே ஆகிவிட்டது என்பதை மட்டும் அறிந்துகொள்!' என்றாள்.

இவ்வளவும் சொன்ன பிறகு சற்று நிறுத்தி, பிறகு மெதுவாக, 'என் கணவரை நீ பார்த்திருக்கிறா யல்லவா? அவர் கிழவர். உலகில் அவர் ஏழை, ரூபத்திலும் குணத்திலும் இதரர்களைப் போல் சர்வ சாதாரணந்தான். ஆனால், அவர்தான் எனக்கு இகலோகம், அவர்தான் எனக்குப் பரலோகம்!' என்று சொல்லிக்கொண்டே, அவள் கண்களை மூடி ஒரு கணம் அவரையே அந்தக்கரணத்தில் பார்த்தது போல் இருந்துவிட்டு, பிறகு கண்களைத் திறந்து, ஒரு மெல்லிய சிரிப்புடன், 'உபமானம் ஒருகால் சரியாக இல்லாமல் இருக்கலாம், மன்னி! ஆனால் தந்தை தம்முடைய குரூபமான மகனிடத்தில்தான் தம் அன்பு முழுவதையும் கொட்டுகிறார் என்பது பொய்யல்ல. மற்றொருவரின் அழகான பிள்ளையைக் காணும் பொழுது ஒரு கணம் அவர் மனத்தில் ஆசையும் வருத்தமும் உண்டாகலாம். ஆனால், தந்தையின் தர்மம் துளிகூட அதனால் வருத்த மடைவதில்லை. போகும் போது சகலத்தையும் அவர் யாருக்கு விட்டுச் செல்கிறார் என்பதுதான் உனக்குத் தெரியுமே! ஆனால், தந்தை என்ற முறையில் அவருடைய தர்மத்தில் சந்தேகம் ஏற்பட்டு அவருடைய கடமை பங்க மடையுமானால், அன்பின் சிறு திவலை கூடத் தேடினாலும் எங்கும் கிடைக்காது. ஆனால் எங்களுடைய போதனை, ஸம்ஸ்காரம், ஆராய்ச்சி முறை இவைகளெல்லாம் வேறு, அம்மா! என்னுடைய இந்த உபமான வார்த்தைகளை யெல்லாம் ஒருகால் நீ நன்றாக அறிந்து கொள்ள முடியாது. ஆனால், எந்த ஸ்திரீ உள்ளத்தில் கண

வளைத் தர்ம ரூபமாகத் தெரிந்துகொள்ளக் கற்கவில்லையோ அவளுடைய கால் விலங்குகள் பூட்டியே கிடக்கட்டும், இல்லை- அவிழ்ந்துதான் கிடக்கட்டும், - தன் ஸதித்வத்தின் கப்பலை அவள் எவ்வளவு பெரிதாக நினைத்தாலும் சரி, பரீட்சை என்ற தரை தட்டியதும் அது மூழ்கியே ஆகவேண்டும். அந்தக் கப்பல் திரைக்குப் பின்னாலேயும் மூழ்கும், வெளியே யிருந்தாலும் மூழ்கும் என்பதை நீ மறதியால்கூட நம்பாமல் இருக்க முடியாது!' என்றாள்.

அதுதான் நடந்தது. இந்த உண்மையை அசலா அப் பொழுது உணரவில்லை. ஆனால் மிருணாளினி சொன்ன வார்த்தைகள் அவளை இன்று இரவு பகலாகப் பாதாளத் திற்கு இழுத்துவிட்டன. இப்போது எந்த விஷயத்தை என்ன விதமாக அறியவேண்டும் என்பதை உணர அவ ளுக்குத் தாமதமாகவில்லை.

அமைதி சூழ்ந்த தடைகளற்ற சமூகத்தினிடையே, சுதந்திரமாகவும், கண் காதுகளைத் திறந்துகொண்டும் வளர்ந்தே அவள் இவ்வளவு பெரியவளானாள். தன் வாழ்க் கையைத் தானே வகுத்துக்கொண்டாள். ஆனால் பரீட்சை யின் கடுமையான துக்கம் நிறைந்த சமயத்தில் அவள் கற் றது எதுவும் அவளுக்கு உபயோகப்படவில்லை. அவளுக்கு வந்த விபத்து, மெல்ல அடிமேல் அடிவைத்து, நண்பனின் உருவத்தில் வந்தது,—பெரியப்பாவின் அன்பு, அக்கறை என்ற மாறு வேடத்தில் வந்தது.

அவளுடைய நன்மையைப் பெரிதாகக் கோரிவந்த அன்புமிக்க அந்தக் கிழவர், திரும்பத் திரும்பத் தூண்டி வற் புறுத்திய தன் பேரில், மழையும் புயலும் மூண்டிருந்த அந்த இரவில், ஸுரேசனின் படுக்கையறைக்குச் சென்று அவள் தன்னை ஆத்மஹத்தி செய்துகொண்டாள். அன்று அவளைக் காக்கக் கூடியது, கைவிட முடியாத அந்த ஸதி - தர்மம்தான்.

வாழ்விலும் மரணத்திலும் இணையற்ற நித்தியம் என்று மிருணாளினி கூறிய அந்த ஸதித்வம்தான். ஆனால் அன்று அவளுக்கு வெளித் தோற்றமே பெரிதாகி அவளுடைய தர்மத்தைத் தோற்கச் செய்துவிட்டது. அவளுடைய நெடுநாள் படிப்பு, ஸம்ஸ்காரம் ஆகியவைகள் உள்ளத்தைத் துச்சமாக மதித்து, அதைச் சிறைக்கூடம் என்றெண்ணி, வெளி உலகத்திற்கே உயர்ந்த ஸ்தானத்தை அளித்தது. ரகசியமாக இருக்கும் தர்மம், குகையில் ஒளிந்து கிடக்கும் தர்மம், அந்தக்கரணத்தில் வியக்தமற்றுக் கிடக்கும் தர்மம், அவள் மனத்தில் உயிர் பெற்று எழ முடியவில்லை. ஆனால் வெளித் தோற்றத்துடன் பழக்கம் வைத்துக்கொள்ள அன்று கூட அந்தக் கண்ணியமான அந்தப் பெண்மணியின் உள்ளம் வெட்கத்துடன் போராடிக்கொண்டிருந்தது. அந்த வெளிப் போர்வையின் மோகத்தை விட்டுத் தன்னைத் தனியாக்கிக் கொண்டு, 'பெரியப்பா, எனக்குத் தெரியும்! மலைக்குச் சமானமான என்னுடைய இத்தனை நாள் பொய்க்குப் பிறகு இன்று என்னுடைய உண்மைகளை உண்மைதான் என்று உலகில் யாரும் நம்பமாட்டார்கள். நாளை நீங்களே வெறுப் படைந்து என் முகத்தைப் பார்க்கமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுடைய பதிவிரதையான நாட்டுப் பெண்ணின் வீட்டுக் கதவு என் முகத்தின் எதிரிலேயே சாத்தப் படும். என்னுடைய அவமானம் உலகம் பூராவும் பெருகும். இவைகளை யெல்லாம் என்னால் சகிக்க முடியாது. ஆகையால் உங்களுடைய இன்றைய பயங்கரமான அன்பை என்னால் சகிக்கவே முடியவில்லை. மேலும், பெரியப்பா! "உன்னிடம் இன்றுள்ள களங்கமே எனக்கு அளவற்றதாகிவிட்டது!" என்ற ஆசீர்வாதத்தை யளியுங்கள்!' என்ற வார்த்தைகளை அவளால் எவ்விடத்திலும் கூற முடியவில்லை. இந்த வார்த்தைகள் அவள் வாயினின்றும் வெளிவரவில்லை.

இன்று பயனற்ற ஆத்திரத்தாலும் உணர்ச்சி வேகத்தாலும் அவள் தொண்டை திரும்பத் திரும்ப அடைத்துக் கொண்டது. அவளுடைய பொறுக்க முடியாத இந்த வேதனையுடன், மஹ்றியின் அந்த மௌனப் பார்வை கூர்மையான கத்தியால் கீறிவிட்டதைப் போல் ஆக்கிற்று.

இந்த விதமாக நடுநிசிவரை கழிந்தது. எல்லாத் துக்கங்களுக்கும் விமோசனம் உண்டு. ஆகையால் கண்ணீர்ப் பெருக்கும் மெல்ல மெல்ல உலரலாயிற்று. நனைந்திருந்த கண் இமைகளும் தூக்கத்தால் குவிந்தன.

இந்தத் தூக்கம் கலைந்தபோது விடிந்து வெகு நேரமாகி விட்டது. ஸுரேசனுக்காகக் கதவு திறந்தே யிருந்தது. ஆனால் அவன் உள்ளே வந்தானா இல்லையா என்பதே தெரியவில்லை. அவள் வெளியே வந்தபோது, 'பாபுஜி அதிகாலையிலேயே ஜட்காவில் ஏறி மஜௌலிக்குப் போய்விட்டார்!' என்றான் வேலைக்காரன்.

'யாராவது கூடப் போயிருக்கிறார்களா?'

'இல்லை. நான் போக விரும்பினேன். ஆனால் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. "பிளேக்கில் சாவதானால் வா!" என்றார்!'

'ஆகையால் நீ போகவில்லையாக்கும். தயவோடு ஜட்கா வண்டி மாத்திரம் அழைத்து வந்தாய் போலிருக்கிறது! என்னை ஏன் எழுப்பவில்லை?'

வேலைக்காரன் மௌனமானான்.

அசலாவும் சிறிது சும்மா இருந்தாள். பிறகு, 'ஜட்கா வண்டியை யார் கொண்டு வந்தார்கள், நீயா?' என்று கேட்டாள்.

வேலைக்காரன் தலை குனிந்துகொண்டு, 'கொண்டுவர வேண்டிய அவசியமே யில்லை. நேற்று வண்டிக்காரனை அனுப்பும்போது பாபுஜியே "அதிகாலையில் வந்துவிடு!" என்று உத்தரவிட்டிருந்தார்' என்றான்.

இதைக் கேட்டு அசலா பிரமித்துப் போனுள். அவள் நினைத்ததைப் போல் இல்லை. முந்திய நாள் மாலையில் நடந்த சம்பவத்துடன் இதற்குச் சம்பந்தமில்லை. அச் சம்பவம் ஏற்பட்டிராவிட்டாலும் அவன் சென்றேயிருப்பான். போவது என்ற உறுதியை அவன் விடவேயில்லை. அவளுடைய பயத்தினுல் போவதைச் சிறிது ஒத்திப்போட்டிருந்தான்-அவ்வளவுதான்.

'பாபு எப்பொழுது வருவார், ஏதாவது சொல்லிவிட்டுப் போயிருக்கிருரா ?'

வேலைக்காரன் சந்தோஷமாகத் தலையசைத்துக்கொண்டு, 'வெகு சீக்கிரம்! நாளை, நாளைநின்று கட்டாயம் வந்துவிடுவார்!' என்ருன்.

அசலா மறுபடி வேரென்றும் கேட்கவில்லை. முந்திய நாள் படியிலிருந்து விழுந்ததில் எவ்வளவு காயம் ஏற்பட்டதென்று தெரியவில்லை. இன்று வலியினுல் உடல் வெதும்பலாயிற்று. அதன்மேல் எங்கே ராம் பாபு வேறு தகவல் விசாரிக்க வந்துவிடுவாரோ என்ற பயம் - இவைகள் அவள் மனத்தைக் குத்தலாயின.

மஹிம் யாரிடமும் ஒன்றும் சொல்லமாட்டான். இதை ஸுரேசனைவிட அவள் குறைவாக அறிந்தவள் அல்ல. ஆயினும் இயற்கையாக நிகழப்போகும் பலவிதமான சம்பவங்களின் பயத்தினுல், மனம் துயரத்தை எதிர்நோக்கிக் காவல் புரிந்து எச்சரிக்கையாக இருப்பதைப் போல அவளுடைய சகல அவயவங்களும் வீட்டின் வாசற்படியைக் காவல்புரிந்தன. இந்தவிதமாகக் காலை கழிந்தது, பகல் வந்தது, மாலையும் மங்கியது. இரவு யாரும் வரமாட்டார்கள் என்ற எண்ணத்துடன் அவள் தடையொன்றுமின்றித் தன் படுக்கையில் சென்று படுத்தாள்.

அருகே இருந்த பூத்தொட்டியில் ஏதோ ஒரு வைத்திய சாலையின் விலை ஜாபிதா கிடந்தது. அதை எடுத்துப் புரட்டிக்

கொண்டே தன்னுடைய களைப்படைந்த பார்வையை ஒரு பக்கத்தில் செலுத்தி, யாரோ ஒரு மஹா ராஜாதிராஜரின் ரோக நிவாரணத்திலிருந்து, பாமன்ஹாட்டி ஆரம்பப் பாட சாலை உபாத்தியாயரின் வியாதி சொஸ்தமானதுவரை உள்ள விவரங்களைப் படித்துக்கொண்டே, தன் துக்கத்தையெல்லாம் மறந்து, அவள் எப்பொழுது தூங்கினாள் என்பது அவளுக்கே தெரியாது.



# XIX

'பாபு நாளைக்கோ அல்லது நாளைநின்றோ, அல்லது இன்னும் ஒரு நாள் கழித்தோ வந்துவிடுவார்' என்று சொன்னான் வேலைக்காரன். ஆனால் அதற்கு மறுநாள் நிச்சயத்துடன் நாள் முழுதும் பரீட்சை செய்யக்கூடிய பலம் அசலாவிடம் இல்லை. இந்த மூன்று தினங்களில் ராம் பாபு ஒருநாள்கூட வரவில்லை. ஒவ்வொரு நேரமும் அவர் வருவார் என்று முழு மனத்தோடு பயங்கர நிலையில் அவள் வழி பார்த்துக்கொண்டே யிருந்தாள். எனினும், அத்துடன் அவர் வராததின் உள் அர்த்தத்தை அவளாகக் கற்பனை செய்து கொண்டதால், அவள் தேகம் சந்தேகத்தால் வெலவெலத்துப் போயிற்று. அவர் தேக அசௌகரியமாக இருந்தார் என்பதும், இந்த இரண்டு மூன்று தினங்களில் அவர் நோய் அதிகரித்திருக்கக் கூடும் என்பதும் அவள் மனத்தில் தோன்றவே யில்லை. இன்று அவர் வீட்டிலிருந்து தர்வான் வந்தான். வெளியிலேயே நின்று பாண்டேஜியிடம் ஏதோ கேட்டுவிட்டுப் போய்விட்டான். அவன் ஏன் வந்தான்? என்ன கேட்டான்? பயத்தினால் எதையும் யாரிடமும் அவள் கேட்கத் துணியவில்லை. ஆனால் அதற்குப் பிறகு, அந்த வீடு, அந்த வேலைக்காரர் வேலைக்காரிகள், எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவிட்டால் உயிர் பிழைக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

வேலைக்காரனைக் கூப்பிட்டு, 'ரகுவீர்! நீ இங்கேயே இருப்பவன்தானே! மஜௌளி எங்கே யிருக்கிறது தெரியுமா?' என்று கேட்டாள்.

'வெகு நாட்களுக்கு முன் ஒரு தடவை கலியாணத்திற்காக அங்கே போயிருக்கிறேன், அம்மா!'

'எவ்வளவு தூரம் இருக்கிறது? சொல்ல முடியுமா?'

ரகுவீர் இதே ஊரில் இருப்பவனாக, வெகுநாட்களாக வங்காளிகளுடன் வசித்தும் வந்ததால் சில அனுமானங்களைச் செய்யப் பழகியிருந்தான். அவன் மனத்திற்குள் அனுமானம் செய்து, 'பத்துப் பதினைந்து மைல் தூரத்திற்குக் குறையாது!' என்றான்.

'நீ இன்றைக்கு என்னுடன் வரமுடியுமா?'

ரகுவீர் மிக்க ஆச்சரியத்துடன், 'நீங்கள் போகப் போகிறீர்களா? அங்கே பலமான பிளேக் பரவியிருக்கிறதே!' என்றான்.

'நீ வரமுடியாவிட்டால் இன்னும் வேறு எந்த வேலைக்காரனையாவது வரும்படி சம்மதிக்கச் செய்ய முடியுமா? அவன் எவ்வளவு கேட்டாலும் தருகிறேன்!'

ரகுவீர் வருத்தத்துடன், 'அம்மா! தாங்கள் போக முடியுமானால் நான் வர முடியாதா? ஆனால் வழி நமது பெரிய வண்டி போகக் கூடியதாக இல்லை. ஜட்காவோ, அல்லது டோலியோதான் அதில் போக முடியும். இவைகளில் எதிலாவது நீங்கள் போக முடியுமா?' என்றான்.

'எது கிடைக்கிறதோ அதில் போகிறேன் நான். இனித் தாமதம் செய்தால் காரியம் நடக்காது. எது கிடைக்கிறதோ அதைச் சீக்கிரம் கொண்டுவா!' என்றாள் அசலா.

ரகுவீர் அதிகமாக விவாதிக்காமல் சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு டோலி ஏற்பாடு செய்துகொண்டு வந்தான். அவனுடைய கம்பளியைச் சுருட்டி ஒரு தடியில்

தொங்கவிட்டு அதைத் தோளில் வைத்துக்கொண்டு, வீரத்துடன் டோலியோடு கால் நடையாகச் செல்லத் தயாரானன். வீட்டைக் காவல் காக்கும் பொறுப்பைத் தர்வானிடமும் இதர வேலைக்காரர்களிடமும் ஒப்படைத்துவிட்டு, ஸுரேசன் ஒருவனையே லட்சியமாகக் கொண்டு முன்பின் தெரியாத மஜௌலி என்ற கிராமத்திற்குப் புறப்பட்ட பொழுது, அசலாவுக்கு அவ்விடத்திய சகல சம்பவங்களும் கனவைப் போல் தோன்றின. இந்த விசித்திர உலகத்தில் இம்மாதிரியான சம்பவங்கள்கூட ஒருநாள் நடக்கும் என்று யார் நினைத்தார்கள் என்று அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

சாலே என்ற பெயருடன் சேறும் சக்தியும் நிறைந்து சதசத என்ற ஒரு பாதை இருந்தது. ஆனல் சில சமயம் விசாலமான மைதானத்தில் அது மறைந்துவிடும், சில சமயம் சிறு கிராமங்களுக்குள் சென்று மறைந்துவிடும், அல்லது நின்றுவிடும். முதலில் சிறிது தூரம் வரை அவளுடைய குதூகலம் இடையிடையே பொங்கி வந்தது. ஆனல் மேற்கொண்டு செல்லுகையில், ஒரு பிணத்தைச் சிலர் தூக்கிக்கொண்டு போவதைக் கண்டாள். நோயின் கொடூரத்தினல் பயங்கொண்டு அவள் உடல் சிலிர்த்தது. 'அவன் எப்படி இறந்தான், வயது என்ன, அவன் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்று கேட்போமா ?' என்று அவளுக்கு ஆசை ஏற்பட்டது. ஆனல் வழியின் தூரம் பெருகப் பெருக பொழுதும் போகலாயிற்று. தூரத்துக் கிராமத்திலிருந்து அழுகைச் சத்தம் கேட்கக் கேட்க, அவள் மனமும் உடலும் ஒருவிதமான பயத்தினல் நடுங்கின. நெடு நேரமாக அவளுக்குத் தண்ணீர்த் தாகம். டோலி ஒரு நதியின் உயரமான கரையின்மேல் சென்றுகொண்டிருந்தது. எதிரே ஒரு துறை தெரிந்தது. அவள் டோலியை நிறுத்திக் கீழே இறங்கினள். கை கால் முகம் கழுவிக்கொண்டு, தண்ணீர் குடிப்பதற்காகத்

தண்ணீரில் இறங்கினாள். பாதி எரிந்த பிணங்கள் இரண்டு அருகே ஒதுக்கப்பட்டுக் கிடந்தன. அவற்றின் பயங்கரத் தோற்றம் அவள் மனத்தைக் கலக்கவில்லை. அவள் சர்வ சாதாரணமாகத் தன் முகம் கை கால்களைக் கழுவிக்கொண்டு, தண்ணீர் குடித்துவிட்டு, மெள்ள மெள்ளச் சென்று டோலியில் அமர்ந்தாள். எந்த நிலைமையிலாவது இது நடக்கக் கூடியதா என்பதை இதற்கு முன் அவள் கற்பனைகூடச் செய்யவில்லை.

இதன் பின் எத்தனையோ கிராமங்கள் எதிர்ப்பட்டன. எல்லாம் பாழாய்க் கிடந்தன. ரொம்பத் தைரியமுள்ள சிலரைத் தவிர மற்றவர்களெல்லாம் ஊரைவிட்டு ஓடிவிட்டார்கள். எங்கும் யாதொரு சந்தடியுமில்லை. ஒரே நிசப்தம். வீடுகளெல்லாம் பூட்டிக் கிடந்தன. நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. அந்த வீடுகள்கூட மரணம் நிச்சயமென்று தங்கள் கண்களை மூடிக்கொண்டு இருப்பதைப் போல் தோன்றின.

மரணம் மண்டிய ஜனசஞ்சாரமற்ற பாழடைந்த கிராமத்தின் ஊடே செல்லும்போது, டோலி தூக்குகிறவர்கள் ரகுவீர் இவர்களின் பயமடைந்த காலடிச் சத்தம் ஒவ்வொரு நிமிஷமும் அசலாவுக்கு விபத்தின் பயங்கரத்தையே சொல்லிக்கொண்டு வந்தது. ஆனால் அவள் மனத்தில் எவ்விதப் பயமும் கிடையாது. அவளுடைய உள்ளம் இதோடெல்லாம் நெடுநாள் பழக்கம்கொண்டது போல் சலனமற்று நின்றது.

இந்த விதமாக எஞ்சிய வழியையும் கடந்து மஜௌலிக்கு வந்தபோது சாயங்கால மாகிவிட்டது. அசலா தன்னுடைய பிரயாணக் கஷ்டம் அங்கு வந்ததும் நீங்கிவிடும் என்று நம்பியிருந்தாள். கிராமத்து ஜனங்கள் நன்றியுடன் ஓடிவந்து மரியாதையோடு அவளை டாக்டர் முன் அழைத்துச் செல்வார்கள். அங்கே நோயாளிகளும் அவர்களுடைய சுற்றத்தாரும் தடபுடலாக அமர்க்களம் செய்துகொண்டிருப்பார்கள். இதன் மத்தியில் அசலாவுக்கு எங்கே இடம் கிடைக்கும்?

இந்தச் சித்திரத்தை ஒருவாறு அவள் கற்பனை செய்து வைத்திருந்தாள். ஆனால் இங்கே வந்து பார்த்தபோது, அவள் கற்பனை வெறும் கற்பனையாகவே இருந்தது. உண்மை அதனோடு துளிகூடச் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. தவிர, அவள் வழியில் கண்ட காட்சிகளேதான் இங்கேயும் இருந்தன. இங்கும் வீதிகளில் ஒருவரும் இல்லை. வீடுகள் பூட்டிக் கிடந்தன. இங்கே எந்தத் தெருவில் ஸுரேசன் இருக்கிறான் என்று தேடிக் கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருந்தது.

அந்தக் கிராமத்தில் தினம் சந்தை கூடுவது வழக்கம். அன்றும் சந்தை கூடியது. ஆனால் வியாபாரத்தை முடித்துக்கொண்டு ஜனங்கள் பிற்பகலிலேயே சென்றுவிட்டனர். கடைகள் கூடின அடையாளம் மாத்திரம் தெரிந்தது.

ரகுவீர் தேடி யலைந்து ஒரு கடையைக் கண்டுபிடித்தான். கடைக்காரக் கிழவன் கடையின் தட்டியைச் சாத்தியிருந்தான். அவன் ரகுவீரிடம், 'குழந்தை குட்டிகளெல்லாம் நேற்றே வேறு கிராமத்திற்குப் போய்விட்டன. நானும் என் பெண்சாதியும் மாத்திரம் கடையின் ஆசையை விட்டுப் போக முடியாமல் இன்னும் இருந்துகொண்டிருக்கிறோம்' என்றான். ஸுரேசன் சம்பந்தமாக அவன் சொன்னது இவ்வளவுதான்: 'டாக்டர் பாபு நந்து பாண்டே வீட்டில் இதுவரையில் இருந்தார். இப்பொழுதும் அங்கேதான் இருக்கிறாரா, அல்லது மகம்மதுபுரம் சென்றுவிட்டாரா என்பது தெரியவில்லை.'

'மகம்மதுபுரம் எங்கே யிருக்கிறது?'

'நேரே இரண்டு மைல் தெற்கே!'

'நந்து பாண்டேயின் வீடு எங்கே யிருக்கிறது?'

கிழவன் வெளியே வந்து விரலால் ஒரு பெரிய எலுமிச்ச மரத்தைச் சுட்டிக் காட்டி, 'அங்கே போனவுடனேயே தெரியும்!' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பயமும் களைப்பும் அடைந்த போகிகள் எலுமிச்ச மரத்தடியில் டோலியை இறக்கியபோது அஸ்தமித்துவிட்டது. பெரிய வீடு. பின் பக்கம் இரண்டொரு பழைய செங்கல் வீடுகள் தெரிந்தன. ஆனால் பெரும்பாலும் ஓட்டு வீடுதான். எதிரே சுவர் இல்லை. திறந்த வெளி. வீட்டின் சொந்தக்காரன் ஏழையாகவும் தோன்றவில்லை. ஆனால் ஒருவராவது வெளியே வரவில்லை. எதிரே இருந்த தூணில் கட்டியிருந்த சிறு குதிரை ஒன்று தன் பசியின் வேதனையை வெளியிட்டு, மிக்க இரக்கமான குரலுடன் கனைத்து அதிதிகளை வரவேற்றது.

வாசல் கதவு திறந்திருந்தது.

ரகுவீர் தைரியத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தான். அருகே இருந்த தாழ்வாரத்திலுள்ள கட்டிலில் ஸுரேசன் படுத்துக் கிடந்தான். அருகே தூணில் சாய்ந்துகொண்டு ஒரு கிழவி தூங்கி விழுந்துகொண்டிருந்தாள்.

'பாபுஜீ!'

ஸுரேசன் கண் விழித்துப் பார்த்துவிட்டுக் கட்டிலைப் பிடித்துக்கொண்டு தலையைத் தூக்கி, 'யார்? ரகுவீர்!' என்றான்.

ரகுவீர் ஸலாம் செய்துவிட்டு அருகே சென்று நின்றான். ஆனால் எஜமானின் வரண்ட கண்களைப் பார்த்ததுமே அவன் வாயினின்றும் வார்த்தை கிளம்பவில்லை.

'நீ எங்கே இங்கு—?'

ரகுவீர் மறுபடியும் ஸலாம் செய்து, வெளியே சுட்டிக் காட்டி, 'அம்மா—' என்று மாத்திரம் சொன்னான்.

ஸுரேசன் உடனே ஆச்சரியத்துடன் சரியாக எழுந்து உட்கார்ந்து, 'உன்னை இங்கே அனுப்பினாளா?' என்றான்.

ரகுவீர் தலையை அசைத்து, 'இல்லை, அவர்களே வந்திருக்கிறார்கள்!' என்றான்.

பதிலைக் கேட்டு விஷயம் மனத்திற்கு விளங்காதது போல் ஸுரேசன் ஒரே விறைப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தான். அதன் பின் அவன் கண்களை மூடிக்கொண்டு மெள்ளப் படுத்துக்கொண்டான். ஒன்றும் பேசவில்லை.

அசலா உள்ளே வந்து பேசாமல் கால்மாட்டில் ஒரு பக்கம் அமர்ந்தபோது கூட, அவன் சில நிமிஷங்கள் வரை முன்போலவே கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான். மரியாதைக்கு 'வா' என்று கூடச் சொல்ல முடியவில்லை. சிறு வயதிலிருந்தே எப்பொழுதும் மிகவும் செல்வமாய் வளர்ந்து ஆவேசத்திலும் உணர்ச்சியிலுமே அவன் தன் வாழ்நாளைக் கழித்தவன். தன்னை அடக்கிக்கொள்ளும் படிப்பினையை அவன் ஒரு நாளும் படித்ததில்லை. இதை அவன் வாழ்க்கையில் முதன்முதல் படித்தது, தன் சிரிப்பை அசட்டை செய்து மஹிம் வீட்டுக்குப் போன அன்றுதான். அன்று தினம் ஒரே கணத்தில் அவனுடைய அமைதியான உள்ளத்தில் என்னென்ன கிளர்ச்சிகள் எழுந்தன என்பதைக் கடவுள்தான் அறிவார். இன்றும், சாந்தமாக அசையாமல் கிடக்கும் இந்த உடலினுள் எப்படிப்பட்ட புயல் எழுந்திருக்கிறதென்பதை அவரேதான் அறிவார்.

அன்று மஹிமின் குத்தலை அவன் எப்படிச் சகித்தானோ, இன்றும் அதைப் போலவே தன்னுடைய உன்மத்தமான உணர்ச்சிகளுடன் பேசாமல் போராடிக்கொண்டிருக்கிறான். தன்னுடைய பச்சாத்தாபத்தை அணுவளவேனும் அவன் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை.

இம்மாதிரி எவ்வளவு நேரம் கழிந்தது என்பதைச் சொல்ல முடியாது. ஆனால் திடீரென்று பல்லக்குத் தூக்குகிறவர்களின் சத்தத்தைக் கேட்டு ரகுவீர் வெளியே சென்றபோது, ஸுரேசன் மெல்லக் கண்களைத் திறந்து பார்த்து, 'உனக்கு என் கடிதம் கிடைத்ததா?' என்றான்.

அசலா தலை நிமிராமலே, 'இல்லை!' என்றாள்.

ஸுரேசன் சற்று ஆச்சரியத்தை வெளியிட்டு, 'கடிதம் கிடைக்காமலேயே புறப்பட்டு வந்தாயா ? ஆச்சரியந்தான்! போகட்டும், நல்லதாயிற்று, ஒருதரம் சந்திப்பு ஏற்பட்டது!' என்று சொல்லி, ஏதோ ஒரு வார்த்தைக்காக அவளுடைய கவிழ்ந்திருந்த முகத்தின் பக்கம் ஒரு கணம் பார்த்துவிட்டு, பிறகு, 'என் பொருட்டு நீ ரொம்பத் துக்கத்தை அனுபவிக்கும்படி ஏற்பட்டது. உயிருள்ளவரை இது தொடரக்கூடும். ஆனால் என்னால் பெருந் தவறு நேர்ந்துவிட்டது. நீ மஹிமை இவ்வளவு காதலிக்கிறாய் என்பதை நான் அறியவில்லை. ஒரு கால் நீயும் அறிந்திருக்க மாட்டாய்!' என்றான்.

ஆனால் அசலா முன் போலவே பேசாமல் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள். இதைப் பார்த்த ஸுரேசன் மறுபடியும், 'இதைத் தவிர மனிதனுக்கு மனம் என்ற சுதந்திர வஸ்து ஒன்றும் இல்லை என்று நம்புகிறேன். இருப்பது இந்தத் தேகத்தின் தர்மமேதான். காதலும் அதுதான். உன் சரீரத்தை அடைந்து, பிறகு எப்படியாவது உன்னுடைய மனத்தையும் அடைவேன், உன் காதலும் கிடைக்கக் கூடாததாக இருக்காது என்று எண்ணினேன். ஒருகால் ஒரு நாள் பாக்கிய சக்கரம் சுழன்று உண்மையாகவே சந்தோஷம் அளிக்காதென்று யார் கண்டார்கள்? எல்லாவற்றையும் கொடுத்து உன்னை நான் விரும்பினேன்; அதனால் சந்தோஷமடைந்து, உன் இஷ்டத்தின் பேரில் நீ பிச்சையளித்தாலும் அளிக்கலாமென்றும் நினைத்தேன். ஆனால் இனி அதற்குச் சமயமில்லை. எனக்கு எதிர்பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை!' என்று சொல்லிவிட்டு, பிறகு மறுபடியும் கட்டிலைப் பிடித்துக்கொண்டு தலைநிமிர்ந்து, மாலை நேரத்தின் மங்கிய வெளிச்சத்தில் தன் கண் பார்வையைக் கூர்மையாக்கி, அசலாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே மௌனமானான்.

ஒருவருடைய இந்த ஏகாக்கிர திருஷ்டி மற்றவருடைய குளிர்ந்த பார்வையை ஓர் இமைப் பொழுது ஆகர்ஷித்தது. அசலா அந்த நொடியே பார்வையைத் தாழ்த்தி, மிருதுவான குரலில், மிகுந்த லஜ்ஜையுடன், மெதுவாக, ‘இங்கிருந்து தான் எல்லோரும் ஓடிவிட்டார்களே!—இவ்விடத்திய வேலைகள் முடிந்துவிட்டால் வீட்டுக்கு வாருங்கள். இல்லாவிட்டால் எத்தனையோ ஊர்கள் இருக்கின்றன. அங்கு செல்லலாம்! டேஹறியில் இனி ஒரு கணம்கூடத் தங்க முடியாது!’ என்றாள்.

‘இந்த விஷயத்தை என்னைவிட வேறு யார் அதிகமாக அறிந்திருப்பார்கள்?’ என்று சொல்லி, ஸுரேசன் ஒரு பெருமூச்சு விடுத்துவிட்டு, தலையணையில் தலை வைத்துச் சாய்ந்தான். பிறகு சிறிது நேரம் மௌனமாகவும் அமைதியாகவும் இருந்துவிட்டு, மெதுவாக, ‘ரொம்பக் கஷ்டத்துடன் இன்று இரண்டு கடிதங்களை அனுப்பினேன். ஒன்று உனக்கு, மற்றொன்று மஹிமுக்கு. அவன் போயிராவிட்டால் கட்டாயம் வருவான். எனக்குத் தெரியும்!’ என்றான்.

இதைக் கேட்டு அசலா பயத்தாலும் ஆச்சரியத்தாலும் பிரமித்துப்போய், ‘அவரை ஏன்...?’ என்றாள்.

ஸுரேசன் முன் போலவே மெதுவாக, ‘எனக்கு இப்பொழுது அவன் மாத்திரந்தான் ரொம்ப அவசியம். சிறு வயதிலிருந்தே உலகில் வெகுநாள் அநேக சங்கடங்களில் மாட்டிக்கொண்டிருக்கிறேன். அவைகளைத் திறந்துவிட அவன் அவசியமாக இருக்கிறான். ஆகையால்தான் இன்னும் அவனை நான் கூப்பிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வளவு தைரியம் உலகில் வேறு யாரிடமும் இல்லை!’ என்றான்.

அசலாவின் மனத்திற்குள் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அவள் தலைகுனிந்து கேட்டுக்கொண்டிருந்தாள். ஸுரேசன் மீண்டும், ‘என்னுடைய கடிதத்தில் அநேகமாக

எல்லா விஷயங்களையும் எழுதியிருக்கிறேன். படித்தால் விளங்கிவிடும். அன்று உன் கையில் என்னுடைய சகல சொத்துக்களையும் பற்றிய உயிலைக் கொடுத்தேன். விரும்பினால் அவைகளைப் பெரும்பாலும் நீயே எடுத்துக்கொள்ளலாம். ஆனால் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பது என் எண்ணம். நான் உயிரோடிருந்தால் எப்படி அவைகள் ஏழைகளுக்குக் கிடைக்குமோ, அப்படியே நான் இறந்த பிறகும் அவர்களுக்கே கிடைப்பதுதான் சரி. என்னுடைய எந்தப் பொருளையும் நீ உன்னுடன் சேர்த்துக்கொள்ளாதே, அசலா! நீ கவலையற்றிரு! தடையற்றிரு! என்னுடைய பூரணமான சம்பந்தத்திலிருந்து நீ தனியாக இருக்க முடியும்! இதைத்தான் நான் விரும்புகிறேன்! முயற்சி செய்தால் உலகில் பல துக்கங்களைச் சகித்துக்கொள்ள முடியும். நான் கொடுத்த துக்கத்தையும் நீ ஒருநாள் சகித்துக்கொள்வாய். இதுதான் என் ஆவல்!' என்றான்.

அவனுடைய நடத்தை, பேச்சு வார்த்தை இவைகளின் முறையைக் கண்டு, வந்தது முதலே அசலா பயங்கொண்டிருந்தாள். இந்தக் கடைசி வார்த்தைகளைக் கேட்டதும் அவள் ரொம்பப் பயந்துபோனாள். 'நீங்கள் ஏன் இதெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? எழுந்து உட்காருங்கள்! நாம் இப்பொழுதே இதை விட்டுப் போய்விடுவோம்! இதற்கு முயற்சியுங்கள்!' என்றாள்.

அசலாவின் சந்தேகம் படபடப்பு இவைகளைக் கண்டும், ஸுரேசன் யாதொரு பதிலும் சொல்லவில்லை. தூணில் சாய்ந்துகொண்டிருந்த கிழவி சற்று விழித்து, 'பாபுஜீ, உள்ளே வருகிறீர்களா? இல்லை, விளக்கை வெளியே கொண்டு வரட்டுமா?' என்றாள். அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை. திடீரென்று அவனுக்கு மூர்ச்சை வந்தது போல் தோன்றியது. அசலா படபடப்படைந்து, தான்

முன் கேட்ட கேள்வியைக் கேட்க விரும்பினுள். அதற்குள் ஸுரேசன் கண்களைத் திறந்து சுபாவமான முறையில், ‘உன்னிடம் இதுவரை உள்ளதைச் சொல்லவில்லை, அசலா! நான் சாகப்போகிறேன். நான் பிழைப்பேன் என்ற நம்பிக்கை சற்றும் இல்லை!’ என்ருன்.

இதற்குப் பதிலாக அசலாவின் தொண்டையிலிருந்து விளக்கமற்ற குழம்பிய சப்தம் ஒன்றுதான் வெளிப்பட்டது. பிறகு அவள் கற்சிலை போல் அசைவற்று உட்கார்ந்து விட்டாள்.

ஸுரேசன் மீண்டும் பேசலானுன். ‘முதலிலேயே நான் உயில் எழுதி வைத்துவிட்டேன். ஆனுல் யாராவது நான் வேண்டுமென்று இறக்கிறேன் என்று கூறினுல் அது என்னைப் பற்றி அநீதம் கூறுவதாகும், பொய்யுமாகும். அத ஞல் எனக்கு மரணத்தைவிட அதிக வருத்தம் ஏற்படும். நான் ஜாக்கிரதையா யிருப்பதில் சிறிதும் தவறவில்லை. ஆயினும் கவனம் ஒன்றும் பயன்படவில்லை. உன்னிடம் யாராவது, என்றைக்காவது கேட்டால், உலகில் மற்றவர்கள் இறப்பதைப் போல்தான் நானும் இறந்தேன் என்று சொல்லி விடு. மரணத்தினின்றும் விடுபட முடியாது. ஆகையால் தான் சாகிறேன். இல்லாவிட்டால் இறப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. என்னுடைய மரணத்தில் பிறருடைய எந்தக் காரணமோ, அன்றி ஏதாவது விசேஷமோ இருந்தது என்ற அபவாதத்தை யாரும் கூறவேண்டாம்!’ என்ருன்.

அசலா ஒன்றும் சொல்லவில்லை. வார்த்தை பேசும் சக்தி அவளிடமிருந்து வற்றிவிட்டது. அந்த மங்கிய இருளில் பயமடைந்திருந்த அவள் முகத்தைப் பார்த்து ஸுரேசன் இதை அறிய முடியவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு, மீண்டும் அவன் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, ‘என்னுல் புறப்படாமல் இருக்க முடியவில்லை. இதனுல்

உனக்குத் தெரியாமல் அன்று காலையிலேயே ஓடி வந்துவிட்டேன். இங்கே வந்து பார்க்கும் போது கிராமம் அநேகமாகச் சூனியமாகக் கிடந்தது. இந்த வீட்டில் ஒரு வேலைக்காரன் இறந்துவிட்டான். அவனை நான் காப்பாற்ற முடியவில்லை. சவத்தை எடுத்து ஏதோ ஆகவேண்டியதை ஒரு வழியாய் முடித்தோம். திரும்ப வந்ததும் வீட்டுக்கு வந்துவிடலாமா என்று எண்ணினேன். ஆனால் மத்தியானம் ஒரு பையன் அழுதுகொண்டே வந்து தன் தாய் நோயுற்றிருப்பதாகக் கூறினான். அவளுக்கு ஆபரேஷன் செய்தே எனக்கு இந்தக் கதி ஏற்பட்டது. இம்மாதிரி நான் எத்தனையோ ஆபரேஷன்கள் செய்திருக்கிறேன், ஜாக்கிரதையிலும் ஒன்றும் குறைவில்லை. ஆனால் இந்தத் தடவை, துரதிர்ஷ்டவசமாக, வண்டிச் சக்கரத்தினால் என் மோதிர விரலில் பட்டிருந்த காயம் அப்பொழுது எனக்கு நினைவேயில்லை. ஆபரேஷன் முடிந்து கை ரத்தத்தை அலம்பும் போதுதான் அதில் பார்வை விழுந்தது. சட்டென்று திரும்பிவந்து செய்யவேண்டியதைச் செய்தேன். வீடு திரும்ப வழி யிருந்திருந்தால் திரும்பியிருப்பேன். ஆனால் ஒரு வழியுமில்லை. நேற்றிரவு ஜுரம் போல் தோன்றியது. பிறகு என்ன ஜுரம் என்பதை அறிந்துகொண்டேன். ரொம்பக் கஷ்டத்துடன் பெரு முயற்சி செய்து ஒரு ஆள் மூலம் உங்கள் இருவருக்கும் கடிதம் எழுதி அனுப்பினேன்!' என்றான்.

அசலா கண்ணீர் பொங்கி, துக்கம் நிறைந்த குரலில், 'இப்பொழுதுதான் வழி இருக்கிறதே! என் டோலியில் உட்கார வைத்து உங்களைக் கொண்டுபோகிறேன்! இனி ஒரு நிமிஷங்கூட உங்களை இங்கிருக்க விடமாட்டேன்!' என்றாள்.

'பிறகு நீ?'

'நான் நடந்துவருகிறேன்! என்னைப் பற்றி நீங்கள் கவலைப்படவே வேண்டாம்!'

'கால்நடையாகவா? இவ்வளவு தூரமும்?'

'உங்கள் காலில் விழுகிறேன்! நீங்கள் இதைத் தடுக்கா தீர்கள்!' என்று சொல்லி அசலா அழுதுவிட்டாள்.

ஸுரேசன் ஒரு கணம் மௌனமாக இருந்து ஒரு பெரு மூச்சு விட்டுக்கொண்டு, மெள்ள, 'நல்லது! அது சரிதான்! ஆனால் இனி அதற்கும் அவசியமில்லை என்று தோன்று கிறது!' என்றான்.

அசலா வெளியே வந்து பார்த்தாள். ரகுவீர் எலு மிச்சை மரத்தடியில் அமர்ந்து கடலையைக் கொறித்துக்கொண் டிருந்தான். அவனிடம், 'ரகுவீர்! பாபுவுக்கு ரொம்ப உடம்பு அசௌகரியமா யிருக்கிறது. அவரை இப்பொழுதே அழைத்துக்கொண்டு போகவேண்டும். டோலிக்காரர்களிடம் சொல்லு. எவ்வளவு ரூபாய் கேட்கிறார்களோ அதற்கு மேலும் கிடைக்கும். ஆனால் இனி ஒரு கணமும் தாமதம் செய்ய முடியாது!' என்றாள்.

எஜமானியின் வருத்தமான குரலினால் ரகுவீர் திடுக் கிட்டுப் போனான். எழுந்து நின்றுகொண்டே, 'ஆனால் அவர் கள் இரண்டு பேரைத் தூக்கிக்கொண்டு போக முடியாதே!' என்றான்.

'இல்லை, இல்லை! இரண்டு பேரை யல்ல, ஒருவரைத் தான். நான் நடந்து வருகிறேன்—ஆனால் ரகுவீர், ஒரு நிமி ஷங்கூடத் தாமதிக்க முடியாது. நீ சீக்கிரம் போ! எங்கே இருக்கிறார்கள் அவர்கள்?' என்றாள்.

'கூலியை வாங்கிக்கொண்டு ஆகாரம் செய்ய அவர்கள் கடைக்குப் போயிருக்கிறார்கள். இதோ அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்' என்று சொல்லிக் கடலையைத் துணியில் முடிந்துகொண்டு ஓடினான் ரகுவீர்.

அசலா திரும்பி வந்து ஸுரேசனின் தலைமாட்டில் உட் கார்ந்து, கையினால் அவன் நெற்றியைத் தொட்டு ஜுரத்

தைக் கண்டு பயத்தால் வெலவெலத்துப் போனாள். முனியா ஒரு மண்ணெண்ணெய் விளக்கை அருகே தரையில் வைத்திருந்தாள். அதிலிருந்து கிளம்பிய புகை அறையைக் கரியாக்கிக்கொண்டிருந்தது. அதை எடுத்து மறுபுறம் வைக்கும்போது அருகே இருந்த சீசா அவள் கண்ணில் பட்டது. 'இது உங்கள் மருந்தா?' என்றாள்.

'ஆமாம்! என்னுடையதுதான்! நேற்று நானேதான் தயாரித்தேன். ஆனால் சாப்பிட முடியவில்லை - இரண்டு...' என்றான் ஸுரேசன்.

இந்த வார்த்தை அசலாவை மிகவும் வருத்தியது. ஆனால் மருந்து சாப்பிடாத காரணத்தைக் கேட்டு வார்த்தையை வளர்க்க அவள் விரும்பவில்லை. மருந்தைக் கொடுத்துவிட்டு மறுபடியும் தலைமாட்டில் வந்து அமர்ந்தாள். வெகுநேரமாக ஸுரேசன் பேசாமல் இருந்தான். ஆனால் பேசாமல் அவன் எவ்வளவு வேதனையைச் சகித்துக்கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்த அசலாவுக்கு உள்ளம் வெடித்துவிடும்போல் ஆகிவிட்டது.

நேரமாயிற்று, ரகுவீர் தகவல் இல்லை. இடையிடையே அவள் மெதுவாக நடந்து வாசலிலிருந்து வெளியே இருளில் எட்டிப் பார்த்தாள். ஆனால் எங்கும் யாரையும் காணவில்லை. எங்கே இந்த உபத்திரவம் ஸுரேசனுக்குத் தெரிந்துவிடப் போகிறதோ என்று அவளுக்குப் பயத்துடன் வேதனையும் அதிகரித்தது.

இரவு வளர்ந்தது. தூண் அருகே உட்கார்ந்து முனியா குறட்டை விடலானாள். இதற்குள் பசியும் களைப்பும் அடைந்த ரகுவீர் வருத்தத்துடன் வந்து, 'டோலிக்காரர்கள் டோலியை எடுத்துக்கொண்டு போய் வெகு நேரமாகிவிட்டது. அவர்களை எங்கும் காணவில்லை!' என்றான்.

அசலா எல்லாவற்றையும் மறந்து, உளறும் குரலில், திரும்பத் திரும்ப, 'எல்லோரும் போய்விட்டார்களா? எங்கே, எந்த வழியாக? எதற்காகச் சென்றார்கள்? எங்கே சென்றார்கள்? என்னுடைய சகலத்தையும் கொடுத்துங்கூட எனக்கு ஒரு டோலி எங்கும் கிடைக்கவில்லையா?' என்றாள்.

ரகுவீர் தலைகுனிந்து பேசாமல் நின்றான். இந்தப் பயங்கரமான ஆபத்துக் காலத்தில் தன்னால் எவ்வளவு பெரிய தவறு நேர்ந்துவிட்டது என்பதை உணர்ந்துகொண்டிருந்தான். அதனால்தான் அவனால் முடிந்தவரை முயற்சி செய்து தேடிவிட்டு, வேறு வழி ஒன்றும் இல்லாதபோது திரும்பி வந்தான்.

ஆனால், அவனைப் போலவே, பேசாமல் படுக்கையில் படுத்திருந்த மற்றொரு மனிதனிடம் சற்றுக்கூடப் பரபரப்பு காணப்படவில்லை. ரகுவீர் சென்ற பிறகு அவன் மெதுவாக, 'சஞ்சலமடைவதால் என்ன ஆகப்போகிறது, அசலா? அவர்கள் கிடைத்துவிட்டாலும் யாதொரு லாபமும் இல்லை. இது தான் சரி! எனக்கு இதுதான் நல்லது!' என்றான்.

அசலா ஒன்றும் பேசவில்லை. அந்த முடிவற்ற வழி கொண்ட யாத்ரீகனின் நைந்துபோன நெற்றியில் அவளுடைய வலது கையை வைத்து, கற்சிலை போல் அமர்ந்திருந்தாள்.

நாற்புறமும் ஜனசந்தடியற்ற ஊர் மரணத்தைப் போல் மௌனமாக இருந்தது. வெளியே இருண்ட இரவு திரண்டு கொண்டிருந்தது. கண்ணுக்கெதிரில் வானத்தில் கருமேகம் படர்ந்திருந்தது. அதைப் பார்த்துப் பார்த்து, அவளுக்கு, 'இதற்கென்ன அவசியம்? இதற்கென்ன அவசியம்?' என்ற எண்ணந்தான் ஏற்பட்டது.

அவளுடைய வாழ்க்கைக் குருக்ஷேத்திரத்தில் நடக்கும் இவ்வளவு பெரிய போராட்டத்திற்கு உலகில் என்ன அவசி

யம் இருக்கிறது? உலகத்திலுள்ள சகல ஜ்வாலைகள், இழிவு கள், சுயநலங்கள் யாவும் அழிந்து, இந்த இரவைப் போலவே முடிந்துவிடுமா? இதன் பின் அவள் வாழ்க்கை பூராவும் குரு க்ஷேத்திரத்தைப் போல மயானமாகி, யுக யுகாந்தரங்கள் வரை அப்படியே இருக்குமா? இங்கே சிதையின் கொளுத் தின சின்னங்கூட மறையாதா? உலகில் இதுவும் அவசியத் துடன் சேர்ந்ததா?

ஆனால் இந்தக் குருக்ஷேத்திரம் எதற்காக ஆரம்ப மாயிற்று? இதை யார் ஆரம்பித்தார்கள்? தன்னுடைய ஐசுவ ரியம், சம்பத்து, உற்றார், உறவினர் யாவற்றையும் விடுத்து, வேறு வழியின்றி மரணமடைந்துகொண்டிருக்கும் இந்த மனி தனை இவ்வளவு துன்பங்களையும் எழுப்பினான்? யார் மனத்தி லும், எங்கும், ஆசையோ மோகமோ ஒளிந்து கிடக்கவில் லையா? வேறு எங்கும், யாரும் பாவம் செய்யவில்லையா?

ஆனால், திடீரென்று இந்தச் சிந்தனைப் பெருக்கைத் தூர அகற்றி, அவள் அசைந்துகொடுத்துச் சரியாக உட் கார்ந்தாள்.

யாரோ இரு கைகளினாலும் அவள் தொண்டையை அழுத்தியதைப் போல் இருந்தது. அதே சமயம் ஸுரேச னும் தண்ணீர் கேட்டான். அசலா குனிந்து அவன் வாயில் தண்ணீர் விட்டுவிட்டு மறுபடியும் சரியாக உட்கார்ந் தாள். அவளுக்குக் களைப்பும் இல்லை, வருத்தமும் இல்லை. கண்களிலிருந்து தூக்கமும் அகன்றுவிட்டது. தன்னுடைய வரண்ட கண்களால் அவள் வானத்தைப் பார்த்துக்கொண் டிருந்தாள். வெகு நாட்களுக்கு முன் மிகுந்த சிரமத்துடன் அவள் முடிவுகட்டிய மஹாபாரதத்தின் இறுதியான சர்வ நாசம், மனப் படுதாவில் நிழல்-ஓவியத்தைப் போலத் தோன்ற லாயிற்று. அங்கு நாற்புறமும் ரத்தம் பெருகுவதைப் போல் தோன்றியது. முன்பின் தெரியாத அநேக மனிதர்கள் ஒரு

வருக்கொருவர் வெட்டி மடிந்தனர். நூற்றுக் கணக்கான சிதைகள் எரிந்து அணைந்து, அவைகளின் புகைகளால் ஸ்வர்க்கமும் மத்தியமும் மூடப்பட்டுவிட்டன.

சிறிது நேரத்திற்கு ஸுரேசனுக்கு மூர்ச்சை போட்டு விட்டது. அவன் பேசாமல் படுத்துக் கிடந்தான். ஆனால் இம்மாதிரி எவ்வளவு நேரம் கழிந்தது, எப்படி வெளியே பொழுது கழிந்தது, எப்படி இரவு வைகறையை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது - இவைகளொன்றிலும் அசலா வின் கவனம் செல்லவேயில்லை. அவளுடைய மூடியிருந்த கண்களின் மூலைகளிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டிருந் தது. அவளுடைய சோர்ந்த கைகள் ஸுரேசனின் தலை யணை மேல் கிடந்தன. அவள் ஏகாக்கிர மனத்துடன், 'ஏ கடவுளே, நான் ரொம்பத் துக்கப்பட்டுவிட்டேன். வேண்டிய வேதனைகளை அனுபவித்தாய்விட்டது. இன்று என்னுடைய துக்கம், வேதனை இவைகளுக்குப் பதிலாக இவரை நீ மன்னித்து உன் மடியில் எடுத்துக்கொள். எனக்குத் தாயில்லை, தந்தையில்லை, சகோதரனில்லை, கணவ னில்லை. இவ்வளவு வெட்கத்தையும் தாங்கிக்கொண்டு எங்கா வது சற்று ஒதுங்கி நிற்க எனக்கு இடமுமில்லை. நான் எவ் வளவு சகித்துக்கொண்டிருக்கிறேன் என்பதை நீயே அறி வாய். பிரபோ! இனி என்னை உயிருடன் வாழ விடாதே! என்னையும் நீ உன்னிடம் அழைத்துக்கொள்!' என்றாள்.

இந்த வார்த்தைகளை அவள் எத்தனை முறை, எப்படி யெல்லாம், திரும்பத் திரும்பக் கூறினாள்—இதற்கு ஒரு கணக்கே யில்லை. கண்ணீர்த் தாரை எவ்வளவு பெருகிற்று— இதற்கும் ஓர் அளவில்லை.

'அம்மா!'

அப்பொழுதுதான் பொழுது விடிந்தது. அசலா திடுக் கிட்டுத் திரும்பினாள். யாரையோ உள்ளே வரச் சொல்

வதற்குத் தயாராக ரகுவீர் கதவைத் திறந்துகொண்டிருந்தான்.

'என்ன ரகுவீர்?' என்று கேட்டுக்கொண்டே அவள் திரும்பியதும் அவள் கண்களில் தென்பட்டான் மஹிம்!

ஒரு முறை அவள் நடுங்கினாள். அடுத்த கணம் தலை குனிந்தாள். மஹிம் வாசற்படியில் காலடி வைத்தவன், ஒரு நிமிஷம் அதை எடுக்கவே யில்லை. இங்கே இந்த மாதிரி அசலாவைத் தான் சந்திக்க நேரும் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. ஆனால் அடுத்த நிமிஷமே அவன் மெதுவாக அருகே வந்து நின்று, மிருதுவான குரலில், 'ஸுரேசனுக்கு இப்பொழுது உடம்பு எப்படி யிருக்கிறது?' என்றான்.

அசலா தலை நிமிரவில்லை. வார்த்தை பேசவில்லை. தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்ல விரும்பினவள் போலத் தலையை மாத்திரம் அசைத்தாள்.

நிமிஷ நேரம் அசைவற்று நின்று, மஹிம் ஸுரேசனின் நெற்றியில் கையை வைத்ததும், ஸுரேசன் கண் விழித்துக் கொண்டான். ஒளியற்று வரண்டுபோன அவன் கண்களைப் பார்த்து மஹிமின் தொண்டையிலிருந்து வார்த்தை வெளி வரவில்லை. சிறிது பொறுத்து, 'எப்படி யிருக்கிறது, ஸுரேஷ்!' என்றான்.

'நன்றாக இல்லை! இனிச் சென்று வருகிறேன்! நீ வருவாய் என்று எனக்குத் தெரியும். என் எதிரே வந்து உட்காரு!' என்றான்.

மஹிம் எழுந்து ஸுரேசன் கால் மாட்டில் அமர்ந்து, 'டேஹரியில் டாக்டர்கள் இருக்கிறார்கள். மெள்ள என் ஜட்கா வண்டியில்—' என்று ஆரம்பித்தான்.

ஸுரேசன் தலையசைத்து, 'இல்லை. இனி அலைச்சலொன்றும் வேண்டாம். இனி ஒன்றும் பலனில்லை. என்னை நிம்மதியாக இருக்க விட்டுவிடு!' என்றான்.

'ஆனல் இன்னுந்தான்......'

'ஆமாம்! இன்னும் ஸ்மரணை இருக்கிறது. நடு நடுவே ஸ்மரணை தப்பிவிடுகிறது. நான் என் வாழ் நாளை ஏழை எளியவர்களுக்கு உபயோகப்படுத்த முடியவில்லை. ஆனல் மஹிம், நீ என்னுடைய சொத்துக்களை அவர்களுக்கு உபயோகப்படுத்த வேண்டும். இதற்காகத்தான் இவ்வளவு சிரமம் கொடுத்து உன்னை இங்கு வரவழைத்தேன். இல்லாவிட்டால், சாகும் போது மன்னிப்புக் கேட்டுக்கொண்டு காவியம் இயற்ற எனக்கு இஷ்டமில்லை!' என்ருன்.

மஹிம் மௌனமாக இருந்தான். ஸுரேசன் மீண்டும், 'அவைகளில் எனக்கு நம்பிக்கை யில்லை. எனக்குப் பிடிக்கவும் இல்லை. ஒரு நாளைய மன்னிப்பில் எனக்கு ஆசையும் இல்லை. ஆமாம், இதைக் கேள்! என்னுடைய உயில் ஒன்று இருக்கிறது. அசலாவுக்கு நான் ஒன்றும் கொடுக்கவில்லை. அவளை இன்னும் அவமானம் செய்ய என் கை முன் வரவில்லை. ஆனல், ஆமாம்—அவசியம் என்று எண்ணினல் ஏதோ கொஞ்சம் கொடு!' என்ருன்.

மஹிம் மிக்க விசனத்துடன், 'என்னை ஏன் இதில் வற்புறுத்துகிருய், ஸுரேஷ்!' என்ருன்.

'உன்னைச் சரியாக வற்புறுத்துவதிஞலேயே உன்னை வற்புறுத்திவிட முடியாது. ஆசையற்றவனுக்கு—நியாய அநியாயத்தை யோசிப்பவனுக்கு—' என்று சொல்லிச் சட்டென்று மேலே பார்வையைத் திருப்பி, 'ராத்திரி முழுதும் விழித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாயா, அசலா?—போ, போய் முகம் கைகளைக் கழுவிக்கொள். முனியா எல்லாவற்றையும் சொல்லுவாள்—போ!' என்ருன்.

அசலா எழுந்து சென்றதும், ஸுரேசன் மறுபடியும், 'ஒரே ஒரு விஷயத்தைப் பற்றித்தான் எனக்குப் பெரும் துக்கமாக இருக்கிறது. அசலா உன்னை எவ்வளவு காதலிக்

கிறாள் என்பதை இதுவரை நான் அறியவில்லை. நீயும் அறியவில்லை. அவளாலும் அறிய முடியவில்லை. அவளுடைய காதல் உன்னுடைய ஏழ்மையுடன்—எப்படிப்பட்ட சிக்கலுடன்—பின்னிக்கொண்டுவிட்டது.........போகட்டும்! இம்மாதிரி அழகான பொருளை நான் மண்ணோடு மண்ணாக்கிப் பாழ் செய்தேன். நானும் அடையவில்லை, பிறரை அடையவும் விடவில்லை. ஆனால் என்ன செய்வது?...அத்தையைக் கொஞ்சம் பார்த்துக்கொள்—அவளுக்குத்தான் பெரிய சோகம் ஏற்படும்!' என்றான்.

முனியா மருந்துச் சீசாவுடன் எதிரே வந்து நின்றாள். ஸுரேசன் எரிச்சலுடன், 'வேண்டாம், வேண்டாம்! இனிமேல் மருந்திலிருந்து ஒன்றும் வேண்டாம். கொஞ்சம் தண்ணீர் கொடு......நான் ஒரு நாடகம் எழுத ஆரம்பித்தேன், மஹிம்! என் டிராயரில் இருக்கிறது. படிக்க முடியுமானால் படி!' என்றான்.

மஹிமுக்கு அவன் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. அவன் தலை குனிந்துகொண்டு பேசாமல் நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது தலை நிமிர்ந்து ஏதோ சொல்ல விரும்பியதும் ஸுரேசன் அவனைத் தடுத்துக்கொண்டே, 'இப்பொழுது இல்லை, மஹிம்! சற்றே தூங்குகிறேன். சாப்பாட்டுக்கு எல்லாம் தயாராக இருக்கிறது. ஆனால் இவைகளொன்றும் உங்களுக்குப் பிடிக்காது!' என்று சொல்லிக் கண்களை மூடினான்.

மஹிம் ஒரு கணம் சும்மா இருந்துவிட்டு, பிறகு தயக்கத்துடன், 'என்னுடைய ஒரு கடைசி வற்புறுத்தலை ஏற்றுக்கொள்வாயா, ஸுரேஷ்!' என்றான்.

'என்ன?'

'நீ கடவுளைப் பற்றி நினைத்ததே இல்லை. அவரைப் பற்றி—'

'எனக்குப் பிடிக்கவில்லை!' என்று சொல்லி ஸுரேசன் முகம் சுளித்துக்கொண்டு திரும்பிப் படுத்துத் தூங்கலானான். மஹிம் தன்னுடைய அடக்க முடியாத பெருமூச்சை முடிந்தவரை அடக்கிக்கொண்டு மௌனமானான்.



# XX

ராம் பாபு வீட்டில் இல்லை. மறுநாள் பக்ஸரிலிருந்து அவர் திரும்பி வந்து மஹிமிடமிருந்து வந்திருந்த கடிதத்தைப் படித்ததும் மஜௌலிக்குக் கிளம்ப ஒரு கணம் கூடத் தாமதம் செய்யவில்லை. வழியெல்லாம் குதிரையை இரக்கமில்லாமல் அடித்துப் பாதி உயிராக்கி ஒருவாறு மஜௌலி வந்து சேர்ந்தபோது, பொழுது சாயச் சற்று நேரம் இருந்தது. அவரைப் பார்த்து போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று நினைத்துக்கொண்டு, ஒரு கடைக்காரன் வந்து அவருக்கு வழி காட்டி, நந்து பாண்டேயின் வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தான். அவர் வண்டியிலிருந்து இறங்கியதும் அவனே குதிரையின் லகானைப் பிடித்துக்கொண்டான். கடைக்காரன் மூலமாக அசலாவும் வந்திருக்கிறாள் என்பதை ராம் பாபு தெரிந்துகொண்டார். கதவு திறந்து கிடந்தது. வீட்டுக்குள் வந்ததும் விஷயம் முடிந்துவிட்டதென்று அறிந்து கொண்டார். ஸுரேசன் இறந்து இரண்டு மணி நேரம் ஆயிற்று. கட்டிலில் காலோடு தலை மூடப்பட்டு அவன் உடல் கிடந்தது. அருகே கால்மாட்டில் அசலா பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

திடீரென்று இந்தக் காட்சியைக் காண விருத்த ராம் பாபுவுக்குச் சகிக்கவில்லை. 'அடி அம்மா!' எனறு சொல்லி, பொங்கி வரும் சோகத்தால் அவர் அழுதுவிட்டார். அசலா ஒருதரம் தலைநிமிர்ந்து பார்த்து, மறுபடியும் பேசாமல் தலை

குனிந்துவிட்டாள். ராம் பாபுவின் அழுகைக் குரல் அவள் செவிவரைதான் சென்றது. ஆனால் அவள் உள்ளத்திற்குச் செல்லவில்லை.

மஹிம் வீட்டுக்குள் விறகுக் கட்டைக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தான். அழுகைச் சத்தம் கேட்டு அவன் வெளியே வந்தான். 'ராம் பாபு! ஸுரேசன் போய்ச் சிறிது நேரமாயிற்று! நீங்களும் வந்துவிட்டீர்கள். நல்லதாயிற்று. இல்லாவிட்டால் நான் தனியாகச் சங்கடப்பட வேண்டியிருக்கும்!' என்றான்.

ராம் பாபு பேசாமல் கண்களைத் துடைத்துக்கொள்ளலானார். தாம் என்ன செய்வது, என்ன சொல்வது, எப்படி இந்தப் பெண் முன் உள்ளத்தைப் பிளக்கும் இந்தக் காரியத்தில் உதவி செய்வது என்பது ஒன்றும் அவருக்கு விளங்கவில்லை.

'இல்லை, நதி அதிகத் தூரமில்லை. ரகுவீர் கொஞ்சம் கட்டை எடுத்துக்கொண்டு போயிருக்கிறான். இன்னும் கொஞ்சம் கிடைத்திருக்கிறது. அதையும் அனுப்பிவிட்டு நாம் மூவரும் சேர்ந்து பிணத்தை எடுத்துச் செல்வோம். வேறு வழி யென்ன இருக்கிறது? கிராமத்தில் மனிதர்கள் இல்லை. இருந்தாலும் வங்காளப் பிணத்தை யாரும் தொடமாட்டார்கள்!' என்றான்.

ராம் பாபுவுக்கு இது தெரியும். அசலாவுக்குத் தெரியாமல் அவர், 'நாம் இருவர் தானே, மூன்றாவது யார்?' என்றார்.

'ரகுவீரும் ஒத்தாசை செய்யக்கூடு மல்லவா?' என்றான் மஹிம்.

இதைக் கேட்டு ராம் பாபு சஞ்சல மடைந்தார். 'இல்லை, இல்லை! அம்மாதிரி நடக்க முடியாது. பிராமணப் பிணத்தை வேறு யாரும் தொட நான் விடமாட்டேன். நதி அதிகத் தூரமில்லாவிட்டால், நாம் இருவருமே முடிந்த வரை எப்படியாவது கொண்டு சேர்த்துவிடலாம்!' என்றார்.

'ஆனால், உங்களைத் தவிர வேறு யாரும் இல்லையே! வேறு யாருமே என்னிடம் பேசக்கூட மாட்டார்களே!' என்று கூறி, அசலா முன்போலவே மஹிமின் முகத்தைப் பார்த்தாள்.

'நீ இதைத்தான் என்னிடம் எதிர்பார்க்கிறாயா?' என்றான் மஹிம்.

இந்த வார்த்தைகள் அசலாவின் செவிகளுக்கு எட்டவேயில்லை. அவள் தன் பேச்சின் போக்கில் தனக்குத் தானே, 'உங்களை இழந்த பிறகு கடவுளிடம், "ஏ கடவுளே! இனி என்னால் சகிக்க முடியாது! நீ என்னையும் அழைத்துக் கொண்டுவிடு!" என்று எத்தனையோ தரம் வேண்டினேன். ஆனால் அவரும் கேட்கவில்லை. நீங்களும் கேட்க விரும்பவில்லை. இனி நான் என்ன செய்வேன்?' என்றாள்.

மஹிம் பதில் சொல்லாமல் வெளியே சென்றான். ஆனால் நிராசை நிறைந்த இந்தக் குரல், இந்தக் கர்வமற்ற சங்கோசமற்ற வாக்கியம் மறுபடியும் அவனைச் சங்கடத்தில் ஆழ்த்தியது. இந்தச் சத்தத்தைக் காதில் வாங்கிக்கொண்டு அவன் வெளி முற்றத்திற்குச் சென்று உலாத்திக்கொண்டே, 'இப்பொழுது என்ன செய்வது? நம்முடைய பாரத்தினால் நாம் அமுங்கிக்கொண்டிருக்கும் போது ஸுரேசன் வேறு தன்னுடைய நன்மை தீமையாகிய செயல்களின் பாரத்தையும் ஏற்றிவிட்டு உலகத்தினின்றும் குதித் தோடிவிட்டான். இதை நாம் எங்கே கொண்டு இறக்குவது?' என்று யோசிக்கலானான்.

ரகுவீர் மிகுந்த சிரமத்தின் பேரில், 'டேஹ்ரி ரஸ்தாவுக்கு மூன்று மைல் தூரத்தில் நாளைக் காலையில் ஒரு சந்தை கூடுகிறது. முயற்சி செய்தால் அங்கே மாட்டு வண்டி கிடைக்கும்' என்ற செய்தியைத் தெரிவித்தான்.

மஹிம் மிக்க ஆத்திரமடைந்திருப்பதைக் கண்டு, அவன் சங்கோசத்துடன், 'நீங்கள் வேண்டுமானால் இப்பொழுதே

போகலாம். ஆனால் இந்தக் கிராமத்தில் பயத்தினால் யாரும் வரமாட்டார்கள். அம்மா அவ்விடம்வரை கொஞ்சம்—' என்று இழுத்தான்.

இதைக் கேட்டதுமே அசலா, 'புறப்படு!' என்று சொல்லி, அதே நிமிஷம் எழுந்து நின்றதும், அவள் கால்கள் தள்ளாடின. கீழே விழ இருந்தாள். மஹிம் கையை நீட்டியதும் அதைப் பலமாகப் பற்றிக்கொண்டு தன்னைச் சமாளித்துக்கொண்டாள். ஆனால் வெட்கத்தாலும் வெறுப்பினாலும் மஹிமின் உடல் முழுதும் குன்றலாயிற்று. அவன் தன் கையை உருவிக்கொள்ள முயற்சித்துக்கொண்டே, 'இன்று முடியாவிட்டால் வேண்டாமே!' என்றான்.

'ஏன்? இங்கே இருப்பது சரியல்ல என்று இப்பொழுது தானே நீங்கள் சொன்னீர்கள்? டேஹரி வழியிலிருந்து வண்டி பேசிக்கொண்டு போக நாளைப் பொழுது போய் விடாதா? என்றாள்.

'ஆனால் நீ ரொம்பப் பலவீனமாக—'

அசலா கையை விடவில்லை. அப்பொழுதும் விடவில்லை. தலையை மாத்திரம் அசைத்து, 'இல்லை, புறப்படுங்கள்! எனக்குப் பலவீனம் இல்லை. உங்கள் கையைப் பிடித்துக் கொண்டு எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நடக்க முடியும்!' என்றாள்.

'புறப்படு!' என்று சொல்லி மஹிம் ரகுவீரை முன்னே போகச் சொல்லிப் புறப்பட்டான். பெருமூச்சு விட்டுக் கொண்டே தன் மனத்திற்குள் ஆயிரம் தடவை, 'இதற்கு முடிவு எங்கே? இந்த யாத்திரை தடைப்படுமா? எங்கே தடைப்படும்? எப்படித் தடைப்படும்?' என்று கேட்டுக் கொண்டான்.

## XXI

டேஹறியிலுள்ள வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் அசலா அந்தப் பெரிய கவரை எடுத்து, ‘இதுதான் அவருடைய உயில்!’ என்றாள்.

மஹிம் கைநீட்டி அதை வாங்கிக்கொண்டான். அதில் தான் மஹிமுக்கு எழுதியிருந்த கடிதமும் இருக்கிறதென்று அவனுக்கு நினைவு வந்தது. கடிதத்தில் நினைக்க முடியாத விஷயம் என்ன எழுதியிருக்கிறது? எந்த அறிய முடியாத ரகசியத்தின் மார்க்கம் கூறப்பட்டிருக்கிறது? அதை உடனே அறிய அவன் மனத்திற்குள் புயல் வீசிக்கொண்டிருந்தது. ஆனால் தன்னுடைய அந்த ஆசையை அடக்கிக்கொண்டு சாந்த முகத்துடன் கவரை வாங்கிப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

‘நீங்கள் இன்றைக்கே டேஹறியை விட்டுச் செல்லு கிறீர்களா?’ என்றாள் அசலா.

‘ஆமாம், இனி இங்கே இருக்க எனக்குச் சௌகரியப் படாது!’

‘நான் எப்பொழுதும் இங்கேதான் இருக்கவேண்டுமா?’

மஹிம் ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு, ‘நீ வேறு எங்கேயாவது செல்ல விரும்புகிறாயா?’ என்றான்.

‘நேற்றிலிருந்து நான் இதைத்தான் யோசித்துக்கொண் டிருக்கிறேன். வெளி நாடுகளில் என் போன்ற அபாக்கியவதி

களுக்கு ஆசிரமம் இருக்கிறது. அங்கே என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்தத் தேசத்தில் அந்த மாதிரி ஏதாவது—'

பேசிக்கொண்டிருக்கும் போதே அவளுடைய கண்களில் கண்ணீர் நிரம்பியது. இன்றுதான் முதன் முதல் அவள் கண்களில் கண்ணீர் தென்பட்டது.

மஹிமின் மார்பில் கருணையின் அம்பு குத்தியது. அவன் மெதுவாக, 'எனக்கும் தெரியவில்லை! ஆனால் தேடிப் பார்க்க முடியும்!' என்றான்.

'நான் எப்பொழுதாவது கடிதம் எழுதினால் பதில் போடுவீர்களா?' என்றாள் அசலா.

'அவசியமானால் போட முடியும். ஆனால்......எனக்குச் சாமான்களைச் சரிப்படுத்திக்கொண்டு ஸ்டேஷனுக்குப் போகத் தாமதமாகிவிடும்! நான் போகிறேன்!' என்றான் மஹிம்.

அசலா, தனது கடைசித் துக்கத்தை இன்று மனத்திற்குள் கணவனின் பாதங்களில் சம்பூரணமாக நிவேதித்து, அங்கேயே தலையைப் பூமியில் வைத்து நமஸ்கரித்தாள். அவன் சென்ற பின் கதவின் ஓரமாக வாசற்படியைப் பிடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.

வழியில் போகும் போது, 'ராம் பாபுவின் வீட்டில் இனி ஒரு க்ஷணமும் இருக்க முடியாது. இந்த ஊரில் வேறு எங்காவது ஒரு நாள் இருப்பதும் முடியாத காரியம். எப்படியாவது இன்று இதை விட்டுச் சென்றே தீரவேண்டும். இதைத் தவிர, ஒரு தனிமையான இடத்தில் ஒரு நிமிஷம் அமர்ந்து இந்த உறையில் என்ன இருக்கிறது என்பதைப் பார்ப்பதுடன், என்னைப் பற்றியே சற்று யோசித்துப் பார்த்துக்கொள்ளவும் அவகாசம் வேண்டும்!' என்று எண்ணிக் கொண்டே போனான் மஹிம்.

'நல்லது! அதுவும் சரிதான்!' என்று சொல்லி மஹிம் மறுபடியும் உள்ளே சென்று கட்டைகள் எடுக்கலானான். ராம் பாபு தாழ்வாரத்திலேயே தலை குனிந்து ஒரு மூலையில் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

அவருக்கு வயதாகிவிட்டது. தமது நீண்ட நாள் வாழ்க்கையில் அவர் எத்தனையோ சாவுகளைப் பார்த்திருக் கிறார். எவ்வளவோ ஆழ்ந்த சோகத்தின் நடுவே அவர் போகவேண்டி யிருந்தது. சகிக்க முடியாத துக்கத்தின் ஸ்வரம் ஒவ்வொன்றாக வந்து அவர் ஹிருதய வீணையில் கூடிக் கிடந்தது. இன்றைய இந்தச் சம்பவம் அதன் தந்தி களைத் தட்டி, அபஸ்வரத்துடன் ஓசை எழுப்பியது. ஒரு நாள் இந்த ஸுரமாவே 'பெரியப்பா!' என்று சொல்லி அவர் மார்பில் சாய்ந்து விழுந்தாள். அந்தக் காட்சியை அவர் மறக்கவில்லை. இன்றும் அவருடைய பித்ரு வாஞ்சை அதே ஆசைக்காக உள்ளுக்குள் துடித்தது. அவளை அவர் எப்படிச் சாந்தப்படுத்துவது என்பது அவருக்கு விளங்க வில்லை. அவளுக்குத் தெளிவு கொடுக்கக்கூடியது உலகில் ஏதாவது இருக்கிறதா, அதுவும் அவருக்குத் தெரியவில்லை. ஆயினும் சோகமடைந்த அவர் மனம், ஒரு முறை மகளை மார்புடன் அணைத்துக்கொண்டு, 'பயமென்ன அம்மா? நான் உயிரோடிருக்கிறேன்!' என்று சொல்வதற்குத் திரும் பத் திரும்ப எண்ணியது.

ஆனால் அந்த ஸ்வரம் எங்கே சப்தித்தது? அவருடைய அந்தத் தாகத்தைப் போக்க யாரும் ஓர் அடிகூட எடுத்து வைக்க முன்வரவில்லை. ஸுரமா பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

இவர்களுடைய கஷ்ட காலத்திலும், ஆபத்துக் காலத்தி லும், பொறுக்க முடியாத துன்பம், மௌனமான மர்ம வேதனை இவைகளின் அருகிலேயே அவர் செல்ல வேண்டி யிருந்தது. தம் சம்சயங்களையெல்லாம் அன்புப் போர்வையால்

மூடி, வெளி வானத்தை மட்டும் நிர்மலமாக வைத்திருந்தார். ஆனால், இன்று விதவையான அந்தப் பெண்ணின் என்றும் கண்டிராத கொடிய தைரியம் இவ்வளவு நாளாக அவர் உள்ளத்தில் மறைந்திருந்த அன்பைப் பொத்துக்கொண்டு அதைக் களங்க மயமாக்கியது.

சூரியன் அஸ்தமனமானான். மஹிம் அவ்விடத்திய வேலையை ஒருவிதமாக முடித்துக்கொண்டு அருகே வந்து, 'ராம் பாபு! இனி எடுத்துக்கொண்டு போகவேண்டியது தான்!' என்றான். பிறகு அசலாவின் பக்கம் பார்த்து, 'நீ முனியாவிடம் சென்று உட்கார்ந்திரு. நாங்கள் திரும்பிவர அதிக நேரமாகாது!' என்றான்.

அசலா ஒன்றும் சொல்லவில்லை. ராம் பாபு ஒருவிதமாகத் தம்மைத் திடப்படுத்திக்கொண்டு எழுந்து நின்று தலையசைத்தார். அசலாவின் குனிந்த முகத்தைப் பார்த்து, தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு, தழுதழுத்த குரலில், 'அம்மா! சொல்வதற்கு என் மனம் வெடிக்கிறது! மனைவியின் கடைசிக் கடமையை நீ செய்யவேண்டும். நீ தான் முகத்தில் கொள்ளியிட வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர் அழலானார்.

அசலா, தன் வரண்ட முகத்தையும், அதைவிட வரண்ட கண்களையும் ஸ்திரப்படுத்தி, ஒரு கணம் அந்தக் கிழவர் பக்கம் பார்த்து, பிறகு சாந்தமாக மெல்லிய குரலில், 'முகத்துக்குக் கொள்ளி அவசியமானால் நான் போடுகிறேன். ஹிந்து தர்மத்தில் உண்மையாக இதற்கு ஏதாவது பலன் இருந்தால், போடுகிறேன். இல்லாவிட்டால், அநாவசியமாக நான் அதைச் செய்ய விரும்பவில்லை. நான் இவர் மனைவியல்ல!' என்றாள்.

ராம் பாபுவின் மேல் இடிவிழுந்தது போலாயிற்று. கண் கொட்டாமல் அவளைப் பார்த்துவிட்டு, கடைசியில் தயக்கத்

துடன், 'நீ ஸுரேசனின் மனைவி யில்லையா?' என்று அவர் கேட்டார்.

அசலா முன்போலவே கலங்காத குரலில், 'இவர் என் கணவரல்ல!' என்றாள்.

இமைப் பொழுதிற்குள் ராம் பாபுவுக்குச் சகல சம்பவங்களும் நினைவுக்கு வந்தன. அவள் தம் வீட்டில் அடைக்கலம் பெற்றதிலிருந்து அன்று மூர்ச்சை யடைந்தவரை, சகலமும் மின்னல் போல் அவர் மனத்தில் பளிச் பளிச்சென்று வெட்டின. அவர் மனத்தில் சந்தேகத்தின் சாயைகூட விழவில்லை. இவள் யார்? என்ன ஜாதி? இவள் வேசியாகவும் இருக்கலாம்! அவர் இவளை மகளென்றார், தாய் என்றார். இவள் தொட்டதைச் சாப்பிட்டார், டாகுர்ஜிக்கு நைவேத்தியம்கூட இவள் கையால் செய்தார். இவைகளெல்லாவற்றையும் எண்ணி வெறுப்பினால் அவர் சரீரம் எரிந்தது. இவ்வளவு நாள் வரை மரியாதை, மாதுரியம், தயை முதலியவைகளால் நிரம்பியிருந்த அவர் அன்பு, அன்று பாலைவனத்தில் வீழ்ந்த மழைத் துளி போல மறைந்துவிட்டது.

அவர் மாத்திரமல்ல, மஹிமும் ஸ்தம்பித்து நின்றிருந்தான். அவன் ஆச்சரிய மடைந்து, 'சரி, இது நடக்க முடியாவிட்டால் வாருங்கள்! நாம் எடுத்துக்கொண்டு செல்லலாம்!' என்றான்.

'வாருங்கள்!' என்று சொல்லி, கனவில் நடப்பவரைப் போல முன் சென்றார் ராம் பாபு. அவருக்கு ஏற்பட்ட இந்தக் கெட்ட சம்பவத்தின் முன் இதர துக்க சம்பவங்களெல்லாம் நிழல் போல மங்கிவிட்டன. அவருடைய இரு செவிகளிலும், 'ஜாதி போயிற்று! தர்மம் போய்விட்டது! இந்த மானிட ஜன்மமே வியர்த்தமாகிவிட்டது, வீணாகிவிட்டது!' என்ற வார்த்தைகள் தான் ஒலித்துக்கொண்டிருந்தன.

ஸுரேசனின் அந்திமக் கிரியைகளை ஒருவாறு முடித்துக்கொண்டு திரும்ப அதிக நேரமாகவில்லை. கடைசிவரை ராம் பாபு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. திரும்பி வந்ததும் நேரே வண்டியைத் தயார் செய்ய உத்தரவிட்டார்.

'நீங்கள் இப்பொழுதே புறப்படுகிறீர்களா?' என்றான் மஹிம்.

'ஆமாம்! நான் காலை வண்டியிலேயே காசிக்குப் போக வேண்டும். இப்பொழுதே போகாவிட்டால் வண்டி கிடைக்காது!' என்றார் ராம் பாபு.

அவர் மனோபாவம் மஹிமுக்குத் தெரியாமலில்லை. அவர் பிராயச்சித்தத்திற்காகக் காசிக்கு ஓடுகிறார் என்பதையும் அறிந்துகொண்டான். ஆகையால் மிகுந்த சங்கோசத்துடன், 'நான் அயலூர் மனிதன். எனக்கு இங்கே ஒன்றும் தெரியாது. தயவு செய்து இவர்கள் செல்வதற்கும் ஏதாவது—' என்றான்.

அவன் வார்த்தைகளை முடிக்கு முன்பே அசலாவைக் கூட அழைத்துச் செல்லும் விஷயத்தைக் கேட்டு, ராம் பாபு கோபத்தால் பொங்கி யெழுந்து, 'தயவா? மஹிம் பாபு, உங்களுக்குப் பைத்தியமா என்ன?' என்றார்.

மஹிம் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பயத்தோடும் விநயத்தோடும், 'இரண்டு மூன்று நாட்களாக ஒன்றும் சாப்பிடக்கூட இல்லை போலிருக்கிறது. இந்த மிருத்யுபுரியில் பயங்கரமான துணையற்ற நிலைமையில் விட்டுச்செல்வது-' என்றான்.

இந்தத் தடவையும் அவன் தன் வார்த்தையைப் பூர்த்தி செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆசார சீலரான பிராமணரின் ஜன்மம் பூராவிலும் செய்த ஸம்ஸ்காரங்கள் அடிபட்டுக் கோபத்தால் பதிலுக்கு ஹிம்சை செய்யத்தக்க குரூரமடைந்திருந்தது. ஆகையால் அவர் பொங்கும் கோபத்

துடன், 'சரி, தாங்களும் பிரம்ம சமாஜிதான். நான் மறந்து விட்டேன். ஆனால் ஸ்வாமிகளே! தாங்கள் எவ்வளவு பெரிய பிரம்ம சமாஜியாக இருந்தாலும் சரி, என்னுடைய சர்வ நாசத்தை அளவிட முடியுமானால், இந்தச் சாதி கெட்டவள் விஷயத்தில் தயை தாட்சண்யம் என்ற வார்த்தையை எடுத் திருக்க மாட்டீர்கள்!' என்று சொல்லிவிட்டு, அவர் வண்டியி லேறி அமர்ந்து, 'போகட்டும்! பிரம்மஞானத்திற்கு இனி அவசியமில்லை. உயிர் தப்பவேண்டுமானால் வந்து சேருங்கள், இடமிருக்கிறது!' என்றார்.

மஹிம் பேசாமல் நமஸ்காரம் செய்தான். சர்வநாசத்தின் பலனைப் பற்றி விவாதிக்கவுமில்லை. உயிர் தப்ப அவருடைய அழைப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் சென்ற பிறகு மார்பைப் பிளக்கும்படியான ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

சர்வநாசத்தின் அளவு! சரிதான்!

உள்ளே உட்கார்ந்திருக்கும் அசலாவும் வண்டி புறப்பட் டுச் சென்ற சப்தத்தினால் இதை அறிந்துகொண்டாள். அவர் ஏன் உள்ளே வரவில்லை, ஒரு வார்த்தைகூடச் சொல்ல வில்லை—இதுவும் அவளுக்கு விளங்கியது.

ஸுரேசனின் தவிர்க்க முடியாத மரணம் பயங்கரமான துர்ச்சிந்தைக்குக் காரணமாக இருந்து ஒரு கலக்கத்தைக் கொடுத்து வந்தது. இப்பொழுது அதுவும் இல்லை. மஹிம் நேர் எதிரே, மிகவும் சமீபத்தில் வந்து நிற்பான். ஆனால் அவள் மனத்தில் இப்பொழுது எவ்விதக் கலக்கமும் நிறைந் திருக்கவில்லை. தான் வெட்கப்படுவதைக் கூட அவள் துக்க மாக எண்ணினாள்.

மஹிம் வந்து பார்த்தான். மண்ணெண்ணெய் விளக் கின் முன் அசலா பேசாமல் உட்கார்ந்திருந்தாள். 'இனி நீ என்ன செய்யப்போகிறாய்?' என்றான்.

'நானு?' என்று சொல்லி, அசலா அவன் முகத்தைப் பார்த்து ஏதேதோ எண்ணலானுள். கடைசியில், 'எனக்கு ஒன்றும் விளங்கவில்லை! நீங்கள் என்ன உத்தரவிடுகிறீர்களோ அதைச் செய்கிறேன்!' என்றாள்.

இந்த எதிரிடையான வார்த்தையாலும் செய்கையாலும் மனுேம் ஆச்சரியமும் சங்கையு மடைந்தான். இம்மாதிரி அவன் ஒரு தடவைகூடக் கலங்கியதில்லை. அவள் பார்வை நேர்மையாக இருந்த மாதிரியே தெளிவாகவும் இருந்தது. அதில் அவளுடைய உள்ளத்தி லுள்ளவைகள் தெளிவாகத் தெரிந்தன. அங்கே பயம் இல்லை, கவலை இல்லை, கற்பனை இல்லை. கண்ணுக் கெட்டிய தூரம் வரை எதிர்கால வானம் இருண்டு கிடந்தது. அதற்கு ஒரு வர்ணமில்லை, உருவம் இல்லை, ஓர் இயற்கையுமில்லை. முற்றிலும் சலனமற்று, முற்றிலும் சூனியமாக இருந்தது.

கொடுமையால் பீடிக்கப்பட்டு அவமானத்தின் புண்களால் நிறைந்த பெண் உள்ளத்தின் இந்தக் கடைசி வைராக்கியத்தை அவனுல் அறியமுடியவில்லை. ஒருவர் இல்லாதது மற்றொரு ஹிருதயத்தை இப்படிப் படு சூனியமாக்கி விட்டது என்றெண்ணி அவன் மனம் வெறுப்பினுல் நிறைந்தது. ஆனுல் தன் துக்கத்தால் அவன் உலக துக்கத்தைப் பெருக்க விரும்பவில்லை. இதே காரணத்தால்தான் அவன் தன்னைத் தான் அடக்கிக்கொள்ளும் அப்பியாசத்தை எப்பொழுதும் கையாண்டு வந்தான். எங்கே தன் உள்ளத்தில் நிறைந்திருக்கும் வருத்தம் வாய் வார்த்தையில் வெளியே தெறித்துவிடுமோ என்ற பயத்தினுல், அவன் மறு பக்கம் திரும்பி, சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, பிறகு சுபாவமான குரலில், 'நான் ஏன் உனக்கு உத்தரவிடப் போகிறேன், அசலா? நீதான் அதை ஏன் கேட்கவேண்டும்?' என்றான்.

அசலாவை முழுக்க முழுக்கக் காதலித்ததின் சரித்திரம் இன்று அவனுக்கு விளக்கமற்றதாக இருந்தது. இந்தப் பெண்ணைக் கேந்திரமாக்கி அவன் வாழ்வின் மேல் எழுந்த புயல் பிரளயத்தைப் போல் எல்லையற்றிருந்தது. அதற்கு உவமை ஒன்றும் இல்லை. மௌனமாகப் பொறுக்கும் சக்தி யும் சரியான அளவில் கடவுள் அவனுக்குக் கொடுக்கவில்லை. இதே காரணந்தான், அன்று அவனுடைய வீடு உள்ளும் புற மும் எரிந்த போது அவன் நின்ற இடத்திலேயே நின்று பஸ்மமானன். சிறிதளவு ஏளனம்கூட உலகத்தில் அவன் அடையவில்லை. ஆனால் இன்று அவனுடைய சக்தி சகிப்ப தற்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல, பழகுவதற்கும் இருந்தது. இன்று ஒரு முறை அவன் வரவு செலவு கணக்குப் புஸ்தகத் தைப் பாராமல் வேலை நடக்காது. எங்கேயாவது ஜனமற்ற தனிமையான இடத்தில் அதைப் பார்த்தே ஆகவேண்டும்.

வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து சாமான்களை யெல்லாம் எடுத்துக் கட்டிக்கொண்டான். ஐந்து மணி வண்டிக்கு ஒரு மணி நேரந்தான் இருந்தது. ராம் பாபு காசியிலிருந்து திரும்பிவரத் தாமதமாகும். காரணம், உண்மையிலேயே அவர் பிராயச்சித்தத்திற்காகத்தான் சென்றிருந்தார் என் பது தெளிவா யிருந்தது. காசிக்குப் போய் வராமல் சோறு தண்ணீர் சாப்பிடுவதில்லை என்று வேறு சொல்லிவிட்டுப் போயிருந்தார். ஆகையால் அவரைச் சந்திக்க முடியாது. அவன் தன் கடமையை நிறைவேற்றிச் சுருக்கமாகத் தகவல் எழுதி வைப்பதற்காக ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்தான். இரண்டொரு வரிகள் எழுதிய பிறகுதான் அவனுக்கு அவர் வாயினின்றும் வந்த கடுஞ் சொற்கள் நினைவுக்கு வந்தன. அவற்றுடன் கூடவே, மற்றொருத்தியின் கண்ணீர்ப் பெருக்குடன் கூடிய ஸ்பஷ்டமற்ற இரக்கமான பிரார்த்தனை யும் அவன் காதில் ஒலித்தது. கனவில் எழும் வேதனை போல

அவன் அதுவரை தன் உணர்ச்சியைக் கூடப் பூரணமாக விழிக்க விடவில்லை, தூங்கவும் விடவில்லை. ஆனால் ராம் பாபு வின் அந்த வார்த்தைகள் அவனைத் தள்ளி அவனுடைய தயக் கத்தைக் குலைத்தன.

அந்தக் கிழவருடன் அவனுக்கு அதிக நாள் பழக்க மில்லை. ஆனால் அவருடைய தயை, தாராளம், பெருந்தன்மை, கபடமற்ற பக்தி, தர்மத்தைப் பற்றிய வார்த்தைகள்—இவை களை அவன் கேட்டிருந்தான். அந்தப் பழக்கமே இப்பொழுது முற்றிலும் திடீரென்று அவனுடைய மூடிய கண்களைப் பழக்கமற்ற மற்றொரு திசையின் பக்கம் பார்க்கும்படி சைகை செய்தது.

இந்தக் கிழவர் அசலாவை 'ஸுரமா, அம்மா' என்று சொல்லிக் கூப்பிட்டார். இந்தப் பெண்ணைத் தவிர வேறு அயல் பெண்கள் கையினால் தொட்டதை அவர் சாப்பிட்ட தில்லை என்பதை அவரே ஒரு சந்தர்ப்பத்தில் மஹிமிடம் அன்பாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால் சர்வநாசம் அவ ருக்கு எங்கிருந்து, எதுவரை வந்தது என்பதற்கு ஓர் அள விட மஹிமுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. ஆனால், இந்தச் சமயம் அசலாவின் குற்றத்தைப் பிறகு யோசிக்கலாம் என்ற எண்ணமே மாறி மாறி எழுந்தது. ஆனால், இந்த ஆசார சீல ரான பிராமணருடைய இந்த உண்மையான தர்மம் ஒரு சாதா ரணப் பெண்ணின் செய்கையால் ஒரே கணத்தில் பாழாகிவிட் டதா? கொடுமை செய்பவர்களின் தாக்குதலிலிருந்து தன் னையும் பிறரையும் காக்க முடியாத தர்மம், தன்னை மரணத்தி னின்றும் காத்துக்கொள்ளவே இரவு பகல் தன் சக்தியைச் செலவழித்துக்கொண்டிருக்கும் தர்மம் என்ன தர்மம்? மனித வாழ்க்கையில் அதற்கு எந்த இடத்தில் அவசியம் இருக்கிறது? அன்புக்கு மரியாதை வைக்காத தர்மம், சகாயமற்று அழும் பெண்ணை மரணத்தின் வாயில் எடுத்துக்

கொடுக்கத் தயங்காத தர்மம், வருத்தமடைந்து இவ்வளவு அன்புள்ள கிழவரையும் கலங்கச் செய்து கொடுமை இழைக்கச் செய்த அந்தத் தர்மம் என்ன தர்மம்?

அதை ஒப்புக்கொண்டவர்கள் எந்தச் சத்திய வஸ்துவைத் தாங்கிக்கொண்டிருக்கின்றனர்? தர்மம் என்பது வர்மத்தைச் சகிக்கத்தான். இதுதான் அதனுடைய கடைசிப் பரீட்சை.

அவர் அந்த மாதிரி ஓடியது அவனுக்குத் திடீரென்று நினைவு வந்தது. ஆனால் இந்தக் கவலையையும் அவன் இரு கைகளாலும் நெட்டித் தள்ளிவிட்டுப் பேனாவை எடுத்துக் கொண்டான். பிறகு சாமான்களை அவசரமாக எடுத்துக் கொண்டு ஸ்டேஷனை நோக்கிச் சென்றான்.

வண்டி வந்ததும் அவன் எந்த வண்டியில் ஏறப் போனானோ, அதே கதவிலிருந்து ஒரு வயோதிக கனவானின் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு கைம்பெண் கீழே இறங்கினாள்.

'அடே! மஹிம், இங்கே எங்கே?' என்றார் கிழவர்.

மிருணாளினி மஹிமின் காலடியில் சிரம் வைத்து நமஸ்கரித்து, 'எங்கே அண்ணா போகிறாய்?' என்றாள்.

இருவரும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் போது மஹிம் வண்டியில் ஏறி யமர்ந்தான்.

'நான் கல்கத்தாவுக்குப் போகிறேன். "ஸுரேஷ் பாபுவின் வீடு" என்று சொன்னால் வண்டிக்காரன் கொண்டு போய் விட்டுவிடுவான். அங்கே அசலா இருக்கிறாள்!' என்றான் மஹிம்.

கேதார் பாபு செயலற்று ஒன்றும் தோன்றாமல் பேசாமல் பார்த்துக்கொண்டு நின்றார்.

'ஸுரேசன் என்னவோ இறந்துவிட்டான்! அசலா என்னிடம் ஏதோ ஆசிரமத்தைப் பற்றிக் கேட்டாள். மிருணா

ளினி! நான் அவளுக்குப் பதில் அளிக்க முடியவில்லை. ஒரு கால் உன்னிடமிருந்து அவளுக்கு ஏதாவது பதில் கிடைத் தாலும் கிடைக்கலாம்' என்றான் மஹிம்.

மிருணாளினி அவன் முகத்தைக் கண்கொட்டாமல் பார்த்து, 'கிடைக்காமல் என்ன? ஆனால் என்னுடைய போதனையெல்லாம் உன்னிடமிருந்து பெற்றதுதானே! அவளுக்கு—ஆசிரமம் என்று வேண்டுமானாலும் சொல்லு ஆசிரயம் என்று வேண்டுமானாலும் சொல்லு—இதைப் பற்றிய செய்தி எதுவரை இருக்கிறதோ அதை நான் மன்னிக்குக் கூற முடியும்! ஆனால்......ஆனால்......அதுவும் நீ கொடுத்ததாகத்தான் ஆகும்!' என்றாள்.

மஹிம் ஒன்றும் சொல்லவில்லை. தன்னை அந்தக் கூர்மையான பார்வையுள்ள பெண்ணிடமிருந்து மறைத்துக்கொள்ளத் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

வண்டி ஊதியது. மிருணாளினி கிழவரின் வலது கையைத் தன் கையில் பிடித்துக்கொண்டு, 'அப்பா! நாம் போகலாம் வாருங்கள்!' என்றாள்.



# நவயுகப் புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 1. புதுமைப் பித்தன் கதைகள் (பரிசுப் பதிப்பு) | 2 | 12 | 0 |
| ஷை (கலிகா-ராப்பர்) | 2 | 0 | 0 |
| 2. கிரஹதாகம் பாகம் 1 | 1 | 12 | 0 |
| ,, பாகம் 2 | 1 | 12 | 0 |
| 3. பெண் | 1 | 12 | 0 |
| 4. சுகம் எங்கே? | 1 | 12 | 0 |
| 5. அன்று | 1 | 12 | 0 |
| 6. ரஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம் | 1 | 12 | 0 |
| 7. மகாராஷ்டிர ஜீவன் உதயம் | 1 | 12 | 0 |
| 8. கம்பன் கவிதை | 1 | 8 | 0 |
| 9. கட்ட பொம்மு | 1 | 8 | 0 |
| 10. வின்ஸ்டன் சர்ச்சில் | 1 | 8 | 0 |
| 11. பேஸிஸ்ட் ஜடாமுனி | 1 | 8 | 0 |
| 12. நடைச் சித்திரம் | 1 | 8 | 0 |
| 13. மழையும் புயலும் | 1 | 8 | 0 |
| 14. தேவதாஸ் | 1 | 0 | 0 |
| 15. உலகத்துச் சிறுகதைகள் | 1 | 0 | 0 |
| 16. பாகிஸ்தான் | 1 | 0 | 0 |
| 17. வெற்றி யாருக்கு? | 0 | 12 | 0 |
| 18. கோயரிங் | 0 | 12 | 0 |
| 19. மாகாண சுயாட்சி | 0 | 8 | 0 |
| 20. தேய்ந்த கனவு | 0 | 8 | 0 |
| 21. சீனு-ஜப்பான் | 0 | 8 | 0 |

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| 22. மைக்கேல் காலின்ஸ் | 0 | 8 | 0 |
| 23. எல்லோரும் ஓர் குலம் | 0 | 8 | 0 |
| 24. வார்தா திட்டம் | 0 | 8 | 0 |
| 25. இரட்டை மனிதன் | 0 | 8 | 0 |
| 26. பொம்மையா, மங்கையா ? | 0 | 8 | 0 |
| 27. கப்சிப் தர்பார் | 0 | 8 | 0 |
| 28. லெனின் | 0 | 8 | 0 |
| 29. ஸப்த நதிகள் | 0 | 8 | 0 |
| 30. திரிபுரி காங்கிரஸ் | 0 | 6 | 0 |
| 31. நாம் எங்கிருக்கிறோம்? | 0 | 4 | 0 |
| 32. மதனி | 0 | 4 | 0 |
| 33. ஆறு கதைகள் | 0 | 4 | 0 |
| 34. அடிமைத் தாய் | 0 | 3 | 0 |
| 35. பக்த குசேலா | 0 | 3 | 0 |
| 36. நாசகார கும்பல் | 0 | 3 | 0 |
| 37. வ. ரா. சரிதம் | 0 | 2 | 0 |
| 38. மந்தரை சூழ்ச்சி | 0 | 2 | 0 |
| 39. சுகாதாரச் சட்ட விளக்கம் | 0 | 1 | 0 |

**நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்**

2/28, மூக்கர் நல்லமுத்து தெரு,

ஜி. டி. சென்னை.